# தமிழ்ப் பழமொழிகள்



நான்காம் தொகுதி

ஜெனரல்

# தமிழ்ப் பழமொழிகள்

## தொகுதி 4

தொகுத்தவர்
கி. வா. ஜகந்நாதன்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்

முதற் பதிப்பு – 2001
இரண்டாம் பதிப்பு – 2006

உரிமை பதிப்பு

© ஆசிரியருக்கு

விலை ரூ. 100.00

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, ராமகிருஷ்ண மடம் சாலை,
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர், சென்னை–600 004.

தொலைபேசி : 494 1314

Jai Ganesh Offset Printers,
Chennai - 600 004.

# முகவுரை

இந்தப் புத்தகத்தில் ஏறத்தாழ 25,000 பழமொழிகள் உள்ளன. இவை கடந்த நாற்பது ஆண்டுகளாக நான் சேகரித்தவை. சொற்பொழிவு செய்யும் பொருட்டு வெளியூர்களுக்குச் சென்ற காலங்களில் அங்கே உள்ள ஆடவர்களிடமும் பெண்மணிகளிடமும் கேட்டுப் பழமொழிகளை எழுதி வந்தேன். பெரும்பாலும் முதிய பெண்மணிகளே பல பழமொழிகளைச் சொன்னார்கள். பழமொழியை முதுமொழி என்றும் வசனம் என்றும் கூறுவர். பழமொழிகள் அடங்கிய பாடல்களைப் பெற்ற நூல்கள் பழமொழி நானூறு, கோவிந்தசதகம், தண்டலையார் சதகம், இரத்தின சபாபதி மாலை, அருணாசல கவி இராம நாடகக் கீர்த்தனை முதலியவை.

இந்தப் பழமொழிகளில் பல்வேறு சாதியினரைக் குறை கூறி உள்ளவை பல உண்டு. அவற்றைக் கண்டு அந்தச் சாதியைச் சேர்ந்த அன்பர்கள் சினம் கொள்ள மாட்டார்கள் என்று நம்பு கிறேன். இழித்துக் கூறுவதில் எந்தச் சாதியினரையும் விட்டு வைக்கவில்லை. பார்ப்பனர்களை இழித்துக் கூறும் பழமொழிகள் பல. அத்தகையவற்றை அப்படி அப்படியே காட்டியுள்ளேன். தமிழ் மக்களுடைய எண்ணம் எவ்வாறு படர்ந்தது என்பதை இவை காட்டுகின்றன.

நாடோடி இலக்கியத்தைச் சார்ந்தவை பழமொழிகள். அறிவு தெரிந்த சிறுவர் முதல் முதுமை உடையவர்கள் வரை யாவரும் தாம் பேசும் பொழுது பழமொழிகளை ஆளுவார்கள். அவரவர் களுடைய அனுபவத்துக்கு ஏற்ற வகையில் அவை இருக்கும். உபநிடதம், இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றைப் பற்றிய பழமொழிகளும் உண்டு. விலங்கினங்கள், பறவைகள், நீர்வாழ் பிராணிகள், ஊர்வன, புழுபூச்சிகள் முதலியவற்றைப் பற்றிய பழமொழிகள் பல. இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளை எழுதலாம். பல பெரியோர்களுடைய வரலாறுகள் சம்பந்தமான பழமொழிகளும்

உண்டு. கம்பன், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களைப் பற்றிய பழமொழிகள் சில உள்ளன.

சில சில ஊர்களைப் பற்றிய பழமொழிகளும் பல உண்டு. அந்த ஊர்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைப் பற்றிய பழமொழிகளும் உள்ளன.

இவ்வாறு பல பல துறைகளில் அமைந்த இந்தப் பழமொழிகள் அறிவைத் தூண்டுகின்றவை.

தமிழ் மக்கள் இந்தப் புத்தகத்தில் உள்ள பழமொழிகளைப் படித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறேன்.

**கி. வா. ஜகந்நாதன்**

'காந்தமலை'
சென்னை—28
4—5—88

# தொகுதி 4

## பெ

பெட்டிப் பாம்பு ஒட்டி அடங்கினாற் போல.
பெட்டிப் பாம்பு போல் அடங்கினான்.
பெட்டிப் பாம்பு போல் ஒட்டி இருக்கும். 15970

பெட்டி பீற்றல், வாய்க்கட்டுத் திறம்.
பெட்டி பீற்றலாயினும் மட்டைக்கட்டுத் திறமாயிருக்க வேண்டும்.
பெட்டியில் அடக்கின குட்டிப் பாம்பு போல.
பெட்டியும் மூடியும் பிளந்தாற் போல.
பெட்டைக்கு எட்டாத அகமுடையானும் பல்லுக்கு எட்டாத பாக்கும். 16975

பெட்டைக் குதிரைக்கு இரட்டைக் கொம்பு முளைத்தன என்றாளாம்.
பெட்டைக் கோழி கூவியா பொழுது விடிகிறது?
பெட்டைக் கோழி தட்டிக் கூவுமா?
பெட்டை நாயைப் போலக் கத்தாதே.
பெண் அரம்பை கூத்துக்குப் போய்ப் பேய்க் கூத்து ஆச்சுதே. 16980

பெண் அழகு எல்லாம் பெட்டியிலே.
பெண் ஆசை ஒரு பக்கம்; மண் ஆசை ஒரு பக்கம்.
பெண் ஆசை கொண்டு பெருக்கத் தவிக்கிறது.
பெண் ஆனையைத் தொடரும் பேரானையைப் போல. (போரானையை.)
பெண் இருக்கிற அழகுக்குப் பூசினாளாம் வண்டி மசியை; தான் இருக்கிற அழகுக்குப் பூசிக் கொண்டாளாம் வேப்பெண்ணெய். 16985

பெண் இன்றிப் பெருமையும் இல்லை; கண் இன்றிக் காட்சியும் இல்லை.
பெண் என்றால் பேயும் இரங்கும்.
பெண் என்று பிறந்த போதே புருஷன் பிறந்திருப்பான்.

பெண் கதை சொன்னால் பொழுது விடியும்.
பெண்கள் இருப்பிடம் பெரிய சண்டைக்கு இடம். 16990

பெண்களுக்கு அன்பு பெருவாழ்வு அளிக்கும்.
பெண்கிளை பெருங்கிளை.
(பெண்குடி பெருங்குடி.)
பெண் கொடுத்த மாமியோ; கண் கொடுத்த சாமியோ?
பெண் சம்பாதித்தால் பழங்கலம் ஏறும்.
பெண்சாதி இல்லாதவன் பேயைக் கட்டித் தழுவினது போல. 16995

பெண்சாதி இறந்தால் புது மாப்பிள்ளை.
பெண்சாதி கால்கட்டு; பிள்ளை வாய்க்கட்டு.
பெண்சாதி கால் விலங்கு; பிள்ளையொரு சுள்ளாணி.
பெண்சாதி சொந்தம்; போக்குவரத்துப் புறம்பே.
பெண்சாதி பேச்சைக் கேட்பவன் பேய் போல் அலைவான். 17000

பெண்சாதி முகத்தைப் பார்க்கா விட்டாலும் பிள்ளை முகத்தைப் பார்க்க வேண்டும்.
பெண்சாதியைக் குதிரைமேல் ஏற்றிப் பெற்ற தாயின் தலையிலே புல்லுக்கட்டை வைத்து அடிக்கிற காலம்.
பெண்சாதியைத் தாய் வீட்டில் விட்டவனுக்கு ஒரு சொட்டு.
பெண் சிரித்தாற் போயிற்று; புகையிலை விரித்தாற் போயிற்று.
பெண்டாட்டி ஆசை திண்டாட்டத்தில் விட்டது. 17005

பெண்டாட்டி ஆத்தா பெரியாத்தா; பிழைக்கும் வழியைச் சொல் ஆத்தா.
பெண்டாட்டி இல்லாதவன் கழுதையோடு போனான்.
பெண்டாட்டிக்கு ஆற்றமாட்டாதவன் சட்டி பானையை உடைத்தானாம்.
பெண்டாட்டிக் கால்கட்டு; பிள்ளை வாய்க்கட்டு.
பெண்டாட்டி குதிர் போல; அகமுடையான் கதிர் போல. 17010

பெண்டாட்டி கொண்டதும் போதும்; திண்டாட்டம் பட்டதும் போதும்.
பெண்டாட்டி செத்தவன் போல முக்காடு போடுகிறாய்.
பெண்டாட்டி செத்தால் புது மாப்பிள்ளை.
பெண்டாட்டி செத்துப் பெரிய மகள் தாலி அறுத்த மாதிரி.
பெண்டாட்டி பாடு திண்டாட்டம். 17015

பெண்டாட்டி மெய்க்கப் புழைக்கடை வெட்டியது போல.
பெண்டாட்டியுடன் கோபித்துப் பரதேசம் போவசர் உண்டா?
(போவாரா?)
பெண்டாட்டியை அடிக்கடி பிறந்தகத்துக்கு அனுப்பாதே.
பெண்டாட்டியைத் தாய் வீட்டில் விட்டவனும் பூவைக் குரங்கு கையில் கொடுத்தவனும் போல.
பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல். 17020

பெண்டு இரண்டு கொண்டால் பெரு நெருப்புச் சாமளவும்.
பெண்டு இல்லாதவன் பிணத்தைக் கட்டி அழுத கதை.
பெண்டுகள் அம்பலம் பொழுது விடிந்தால் கூத்து.
பெண்டுகள் இருந்த இடம் சண்டைகள் பெருத்த இடம்.
(பெண்டுகள் இருப்பிடம் பெரிய சண்டையாம்.)
பெண்டுகள் இருந்திடின் பெரிய சண்டையாம். 17025

பெண்டுகள்கூடச் சண்டைக்கு வருவார்கள்.
பெண்டுகள் கூத்துப் பேய்க் கூத்து.
பெண்டுகள் சமர்த்து அடுப்பங் கரையில்தான்.
பெண்டுகள் சமர்த்துச் சமையற்கட்டிலும் படுக்கைக் கட்டிலிலுந் தான்.
பெண்டுகள் செட்டி. 17030

பெண்டுகள் சோற்றுக்குத் தண்டம் இல்லை.
(தடை இல்லை.)
பெண்டுகள் வைத்தியம்.
பெண்டுகளாலே பெருமாள் குடி கெட்டது.
பெண்டுகளுக்குப் பெற்றோரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் மூப்பு இல்லை.
பெண்டு கொண்டதும் போதும்; பிண்டு விழுந்ததும் போதும். 17035

பெண்டு மிரண்டால் வீடு கொள்ளாது.
பெண்டு வாய்க்கும் புண்ணியவானுக்கு; பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு.
பெண்ணாய்ப் பிறப்பதிலும் மண்ணாய்ப் பிறக்கலாம்.
பெண்ணாய்ப் பிறப்பதுவும் பாவம்; பெண்ணோடே கூடிப் பிறப்பதுவும் பாவம்.
(யாழ்ப்பாண வழக்கு)
பெண்ணிடம் அகப்பட்ட பணமும் ஆணிடம் அகப்பட்ட குழந்தையும் உருப்படா. 17040

பெண்ணின் குணமும் அறிவேன்; சம்பந்தி வாயும் அறிவேன்.
(குணம். வாய்.)
பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.
பெண்ணுக்கு ஒரு கும்பிடு. வில்லுக்கு ஒரு கும்பிடு.
(அவள் சொகுசுக்கு ஒரு கும்பிடு. அழகுக்கு ஒரு கும்பிடு.)
பெண்ணுக்குக் குணந்தான் சீதனம்.
பெண்ணுக்குக் கேடு பிறந்தகத்தார்; மக்களுக்குக் கேடு மாதா பிதா. 17045

பெண்ணுக்குச் சத்துரு பிறந்தகத்தார்.
பெண்ணுக்குப் பெண் ஆசை கொள்ளும் பேரணங்கு.
பெண்ணுக்குப் பெண்தான் சீதனம்.
பெண்ணுக்குப் பொன் இட்டுப் பார்; சுவருக்கு மண் இட்டுப் பார்.
பெண்ணுக்குப் போட்டுப் பார்; மண்ணுக்குத் தீட்டிப் பார். 17050

பெண்ணுக்குப் போய்ப் பொன்னுக்குப் பின்வாங்கலாமா?
பெண்ணுக்கும் உண்டா பிக்கு?
பெண்ணுக்கும் பொன்னுக்கும் தோற்பும் தேய்ப்பும் உண்டா?
பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும்.
பெண்ணுக்கு முந்திப் பூட்டிக் கொள்; மாட்டுப் பெண்ணுக்கு முந்திச் சாப்பிட்டுக் கொள். 17055

பெண்ணும் அல்லாமல் ஆணும் அல்லாமல் பெரு மரம் போல் வளருகிறது.
பெண்ணை அடித்து வளர்க்க வேணும்; முருங்கை மரத்தை ஒடித்து வளர்க்க வேணும்.
பெண்ணைக் கட்டிக் கொடுக்கலாம்; பிள்ளை பெறச் செய்யலாமா?
(பிள்ளை பெறுவதற்கும் பிணைக்கப் படுவார்களா?)
பெண்ணைக் கட்டிக் கொடுப்பவர்கள் பிள்ளை பெறுவதற்குப் பிணைபடுவார்களா?
பெண்ணைக் காட்டிப் பொன்னைப் பறித்தது போல. 17060

பெண்ணைக் கொடுத்த மாமன், கண்ணைக் கொடுத்த கடவுள்.
பெண்ணைக் கொடுத்தாயோ? கண்ணைக் கொடுத்தாயோ?
பெண்ணைக் கொண்டு பையன் பேயானான்; பிள்ளை பெற்றுச் சிறுக்கி நாயானாள்.
பெண்ணைத் திருத்தும் பொன்.
பெண்ணைப் படைத்தாயோ? பேயைப் படைத்தாயோ? 17065

பெண்ணைப் பற்றி மலத்தைத்தின்னு.
(பெற்று... தின்ன வேணும்.)
பெண்ணைப் பிழை பொறுக்கப் பெற்ற தாய் வேண்டாமா?
(வேண்டும்.)
பெண்ணைப் பெற்றவள் கைக் கொள்ள.
பெண்ணைப் பெற்றுக் கெட்டுப் போகாதே.
பெண்ணைப் போற்றி வளர்; ஆணை அடக்கி வளர். 17070
(அடித்து.)

பெண்ணை மஞ்சத்தில் வை; மகனை நெஞ்சத்தில் வை.
பெண்ணை விட்டுப் பிரியலாம்; கண்ணை விட்டுப் பிரியலாமா?
பெண்ணையும் வேண்டிப் பிள்ளையையும் வேண்டுகிறதா?
பெண்ணை வெறுத்தல் பேரின்பம்.
பெண்ணை வேண்டும் என்றால் இனியற் கண்ணை நக்கு. 17075

பெண்ணோடு, ஆணோடு பிறக்காத பெரும்பாவி.
பெண்ணோ, போத்தோ?
பெண் தந்த மாமியாரே கண் தந்த தெய்வமாக.
பெண் படையும் பலமும் பெருக்கத் தவிக்கிறதோ?
பெண் படையோ? அம்பலமோ? 17080

பெண் பாவம் பொல்லாது.
பெண் பிறந்ததற்கு மண் பிறக்கலாம்.
பெண் பிறந்த வீடோ புடைவை காய்த்த பந்தலோ?
பெண் பிறப்பதற்குள் பூட்டிக் கொள்; மாட்டுப் பெண்
வருவதற்குள் சாப்பிட்டுக் கொள்.
பெண்புத்தி கேட்கிறவன் பேயன். 17085

பெண் புத்தி பின்புத்தி.
பெண் புத்தி மலம் தின்னப் போம்.
பெண் மகிழப் பிறந்தகம் வாழ.
பெண் மூப்பான வீடு பேர் அழிந்து போம்.
பெண் மூலம் நிர்மூலம். 17090
(மூலம்; மூல நட்சத்திரம்.)

பெண் வளர்த்தியோ, பீர் வளர்த்தியோ?
பெண் வளர்த்தி, பீர்க்கங்கொடி.
பெண் வளர்த்தியோ, புடலங்காய் வளர்த்தியோ?
பெண் வளர்வதும் பீர்க்கங்காய் வளர்வதும் யார் கண்டது?
பெய்த மழைக்கும் சரி; காய்ந்த வெயிலுக்கும் சரி. 17095

பெய்த மழையும் காய்ந்த வெயிலும் சரி.
பெய்தால் பெய்யும் புரட்டாசி; பெய்யாவிட்டால் பெய்யும் ஐப்பசி.
பெய்தும் கெடுத்தது, காய்ந்தும் கெடுத்தது.
பெய்து விளைகிறது மலையாளச் சீமை; பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர்ச் சீமை; காய்ந்து விளைகிறது இராமநாதபுரம் சீமை. (பேய்ந்து.)
பெயர் சொல்ல ஆள் இல்லை. 17100

பெரிது ஆனால் பேயும் குரங்கு ஆகும்.
பெரிய இடம் என்று பிச்சை கேட்கப் போனாளாம்; கரியை வழித்து முகத்திலே தேய்த்தாளாம்.
பெரிய பருவதத்தின்மேல் பிரளய கால இடி விழுந்தாற் போல.
பெரிய தனம் கொடுத்தால் சீதனம் பெறலாமா?
பெரிய தேர் ஆனாலும் அச்சாணி இல்லாமல் ஓடாது. 17105

பெரிய மரத்தைச் சுற்றிய வள்ளியும் சாகாது. (மல்லியும்.)
பெரிய மனிதன் என்று பிச்சைக்குப் போனால் கரியை அரைத்து முகத்தில் தடவினான்.
பெரியவர்கள் செய்தால் பெருமாள் செய்த மாதிரி.
பெரிய வீட்டுக் கல்யாணம், பூனைக்குட்டிக்குச் சோறு இல்லையாம்.
பெரிய வீடு என்று பிச்சைக்குப் போனேன்; கரியை வழித்துக் கையில் தடவினார்கள். 17110
(கன்னத்தில். முகத்தில் தீற்றினார்கள்.)

பெரியார் பெருந்தலை பேய்த்தலைக்கு நாய்த்தலை.
பெரியார் வரவு பெருமான் வரவு.
பெரியாரைத் துணைக் கொள்.
பெரியோர் உள்ளம் பேதிக்கலாகாது.
பெரியோர் எல்லாம் பெரியாரும் அல்ல. 17115

பெரியோர் செய்த புண்ணியம்.
பெரியோர் திருவுள்ளம் பேதித்தால் எப்பொருளும் பேதிக்கும்.
பெரியோர் தின்றால் பலகாரம்; சிறியோர் தின்றால் நொறுங்கு தீனி.
பெரியோர் முன் எதிர்த்துப் பேசில் வெள்ளத்துக்கு முன் மரம் போல் வீழ்வார்கள்.
பெரியோர் முன் தாழ்ந்து பேசில் நாணலைப் போல் நிமிர்ந்து கொள்வார்கள். 17120

பெரியோர் வாயில் பொய் நில்லாது.
பெரியோரைக் கண்டு எழாதவன் பிணம்.
பெருக்கப் பெருக்கப் பேயும் குரங்கு ஆனதாம்.
பெருக்காத இடத்திலும் பேசாத இடத்திலும் இருக்க மாட்டேன்.
(திருமகள் கூற்று.)
பெருக்கு ஆற்றில் நீச்சு அறியாதவரை வெள்ளம் கொண்டு போகும். 17125

பெருங்கயிறு முடி அழுந்தாது.
பெருங்காயக் குடுக்கை வாசனை போகாது.
பெருங்காயம் இருந்த பாண்டம் போல.
(பெட்டகம் போல.)
பெருங்காயம் இல்லாத சமையலும் பெரியவர்கள் இல்லாத குடித்தனமும் பாழ்.
பெருங்காயம் தின்ற நாய் போல. 17130

பெருங்காற்றில் அகப்பட்ட சோலையைப் போல.
பெருங்காற்றில் அகப்பட்ட பிள்ளையைப் போல.
பெருங்காற்றில் துரும்பு போல.
பெருங்காற்றில் பூளைப்பஞ்சு பறக்கிறது போல.
(கம்பராமாயணம் இலவம் பஞ்சு.)
பெருங்காற்றும் மழையும் போல. 17135

பெருங்குலத்தில் பிறந்தவன் புத்தி அற்றால் கரும்புப் பூப்போல் இருப்பான்.
(பிறந்தாலும்.)
பெருங் கொடை பிச்சைக் காரருக்குத் துணிவு.
பெருத்த மரங்களை வைத்தவன் உருக்கமாய்த் தண்ணீர் வார்ப்பான்.
பெரு நெருப்பில் புழு மேவுமா?
பெரு நெருப்புக்கு ஈரம் உண்டோ? 17140
(இல்லை.)

பெரும் பாம்பைத் தேரைகள் சுற்றிய கதை.
பெரும் புலியை நாய்கள் சுற்றின கதை.
பெரும்பேன் பிடித்தவருக்கும் பெருங்கடன் வாங்கினவருக்கும் கவலை இல்லை.
பெரும் பேன் பிடித்தவரும் பெருங்கடன் பட்டவரும் முன்னுக்கு வரமாட்டார்கள்.
பெரும் பேன் பிடித்தவனுக்கு அரிப்பு இல்லை; பெருங்கடன் பட்டவனுக்கு விசாரம் இல்லை. 17145

பெரு மரத்தைச் சுற்றிய கொடியும் சாகாது.
பெருமரத்தைச் சுற்றிய வள்ளிக் கொடி போல.
பெருமழை விழுந்தால் குளிராது.
பெருமாள் இருக்கிற வரையில் கருடன் உண்டு.
பெருமாள் இருக்கிற வரையில் திருநாள் உண்டு. 17150

பெருமாள் இருந்தால் அல்லவோ திருநாள் நடக்கப் போகிறது?
பெருமாள் என்ற பெயரை மாற்றப் பெரிய பெருமாள் ஆச்சுது.
பெருமாள் செல்லும் வழியில் புல்லாய் முளைத்தாலும் போதும்.
பெருமாள் நினைத்தால் வாழ்வு குறைவா? பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா?
பெருமாள் புண்ணியத்தில் பொரிமாவு கிடைத்ததாம். 17155

பெருமாள் புளித்தண்ணீருக்கு அழுகிறார்; அனுமார் ததியோதனம் கேட்கிறார்.
பெருமாள் பெரிய பெருமாள் ஆனாற் போல்.
பெருமாளைச் சேர்ந்தவர்க்குப் பிறப்பு இல்லை; பிச்சைச் சோற்றுக்கு எச்சில் இல்லை.
(பிழைப்பு இல்லை.)
பெரு மீனுக்குச் சிறு மீன் இரை.
பெருமை உள்ளங்கையிலே வளர்ந்தாலும் பேச்சுரை நல்ல சுரை ஆகாது. 17160

பெருமை ஒரு முறம்; புடைத்து எடுத்தால் ஒன்றும் இல்லை.
பெருமைக்காரன் பின்னால் போனாலும் செருப்புக்காரன் பின்னால் போகக் கூடாது.
பெருமைக்கு ஆட்டை அடித்துப் பிள்ளையின் கையில் காதைச் சுட்டுக் கொடுத்தான்.
பெருமைக்குப் பன்றி வளர்க்கிறது போல.
பெருமை கண்டவர் சிறுமை கண்டால் அல்லது தேறார். 17165

பெருமை சொன்னால் கறவைக்குப் புல் ஆகுமா?
பெருமைதான் அருமையைக் குலைக்கும்.
பெருமை பீதக்கலம்; இருக்கிறது ஓட்டைக் கலம்.
பெருமையான தரித்திரன் வீண்.
பெருமையும் சிறுமையும் தான் தர வரும். 17170

பெரு ரூபத்தை உடையவர் எல்லாம் பிரயோசனமாய் இருக்க மாட்டார்.

பெரு வயிற்றை நம்பிச் சீமந்தம் வைத்தாற் போல்.
பெரு வயிறு கொண்டது அறியாமல் சீமந்தத்துக்கு நாள் இட்டுக் கொண்டானாம்.
பெரு வயிறு கொண்டது அறியாமல் சீமந்தத்துக்கு வளையல் போட்டுக் கொண்டாளாம்.
பெரு வயிறு கொண்டவனுக்குக் காரிய மூழ்கிறது லாபம். 17175

பெரு வயிறு கொண்டவனுக்கு காறி உமிழ்ந்தது ஆகாயம்.
பெருவாரிக் கழிச்சலிலே தப்பிப் பிழைத்தவன் நாட்டாண்மைக் காரன்.
பெரு வாரி பெருத்த அகமுடையானிலே பெண்ணுக்கு ஓர் அகமுடையான் கறுப்பாய்ப் போச்சு.
பெரு வெள்ளம் ராயும் கடலில் மல வாய்க் காலும் பாயும்.
பெலாப்பூரே பாபகோத்ரே. நாசதாளி முன்னே நிரந்தரம். 17180
(பெலாப்பூர்; செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள ஓர் ஊர்.)

பெற்ற தாய் ஆனாலும் குற்றம் எத்தனை பொறுப்பாள்?
(எவ்வளவு )
பெற்ற தாய்க்கும் வளர்த்த தாய்க்கும் உதவாமற் பிரிந்த குயிலைப் போல.
பெற்ற தாய்க்குப் பிறகு பெற்ற அப்பன் சிற்றப்பன்.
(பெற்றதாய் செத்தால்.)
பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போஜனம் செய்வித்தது போல.
பெற்ற தாய் மூதேவி; புகுந்த மனைவி சீதேவி. 17185
(புகுந்ததாரம்.)

பெற்ற தாயிடத்திலா கற்ற வித்தை காட்டுகிறது?
(கற்றது காட்டுகிறாய்?)
பெற்ற தாயுடன் போகிறவனுக்குப் பத்தம் ஏது?
பெற்ற தாயைப் பெண்டுக்கு இழுக்கிறதா?
பெற்றது எல்லாம் பிள்ளை ஆமோ? இட்டது எல்லாம் பயிர் ஆமோ?
பெற்றது எல்லாம் பிள்ளை ஆகுமா? நட்டது எல்லாம் மரம் ஆகுமா? 17190

பெற்றது எல்லாம் பிள்ளை ஆகுமா? பூத்தது எல்லாம் காய் ஆகுமா?
பெற்றது எல்லாம் பிள்ளையோ? நட்டது எல்லாம் பயிரோ?
பெற்றது எல்லாம் பிள்ளையோ, விளைந்தது எல்லாம் குசக்கலமோ?

பெற்றது வயிற்றுப் பிள்ளை; கொண்டது கயிற்றுப் பிள்ளை.
பெற்ற பிள்ளை உதவுவதற்குமுன் வைத்த பிள்ளை உதவும். 17195
(வைத்த பிள்ளை-தென்னம் பிள்ளை.)

பெற்ற பிள்ளை சோறு போடா விட்டாலும் வைத்த பிள்ளை சோறு போடும்.
பெற்ற பிள்ளை துடையிற் பேண்டால் என்ன செய்யலாம்?
பெற்ற பிள்ளையும் சரி, செத்த நாயும் சரி.
பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு.
பெற்ற வயிற்றுக்குப் பிரண்டையைக் கட்டிக் கொள்ள வேண்டும். 17200

பெற்றவள் அறிவாள் பிள்ளை வருத்தம்.
பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்; பெண்சாதி மடியைப் பார்ப்பாள்.
பெற்றவருக்குத் தெரியாதா பேர் இட?
பெற்றவருக்குத் தெரியும் பிரசவ வேதனை.
பெற்றவருக்குத் தெரியும் பிள்ளை அருமை. 17205

பெற்ற வீட்டுக்கும் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் பேர்.
(வளர்ந்த வீட்டுக்கும்.)
பெற்றாயோ, பிழைத்தாயோ?
பெற்றாரை நினையாத தறிதலை.
பெற்றாலும் பிள்ளை நாயகம்; நட்டாலும் தில்லைநாயகம்.
பெற்றாள் ஒருத்தி; பெருமை கொண்டாள் மற்றொருத்தி. 17210

பெற்றுப் பிழைத்தாயோ? செத்துப் பிழைத்தாயோ?
பெற்றுப் பெற்றுப் பேர் இட்டது போல்.
பெற்றுப் பேர் இடாவிட்டாலும் இட்டுப் பேர் இடு.
பெற்று வைத்த பிள்ளையும் கொடுத்து வைத்த பணமும் எங்கேயும் போகா.
பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும். 17215

பெறப் பெறப் பிள்ளை ஆசை.

# பே

பேச்சுக் கண்டா சிங்காரம்?
பேச்சுக் கற்ற நாய் வேட்டைக்கு ஆகாது.
(வேட்டை பிடிக்காது.)
பேச்சுக்கு ராவணன்; பிண்டத்துக்குக் கும்பகர்ணன்.
(பின்பு கும்பகர்ணன்.)
பேச்சுக்குப் பேச்சுச் சிங்காரந்தான். 17220
(சிங்காரமா?)

பேச்சுக் கொடுத்துப் பேச்சு வாங்குகிறதா?
பேச்சுப் பராக்கில் சோற்றைக் குழைத்தார்கள்.
பேச்சுப் பல்லக்கு; தம்பி கால்நடை.
பேச்சுப் பேச்சு என்னும் கிளி பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சு என்னுமாம்.
(என்னாதாம்.)
பேச்சுப் பேசும் போதே பீச்சிப் புடைவையில் கட்டிக் கொள்கிறா? 17225

பேச்சைக் கொடுத்து ஏச்சை வாங்குகிறது.
பேச்சைக் கொடுத்துப் பேச்சை வாங்கு.
பேச்சை விற்றுக் காய்ச்சிக் குடிக்கிறான்.
பேசத் தெரியாதவன் படிப்பும் வீரம் இல்லாதவன் வாளும் பிரயோசனம் இல்லை.
பேசப் பேச எந்த மொழியும் வரும். 17230
(எந்தப் பாஷையும்.)

பேசப் பிறந்தாயோ; சாகப் பிறந்தாயோ?
(பேசப் போகிறாயோ? சாகப் போகிறாயோ?)
பேசாத வீடும் பெருக்காத வீடும்.
பேசாது இருந்தால் பிழை ஒன்றும் இல்லை.
பேசா மடந்தை பேசும் தெய்வம்.
பேசில் அவலம்; பேசாக்கால் அவலம். 17235

பேசின வாயும் பீறின கந்தையும் நில்லா.
பேசினால் அவலம்; பேசாவிட்டால் ஊமை.
(பேசினால் சாலம்.)
பேசினால் வாயாடி; பேசாதிருந்தால் ஊமைப் பயல்.
பேசுகிறது அரிவிரதம்; நோண்டுகிறது இட்டிக் கிழங்கு.
பேடிக்குத் தேவரம்பை கிடைத்ததும் பிரயோசனப் படாததைப் போல. 17240

பேடி கையில் ஆயுதம் பிரகாசிக்குமா?
பேடி கையில் ரம்பை அகப்பட்டது போல.
பேடி கையில் வாள் போல.
பேண்டால் செக்கிலே பேளுவேன்: இல்லாவிட்டால் பரதேசம் போவேன்.
பேத்திக்கு இட்டாலும் கூத்திக்கு இடாதே. 17245

பேதம் அற்றவர் நீதம் உற்றவர்.
பேதை ஆனாலும் தாய்; நீர் ஆனாலும் மோர்.
பேதைகள் வெள்ளத்தில் நின்றும், தாகத்திற்குத் தண்ணீருக்கு அலைவார்கள்.
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.
பேப்பர் படித்தவன் முன்னுக்கு வருவானா? 17250
(செட்டி நாட்டு வழக்கு.)

பேய் அடிக்கப் பிள்ளை பிழைக்குமா?
பேய் ஆசை பிடித்தாலும் நாய் ஆசை ஆகாது.
பேய் ஆடிய கம்பம் போல.
பேய் ஆனாலும் தாய்; நீர் ஆனாலும் மோர்.
பேய் ஆனாலும் தாய் வார்த்தை தட்டலாமா? 17255

பேய் இல்லாத் தலை ஆடாது; பேன் இல்லாத் தலை கடிக்காது.
பேய்க்குக் கள் வார்த்தாற் போல.
பேய்க்கும் பார்; நோய்க்கும் பார்.
பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் பிடுங்குபட்டுத்தான் சாக வேண்டும்.
பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் போல. 17260

பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரம் ஏறத்தான் வேண்டும்.
பேய்க்கு வேப்பிலை போல,
பேய்க்கு வேலை இட்டது போல.

பேய்க் கூத்தும் ஆமணக்கும் ஆள் போனால் ஆள் தெரியாது.
பேய்க் கொடை. 17265

பேய் கொண்டாலும் கொள்ளலாம்; பெண் கொள்ளல் ஆகாது.
பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகுமா?
பேய் சிரித்தாலும் ஆகாது; அழுதாலும் ஆகாது.
பேய்ப் புத்தி, நாய்ப் புத்தி, ஏன் இருக்கிறது உன் புத்தி?
(உள் புத்தி.)
பேய் பிடிக்கவும் பிள்ளை பிழைக்குமா? 17270

பேய் பிடித்த பெண்ணும் நாய்ப் பிடித்த பிடியும் ஒன்று.
பேய்ப் பிள்ளை ஆனாலும் தாய் தள்ளி விடுவாளா?
பேய் பிள்ளை பெற்றதும், பிடுங்கு நூல் நூற்றதும்.
பேய் போய்ப் புளியமரத்தில் ஏறினது போல.
பேய் வேஷம் போட்டால் ஆடித் தீர வேண்டும். 17275

பேயின் வாயில் பெற்றது பேறு.
பேயும் அறியும் பெண்சாதி பிள்ளையை.
பேயும் ஆவது நியாயம் பகரும்.
(பேயும் சில நியாயம் பகரும்.)
பேயும் பிடித்ததாம்; நாயும் குரைத்ததாம்.
பேயும் வளர்க்கும் பின் ஆறு மாசம். 17280

பேயைக் கொண்டாலும் கொள்ளலாம்; கண்ட மங்கலம் பெண்ணைக் கொள்ளக் கூடாது.
பேயை நம்பினாலும் பெண்ணை நம் பொணாது.
(நம்பலாகாது.)
பேயைப் பெண்டு படைத்தது போல.
பேயைப் பேய் அடிக்குமா?
பேயைப் போல் அசைகிறதா. 17285
(பறக்கிறதா?)

பேயோடாயினும் பிரிவு இன்னாது.
(பழமொழி நானூறு.)
பேயோடு பழகினாலும் பிரிவது அரிது.
பேர் இல்லாத சந்நிதி பாழ்; பிள்ளை இல்லாத செல்வம் பாழ்.
பேர் கங்கா பவானி; தாகத்திற்குத் தண்ணீர் கிடையாது.
(கங்கா தேவி.)
பேர் சந்திரவதனாள்; முகத்தில் அழகு கிடையாது. 17290
பேர் சொல்லப் பிள்ளை நாமம் அற்றுப் போச்சு.
(செல்லப் பிள்ளை ராயர்.)
பேர்த்து அடிவைக்கச் சீவன் இல்லை; பேர் தாண்டவராயன்.

பேர் பதினெட்டாம் பேறு.
பேர் பெத்தப் பேர்.
(பெத்த-பெரிய: தெலுங்கு.)
பேர் வைத்துப் பேர் தாக நீருலேது. 17295
(தாக-குடிக்க,லேது - இல்லை, தெலுங்கு.)

பேர் பெரிய பேர்; குடிக்கப் போனால் நீர் கிடையாது.
பேர் பெற்றான் செம்பரம்பாக்கத்தான்; நீர் பெற்றான் மாம்பாக்கத்தான்.
பேர் பொன்னம்மாள்; கழுத்தில் கருகுமணி.
(கறுப்பு மணி.)
பேர் பொன்னாத்தாள்; கட்டக் கரிய மணி இல்லை.
(கரிய மணிக்கு வழி இல்லை..)
பேர் போனாலும் பிள்ளைப் பட்டம் போகவில்லை. 17300

பேர் முத்துமாலை; கட்டக் கரிமணிக்கு வழி இல்லை.
பேராசைக்காரனுக்குத் தீராத நஷ்டம்.
பேராசைக்காரனுக்குப் பெரும்புளுகன் தானாபதி.
பேராசைக்காரனைப் பெரும் புளுகால் வெல்லவேண்டும்.
(வென்றாற் போல.)
பேராசை கொண்டு பெருக்கத் தவிக்கிறது. 17305

பேராசை தரித்திரம்; தீராத உபத்திரவம்.
பேராசைப் பூண்டு பெருந்தொகையை இழப்பது போல.
பேராசை பெருங்கேடு.
பேராசை பெரு நஷ்டம்.
பேரிளமை கடந்த பின் பிள்ளை பெற்று எடுத்தாற்போல. 17310

பேரின்பம் வேண்டின் சிற்றின்பம் ஒழிக்க.
பேரூர்க் குடியிருப்பும் சிற்றூர் வேளாண்மையும்.
பேரைச் சொன்னால் அழுத பிள்ளையும் வாய் மூடும்.
பேளச் சொன்னது யார்; வாரச் சொன்னது யார்?
பேளப் போன இடத்தில் பேளை மறந்து விட்டதாம். 17315

பேளப் போன இடத்தில் விளாங்காய் அகப்பட்டது போல.
பேளுகிற கிழவியும் எழுந்திராள்.
பேன் இராத தலை கடிக்குமா? பேய் இராத தலை ஆடுமா?
(தலை அளக்குமா?)
பேன் கட்டிக் கல் இழுப்பது போல.
(யாழ்ப்பாண வழக்கு.)
பேன் பார்த்தாலும் பார்க்கும்; காதைப் பிய்த்தாலும் பிய்க்கும் குரங்கு. 17320

## பை

பை எடுத்தவன் எல்லாம் வைத்தியனா?
பைக்குள் இருந்தால் கைக்குள் வரும்.
பைசாசத்தைப் பணியேல்.
பைசா நாஸ்தி; படபடப்பு ஜாஸ்தி.
பைசாவுக்குப் பத்துப் பெண் சொசுறு குத்து. 17325

பைத்தியக்காரன் கையில் மாணிக்கம் போல.
பைத்தியக்காரன் கிழித்தது கோவணத்துக்கு ஆயிற்று.
பைத்தியக்காரன் கிழித்தது கோவணத்துக்கும் ஆகாது.
பைத்தியக்காரன் வாயால் எடுத்தாற் போல.
பைத்தியத்தைச் சுற்றிப் பத்துப் பேர். 17330

பைத்தியம் தெளிகிறது; உலக்கை எடுத்து வா, காது குத்த.
பைத்தியம் பரசிவன்.
பைத்தியம் பரிகாசம் வேணும்; ஒன்று அதிகாரம் வேணும்.
பைத்தியம் பிடித்த நாய் சாராயம் குடித்தது போல.
பைத்தியம் பிடித்த நாயில் பெண் நாய் ஆனா என்ன? ஆண் நாய் ஆனா என்ன? 17335

பைத்தியம் பிடித்துப் பாயைப் பிறாண்டுகிறது.
பைத்தியமோ பண்டாரமோ என்றால், இப்போதுதான் தொடர்கிறது என்றான்.
பைத்துப் பைத்து நூற்றுப்பத்து; படையாச்சிக்குப் பத்துத் தள்ளுபடி.
(ஏமாற்றுக் கணக்கு.)
பைந்தமிழ்ப புலவோர் பாட்டுக்கு ஏற்றவன்.
பையச் சென்றால் வையம் தாங்கும். 17340

பையத் தின்றால் பனையையும் தின்னலாம்.
பையப் பணிந்தவன் பட்டணத்தைச் சுற்றான்.
பையப் பையப் பாயும் தண்ணீர் கல்லும் கசியம் பாயும்.

பைய மிதித்தது வேடன் அடி; பகறி மிதித்தது பன்றி அடி.

பைய மென்றால் பனையையும் மெல்லலாம். 17345

பையலோடு இணங்கின் எய்திடும் கேடு.

பையன் நல்லவன்; பணம் பறியான்.

பையனுக்கு என்ன வரும்? எனக்கு மாசம் இரண்டு சின்னப் பணம் வரும்.

பையா, பருத்தி விதைக்கட்டும் பொறு என்றான், அப்பா எனக்கு ஒரு துப்பட்டி என்றான்.

பையில் கட்டி வைத்த பொருள் பறி கொடுக்கப்பட்டது. 17350

பையைக் கட்டு அவிழ்த்தவன் கை இட்டுப் பார்ப்பான்.

## பொ

பொக்கை வாய்க்கு ஏற்ற பொரிமா.
பொக்கை வாயன் மெச்சினானாம் பொரிமாவை.
பொக்கை வாயில் போச்சுப் பொரிமா என்றானாம்.
பொங்கப் பானை எடுக்கப் போனவனுக்குத் தங்கப் பானை கிடைத்ததாம். 17355

பொங்கல் வந்தால் தெரியும், பிறந்த இடத்துப் பெருமை.
பொங்கலும் போச்சு, போகியும் போச்சு; பொண்ணை அனுப்படா பேயாண்டி.
பொங்க வர மாட்டேன்; தின்ன வருவேன்.
(திங்க.)
பொங்கியும் பால் புறம் போகவில்லை.
பொங்கின பால் பொய்ப் பால். 17360

பொங்கினவர் காடு ஆள்வார்.
பொங்குகிற பதநீருக்குப் பதம் போட்டது போல.
பொங்குகிற பாலுக்கு நீர் தெளித்தது போல.
பொங்கு சனி செல்வத்தைப் பொங்கச் செய்யும்.
பொங்கு சனி போய் மங்கு சனி வந்தது; மங்கு சனி போய் கொங்கு சனி வந்தது. 17365
(சிரங்குச் சனி.)

பொங்கும் காலத்தே புளி நயக்கும்; மங்கும் காலத்தே மாங்காய் நயக்கும்.
பொங்கும் காலம் புளி பூக்கும்; மங்கும் காலம் மாங்காய் காய்க்கும்.
பொங்கும் காலம் புளி; மங்கும் காலம் மாங்காய்.
பொங்கும் சனி; மங்கும் சனி.
பொட்டி முறித்த பயனுக்குச் சட்டையும் தலைபாகையும்பார். 17370

பொட்டு இல்லா நெற்றி பாழ்.
பொட்டும் பொடியும் தட்டும் சவலையும்.

பொட்டைக் கண்ணுக்கு இரட்டைத் தீவட்டி.
பொட்டைக் குதிரைக்கு இரட்டைத் தீவட்டியாம்.
பொட்டைக்குப் பெண் கொடுத்துப் பார்; அந்த வேலையில் தப்பு இருந்தால் கேள். 16375

பொட்டைச்சி படித்துச் சட்டிதானே சுரண்ட வேணும்?
பொட்டைச்சியை முன் தள்ளிப் பொரி உருண்டை வாய் இது என்பான்.
(உண்ட வாய்.)
பொட்டைத் தராசு.
பொட்டை நாய்க்கு அப்பம் கிடைத்தது போல.
பொட்டை நாய்க்குத் தட்டுக் கூடை மறைப்பு. 17380

பொட்டை நெட்டுரு.
பொட்டையன் பெண்டாட்டியைத் தட்டுகிற மாதிரி.
பொடிச் சூட்டுக்கு ஆற்ற மாட்டாமல் நெருப்பில் குதித்தானாம்.
பொடிப் பயல் நொடிப் பொழுதில் செய்வான்.
பொடி மீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை. 17385

பொத்தான் பொதுவில் கொடுத்துச் செத்தான்.
பொத்தைச் சுரைக்காய் போல இருக்கிறான்.
பொத்தைப் பலாப் பழத்தைக் கீறி விட்டான் சந்தியிலே.
பொத்தைப் பூசணிக்காய் போல இருக்கிறான்.
பொதிக்கு அளக்கிறதுக்கு முன்னே சத்தத்துக்கு அளக்கிறதா? 17390
(சத்திரத்துக்கு.)

பொதி பொதியாய்ப் பூசணிக்காய் போகிறது; கடுகு போகிற இடத்தை ஆய்கிறான்.
பொதியை வைத்துவிட்டுப் பிச்சைக்குப் போனான்; அதையும் வைத்துவிட்டுச் செத்துக் கிடந்தான்.
பொதுவிலே அகமுடையான் புழுத்துச் செத்தானாம்.
பொதுவிலே மாமியார் புழுத்துச் செத்தாளாம்.
பொத்த மூஞ்சி ராயரே, எந்த மாசம் கல்யாணம்; காயும் கறியும் உண்டானால் கார்த்திகை மாசம் கல்யாணம். 17395

பொந்தியோடே கைலாசம் சேர்வாய்.
பொந்தில் அகப்பட்ட மந்தியைப் போல.

பொந்தில் இருக்கிற பூசணிக்காய் போகிறதைப் பார். அங்கு
இரண்டு போடு போட்டு வருகிறதைப் பார்.
(பொந்தில் விழுந்து. மொத்துப் போட்டு.)
பொந்து ஆயிரம்; புளி ஆயிரம்.
(ஆழ்வார் திருநகரியில் ஆயிரம் வருஷம்.)
பொத்தைச் சுரைக்காயைப் போல. 17400

பொம்மை கோபுரத்தைத் தாங்குமா?
பொய்யான பொருள் ஆசை மெய்யான அருளாசையை
விலக்குகிறது.
பொய் இருந்து புலம்பும்; மெய் இருந்து விழிக்கும்.
(கிடந்து புலம்பும்; கிடந்து தவிக்கும்.)
பொய் ஒழுக்கத்தார்க்கே பொருள் சேரும்.
பொய் சொல்லி வாழ்ந்தவனும் இல்லை; மெய் சொல்லிக்
கெட்டவனும் இல்லை. 17405

பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது.
(அகப்படாது.)
பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காது.
பொய் சொன்ன வாயோ பொரி தின்ற வாயோ.
(வாயும்.)
பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும்.
பொய் நின்று மெய்யே வெல்லும். 17410

பொய் பூரணச் சந்திரன்; மெய் மூன்றாம் பிறை.
பொய் பூரணம்; மெய் இறை.
பொய் முன்னே மெய் நிற்குமா?
பொய் மெய்யை வெல்லுமா?
பொய்யாருக்குப் பொய் உரைத்தால் வெற்றியாம். 17415

பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை விலக்குகிறது
பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலுமே
மெய்போலுமே.
பொய்யும் ஒரு பக்கம்; பொருளாசையும் ஒரு பக்கம்.
பொய்யும் மெய்யும் நீளத் தரும்.
(தெரியும்.)
பொய்யும் மெய்யும் போக்கிலே வெளிப்படும். 17420

பொரித்துக் கொட்டினாலும் அசைத்துக் கொட்டாதே.

பொரி மாவை மெச்சினாளாம், பொக்கை வாய்ச்சி.
(மெச்சினாராம்... வாயர்.)
பொருந்திய ஒழுக்கம் திருந்திய செல்வம்.
பொருள் ஆசையும் மனச்சாட்சியும் பொருந்துமா?
பொருள் இல்லார்க்கு அருளும் இல்லை. 17425

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை; அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை.
பொருள் இல்லார்க்குப் பூலோகம் இல்லை.
பொருள் உள்ளோர்க்குப் பூலோகம் உண்டு; அருள் இல்லோர்க்கு அந்த லோகம் உண்டு.
பொருள்தனைப் போற்றுவாள்.
(போற்றிவாழ்.)
பொருள் போன வழியே துக்கம் போம். 17430

பொருளும் கொடுத்துப் பழியும் தேடுவதா?
பொருளும் போகமும் கூடவரா; புண்ணியமே கூட வரும்.
பொருளை இச்சித்துப் புது மண்டபத்தை இடிப்பது போல.
(பொது மண்டபத்தை.)
பொருளைப் போட்ட இடத்தில் தேடு.
பொல்லாக் குணத்துக்குப் பூமியில் மருந்து இல்லை. 17435

பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
பொல்லாத காலத்துக்குப் புடைவையும் பாம்பு ஆகும்.
பொல்லாத காலம் சொல்லாது வந்தது.
(வரும்.)
பொல்லாத காலம் சொல்லாமல் வரும் புரட்டாசியிலே.
பொல்லாத குணத்துக்கு நல்ல மருந்து உண்டா? 17440

பொல்லாத மனம் புத்தி கேளாது.
பொல்லாதவர்கள் சங்காத்தம் உப்பு மணலில் விழுந்த நீர்போல.
(உப்பு மண்ணில்.)
பொல்லாதவர்கள் சினப்பட்டால் கல்லின் பிளவு போல ராசியாக மாட்டார்கள்.
பொல்லாத வேளைக்குப் புழுவும் சாரைப் பாம்பு.
பொல்லாதது என்பது பொய் உடல். 17445

பொல்லாப் பிள்ளை இல்லாப் பிள்ளை.
பொல்லாப் பெண்ணுக்கு எல்லாம் துக்கிரி.

பொழுதாலக்குடிக்கு வேறு போக வேணுமா?
(சில வீடுகளே உள்ள ஊர். எப்போது வேண்டுமானாலும் திருடலாம்.)
பொழுது பட்ட இடம், விடுதி விட்ட இடம்.
பொழுது விடிந்தது; பாவம் தொலைந்தது. 17450

பொழுது விடிந்ததே நாராயணா, போட்டுக் கொள்ள வேணுமே நாராயணா.
பொழுது விடியுந்தனையும் மழை பெய்தாலும் கோட்டாங்கிளிஞ்சல் முளையாது.
பொழுது விடியுந்தனையும் இடித்தாலும் புழுக்கைக்கு ஒரு கொழுக்கட்டை.
பொற்கலம் ஒலிக்காது; வெண்கலம் ஒலிக்கும்.
பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப புலியின் கையில் அகப்பட்டது போல. 17455

பொற்குடத்துக்குப் பொட்டு இட்டது போல.
பொற்குடத்துக்குப் பொட்டு இட்டுப பார்க்க வேண்டுமா?
பொற் குடம் உடைந்தால் பொன்னாகும்; மட்குடம் உடைந்தால் என்ன ஆகும்?
பொற்கொல்லன் குப்பையைக் கிளறினால் அத்தனையும் பொன்.
பொற் பூ மணக்குமா? 17460
(வாசிக்குமா?)

பொற் பூவின் வாசனையும் முருக்கம் பூவின் வாசனையும் சரி.
பொறாதவன் கையில் புண்.
பொறாதவன் நெஞ்சிலே கொள்ளிக்கட்டையால் சுட வேண்டும்.
பொறியைத் தட்டடா புத்தி கெட்ட ஆசாரி.
(பகைவனைப் பொறியில் அகப்படுத்த.)
பொறி வெறுறவனை அறிவினை குருவாம். 17465

பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு.
பொறுக்கிப் பயலுடன் சிறுக்கிக்கு என்ன பேச்சு?
பொறுக்கியிலும் பொறுக்கி பொன்னம் பலப் பொறுக்கி.
பொறுக்குத் தின்னும் நாய்க்கு முறுக்கும் திருப்பும் அதிகம்.
பொறுக்கு விதையால் அடுக்கடுக்காய் மணி பிடிக்கும். 17470

பொறும்தலை கசப்பாய் இருந்தாலும் பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு.
(போகப் போக.)
பொறுத்தால் அரசு ஆள்வார். பொங்கினால் காடு ஆள்வார்.
(பொறுத்தவர்-பொங்கினவர்-பூமி ஆள்வார். பொறாதார்.)

பொறுத்தார் பூமி ஆள்வார். பொங்கினவர் காடு ஆள்வார்.
பொறுத்தான் பொறுத்தான் என்று போகிறவனை குட்டுகிறதா?
பொறுத்துப் பொறுத்துப் பார்த்தானாம்; வெட்கம் இன்றிக் கேட்டானாம். 17475

பொறுமைக்குப் பூமிதேவி.
பொறுமை கடலினும் பெரிது.
பொறுமை தன்னையும் எதிரியையும் காக்கும்.
பொறுமை புகழ் தரும்.
பொறுமை புண்ணியத்துக்கு வேர்; பொருளாசை பாவத்துக்கு வேர். 17480

பொறுமை பூமி ஆளும்.
பொறுமை பெருமைக்கு அழகு.
பொறுமையில் சிறந்தவள் பூமாதேவி.
பொறுமை பூஷணம்.
பொன் அகப்பட்டால் பொன் முடியத் துணி அகப்படாதா? 17485

பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது.
பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
பொன் இடப் பொன் இடப் பெண் அழகு; மண் இட மண் இட மாடம் அழகு.
பொன் இடப் பொன் இடப் பெண்ணும் சிறக்கும்; மண் இட மண் இடச் சுவரும் சிறக்கும்.
பொன் இரவல் உண்டு; பூவை இரவல் உண்டா? 17490

பொன் உருகக் காயும், மண் உருகப் பெய்யும் புண்ணியப் புரட்டாசி.
(மணவாளர் புரட்டாசி.)
பொன் உள்ள இடம் மின்னும்; பூ உள்ள இடம் மணக்கும்.
பொன் ஊசி என்றால் கண்ணைக் குத்திக் கொள்ளலாமா?
பொன் என்றால் பிணமும் வாய் திறக்கும்.
(கொட்டாவி விடும்.)
பொன் ஒன்று பணிகள் பல. 17495

பொன் கத்தி என்று கழுத்தை அறுத்துக் கொள்ளலாமா?
(மார்பில் குத்திக் கொள்ளலாமா?)
பொன் கலம் ஆகிலும் மண் சுவர் வேண்டும்.
பொன் களங்கப்பட்டால் புடம் போடலாம்; பெண் களங்கப்பட்டால் என்ன செய்வது?

பொன் கறுத்தால் மாற்றுக் குறையுமா?
பொன் காத்த பூதம் போல. 17500

பொன் காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டதுபோல.
பொன் காய்த்த மரம் போல இருக்கிறான்.
பொன் கிடைத்தால் பொன் முடியத் துணி கிடையாதா?
பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.
பொன் குடத்துக்குப் பொட்டு இட்டுப் பார்த்தது போல. 17505

பொன் குடம் உடைத்தால் பொன்; மண் குடம் உடைத்தால் மண்.
பொன் குருவி போலப் பொருந்தி வாழ வேண்டும்.
பொன் குருவி போன இடம் போதனுக்கும் தெரியாது.
பொன் கோடி கிடைத்தாலும் புதன் கோடி கிடைக்காது.
பொன் சுட்டு ஆறுவது போல. 17510

பொன் செருப்பு ஆனாலும் காலுக்குத்தான் போடவேண்டும்.
பொன் போல் இயங்கும் குணம் சஞ்சலத்தால் குரங்காகும்.
பொன் மணி அற்றவளை அம்மணி என்பானேன்?
பொன் மலர் நாற்றம் பெற்றது போல.
பொன் முடி அல்லது சடை முடி வேண்டும். 17515

பொன் முடிந்த துணிக்கும் புத்திரனுக்கும் தீட்டு இல்லை.
பொன் விலங்கு ஆனாலும் விலங்குதானே?
பொன் விளக்கு ஆனாலும் தூண்டுகோல் வேண்டும்.
பொன் வைக்கிற இடத்தில் பூவாவது வைக்க வேண்டும்.
(பூ வைக்கிறது)
பொன்னம்பலத்துக்கும் புவனகிரிப் பட்டணத்துக்கும் என்றைக்கும் உண்டான இழவு. 17520

பொன்னம்பலம் உண்டானால் என்ன அம்பலம் கிடைக்காது?
பொன்னாங்கண்ணிக்கு புளி இட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் ஓர் உழக்கு உண்ணும்.
பொன்னாங்கண்ணிக்குப் புளி இட்டு ஆக்கினால் உள்நாக்கு எல்லாம் தித்திக்கும்.
பொன்னாங்கண்ணிக்குப் புளி குத்தி ஆக்கினால் அண்ணாமலையாரும் தொண்ணாந்து நிற்பார்.
(பொன்னாங்கண்ணிக் கீரைக்கு)
பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தார்க்கு உண்டு. 17525
(பட்டினத்தார் பாடல்)

பொன்னாலே கத்தி என்றால் வயிற்றில் குத்திக் கொள்ள முடியுமா?
பொன்னாலே கலம் உண்டானாலும் மண்ணாலே சுவர் வேண்டும்.
பொன்னாலே பொரித்துத் தங்கத்தாலே தாளிக்கிறாளாம்.
பொன்னான மகள் ஆனாலும் மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும்.
(பெண் மருமகள்)
பொன்னான மனத்தைப் புண் ஆக்குகிறான். 17530
(ஆக்காதே)

பொன்னான வாயாலே பூக் தருகிறேன் என்றாலே போதும்.
பொன்னி பூ முடிப்பதற்குள் பூங்காடே விளாங்காடு ஆச்சாம்.
பொன்னின் கலப்பை வரகுக்கு உழப் போச்சுதாம். வரகுச் செருக்கு வரகு பட்டதாம்.
பொன்னின் குடத்துக்குப் பொட்டு இட வேண்டுமா?
பொன்னின் குடம் உடைத்தால் என்ன ஆகும்; மண்ணின் குடம் உடைத்தால் என்ன ஆகும்? 17535

பொன்னின் குணம் போமா? பூவின் குணம் போமா?
பொன்னுக்குப் பொடியாய்ப் போச்சுது.
பொன்னுக்குப் பொன்னும் இழந்து போக சுகமும் இழந்தது போல.
பொன்னும் இரும்பும் ஆன விலங்குகள் போல.
பொன்னும் தெரியாது; பொன் முடிந்த துணியும் தெரியாது. 17540

பொன்னும் பத்தாய் இருக்க வேணும்; பொண்ணும் முத்தாய் இருக்க வேணும்.
பொன்னை எரிந்தாலும் பொடிக் கீரையை எறியலாமா?
பொன்னையும் புடைவையையும் நீக்கிடில் பெண் மலக்கூடு.
பொன்னை விற்றுத் தின்னு; மண்ணை வைத்துத் தின்னு.
பொன்னை வைக்கிற கோவிலில் பூவையாவது வைக்கவேணும். 17545
(வைக்கிற இடத்தில்.)

## போ

போக்கணம் கெட்ட முயல் பொந்திலே நுழைந்தாற் போல.
போக்கணம் கெட்டவன் போலீஸ்; நாலும் கெட்டவன் நார்மல் ஸ்கூல்; சாகத் துணிந்தவன் சர்வே.
போக்கணம் கெட்டவன் ராஜாவிலும் பெரியவன்.
போக்கனுக்குப் போவதே வழி.
போக்கிரிக்கு ஏற்ற சாக்கிரி. 17550

போக்கிரிக்கு ஏற்றது போலீஸ் வேலை.
போக்கிரிக்குப் போக்கிரி வேண்டும்.
போக்கிரிக்கு முதல் தாம்பூலம்.
போக்கிரித் தனத்துக்கு முதல் தாம்பூலம் கொடுக்க வேண்டும்.
போக்கு அற்ற நாய்க்குப் போனது எல்லாம் வழி. 17555

போக்கு அற்ற மத்தளம் கொட்டினதாம்; பூண்டித் தெய்வம் வந்து ஆடினதாம்.
போக்கு அற்றால் புலி ஆள்மேலே பாயும்.
போக்கு அற்றான் நீக்கு அற்றான்; பொழுது விடிந்து கந்தை அற்றான்.
போக்கு இடம் கெட்ட முயல் பொந்திலே நுழைந்தாற் போல.
போக்கு இடம் கெட்ட மூளிக்கு மூக்கின் மேலே கோபம். 17560
(மூக்கிலே.)

போக்கு இடம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.
போக்கு இடம் கெட்டவன் ராஜாவிலும் பெரியவன்.
போக்குச் சாதம்.
போக்கு நீக்கு இல்லாமல் புத்திக்குச் சரிப்பட்டபடி பேசுகிறது.
போக்கும் இல்லை; புகலும் இல்லை; முறுக்கிப் பிடிக்க மீசை உண்டு. 17565

போக்கு விடாமல் இருந்தால் நடுமடை எடுக்கும்.
போகப் போகத் தெரியும் புதுக் கணக்கன் வாழ்வு.
போகப் போகத் தெரியும் பொய்யும் மெய்யும்.

போகமும் புவனமும் பொருந்தும் இடம் எங்கும் தேசகாரணம் திரியும்.
போகமும் உடன் உண்டு பொன்னையும் கைக் கொள்ளும் மாதர். 17570

போகாத இடத்தில போனால் வராத சொட்டு வரும்.
(வராத தெல்லாம்.)
போகாத ஊருக்கு வழி ஏன்?
(கேட்கிறது போல, சொல்கிறது போல்.)
போகாத ஊருக்கு வழியும் காராமணிக்குக் களையும்.
போகிற பிசாசு கல்லைத் தூக்கிப் போட்டுப் போயிற்றாம்.
போகிற போது பொறி தட்டினது போல. 17575

போகிறவன் எப்போதும் போவான்.
போகிறவன் பொன்னைத் தின்றால் இருக்கிறவன் இரும்பைத் தின்பானா?
போகிறேன், போகிறேன் என்று பெரியரிசியை மான வைத்தானாம்.
போசனம் கொஞ்சம் ஆனாலும் ஆசனம் பெரிது.
போசனம் சிறுத்தாலும் ஆசனம் கொடுக்க வேண்டும். 17580

போஞ்ச கொள்ளி புறத்தே.
(நாஞ்சில் நாட்டு வழக்கு.)
போட்ட இடத்தில் தேட வேண்டும்.
போட்டது போட்டபடி.
போட்டால் நெல்; போடா விட்டால் புல்.
போட்டால் முளைக்கும்; பொழுது விடிந்தால் காய்க்கும். 17585

போடு காலில் தேடிப் போடு.
போடு தோப்புக்கரணம் என்றால் எண்ணிக் கொள் என்றானாம்.
போத்தி பிறந்த புதன் கிழமை.
(நாஞ்சில் நாட்டு வழக்கு.)
போதகர் சொல்லைத் தட்டாதே; பாதகர் இல்லைக் கிட்டாதே.
போதருக்கே சோதனை மிஞ்சும். 17590
(போதகருக்கு.)

போதனை பெரிதோ? சாதனை பெரிதோ?
போதாக் குறைக்குப் பொன்னியும் வந்தாள்.
(திரண்டாள்.)

போதாத காலத்துக்குப் பழுதையும் பாம்பு ஆகும்.
போதாத காலத்துக்குப் புக்ககத்து அத்தை வந்தாளாம்.
போதாத காலத்துக்குப் புடலங்காயும் பாம்பாய்ப் பிடுங்கும். 17595

போதுக்கும் பாட்டுக்கும் சரி.
போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
போதும் போதாததற்குப் புக்ககத்து அத்தையும் வந்தாளாம்.
போம் பழி எல்லாம் அமணன் தலையோடே.
போய் ஒரு கோபத்தால் கிணற்றில் விழுந்தால் ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் அப்பால் எழுந்திருக்கலாமா? 17600

போயும் வந்தும் பொன்னம்பலம்; திரும்பி வந்தும் திருவம்பலம்.
போர் அடிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?
போர் இட்ட வீடு நீறு இட்டபின்.
போர் இட்ட வீடு பொடி பட்டு வேகும்.
போர் சுட்டுப் பொரி பொறுக்கி. 17605

போர்த்துக் கொண்டவர்களைக் காக்கும் போக்கணம் கெட்ட குளிர்.
(காத்திருக்கும்.)
போர்த்தொழில் புரியேல்.
போர் பிடுங்குகிறவன் சாகுகிறவனை மிரட்டின கதை.
போர் பிடுங்குகிறவன் பூரக்களம் சாகுகிறவனை மருட்டுகிறானாம்.
போர் மிதிக்கிற மாடு வைக்கோல் தின்னாதா? 17610

போரில் ஊசி தேடின சம்பந்தம்.
போரில் குதிரை நடவாவிடின் வீரர் பறப்பார்.
போருக்கு அஞ்சுவார் எனின் மேல் படுத்துக் கொள்ளுங்கள்.
போரைக் கட்டி வைத்துப் போட்டுப் பிச்சைக்குப் போவானேன்?
போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டுக் கட்டுமா? 17615

போலிக்கு ஒரு பொன்மணி கிடைத்ததாம்; அதைத் தூக்கிக் கண்ணில் தொட்டுத் தொட்டுப் பார்த்ததாம்
(வேலைக்கு.)
போலிக்கு ஒரு பொன்மணி கிடைத்ததாம்; அதைப் பொழுது விடியுமட்டும் தொட்டுத் தொட்டுப் பார்த்ததாம்.
(போலைக்கு.)
போலி நாரி வாடி; காடி மேல் ஏறடி.
(போலை)

போலி பொறுக்கப் போனால் பூனை குறுக்கே போச்சாம்.
(போலை)
போலீஸ்காரன் கையில் சிக்கின மோட்டாரும் செக்குக்காரன் கையில் சிக்கிய மாடும். 17620

போவதும் வருவதும் மோட்டார் வண்டி; பொங்கித் தின்பது புது மண் சட்டி.
போனார் அடி பொல்லாதடி; வீட்டிலே போய்ச் சொல்லாதடி.
போன அன்றைக்குப் போய்ப் புதன் அன்றைக்கு வா.
போன இடத்தில் புல்லும் முளைக்காது.
போன இடம் புல் முளைத்துப் போயிற்று. 17625

போன கண்ணையும் கொடுக்குமாம் பொன்னாங்காணி.
போன சனியன் போச்சு என்று இருந்தேன்; பொந்துக்குள் இருந்து கீச்சுக் கீச்சு என்றது.
(மயிருக்குள் இருந்து)
போன சனியனைத் தாம்பூலம் வைத்து அழைத்தது போல.
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தது போல.
போன தினம் போகப் புதன் அன்றைக்கு வந்தான். 17630
(போன அன்றைக்குப் போய்)

போனது என்ன ஆனாலும் புத்திக் கொள்முதல்.
போனது போச்சுது; பொழுது விடிந்தது.
போனது போல வந்தானாம் புது மாப்பிள்ளை.
போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.
(இல்லாதவன்)
போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே. 17635

போன மாட்டைத் தேடுவாரும் இல்லை; மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.
போன மாட்டைத் தேடுவாரும் இல்லை; வந்த மாட்டைக் கட்டுவாரும் இல்லை.
போன முதல் பெரிய முதல்.
போன முயல் பெரு முயல்.
போனவன் உடைமை இருந்தவனது. 17640

போனவன் போனான்; இருந்தவன் வாழ்ந்தான்.
போனால் போன இடம்; வந்தால் வந்த இடம்.
போனால் மயிர் போச்சு.
போனால் வராது; பொழுது போனால் நிற்காது.
போனாற்போல் வந்தான் புதுமாப்பிள்ளை. 17645

## பௌ

பௌ வந்து எழில் கொள்.
பௌவப் பெருமை தெய்வச் செயலே.
பௌவம் உற்றது ஆக்கை; செவ்வை அற்றது ஆக்கை.

## ம

மக்கட் பிறப்பு மகிமைப் பிறப்பு.
மக்கட் பேறும் மழை பெய்கிறதும் மகாதேவனுக்குக் கூடத் தெரியாது. 17650

மக்கத்துக்குப் போயும் நொண்டிப் பக்கிரி காலில் விழுந்தது போல.
மக்கள் உடம்பு பெறற்கு அரிது.
மக்கள் களவும் வரகு பதரும் சரி.
மக்கள் சோறு தின்றால் மகிமை குறையும்.

மக்கள் பொன்னாக இருந்தாலும் மாப்பொன் குறையாமல் இருக்குமா? 17655

மக்கள் வயிறும் வாடக் கூடாது; ஆனை அரிசியும் குறையக் கூடாது.
(பானை அரிசியும்.)
மக்களுக்குச் சத்துரு மாதா பிதா.
மக்களைக் காக்கும் மணத்தக்காளி.
மக்காவுக்குப் போய்க் கொக்குப் பிடித்தது போல.
(போயா கொக்குப் பிடிக்க வேணும்?)
மக்குப் பிளாஸ்திரி. 17660

மகத்தில் பிள்ளை ஜகத்தில் இல்லை.
மகத்தில் மங்கை; பூரத்தில் புருஷன்.
மகத்துச் சனி.
மகத்துத் தகப்பன் முகத்தில் விழியான்.
மகத்துப் பெண் வசத்திலே கிடையாது. 17665
(கிடைக்காது.)

மகத்துப் பெண் சகத்துக்கு அதிசயம்.
மகத்துப் பெண் முகத்துக்கு ஆகாது.
மகதீசுவரத்தை எண்ணி மனப்பால் குடிக்கிறது.
மகம் மன்னன் ஆவான்.
மகமாயிக்கு மடிப்பிச்சை. 17670

மகமேருவைச் சேர்ந்த காகமும் பொன்னிறமாம்.
(யாப்பருங்கலக் காரிகை.)
மகராஜனுக்கு இடம்விடக் கூடாது; ஏழைக்கு ஆசை சொல்லக் கூடாது.
மகராஜனுக்கு வாழ்க்கைப்பட்டு மஞ்சளுக்குத் தரித்திரமா?
மகள் செத்தால் பிணம்; மகன் செத்தால் சவம்.
மகள் செத்தாள்; தாய் திக்கு அற்றாள். 17675

மகள் பிள்ளையை இடுக்கியும், மகன் பிள்ளையை நடத்தியும்.
மகளுக்கு எட்டோடே எட்டு எண்ணெய்; மருமகளுக்குத் தீவிளிக்குத் தீவிளி எண்ணெய்.
மகளுக்குக் குட்டல் பாக்கியம் தவிர மற்றப் பாக்கியம் எல்லாம் இருக்கிறது.
மகளுக்குப் புத்தி சொல்லித் தாய் அவிசாரி போனாளாம்.
(அதர்மவழி நடந்தாளாம்.)
மகனே, உன் சமர்த்து. 17680

மகளே வல்லாண்மை.
மகன் அறிவு தந்தை அறிவு.
(பழமொழி நானூறு.)
மகன் பிள்ளையை இடுக்கியும், மகள் பிள்ளையை நடத்தியும்.
(யாழ்ப்பாண வழக்கு.)
மகன் செத்தாலும் சாகட்டும்; மருமகள் கொழுப்பு அடங்கினால் போதும்.
(கொட்டம்.)
மகன் செத்தாலும் சாகட்டும்; மருமகள் தாலி அறுக்க வேணும். 17685

மகாதேவர் ஆடிடத்துப் பேயும் ஆடுகிறது.
மகா பட்டாதார்ச் செல்லாம் மரணமாம்; மாட்டுக்காரப் பிள்ளைக்குச் சரணமாம்.
மகா புருஷர் மகிமை பிறவிக் குருடனுக்குத் தெரியுமா?
மகா பெரியவர் மண்டையிலே புழுத்தவர்.
(பழுத்தவர்)
மகாமகம் ஆனால் பார்க்கக் கூடாது. 17690

மகாமகம் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு விசை வரும்.
மகாராஜன் கல்யாணத்தில் நீராகாரம் நெய் பட்ட பாடு.
மகாராஜன் பெண்சாதி மர்மச்சாரி; யாருடன் சொன்னாலும் திறமைக்காரி.
(மாநிலத்தில் சென்றாலும் இல்லாத திறமைக்காரி.)
மகாராஜன் மண்ணைத் தின்றால் மருந்துக்குத் தின்றான் என்பார்கள்; பிச்சைக்காரன் மண்ணைத் தின்றால் வயிற்றுக்கு இல்லாமல் தின்றான் என்பார்கள். 17695

மகாராஜனோடு சொக்கட்டான் போடலாமோ?
(ஆடலாமோ?)
மகாராஜா சத்ரபதி; அன்னசத்திரம் இராப்பட்டினி.
மகாலக்ஷ்மி பரதேசம் போனாற்போல.
(என்றானாம்.)
மகிமைக்கார மாப்பிள்ளை வந்திருக்கிறான் தோப்பிலே.
மகிமைக்கு அஞ்சிய மருமகனே, எருமைக் கன்றைக் கொல்லாதே. 17700

மகிமை சுந்தரி, கதவை ஒஞ்சரி.
மகிமைப் பட்டவனுக்கு மரணம்; மாட்டுக்காரப் பையனுக்குச் சரணம்.

மகிமையிலே ஒரு பெண் குவளையிலே வாழ்கிறாள்; அதிலும் ஒரு பெண் அறுத்துவிட்டு அழுகிறாள்.
(குவளையிலே சாகிறாள்.)
மங்கம்மா காலத்துப் பேச்சு; எங்கம்மா காலத்தில் போச்சு.
மங்கம்மா சாலை மலைமேலே சோலை. 17705

மங்கம்மா வந்தாள்; தங்கமழை பெய்தது.
மங்கலம் முந்தியா? மண் முந்தியா?
(மங்கலம்-மண்கலம்)
மங்கலம் முதல் மணக்குடி வரை.
(கன்யாகுமரி வழக்கு.)
மங்கலமும் திருநாள்; மகள் வீடும் கல்யாணம்; அங்கேதான் போவானா? இங்கேதான் வருவானா?
மங்கும் காலத்தில் மாப் பூக்கும்; பொங்கும் காலத்தில் புளி பூக்கும். 17710

மங்கும் காலம் மாங்காய்; பொங்கும் காலம் புளி.
மங்குலைக் கண்ட மயிலைப் போல ஆடுகிறாள்.
மங்கை தீட்டானால் கங்கையில் மூழ்குவாள்; கங்கை தீட்டானால் எங்கே மூழ்குவாள்?
மங்கை நல்லாள் பெண் பெருமாள் வாழ்த்தெல்லாம் எத்தனை நாள்? திங்கள் ஒரு பொழுதும் செவ்வாய் பகல் அறுதி.
மங்கை முந்தியா. 17715
(மங்கை-உத்தரகோச மங்கை.)

மங்கையர் கண் பெருவிரலைப் பார்க்கும் போதே கடைக்கண் உலகெல்லாம் சுற்றும்.
மங்கையரில் மீனாட்சி; மாப்பிள்ளைகளில் சொக்கலிங்கம்.
மச்சக் காசில் மிச்சம் இருக்காது.
மச்சத்தின் குஞ்சுக்கு இப்படி என்றால் மாதாவுக்கு எப்படியோ?
மச்சம் விற்ற காசு மன்னனுக்கு ஆகாதா? 17720

மச்சான் அடித்தது உறைக்கவில்லை; மதனி சிரித்தது உறைத்ததாம்.
மச்சான் உறவு மலை மீதும் உண்டு.
மச்சான் செத்தால் மயிர் போச்சு; கம்பளி நமக்காச்சு.
மச்சானை நம்பினால் உச்சாணியில் இருக்கலாம்.
(கிருஷ்ணார்ஜுனர்.)
மச்சானைப் பார்க்க உறவும் இல்லை; மயிரைப் பார்க்கக் கறுப்பும் இல்லை. 17725

மச்சில் ஏற்றி ஏணியை வாங்கி விட்டால்.
மச்சினன் உண்டானால் மலை ஏறிப் பிழைக்கலாம்.
மச்சினன் தயவு உண்டானால் மலை மீதும் ஏறலாம்.
மச்சு ஏற்றி ஏணி களைவு.
(பழமொழி நானூறு.)
மச்சு வீட்டில் குச்சு வீடு மேல். 17730

மச்சை அழித்தால் குச்சுக்கும் ஆகாது.
(ஆம்.)
மச்சைப் பிரித்தால் குச்சும் ஆகாது.
மச நாய்க்குச் சாராயம் உற்றினாற்போல.
மச நாய் சாவது எப்போது? ஊர் சுத்தம் ஆவது எப்போது?
மசான வைராக்கியம். 17735

மசிர் விழுங்கினாற்போல் இருக்கிறது.
மஞ்சள் குளித்து மலைமேலே இருக்கும்போது மாட்டேன் என்றீரே; பிள்ளை பெற்று நொந்திருக்கச்சே வேண்ட வந்தீரே.
(நோண்ட.)
மஞ்சன் வைபபது மதவை நிலத்தில்.
மஞ்சளும் மலரும் கொண்டு துதிக்காவிட்டாலும் நெஞ்சில் நினைப்பதே போதும்.
மஞ்சனமும் மலரும் கொண்டு துதிக்காவிட்டாலும் நெஞ்சத்தில் நினைப்பதே போதகம். 17740

மஞ்சு கறுத்தால் மண்ணாச்ச நல்லூருக்கு வேட்டை.
(அரிசி விலையை ஏற்றுவார்கள்.)
மட்கி மண்ணாயிருக்கிறான்.
மட்டற்ற சேனை கிட்டே இருந்தாலும் கட்டக் கயிறுடன் அட்ட காசத்துடன் வருவான்.
மட்டாய் இருந்தது மதனி குடி வாழ்க்கை.
மட்டான போஜனம் மனசுக்கு மகிழ்ச்சி. 17745

மட்டி எருக்கிலை, மடல் மடலாய் பூத்தாலும் மருக்கொழுந்து வாசனை ஆகுமா?
(மாணப் பூத்தாலும்.)
மட்டித் துலுக்கனும ముட்டாள் நாயக்கனும் பட்டாளத்துக்குத் தான் லாயக்கு.
மட்டிப் பயலுக்குத் துட்டக் குருக்கள்.
மட்டியிலும் மட்டி மகா மட்டி.
மட்டு இல்லாமல் கொடுத்தாலும் திட்டுக் கேட்கலாகாது. 17750
(திட்டிக் கொடுத்தல் தகாது.)

மட்டை இடம், குட்டி வலம்.
மட்டைக் கரியையும் மடைப்பள்ளியாரையும் நம்பப் படாது.
(மடைப் பள்ளியையும்.)
மட்டைக்கு இரண்டு கீற்று.
மட்டைக்கு ஏற்ற குட்டை.
மட்டைக்கு ஏற்ற கொட்டாப்புளி. 17755

மடக் கிழவியினும் புத்தியுள்ள வாலிபன் அதிகம்.
(கிழவனினும்.)
மடக்குக் கீரையை வழித்துப் போட்டி, மதிகெட்ட பெண்டாட்டி.
மடக் கேள்விக்கு மாறு உத்தரம் இல்லை.
(மாற்று உத்தரம்.)
மடக் கொடி இல்லாத மனை பாழ்.
மடங்காக் குதிரைக்குச் சவுக்கடி. 17760

மட சாம்பிராணி.
மடத்து நாயைச் சாத்துவது போலச் சாத்த வேணும்.
மடத்தையும் கட்டி மடநாயையும் காவல் வைத்தது போல.
மடநாய்க்குத் தடியடி மிச்சம்.
மடப் பெருமையே தவிர நீராகாரத்துக்கும் வழியில்லை.
மடம் பிடுங்கிக் கொண்டு நந்தவனத்துக்கு வழி எங்கே
என்றானாம். 17765

மடம் புகுந்த நாய் தடியடிக்குத் தப்பாது.
மடம் விட்டவனுக்கு நந்தவனத்தின்மேல் சபலம்.
(ஆசை ஏன்?)
மடிச் சீலையும் குறையாமல் மக்கள் முகமும் வாடாமல்.
மடிப் பழத்தை விட்டுத் துறட்டுப்பழத்துக்கு நின்றாளாம்.
மடிப்பிச்சை மங்கிலியப் பிச்சை. 17770

மடி மாங்காய் போட்டுத் தலை வெட்டலாமா?
மடியில் இருக்கிற அவல் கொடாதவர் மச்சில் ஏறிக் கொடுப்
பார்களா?
மடியில் இருந்த பணம் போய் வழியில் இருந்த சண்டையை
வலுவில் இழுத்ததாம்.
மடியில் குழந்தையைக் கிடத்தி ஊர் முழுதும் தேடினாளாம்.
மடியில் கொட்டினால் எடுக்கலாம்; வாயால் கொட்டினால்
எடுக்க முடியாது. 17775

மடியில் நெருப்பைக் கட்டிக் கொள்வார்களா?
மடியில் பணம் போய் வழியில் சண்டையை இழுத்ததாம்.
மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம்?
மடியிலே பிள்ளைப் பூச்சியைக் கட்டிக் கொண்ட மாதிரி.
மடியிலே பூனைக் குட்டியைக் கட்டிக் கொண்டு சகுனம் பார்ப்பது போல. 17780

மடியிலே மாங்காய் போட்டுத் தலையை வெட்டலாமா?
மடியை அறுத்துப் பால் குடித்தது போல.
(மடுவை.)
மடியைப் பிடித்துக் கல்லைக் கட்டி மயிரைப் பிடித்துக் காசு வாங்கினான்.
(கள்ளை ஊற்றி கள்ளைக் கொடுத்து விட்டு. முடியைப் பிடித்து.)
மடியைப் பிடித்துக் கள் வார்த்து மயிரைப் பிடித்துக் காசு வாங்குகிறதா?
மடியைப் பிடித்து மாங்காய் போட்டு முடியைப் பிடித்துப் பணம் வாங்கு. 17785

மடி விதை முந்து முன்னே பிடி விதை முந்தும்.
மடை ஏறப் பாய்ச்சினால் தடை ஏற விளையும்.
மடையன் வரகு விதை.
மடையனுக்கு மறுமொழி இல்லை.
மடைவாய்க் கொக்குப் போல. 17790

மண் ஆயினும் மனை ஆயினும் காப்பாற்றினவர்களுக்கு உண்டு.
மண் இட மண் இட வீட்டுக்கு அழகு; பொன் இடப் பொன் இடப் பெண்ணுக்கு அழகு.
மண் உருகப் பெய்யும் புண்ணியப் புரட்டாசி.
மண் ஓரம் நின்று வழக்கு ஓரம் பேசுவது போல.
மண் கட்டிப் பிள்ளைக்கு எரு முட்டை பணியாரம். 17795

மண் காசுக்குச் சாம்பற் கொழுக்கட்டை.
மண் குதிரை ஆற்றில் இறங்குமா?
மண் குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கலாமா?
மண் சோறு புண் படுத்தும்.
மண்டுக்குப் புளி; மனைககு வேம்பு. 17800
(மண்ணுக்குப் புளி.)

மண்டை உள்ள மட்டும் சளி போகாது.
(உள்ளவரையில். சனி இருக்கும்.)
மண்டைககுத் தக்க கொண்டை; வாய்க்குத் தக்க பேச்சு.
(ஏற்ற கொண்டை.)

மண்டைக்குத் தகுந்த கொண்டை போட வேணும்.
மண்டையில் எழுதி மயிரால் மறைத்தது போல.
மண்டையில் துணியைக் கட்டிக்கொண்டுச் சண்டைக்கு மார் தட்டுகிறது. 17805

மண்டையை உடைத்து மாவிளக்குப் போட்டிடுவேன்.
மண்ணாங்கட்டி, தெருப்புழுதி.
மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக்கு எரு முட்டை பணியாரம்.
மண்ணாங்கட்டியின் குரல் மலைக்குக் கேட்குமா?
மண்ணாய்ப் போவான் காலன், கண்ணா மண்ணா தெரியவில்லை. 17810

மண்ணால் ஆனாய்; மண்ணாய் இருக்கிறாய்.
மண்ணில் இருந்து பெண் ஓரம் சொல்லாதே.
மண்ணில் இருந்து வழக்கு ஓரம் சொல்லாதே.
மண்ணில் பிறந்து மண்ணில் வளர்ந்து.
மண்ணில் முளைத்த பூண்டு மண்ணுக்கு இரையாகும். 17815

மண்ணிலே கிடந்த பொன்னுக்கு மதிப்புக் கொடுத்தது ஆசாரி.
மண்ணிலே பிறந்தது மண்ணில் மறையும்.
மண்ணின்மேல் நின்று பெண் ஓரம் சொல்லாதே.
(இருந்து)
மண்ணை ஆண்டவர் மணலினும் கோடிப் பேர்.
மண்ணுக்குத் தீட்டிப் பார்; பெண்ணுக்குப் பூட்டிப் பார். 17820
(மண்ணுக்குப் பூசிப் பார்.)

மண்ணுக்குள் இருக்கும் மாயாண்டி உரிக்க, உரிக்கத் தோலாண்டி.
(வெங்காயம்.)
மண்ணுக்குள் இருப்பது மகிமை; அதை எண்ணிப் பார்ப்பது கடுமை.
மண்ணை ஆண்ட மன்னவர் எத்தனையோ?
(எத்தனை பேர்.)
மண்ணைக் கவ்வுகிற பயில்வானுக்கு மசாலாக் கறி வேறேயா?
மண்ணைக் கீறி மண்ணிலே படுக்கிறார்கள். 17825

மண்ணைத் தின்றாலும் மறையத் தின்னு.
(மறைவில் தின்னு.)
மண்ணை நம்பினோரும் மன்னனை நம்பினோரும் வீண் போகார்.
மண் தின்னி தைமாசப் பிறப்பு; மாத்தின்னி கார்த்திகை.
மண் தின்னும் குழந்தைக்கு மருந்தூட்டத் தின்பண்டம் காட்டிச் செல்லத்தாய் அழைப்பது போல.

மண்ணோடே பிறக்கலாம், உன்னோடே பிறந்ததில்
மண் தின்னும் பாம்பு போல. 17830

மண்பாண்டத்தில் இருப்பதைத் தோல் பாண்டத்தில் போடு.
மண் பானை பொங்கல் மணக்குதாம்; மாணிக்கத் தொந்திக்குப் பசிக்குதாம்.
மண் பிள்ளையாரை நம்பி ஆற்றில் இறங்காதே தம்பி.
மண் பிள்ளையானாலும் தன் பிள்ளையாய் இருக்க வேணும்.
மண் பூனை ஆனாலும் எலி பிடிக்கிறதென்று. 17835

மண் பூனை ஆனாலும் எலி பிடித்தால் சரி.
மண் பூனை எலியைப் பிடிக்குமா.
( + மதிகெட்ட ராசாவே.)
மண் மண்ணோடு; விண் விண்ணோடே.
மண் மாமியார் பண்ணினதும் மறைந்தாளாம் கிழவி.
மண் மாரி பெய்தால் மணல் வாரி விளையும். 17840

மண் மேல் இருந்து வழக்கு ஓரம் சொல்லுகிறதா?
மண் வாயும் இல்லை; மர வாயும் இல்லை.
மண் விற்ற காசும் பெண் விற்ற காசும் மண்.
மண் வெட்டிக் காம்புக்கு மரத்தைச் செதுக்கினால் அரிவாள் பிடிக்காவது ஆகாதா?
மண் வேலையோ புண் வேலையோ. 17845

மணக்க மணக்கச் சாப்பிட்டாலும் கிழக்கு வெளுக்க மலந்தான்.
மணக் கோலம் போய்ப் பிணக்கோலம் ஆச்சுது.
மணப்பறையே பிணப்பறை ஆவதும் உண்டு.
மணம் இல்லாத மலரும் மனைவி இல்லாத வீடும் பாழ்.
மணமகன் பிணமகன் ஆனான். 17850

மணமும் பிணமும் போகிற வீதியில் நின்று போகிறது.
மணல காட்டுக கிழங்கு என்றால் மேலாகவா கிடக்கும்?
மணல் வெட்டி ஊதல் அறியுமோ?
மணல் உழுது வாழ்ந்தவனும் இல்லை; மண் உழுது கெட்டவனும் இல்லை.
மணல் சோற்றில் கல் ஆராய்ந்தாற்போல். 17855

மணல் நிலம் தாரார்; களி நிலம் வேண்டாம்; களர் நிலம் தந்தால் கைப்பாடு படலாம்.
(உத்தமம். அதமம். மத்திமமான நிலங்கள். செங்கல்பட்டு ஜில்லா வழக்கு)

மணலில் பிடுங்கின வள்ளிக்கிழங்கு போல இருக்கிறான்.
மணலில் புரளும் நாயைப் போல.
மணலின் மேல் விழுந்த மழைத்துளி உடனே மறையும்.
மணலும் கல்லும் மலிந்த பண்டம் புலவர்க்கு. 17860

மணலை அளவிட்டாலும் மனசை அளவிடக்கூடாது.
மணலைக் கயிறாகத் திரிப்பான்; வானத்தை வில்லாய் வளைப்பான்.
மணலையும் தேர் வடமாக்கலாம்; மணிமுடிச் சிரத்தில்
வாழ்ந்திடும் துன்பம்.
மணி அடித்தால் சோறு; மயிர் முளைத்தால் மொட்டை.
மணி என்ன, அறுந்து விழுந்தால் இரண்டு. 17865

மணி நா அசையாமல் ராஜ்ய பாரம் பண்ணுகிறது.
மணி மந்திர ஔவுதம்.
மணியக்காரன் வீடு போல வயிறு பற்றிக் கொண்டு எரிகிறது.
மணியக்காரனுக்கு அரை நாழிகை வேலை; தணியக்காரனுக்குத்
தண்டால் அடி.
மணியம் பார்த்த ஊரில் கூலிக்கு அறுப்பதா? 17870

மணியும் ஒளியும் போல்.
மணியாம் பருக்கை போட மகிழ்ந்து கடனைப் போல.
மணையில் பெண்ணை மாற்றி வைக்கிறது; திண்ணையில்
பெண்ணைத் திருப்பி வைக்கிறது.
மத்தகத்தில் யானை மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது போல.
மத்தகஜத்துக்கு முன் சிற்றெறும்பு நடந்தது போல. 17875

மத்த கஜம் போல் நடக்கிறான்.
மத்தளத்துக்கு இரு பக்கம் அடி.
மத்து இட்ட தயிர் போல் புத்தி குழம்புகிறது.
மதகு அடி சாவியானாலும் மலை அடி சாவி ஆகாது.
மதகு அடி நன்செயும் மலை அடிப் புன்செயும். 17880

மதம் பிடித்த யானைக்கு மாவுத்தனைத் தெரியுமா?
மதம் பிடித்த யானை போல.
மதம விரதம் கேட்குது; மத்தியானம் பழையது கேட்குது.
மதயானை ஏறியும் திட்டி வாசலில் நுழைந்தாற் போல.
மதயானைக்குப் போனது மார்க்கம். 17885

மதயானை கண்பட்ட மாவுத்தனும் மாற்றாந்தாய் கண்பட்ட
குழவியும்.

மதயானையை அடக்கக் கோணி ஊசியைத் தேடினானாம்.
மதயானையை அடக்குவார் உண்டா?
மதலைக்கு இல்லை கீதமும் அறிவும்.
மதனிக்கு வெள்ளைச் சாதமா? 17890

மதனும் ரதியும் போல் வாழ்ந்திருக்க வேண்டும்.
மதாபிமானம், ஜாதி அபிமானம், தேசாபிமானம்.
மதி இருக்க விதி இழுக்கும்.
மதி இல்லாத விண் ஆனேன்; மருந்து இல்லாத புண் ஆனேன்.
மதி கெட்ட வேளாளன் சோற்றை இழந்தான். 17895

மதி பாதி மருந்து பாதி.
மதி புதன் மயிர் களை.
மதி மோசமோ விதி மோசமோ?
மதியாத வாசலில் மிதியாதிருப்பதே உத்தமம்.
மதியாதார் தலைவாசல் மிதியாதே 17900

மதியாதான் வாசலிலே வல்லிருளே ஆனாலும் மிதியாமல் இருப்பதே கோடி பெறும்.
மதியும் உமது; விதியும் உமது.
மதியை மீன் சூழ்ந்தது போல.
(மீன் - நட்சத்திரம்.)
மதியை விதி மறைக்கும்.
மதியை வெல்ல வேதனாலும் முடியாது. 17905

மதில்மேல் இருக்கிற பூனை போல் இருக்கிறான்.
மதில்மேல் ஏறிய பூனை எந்தப் பக்கமும் குதிக்குமாம்.
மது பிந்து கலசம் போல் இருக்கிறது.
மதுரம் இல்லாக் கவி போல.
மதுரைக்கு தெற்கே மரியாதை இல்லை. 17910
(கொங்கு நாட்டு வழக்கு.)

மதுரைக்கு வழி எங்கே? வாயிலே.
மதுரை பாராதவன் கழுதை.
மதுரையில் அடிபட்டு மானாமதுரையில் மீசை துடித்ததாம்.
மதுரையில் பூசணிக்காய் மாட்டு விலை.
மதுரையில் முட்டை தூக்கச் செங்கல்பட்டில் சும்மாடா? 17915

மதுரையைப் பார்த்தவனும் கழுதை; மதுரையைப் பார்க்காதவனும் கழுதை.
மதுவும் மாதரும் தீமையின் அஸ்திவாரம்.

மந்தரகிரியால் குழம்பும் கடல் வானோர்க்கு அமுதம் ஈந்தாற் போல்.
மந்தாரப் போது பெண்களுக்குக் கேடு.
மந்தாரப் போது மதிகெட்ட பையன்களுக்குக் கேடு. 17920

மந்தாரப் போது மதி கெட்டுப் போகும்; மதிகெட்ட பெண்ணுக்கு அடி வாங்கி வைக்கும்.
மந்தி மயிரை மருந்துக்குக் கேட்டால் மரத்துக்கு மரம் தாவும்.
மந்திரத்தால் மாங்காய் விழுமா?
மந்திரத்தில் கட்டுண்ட நாகம் போல.
மந்திரம் இல்லாக் குருக்களுக்கு மணியே துணை. 17925
(தெரியாதே.)

மந்திரம் இல்லாப் பூசை அந்திபடுமளவும்.
மந்திரம் கால், மதி முக்கால்.
மந்திரம் பாதி, தந்திரம் பாதி.
மந்திரி இல்லா யோசனையும் ஆயுதம் இல்லச் சேனையும் கெடும்.
மந்திரிக்கும் உண்டு மதி கேடு. 17930

மந்திரி புத்திக்கு மதி மோசம் வந்தது.
மந்திரி வீட்டிலே முந்திரி பூத்தது; வாய்க்கு எட்டினது கைக்கு எட்டவில்லை.
(முந்திரி காய்த்தது.)
மந்தையிலும் பால், வீட்டிலும் தயிரா?
மந்தைவெளி நாய்க்குச் சந்தையில் என்ன வேலை?
மப்புக்காரன் தப்புக் கொட்டுவானா? 17935
(தட்டுவானா?)

மப்புக்காரன் போலத் தப்புத் திப்பாய்ப் பேசுகிறது.
மப்புத் தாளம் தட்டுகிறாய்.
மயானத்தில் வீட்டைக் கட்டிப் பேய்க்கு அஞ்சலாமா?
மயான வைராக்கியமும் பிரசவ வைராக்கியமும்.
மயிர் உள்ள சீமாட்டி இடக்கையாலும் முடிவாள்; வலக்கையாலும் முடிவாள். 17940

மயிர் உள்ள சீமாட்டி எப்படி முடிந்தாலும் அழகுதான்.
(எப்படி முடிந்தால் என்ன?)
மயிர் உள்ள சீமாட்டி வலக்கொண்டையும் போடுவாள்; இடக்கொண்டையும் போடுவாள்.

மயிர் உள்ள சீமாட்டி வாரி முடிக்கிறாள்.
மயிர் ஊடாடாத நட்புப் பொருள் ஊடாடக் கெடும்.
மயிர்க் கம்பளி இடையன் தலை மேலே. 17945

மயிர் சிக்கினால் உயிர் வைக்குமா கவரிமான்.
மயிர் சுட்டுக் கரியாகுமா?
மயிர்பிடிச் சண்டை.
மயிர் பிடி, மண் பிடி.
மயிர் பிளக்க வழி தேடினாற் போல. 17950

மயிர் பிளந்தென்ன விவகாரம்.
மயிர் மயிர் என்ற குழந்தை மசிர் மசிர் என்கிறது.
மயிர் விலகினால் மலை விலகும்.
மயிரிலே சவ்வாது வாங்கினாற் போல.
மயிருக்கும் நகத்துக்கும் மதிப்பு இருந்த இடத்தில். 17855

மயிரைக் கொண்டு மாங்காய் எறிந்தால் மாங்காய் விழட்டும்; அல்லது மயிர் விழட்டும்.
மயிரைப் போட்டு மலையை இழுத்தால் வந்தால் மலை; போனால் மயிர்தானே?
மயிரைப் போலக் கறுப்பு இல்லை; மைத்துனனைப் போல உறவு இல்லை.
மயில் ஆடுகிறது என்று வான்கோழி ஆடினாற் போல.
மயில் இரவில் கத்தினால் தப்பாமல் வரும் மகிமை மழை. 17960

மயில் ஒந்திக்கு வலியக் கண்ணைக் கொடுத்தது போல்.
மயில் கண்ணிக்கு மசக்கை வந்தால் மாப்பிள்ளைக்கு அவஸ்தை.
மயில் பப்படாம்; மசால் வடை.
மயில் போலும் கன்னி
மயில் வாகனத்தின்மேல் சுப்பிரமணிய சுவாமி போல. 17965

மயிலாப்பூர் ஏரி உடைந்து கொண்டு போகிறது என்றால், வருகிற கமிட்டிக்கு ஆகட்டும் என்றாற் போல.
மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா? இழுத்து வைத்துப் பிடுங்கினால் கொடுக்கும்.
மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல.
மர்க்கட சிடனும் மார்ஜால குருவும்.
மர்க்கட நியாயத் தீர்ப்பு. 17970

மர்க்கட முஷ்டி.
மரக்கட்டையைச் சார்ந்த புல் கலப்பைக்கு அஞ்சாது.
மரக் கோணல் வாய்ச்சியால் நிமிரும்.
மரணத்திலும் கெட்ட மார்க்கத்துக்குப் பயப்படு.
மரணத்துக்கு நாலு பக்கமும் வழி. 17975

மரணத்துக்கு நாள் நட்சத்திரம் இல்லை.
மரணத்துக்கு வழி மட்டு இல்லை.
மரத்தால் கட்டி அடிக்கிறது.
மரத்தில் அணில் ஏற விட்ட நாய் போல.
மரத்தில் அறைந்த முளையை மர்க்கடம் பிடுங்கினாற் போல. 17980

மரத்தில் இருந்து விழுந்தவன்மேல் தேர் ஓடினது போல.
மரத்தில் இருந்து விழுந்தவனைப் பாம்பு கடித்தது போல.
மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு மிதித்தது போல.
(முட்டியது போல.)
மரத்தின் கீழ் ஆகா மரம்.
(பழமொழி நானூறு.) 17985
மரத்து அடியில் விழுந்த விதை முளைக்காது.

மரத்துப் பழம் மரத்தடியிலே விழும்.
(மரத்தண்டை.)
மரத்தை இலை காக்கும்; மானத்தைப் பணம் காக்கும்.
மரத்தை மறைத்தது மாமத யானை.
(திருமந்திரம்.)
மரத்தை வெட்டி மரத்தின் மேலே சாய்க்கிறது போல்.
மரத்தை வைத்துக் கொண்டு பழத்தைக் கோர வேண்டும். 17990

மர நாயிலே புனுகு வழிக்கலாமா?
மர நிழலில் மரம் வளராது.
மரம் இல்லாத ஊருக்குக் கொட்டைச் செடி மரம்.
மரம் ஏறிக் கை விட்ட கதை.
மரம் ஏறிக் கைவிட்டவனும், கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டார்கள். 17995

மரம் ஏறுகிறவன் பிட்டத்தை எத்தனை தூரம் தாண்டுகிறது?
மரம் குறைக்கும் ஈர் வாள் மயிர்களைய மாட்டாது.
(பழமொழி நானூறு.)
மரம் சுட்டால் கரி ஆம்; மயிர் சுட்டால் கரி ஆமா?

மரம் சுட்டுக் கரியாக வேணுமேயல்லாமல் மயிர் சுட்டுக் கரி ஆகுமா?
மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழல் கொடுக்கும். 18000

மரம் நட்டவன் தண்ணீர் வார்ப்பான்.
(விடுவான்.)
மரம் நட்டவனுக்குத் தண்ணீர் வார்க்கக் கடன்.
மரம் நல்லது; முசுடு கெட்டது.
(பொல்லாதது.)
மரம் பழுத்தால் வௌவாலை அழைக்க வேண்டியதில்லை.
மரம் போக்கிக் கூலி சொல்பவர் இல்லை. 18005
(மரம்-ஓடம். பழமொழி நானூறு.)

மரம் மழுங்கினால் மத்துக்கு ஆகும்; மனிதன் மழுங்கினால் ஏதுக்கு ஆவான்?
மரம் முற்றினால் சேகு; மனிதன் முற்றினால் குரங்கு.
மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும் மண் தோண்டுகிறவனுக்கு இடமும் கொடுக்கும்.
மரம் வைத்த நாயன் தண்ணீர் ஊற்ற மாட்டானா?
மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான். 18010

மரம் வைத்தவனுக்குத் தண்ணீர் ஊற்றத் தெரியாதா?
மரமரப்புக் காரனுக்கு மூன்று இடத்திலே மலம்.
மரியாதை இல்லாதவன் மகிமை அற்றான்.
மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு.
மரியாதை தப்பினால் மாலவாடு. 18015
(கெட்டால்.)

மரியாதை ராமன் வழக்குத் தீர்த்தாற் போல.
மரியாள் குடித்தனம் சரியாய்ப் போச்சு.
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
(அருண்டதெல்லாம்.)
மருத்துமாவுக்குச் செய்க்கிளை; மடங்காக் குதிரைக்குச் சவுக்கடி.
மருத்துவம் பார்க்கப் போனால் வந்ததைத் தாங்க வேணும். 18020

மருத்துவர்க்கு நோயை மறைக்கலாமா?
(பழமொழி நானூறு.)
மருதமுத்து மாரு மாதம் காதவழி மாயமாய்ப் பறக்கும்.
மருந்துக்கும் கிடையாது.
மருந்து கால், மதி முக்கால்.

மருந்து சாப்பிட்டு மாமரத்தடியிலும் போகக்கூடாது; விஷத்தைச்
சாப்பிட்டு வேப்பமரத்தடியிலும் போகலாம். 18025

மருந்து தின்றால் பிழையாய் என்றால் மயிர்தான்
தின்னமாட்டேன் என்கிறான்
மருந்தும் மாயமும்.
மருந்தும் விருந்தும் மூன்று நாள்.
(மூன்று பொழுது.)
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
மரு பூமியில் தண்ணீர் பெற்றார் போலே. 18030
(மருபூமி - பாலைவனம்.)

மருமகள் சோறு தின்றவரும் வாசற்படியில் தூங்கியவரும் ஒன்று.
மருமகளும் மாமியாராவாள்.
மருமகனுக்கு என்று ஆக்கிய சோற்றை மகனுக்குப் போட்டு
வயிறு எரிந்தாளாம்.
(அறிந்தாளாம்.)
மருமகளே, மருமகளே, கோழிக்கறிக்குப் பதம் பாரடி; மாமியாரே,
மாமியாரே, அது கொக்கோ என்று கொத்த வருகிறது.
மருமகனோடு உண்ணவில்லை என்கிறார்கள் என்று மாமியார்
வார்த்த நெய்யைப் புரட்டி உண்டாளாம், மாமியாரைக்
கட்டவில்லை என்கிறார்கள் என்று தன் அரைநாண்
கயிற்றை அறுத்துத் தாலி கட்டினானாம். 18035

மருவில் தின்ற சாப்பாட்டை லங்கணத்தில் நினைத்துக்
கொண்டது போல.
(உண்ட.)
மருவுக்கு வாசனை வந்தது போல.
மருவும் மலரும் போல.
மரைக்காயர் வீட்டு மரைக்காயர்.
மரைக்காயருக்கும் உண்டு மாட்டுப் புத்தி. 18040

மல்லாக்கப் படுத்துக்கொண்டுக் மார்பில் உமிழ்ந்து
கொண்டாற்போல.
மல்லாந்த தோஷம் வயிற்றில் அடைத்தது.
மல்லாந்து துப்பினால் மார்மேல் விழும்.
(உமிழ்ந்தால்.)
மல்லாந்து படுத்து எச்சிலைத் துப்பினால் மார்மேல்
தானே விழும்?

மல்லாந்து படுத்துக் கொண்டா அல்லாவைத் தொழுகிறது? 18045

மல்லாந்து படுத்துக் கொண்டு மாரில் உமிழ்ந்து கொண்டது போல.
மல்லுக்கட்டிப் பிடுங்கியும் கொடாதவனா வலுவில் அழைத்துக்
கொடுக்கப் போறான்?
மல்லுக்கட்டுக்காரனுக்கு மாகாணிப் பங்கு.
மல்லுக்கு ஒரு மாகாணிப் பங்கு.
மல்லுக்கு மாப்பங்கு ஆகிலும் வைத்துக் கொள்ள வேணும். 18050

மலடி அறிவாளா பிள்ளையின் அருமை?
மலடிக்குத் தெரியுமா பிரசவ வேதனை?
(பிள்ளை வலி - மகப்பேறு வருத்தம்.)
மலடிக்குத் தெரியுமா பிள்ளையைப் பெற்ற அருமை?
(பிள்ளை வருத்தம்.)
மலடிக்குத் தெரியுமா மகப்பேறு வருத்தம்.
மலடி பிள்ளை பெற்றாற் போல. 18055

மலடி பெற்ற மகன் போல.
மலடி மகப் பெற்றாள்.
மலடி மகன்.
மலடி மகனைப் பெற்றது போல.
மலடி வயிற்று மகன் போல. 18060

மலத்தைக் கண்ட நாய்க்கு வாய் ஊறுவது போல.
மலப்பஞ்சம் நாய்க்கு உண்டோ?
மலம் தின்ன வந்த நாய் மாணியைக் கடித்ததாம்.
மலர்த் தேனை வண்டு அல்லாமல் மண்டூகம் குடிக்குமோ?
மலராத பூவுக்கு மணம் ஏது? 18065

மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் உடலில் உயிரும்
கலந்தது போல.
மலரும் மணமும் போல்.
மலரைக் கசக்கி மணம் கொள்வார் உண்டோ?
மலரைக் கசக்கி மோந்து பார்க்கலாமா?
மலிந்த சரக்குக் கடைத் தெருவுக்கு வரும். 18070
(சந்தைக்கு வரும்.)

மலிந்தது கொள்ளா வணிகரும் பதரே.
மலிந்த பண்டம் கடையிலே வரும்.
மலிந்தால் தெருவில் வரும்.

மலிந்த பண்டம் கொள்ளாத வணிகன் பதர்.
மலை அடி கெட்டாலும் மதகடி கெடாது. 18075

மலை அடி புன்செய்; மதகடி நன்செய்.
மலை அத்தனை சாமிக்குக் கடுகு அத்தனை கற்பூரம்.
மலை அத்தனை சாமிக்குக் கடுகு அத்தனை சாம்பிராணி.
மலை அத்தனை சாமிக்குத் தினை அத்தனை புஷ்பம் சாத்தினாலும் போதும்.
மலை அத்தனை சாமிக்கு மலையத்தனை புஷ்பம் போடுகிறார்களா? 10880
(மலர் படைக்கிறார்களா?)

மலை அத்தனை சாமிக்கு மிளகு அத்தனை கர்ப்பூரம்.
மலை அத்தனை பாவத்திலே கடுகு அத்தனை புண்ணியம்.
மலை இடிந்து விழுந்தாலும் மாப் பொன்னுக்குச் சேதம் இல்லை.
மலை இலக்கானால் குருடனும் அம்பு எய்வான்.
மலை இலக்கு. 18085

மலை இற்று மயிரில் தொங்குகிறது.
(தொங்குகிற வேளை.)
மலை உச்சியில் கல் ஏற்றுதல் அரிது; மலையிலிருந்து கல்லைத் தள்ளுவது எளிது.
மலை எவ்வளவு, உளி எவ்வளவு.
மலை ஏறப் போனாலும் மச்சான் தயவு வேணும்.
மலை ஏறி மேய்ந்தாலும் ஆட்டுக்குட்டி கோனான் குட்டி தானே? 18090

மலை ஏறினாலும் மைத்துனனைக் கை விடாதே.
மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்.
மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் சரியா?
மலைக்கு மணிகட்டி ஆதரவா?
(ஆதரவு.)
மலை கல்லி எலி பிடித்தது போல. 18095

மலை கலங்கினாலும் மனம் கலங்கப் போகாது.
மலை கறுத்தால் மழை வரும்.
மலை குலைந்தாலும் நிலை குலையல் ஆகாது.
மலைச்சாரல் மழையும் மங்கையின் மனமும் திடீரென மாறும்.

மலை சுட்டுக் கரி ஆகுமா? மயிர் சுட்டுக் கரி ஆகுமா? 18100

மலைத்தவருக்குப் பலன் லபிக்கிறதா?
(பலன் கிடைக்குமா?)
மலைத் தேன் முடவனுக்குக் கிட்டுமா?
(வருமா?)
மலை நெல்லிக்காய்க்கும் கடல் உப்புக்கும் உறவு செய்தவர் யார்?
மலைப் புளுகு கலப் புளுகாய் இருக்கிறது.
மலை பெரிதானாலும் சிற்றுளியால் தகரும். 18105

மலை போல் இருக்கிற தேரும் சிறு சுள்ளாணியால் நிலை பெறும்.
மலை போலப் பிராமணன் போகிறானாம்; பின் குடுமிக்கு அழுகிறாளாம்.
மலை போலப் பிராமணன் மாய்த்தானாம்; அவன் உச்சிக்கு அழுதாளாம் பிராமணத்தி.
மலை போன்ற சாமிக்கு மலை போலப் படைக்க முடியுமா?
மலை மல்லிகைக்கு எதிர் பூத்ததாம் ஊமத்தை. 18110

மலை மீது இருப்பவரைப் பன்றி எப்படிப் பாயும்?
மலை மேல் இருக்கிறவனைப் புலி பாயுமா?
மலை மேல் ஏற்றிய விளக்குப் போல.
மலை மேல் மலையாக விழுந்தாலும் மனம் கலங்காத தீரன்.
மலையாளத்துக் குரங்கே, மரத்தை விட்டு இறங்கே. 17115

மலையாளத்து யானை பருக்கை தேய்ப்பது போல.
மலையாளம் பெய்து விளைகிற சீமை; தஞ்சாவூர் பாய்ந்து விளைகிற சீமை.
(பெய்ந்து.)
மலையில் விளைந்த மூலிகை ஆனாலும் உரலில்தான் மசிய வேண்டும்.
மலையில் விளைந்தாலும் உரலில் தான் மசிய வேண்டும்.
(பிறந்தாலும்.)
மலையிலும் மானம் பெரிது. 18120

மலையின் உயரம் மலைக்குத் தெரியுமா?
மலையின் வாயில் பொழுதும் நுளையன் வாயில் சோறும்.
(வயிற்றில்.)
மலையுடன் மண்ணாங்கட்டி எதிர்ப்பது போல.

மலையும் மலையும் இடித்துக் கொள்ளும் போது மண்ணாங் கட்டி எந்த மூலை?
மலையும் மலையும் பொருதது போல. 18125

மலையே மண்ணாங்கட்டி ஆகிற போது, மண்ணாங்கட்டி எப்படி ஆகும்?
மலையே விழுந்தால் மண்ணாங்கட்டியா தாங்கப் போகிறது?
மலையே விழுந்தாலும் தலையே தாங்க வேண்டும்.
மலையை என் தலைமேல் தூக்கி வைத்தால் நான் எடுத்துக் கொண்டு போகிறேன்.
மலையைச் சுற்றடித்தவன் செடியையாகிலும் சுற்றடிப்பான். 18130

மலையைச் சுற்றி அடித்தவனைச் செடியைச் சுற்றி அடியானா?
மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதா?
மலையைத் துளைக்க வாச்சி உளி வந்தாற் போல.
மலையைத் துளைக்கிற சிற்றுளி போல.
மலையைத் தூக்கி மடியில் கட்டுகிறவன். 18135

மலையைத் தூக்கி வைத்தால் அதைச் சுமக்கிறேன் என்றானாம்.
மலையைத் தோண்டி எலியைப் பிடிக்கிறதா?
மலையை நம்பி இரு; அல்லது ஆற்றை நம்பி இரு.
மலையை நோக்கி நாய் முறைத்தது போல.
மலையைப் பார்த்து நாய் குரைத்தால் நாய்க்கு வலிக்குமா? மலைக்கு வலிக்குமா? 17140
(நாய்க்குச் சேதமா? மலைக்குச் சேதமா? நாய்க்குக் கேடா?)

மலையைப் பார்த்து நாய் குரைத்தாற் போல.
மலையைப் பிடுங்கும் மாகாளியம்மைக்குக் கரடு ஒரு சுண்டைக் காய்.
மலையை மயிர் முனையால் துளைக்கலாமா?
மலையை மயிரால் கட்டி இழு; வந்தால் மலை வரட்டும்; அறுந்தால் மயிர் அறட்டும்.
(வராவிட்டால் மயிர் அறட்டும்.)
மலையை மயிரால் கட்டி இழுத்தாற் போல. 18145

மலையை மலை தாங்கும்; மண்ணாங்கட்டி தாங்குமா?
மலையை விழுங்கும் மாரியாத்தாளுக்கு உரல் சுண்டைக்காய்.
மலை வளந்தானே நிலவளம் என்பர்?
மலைவாயிலே சூரியன்; மறவன் வாயிலே சோறு.
(மலைவாயிலே பொழுது.)

மலை விழுங்கி அம்மையாருக்குக் கதவு சுண்டாங்கியா? 18150

மலை விழுங்கிச் சுண்டெலியைப் பெற்றது போல.
மலை விழுங்கி மகாதேவனுக்குக் கதவு அப்பளம்.
மலை விழுங்கி மாத்தாங்கிக்கு வண்டிச் சக்கரம் அப்பளம்.
மலை விழுங்கி மாரியாத்தாளுக்கு உரல் சுண்டாங்கி.
மலை விழுங்குவதற்கு மண்ணாங்கட்டி பச்சடியா? 18155

மலை விழுந்தால் மண்ணாங்கட்டி தாங்குமா?
மலை விழுந்தாலும் தலையே தாங்க வேண்டும்.
மவ்விடப் பவ்வாயிற்று.
மழலைச் சொல் கேளாத காதில் நெருப்பைக் கொட்டு.
மழுங்கணி மாங்கொட்டை. 18160
(மழுங்குணி.)

மழுங்கனுக்கு வட்டியிலே போடு; சவுங்கலுக்குச் சட்டியிலே போடு.
மழை இல்லாததற்குக் குளிர் அதிகம்; வரிசை இல்லாததற்கு வாய் அதிகம்.
மழைக்கால் இருட்டிலும் மறு மாதரைத் தொடருகிறதா?
மழைக்கால் இருட்டு ஆனாலும் மந்தி கொம்பு இழக்கப் பாயுமா?
(கொம்பு இழந்து.)
மழைக்கால் இருட்டு ஆனாலும் வாய்க்குக் கை தெரியாதா? 17165

மழைக்கால் இருளேனும் மந்தி கிளைபாய்தல் பிழைக்காது.
(கொம்பு இழந்து பாயுமா?)
மழைக்கால இருட்டானாலும் கொம்பு தவறிக் கொக்குப் பாயுமா?
மழைக் காலத்தில் பதின் கலத்திலும் கோடைக் காலத்தில் ஒரு குடம் நீர்.
மழைக்கு ஒதுங்க வந்த பிடாரி மனைக்குச் சத்தம் போட்டதாம்.
(வழக்குப் பேசினாளாம்.)
மழைக்குக் குடை உண்டு; இடிக்குக் குடை உண்டா? 18170
(குடையா?)

மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் யார்?
மழைக்குப் படல் கட்டிச் சாத்தியமா?
(சாத்தலாமா?)
மழைக்கும் இடிக்கும் படல் கட்ட முடியுமா?
மழைக்கோ படல்? இடிக்கோ படல்?
மழைப் பேறும் பிள்ளைப் பேறும் மகாதேவனுக்கும் தெரியா. 18175

மழை பெய்கிறதும் பிள்ளை பெறுகிறதும் மகாதேவனுக்கும் தெரியா.
மழை பெய்தால் அடி மறக்காது.
மழை பெய்து அடி மறைந்தாற் போல.
(ஓடி மறைந்தாற் போல.)
மழை பெய்து குளம் நிறையுமா? பனி பெய்து நிறையுமா?
மழை பெய்து நிறையாதது மொண்டு வார்த்தால் நிறையும். 18180

மழை பெய்தும் கெடுத்தது. காய்ந்தும் கெடுத்தது.
(பேய்ந்ததும்.)
மழை பெய்து விடியுமா? பனி பெய்து விடியுமா?
மழை பெய்து விளைய வேணுமே தவிரப் பனி பெய்து விளையப் போகிறது இல்லை.
மழைமுகம் காணாப் பயிரும் தாய்முகம் காணாச் சேயும் வாட்டமாம்.
(பிள்ளையும்.)
மழையில் நனைந்த நாய் முடங்கிப் படுத்தது போல. 18185

மழையில் போட்டாலும் நனைகிறது இல்லை; வெயிலில் போட்டாலும் காய்கிறது இல்லை.
மழையிலும் நனைய மாட்டான்; வெயிலிலும் காயமாட்டான்.
மழையும் பிள்ளைப்பேறும் மகாதேவர்க்கும் தெரியாது.
மழை வறண்டால் மணக்கத்தை விதை.
மழைவாய்க் கருக்கல் ஆனாலும் மந்தி கொம்பு விட்டுக் கொம்பு தாண்டாது. 18190

மழை விட்டும் தூவானம் விடவில்லை.
மழை விழுந்தால் தாங்கலாம்; வானம் விழுந்தால் தாங்கலாமா?
மறத்தி தாலியும் பள்ளித் தாலியும் வற்றாத் தாலி.
மறதி பாராதவன் கழுதை.
மறந்த உடைமை மக்களுக்கு ஆகாது. 18195

மறந்த சடங்கை மகத்தில் விடு.
(திருமழபாடியில் மகம் விசேஷம்.)
மறந்த துதியை மகத்தில் கொடு.
மறந்து செத்தேனே; பிராணன் வா என்றால் வருமா?
(செத்தால் உயிர் வருமா?)
மறவன் உறவும் பனை நிழலும் சரி.
(போல நீடியாதன.)
மறுசாதம் போட்டுக் கொள்ளாவன் மாட்டுப் பிறப்பு. 18200

மறுமங்கையருக்கும் மறுமன்னவருக்கும் மார்பும் முதுகும்
கொடாமல் இரு.
மறைத்துக் கட்ட மாற்றுப் புடைவை இல்லை.
மறைந்த புதன், நிறைந்த தனம்.
மறைப்பினும் ஆகாதே தம் சாதி மிக்கு விடும்.
(பழமொழி நானூறு.)
மன் உயிரைத் தன் உயிர் போல் நினை. 18205

மன்மதக் காட்டு ஓணான்.
மன்மதக் குரங்கே, மரத்தை விட்டு இறங்கே.
மன்மதன் அவனைப் பம்பரம் போல் ஆட்டுகிறான்.
மன்னர்க்கு அழகு செங்கோல் முறைமை.
மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும். 18210
(திருக்கோவையார்.)

மன்னவர்கள் ஆண்டது எல்லாம் மந்திரிகள் ஆண்மை.
(மகிமை.)
மன்னவர்கள் செத்தார்கள்; மந்திரிகள் செத்தார்கள்; முன்
இருந்தோர் எல்லாம் முடிந்தார்கள்.
மன்னவன் எப்படி, மன்னுயிர் அப்படி.
மன்னன் இல்லாத நாடும் மந்திரி இல்லாத அரசும்.
மன்னன் எவ்வழி, குடிகள் அவ்வழி. 18215

மன்னன் சொல்லுக்கு மறு சொல் உண்டோ?
மன்னார்குடி பழந்தரித்திரம்.
மன்னார்குடி மதில் அழகு.
மன்னார் சாமி போல.
மன்னுயிர்களைத் தன் உயிர் போல நினை. 18220

மனக் கசடு அற மாயை நாடேல்.
மனக் கவலை பலக் குறைவு.
மனக் கஷ்டப்படலாம்; மக்கள் கஷ்டம் பொறுக்காது.
மனக் காவல் பெரிதா, மன்னன் காவல் பெரிதா?
மனக் குரங்கு எப்படி வேண்டுமானாலும் தாவும். 18225

மனச்சாட்சியை விட மறு சாட்சி வேண்டாம்.
(உண்டா இல்லை.)
மனசில் இருக்கும் இரகசியம் மதிகேடனுக்கு வாயிலே.
மனசில் ஒன்றும் வாக்கிலே ஒன்றும்.

மனசில் உள்ளது வாயில் வரும்.
மனசில் மாசு இருக்கும் பொழுது மகான் ஆக முடியுமா? 18230

மனசிலே பகையும் உதட்டிலே உறவுமா?
மனசு அறியாப் பொய் உண்டா?
மனசு ஒத்ததே இடம்.
மனசு மதிலைத் தாண்டுகிறது, கால் வாசற்படியைத் தாண்டவில்லை.
மனசுக்குப் பிடிக்காமல் தினுசுக்கு ஒரு புடைவையா? 18235

மனசுக்கு மனமே சாட்சி; மற்றதற்குத் தெய்வம் சாட்சி.
மனசு சுத்தமானால் மந்திரம் எதற்கு?
மனசே காரணம்.
மனசே மனசுக்குப் பந்து; மனசே மனசுக்குச் சத்துரு.
மனசே ராஜா; குசுவே மந்திரி. 18240

மனசே ராஜா; மதியே மந்திரி.
(மயிரே மந்திரி.)
மனத்திலே பகை, உதட்டிலே உறவு.
மனத்துக்கம் மண்டையிலே.
மனத்துக்கு இனியவன் மாமன் மகன்.
மனத்துக்கு மனம் சாட்சி. 18245

மனத்துயர் அற்றோன், தினச் செபம் உற்றோன்.
மன நோய்க்கு மருந்து இல்லை.
(உண்டோ?)
மனப்பால் குடிக்காதே.
மனப்பால் குடித்து மாண்டவர் அநேகம்.
(அனந்தம்.)
மனப் பேயே ஒழிய மற்றைப் பேய் இல்லை. 18250
(மற்றவை பேய் அல்ல.)

மனப் பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தம் பார்க்க வேண்டாம்.
மனம் இருக்கும் மணம் போலக் கூழ் இருக்கும் குணம்.
மனம் இருந்தால் மலையும் சாயும்.
மனம் இருந்தால் மாரியம்மா; இல்லாவிட்டால் காளியம்மா.
மனம் இருந்தால் வழி உண்டு. 18255
(மார்க்கம் உண்டு.)

மனம் இருந்தும் சற்று வகை அற்றுப் போவான்.
மனம் உண்டானால் வழி உண்டு.
(இடம் உண்டு.)
மனம் கலங்கிப் பிரியாமல் பிடித்தவர்க்குப் பேறு உண்டாம்.
மனம் காவலா? மதில் காவலா?
மனம் கொண்டது மாங்கல்யம். 18260

மனம் கொண்டதே மாளிகை.
(கொள்கை.)
மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.
மனம் தடுமாறேல்.
மனம் போல மாங்கலியம்.
(மனம் போல் இருக்கும் மாங்கலியம்.)
மனம் போல வாழ்வு. 18265

மனம் போன போக்குக்கு வழி இல்லை.
மனம் வெளுக்க மருந்து இல்லை.
(பாரதியார்)
மனமது செவ்வையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்.
மனமயக்கம் சர்வ மயக்கம்.
மன முரண்டிற்கு மருந்து உண்டா? 18270

மனவீதி உண்டானால் இட வீதி உண்டு.
மனிதக் குரங்கு ஆனாலும் மல்யுத்தம் போடுமாம்.
மனிதர் காணும் பொழுது மௌனம்; காணாத பொழுது குத்திராட்சப் பூனை.
மனிதரில் சிவப்பு அழகு; நாயில் கறுப்பு அழகு.
மனிதன் ஆரம்பமாவது பெண்ணாலே; அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே. 18275

மனிதன் கையில் மனிதன் அகப்பட்டால் குரங்கு.
மனிதன் சுற்றிக் கெட்டான்; நாய் கத்திக் கெட்டது.
மனிதன் சுற்றிக் கெட்டான்; நாய் நக்கிக் கெட்டது.
மனிதன் தலையை மான் தலை ஆக்குகிறான்; மான் தலையை மனிதன் தலை ஆக்குகிறான்.
மனிதன் மட்கினால் மண்; ஆனை மட்கினால் பொன். 18280

மனிதன் மறப்பான்; இறைபடுவான்; மாறுவான்; போவான்.
மனிதனை மனிதன் அறிவான்; மட நாயைத் தடிக்கம்பு அறியும்
(மரநாயை.)

மனிதனை மனிதன் அறிவான்; மீனைப் புளியங்காய் அறியும்.
மனுஷ பலம் துர்ப்பலம்.
மனைக் கொடி இல்லா மனை பாழ். 18285
(வீடு.)

மனையசல் அன்றோ தலை வெடித்ததாம்.
மனையாள் வாசல் மட்டும்; மகன் சுடுகாடு மட்டும்.
மனையாளுக்கு உற்றது ஒன்றும் சொல்ல வேண்டாம்; மாற்றானை ஒருநாளும் நம்ப வேண்டாம்.
(மற்றவனை.)
மனைவி இல்லாத புருஷன் அரை மனுஷன்.
மனைவி இறந்தால் மணம்; மகள் இறந்தால் பிணம். 18290

மனைவி உள்ளவன் விருந்துக்கு அஞ்சான்.
மனோராஜ்யம் பண்ணுகிறது போல.
மனோவியாதிக்கு மருந்து உண்டா?

## மா

மா அளந்த படியைப் போல.
மா இடித்தால் மண்டிக் கொள்கிறது; கூழ் குடித்தால் கூடிக் கொள்கிறது. 18295

மா இருக்கிற மணத்தைப் போல் அல்லவா கூழ் இருக்கிற குணம்?
(குடுவை.)
மா உண்டானால் பணியாரம் சுடலாம்.
மா ஏற மலை ஏறும்.
மாகனப் பட்டது எல்லாம் ஒரு திருணம்; மாட்டுக்காரப் பையனுக்குச் சரணம்.
மாகேச நவ பண்டித. 18300

மாங்கல்யப் பெண்ணுக்கு மாசம் இரண்டு பூசை.
மாங்காய் அழுகலும் மாப்பிள்ளையில் கிழமும் கிடையா.
மாங்காய்க் காலத்தில் மாங்காய் தின்னாவிட்டால், வீங்கித் தூங்கிச் சாவார்கள்.
மாங்காய்க்குத் தேங்காய் மருந்து.
மாங்காய்க்குத் தேங்காய்; வழுக்கைக்கு இளவெந்நீர்; பூங்கதலிக்குச் சுக்கு நீர். 18305

மாங்காய்க்குப் புளியங்காய் தோற்குமா?
மாங்காயில் பெரிசும் தேங்காயில் சிறிசும்.
மாசி ஈனா மரமும் இல்லை; தை ஈனாப் புல்லும் இல்லை.
மாசி என் மச்சின் மேலே.
மாசி என் மடியில் பணம். 18310

மாசிக் கடாவும் மார்கழி நம்பியானும்.
மாசிக் கரும்பும் மகர வாழையும்.
மாசிச் சரடு பாசிபோல் வளரும்.
(படரும்.)

மாசி நிலவும் மதியாதார் முற்றமும் வேசி உறவும் வியாபாரி நேசமும்.
மாசிப் பனி மச்சையும் துளைக்கும். 18315
(பிளக்கும்.)

மாசிப் பிறையை மறக்காமல் பார்.
மாசி பங்குனியில் கரும்பு அறு.
மாசி மகத்தழகும் மகாமகக் குளத்தழகும்.
மாசி மாதத்திலே மறைந்திருந்த கண்மணியே.
மாசி மணிப் பூணூல். 18320

மாசி மரம் தளிர்க்க மழை.
மாசி மழையில் மாதுளை பூக்கும்.
மாசி மாதத்தில் மகம் மதியின் தெற்குக் கோடியில் தேசமும் நாடும் செழிக்கும்.
மாசி மாதம் மண்ணாங்கட்டியும் பிள்ளை பெறுகிறது.
(யாழ்ப்பாண வழக்கு.)
மாசி மாப் பூக்கும். 18325

மாசி மின்னல் மாம் தழைக்கும்
மாட்டின் காலிலே நெல்; மனுஷன் காலிலே பணம்.
மாட்டின் வாழ்க்கை மூட்டையிலே.
மாட்டு எரு புன்செய்க்கு; தழை எரு நன்செய்க்கு.
மாட்டு எரு மறு வருஷம். 18330

மாட்டுக்கு ஓர் அடி; மனிதனுக்கு ஒரு சொல்.
மாட்டுக்குச் சர்வாங்கமும் வயிறு.
மாட்டுக்குப் பெயர் பெரிய கடா என்று.
மாட்டுக்கு மாடு சொன்னால் கேளாது; மணி கட்டின மாடு சொன்னால் கேட்கும்.
(யாழ்ப்பாண வழக்கு.)
மாட்டுக்கு மாடு மிரளுமா? 18335

மாட்டுக்கு மேய்ப்பும், குதிரைக்குத் தேய்ப்பும்.
மாட்டுப் பல் மகராசி; அரிசிப் பல் அவிசாரி.
மாட்டைத் தண்ணீரில் போட்டு விலை பேசுகிறாயே!
மாட்டை நடையில் பார்; ஆட்டைக் கிடையில் பார்.
மாட்டைப் பார்த்தாயா என்றால், தோட்டம் தூரம் என்றானாம். 18340

மாட்டைப் பிடித்த சனியன் கொட்டகையைச் சுட்டால் போமா?
மாட்டைப் புல் உள்ள தரையிலும் மனிதனைச் சோறு உள்ள
நலத்திலும் இருக்க ஒட்டாது.
(புல் உள்ள தலத்திலும்.)
மாட்டை மேய்த்தானாம்; கோலைப் போட்டானாம்.
மாடக்குளம் பெருகினால் மதுரை பாழ்.
(மாடக் குளம் - மதுரைக்கு மேற்கே உள்ள ஊர். அங்கே ஒரு குளம் உண்டு.)
மாடம் அழிந்தால் கூடம். 18345
(மாடம் மெலிந்தாலும் கூடம். இடிந்தால்.)

மாடிக்கு ஏணி வைக்கலாம்; மலைக்கு ஏணி வைக்க முடியுமா?
மாடு அறியாதவன் மாட்டைக் கொள்.
மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது.
(இளைக்குமா?)
மாடு கன்று படைத்தவருக்கும் மக்களைப் பெற்றவருக்கும்
குற்றம் சொல்லலாமா?
மாடு கிழம் ஆனாலும் பாலின் சுவை போகுமா? 18350

மாடு கெட்டால் தேடலாம்; மனிதர் கெட்டால் தேடலாமா?
மாடு திருப்பினவன் அல்லவோ அர்ஜுனன்?
மாடு தின்கிற மாலைாடு ஆடு தின்கிறது அரிதா?
மாடு தின்னிக்கு வாக்குச் சுத்தம் உண்டா?
மாடு தெரியாதவன் மாடக் கொம்பு மாடு வாங்கினது
போல. 18355

மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டலாமா?
மாடு பிடி. சண்டைக்கு வலிய வராதே.
மாடுபோல் உழைத்து மன்னர் போல் வாழ்.
மாடு போனவனுக்குச் செடியெல்லாம் கனி.
மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை பெய்யும். 18360

மாடு மலை ஏறி மேய்ந்தாலும் உடையவன் பேர் சொல்லும்.
மாடு மறந்தாலும் கறக்கும், வாலில் கயிற்றைக் கட்டினால்.
மாடு முக்க முக்க, வீடு நக்க நக்க.
(மாடு முக்கிவர, வீடு நக்கிவர.)
மாடு மேய்க்காமல் கெட்டது; பயிர் பார்க்காமல் கெட்டது.
மாடு மேய்க்கிற தம்பிக்கு மண்டலம் இட்ட பெண்சாதி. 18365

மாடு மேய்க்கிறவன் கூட மாமனார் வீட்டில் இருக்க மாட்டான்.
மாடு மேய்க்கும் குமரனுக்கு மண்டலம் எட்டும் குமரியாம்.

மாடு மேய்த்து வந்தேன்; மணி ஆட்டி வந்தேன்; சோறு போடடி. சொக்க வெள்ளாட்டி.
மாடு வாங்க அறியாதவன் மாட்டைக் கொம்பு மாடு வாங்கு.
மாடு வாங்குமுன் பிறந்தகத்துக்கு மோர் கொடுப்பேன் என்றாளாம். 18370

மாடு வாங்குவதற்குமுன் கன்று விலை பேசலாமா?
மாணிக்கக் காலுக்கு மாற்றுக் கால் இருக்கிறதா?
(வைத்தது போல.)
மாணிக்கம் இருக்கிறது என்று தலையை வெட்டுகிறதா?
மாணிக்கம் விற்ற ஊரில் மண்கூடை சுமக்கலாகாது.
மாத்திரை தப்ப மிதித்தால் கோத்திரம் கூறப்படும். 18375

மாதம் ஒரு மாரி பெய்தால் இரு போகம் விளையும்.
மாதம் காத வழி மாயமாய்ப் பறக்கும்.
(மாறாக.)
மாதம் காதவழி மாறாகத் துள்ளுவான்.
மாதம் மும்மாரி பெய்தால் முப்போகம் விளையும்.
மாதம் மும்மாரியும் வருஷம் ஒரு பொன்மாரியும். 18380

மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டுமாம்.
(அன்னத்தை.)
மாதா செய்தது மக்களுக்கு.
மாதா சொல் மடிமேல்.
மாதா பிதா செய்தது மக்கள் தலைமேல்.
மாதா பிதா மக்களுக்குச் சத்துரு. 18385

மாதா மனம் எரிய வாழாய் ஒரு நாளும்.
(வயிறு எரிய.)
மாதா வயிறு எரிய மகேசுவர பூஜை நடத்தினானாம்.
மாதாவுக்குச் சுகம் இருந்தால் கர்ப்பத்துக்கும் சுகம்.
(சுரம்...சுரம்)
மாதாவுக்கே ஆபத்து; கர்ப்பத்தைப்பற்றிக் கவலையா?
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் போல. 18390

மாந்திரிகன் வீட்டுப் பேயும் வைத்தியன் வீட்டு நோயும் போகா.
மாப்பழுத்தால் கிளிக்கு ஆம்; வேம்பு பழுத்தால் காக்கைக்கு ஆம்.
மாப்பாய் இருக்கிற மட்டும் மடியில் வைத்திருந்தேன்; தோப்பான பிறகு மடியில் வைக்கலாமா?
மாம்பிள்ளை இருக்கிற மட்டும் மடியில் வைத்தேன்; தோப்பான பிறகு மடியில் வைக்கலாமா?

மாப்பிள்ளை என்று துரும்பைக் கிள்ளிப் போட்டாலும் துள்ளும். 18395

மாப்பிள்ளைக்கு ஆக்கி வைத்த சோற்றை மகனுக்கு இட்டு வயிறு எரிந்தாளாம்.
மாப்பிள்ளைக்கு ஏற்கனவே கோணல் வாய்; அதிலும் கொட்டாவி விட்டுக் காட்டினானாம்.
மாப்பிள்ளைச் சமர்த்து.
மாப்பிளை சமர்த்து என்றால் செம்பை வெளுக்கத் தேய்த்தானாம்.
மாப்பிள்ளை சிங்காரிப்பதற்குள் பெண் வண்டி ஏறிவிடும். 18400

மாப்பிள்ளை சொந்தம்; துப்பட்டி இரவல்.
(அங்கவஸ்திரம்.)
மாப்பிள்ளைத் தோழனுக்குப் பெண்டு அறுதி.
(உறுதி.)
மாப்பிள்ளை தலை போனாலும் போகிறது; மாணிக்கம் போல உள்ள உரல் போகிறது என்றாளாம்.
மாப்பிள்ளை, தோப்பிள்ளை, மாங்காய்ச் சோற்றுக்குக் கதி கெட்ட பிள்ளை.
மாப்பிள்ளை, மண்ணாங்கட்டி தோப்பிள்ளை. 18405

மாப்பிள்ளையில் கிழடு இல்லை.
மாப்பிள்ளையையும் வேண்டிப் பெண்ணையும் வேண்டுகிறதா?
மாப்பிள்ளை வேண்டும் என்று மலைப்பாம்புக்கு வாழ்க்கைப் பட்டது போல.
மாப்பிள்ளை வேஷ்டியைப் பார், அத்தைப்பாட்டி புடைவையைப் போல்.
மாப் புளிக்கிறதெல்லாம் பணியாரத்துக்கு நலம். 18410
(மாவு.)

மாப்பொன் இருக்க, மக்களைச் சாவக் கொடுப்பேனா?
மாப் பொன் இருக்க மக்களைப் பட்டினி போடுவானேன்?
மாபாவி பெயரைச் சொன்னால் மாணிக்கமும் கல் ஆகும்.
மாம்பழத்தில் இருக்கும் வண்டே, மாமியாருக்கும் மருமகளுக்கும் சண்டை.
மாம் பழத்தினுள் வண்டு போல. 18415

மாம்பழம் தின்று தண்ணீர் குடித்தால் மாமியாரோடு போகிற மாதிரி; நெல்லிக்காய் தின்று தண்ணீர் குடித்தால் உடன் பிறந்தாளோடு பேசுகிற மாதிரி.

மாம்பூவைக் கண்டு மகிழ்ந்து போகாதே.
மாமரமும் மணத்தக்காளிச் செடியும் போல.
மா மறந்த கூழுக்கு உப்பு ஒரு கேடா?
(மாவு.)
மாமன் சொத்துக்கு மருமான் கருத்தாளி. 18420

மாமனை வைத்துக் கொண்டு மைத்துனனைச் சாகக் கொடுத்தாள்.
மாமா இச்சுக் கிச்சான், ஒரு பக்கத்து மட்டையைப் பிச்சுக் கிச்சான்; மச்சான் கிச்சுக் கிச்சான்; ஒரு பக்கத்துக் கச்சையைப் பிச்சுக்கிச்சான்.
மாமாங்கச் சந்தையிலே மாடு வாங்கினது போல.
(மகான்மகச் சந்தையிலே.)
மாமி உடைத்தால் மண்கலம்; மருகி உடைத்தால் வெண்கலம்.
மாமி ஒட்டினாலும் பானை ஒட்டாது. 18425

மாமி குற்றம் மறைப்பு; மருமகள் குற்றம் திறப்பு.
(யாழ்ப்பாண வழக்கு.)
மாமி செத்து மருமகள் அழுத கதை.
மாமியார் அறுத்துப் போன பிறகுதான் காமிரா உள் நமக்குக் கிடைக்கும்.
மாமியார் உடை குலைந்தால் வாயாலும் சொல்லக் கூடாது; கையாலும் காட்டக் கூடாது.
(துணி அவிழ்ந்தால்.)
மாமியார் உடைத்தால் குழவிக்கல்; மருமகள் உடைத்தால் வைரக்கல். 18430

மாமியார் உடைத்தால் மண்கலம்; மருமகள் உடைத்தால் பொன்கலம்.
(மாமியார் உடைத்தால் மண்சட்டி; மண்பானை... வெண்கலம்; பொன் பானை.)
மாமியார் கை வெல்லத்தைப் பார்க்கிலும் மருமகள் கைத் தவிடு தேவலை.
மாமியார் கோபம் வயிற்றுக்கு மட்டம்.
மாமியார் சாமான் வாங்கி மச்சு நிரம்புமா?
(செட்டி நாட்டு வழக்கு.)
மாமியார் சீலை விலகினால் வாயால் சொன்னாலும் குற்றம்; கையால் காட்டினாலும் குற்றம். 18435

மாமியார் செத்த ஆறாம் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர் வந்ததாம்.

மாமியார் செத்ததற்கு மருமகள் அழுகிறது போல்.
(செத்து மருமகள் அழுதாளாம்.)
மாமியார் செத்த நாளும் இல்லை; நான் வாழ்ந்த நாளும் இல்லை;
மாமியார் தலையில் கையும் மாப்பிள்ளை மேலே சிந்தையும்.
மாமியார் தலையில் கையும் வேலிப் புறத்திலே கண்ணும். 18440

மாமியார் மதிலைத் தாண்டினால் மருமகள் குதிரைத் தாண்டுவாள்.
மாமியார் மெச்சின மருமகள் இல்லை; மருமகள் மெச்சின மாமியாரும் இல்லை.
மாமியார் வீட்டில் முகம் தெரிந்து வா என்றானாம்; அஞ்சி குடிக்கும் போது முகம் தெரிகிறதென்று திரும்பினானாம் மகன்.
மாமியார் வீடு கைலாசம்.
மாமியார் வீடு மகா சௌக்கியம்; நாலு நாள் சென்றால் நக்கலும் கக்கலும். 18445
(நாய் படாப் பாடு; நாய் பெறு சீலம்- யாழ்ப்பாண வழக்கு.)

மாமியாருக்குக் கண்ணும் மண்ணும் பிதுங்கிப் போகின்றன.
மாமியாருக் காரியம் இல்லை என்று கல்லும் நெல்லும் கலந்து வைத்தாளாம்.
மாமியாருக்குச் சாமியார் இவன்.
மாமியாருக்குப் புடைவை சோர்ந்த கதை.
மாமியாருக்கும் மாமியார் வேண்டும். 18450

மாமியாரும் ஒரு வீட்டு மாட்டுப் பெண்தான்.
(ஒரு காலம் ஒரு வீட்டுப் பெண்தான்.)
மாமியாரும் சாகாளோ? என் மனக் கவலையும் தீராதோ?
மாமியாரே, மாமியாரே. உனக்காக உடன் கட்டை ஏறுகிறேன்.
மாமியாரே. மாமியாரே, மை இட்டுக் கொள்கிறீர்களா? பொட்டு இட்டுக் கொள்கிறீர்களா?
மாமியாரைக் கட்ட வில்லை என்று மருமகன் தன் அரைஞாண் கயிற்றை அறுத்துத் தாலி கட்டினானாம். 18455

மாமியாரைக் கண்டு மருமகன் நாணுகிறதைப் போல.
(மருமகள்.)
மாமியாரோடு போகாத மாபாதகன்.
மாமியாரோதிக்கு மருமகள்தான்.
மாமேருவைச் சேர்ந்த காக்கையும் பொன் நிறம் ஆகும்.
(யாப்பருங்கலக் காரிகை.)
மாய்மாலக் கண்ணி மருமகளே, கோழிக் கறிக்குப் பதம் பாரடி;
கொக்கு என்கிறது அத்தையாரே, கொத்த வருகிறது அத்தை

யாரே, திறந்து பார்த்தேன் அத்தையாரே, பறந்து போச்சு அத்தையாரே. 18460

மாயக்காரன் பேயிற் கடையே.
மாயத்தில் மாரீசனைப் போல.
மாயப் பெண்ணே, சுந்தரி, மாலைப் போட்டுக் கிண்டடி.
மாயன் கயேந்திரனுக்காக வந்தது போல.
மாயூரத்தில் பெண் எடுக்காதே; மன்னார் குடியில் பெண் கொடுக்காதே. 18465

மாயூர நாத சுவாமி மகிமையைப் பார்; வந்து கிடக்கிற மொட்டைகளைப் பார்.
மாயூரம் மொட்டை; சிதம்பரம் சொட்டை.
மார் அடித்த கூலி மடிமேலே.
மார்க்கண்டனைப் போல தீர்க்காயுசாய் இரு.
மார்க்கண்டாயுசாய் இரு. 18470

மார்கழிக் கோடை மரம் வெட்டிச் சாய்த்தாற் போல்.
மார்கழித் திங்கள், மடி நிறையப் பொங்கல்.
மார்கழிப் பனி தலையைத் துளைக்கும்.
மார்கழி பிறந்தால் மழை இல்லை.
மார்கழி பிறந்தால் மழையும் இல்லை; பாரதம் முடிந்தால் படையும் இல்லை. 18475
(மார்கழி முடிந்தால்.)

மார்கழி மத்தியில் மாரி பொழிந்தால் சீர் ஒழுகும் பயிர்களுக்கு க்ஷேமம் மிக உண்டாகும்.
மார்கழி மழை மண்ணுக்கும் உதவாது.
மார்கழி மாதத்து நம்பியானும் ஐப்பசி மாதத்து எருமைக் கடாவும் சரி.
மார்கழி மாதம் மச்சும் குளிரும்.
மார்கழி மாதம் மண் அலம்பப் போது இல்லை. 18480
(மண் குடவும்.)

மார்கழியில் மழை பெய்தால் மலைமேலே நெல் விளையும்.
மார்கழி வெற்றிலையை மாடு கூடத் தின்னாது.
மார்பிலே தைத்து முதுகிலே உருவினது போல.
மார்பு சரிந்தால் வயிறு தாங்க வேண்டும்.
மார்மட்டும் உறவு இருந்தாலும் மார் மேல் கை போடாதே. 18485
(சிநேகம் இருந்தாலும்.)

மார்மட்டும் சிநேகம் ஆனாலும் மடியிலே கை போடாதே.
மார்மேலும் தோள் மேலும் வளர்த்தாள் அருமையாய்.
மாரி அடைத்த வில் போட ஏரி உடைக்க மழை பெய்யும்.
மாரி இல்லையேல் காரியம் இல்லை.
(மாரி அல்லது. மாரி இன்றேல்.)
மாரிக் காலத்தில் பதின்கல மோரும் கோடைக் காலத்தில் ஒரு படி நீரும் சரி. 18490

மாரி பதின்கல நீரில் கோடை ஒரு குடநீர் வண்மை.
மாரி பொய்த்தாலும் மண் பொய்க்காது.
மாரி முரண்டுக்கு மருந்து உண்டா?
மாரிலே கொடி மாமனுக்கு ஆகாது.
மாரியாத்தாள் குழியில் மறைத்து வைக்க. 18495

மாரியாத்தாள் வாரிக் கொண்டு போக.
மாரியாத்தாளைப் பெண்டு பிடிக்கிறவனுக்குப் பூசாரி பெண்சாதி எம்மாத்திரம்?
மாரைத் தட்டி மனசில் வை.
மாரி மங்கலத்தாள் கொப்புக் கண்டெடுத்தாள்.
மாலுமி இல்லா மரக்கலம் ஓடாது. 18500

மாலை இட்ட நாள் முதல் தாரை இட்டு அழுதாள்.
மாலை இட்ட பெண்சாதி காலனைப் போல் வந்தாள்.
மாலை உப்பு மழை அப்புறம், காலை உப்பு அடுத்து மழை.
(உப்பு-உப்பங்காற்று.)
மாலைக் கண்ணுக்கு மூலைச் சுவர்.
மாலைக் குளியனையும் மார்பில் மயிரனையும் நம்பாதே. 18505

மாலைக் கொசுக்கடி மழையைக் கொண்டு வரும்.
மாலைக் குளித்து மனையில் புகும், தன் மனையில் ஆரையும் சேர்க்காது.
மாலைச் செம்மேகம் மழை அறிகுறி; காலைச் செம்மேகம் கழுதை வாடை.
மாலை சுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது.
(மாலை சுற்றிப் பெண் பிறந்தால்.)
மாலையில் வந்த விருந்தும், காலையில் வந்த மழையும். 18510

மாவடை மரவடை.
மாவடை இல்லா ஊருக்கு மணக்காச்சா வயிரம்.

மாவாய்த் தின்றால் என்ன? கொழுக்கட்டையாய்த் தின்றால் என்ன?
மாவாய்த் தின்றால் பணியாரம் இல்லை.
மாவிலும் ஒட்டலாம்; மாங்காயிலும் ஒட்டலாம். 18515
(தேங்காயிலும் ஒட்டலாம்.)

மாவிலும் மரத்திலும் தட்டாமல்.
மாவின் குணமே கூழின் குணம்.
மாவு இடித்தால் மண்டிக் கொள்கிறது; கூழ் கொதித்தால் கூடிக் கொள்கிறது.
மாவு இருக்கிற மணம் போல் கூழ் இருக்கிற குணம்.
மாவுக்குத் தக்க பணியாரம். 18520

மாவுக்குத் தலமா வாய்?
மாவுக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை.
மாவு புளிக்கிறதெல்லாம் பணியாரத்து நலம்.
மாவுத்துக்காரனுக்கு ஆனையிலே சாவு.
மாவு தின்றால் பணியாரம் ஆகாது. 18525

மாவும் தேனும் போல.
மாவும் போச்சுது; மாவு கட்டின துணியும் போச்சுது; இனி என்ன உறவு?
மாவு மறந்த கூழுக்கு உப்பு ஒரு கேடா?
மாவேகம் மனோ வேகமாய்ப் பேசுகிறான்.
(ஓடுகிறான்.)
மாவைத் தின்றால் அப்பம் இல்லை. 18530

மாவைத் தின்றால் பணியாரம் இல்லை; பணியாரம் தின்றால் மாவு இல்லை.
மாவைத் தின்றால் பணியாரம் இல்லை; பெண்டாட்டியைத் தின்றால் பிள்ளை இல்லை.
மாளய பட்சத்துச் சாஸ்திகள்; மார்கழி மாதத்து நம்பியான்; மாசி மாதத்துக் கடா.
மாளாத பணத்துக்கு ஒரு மண்டி வைத்துப் பார்த்தானாம்.
மாளிகை கட்டி மரநாய் கட்டினது போல. 18535

மாளிகையைக் கட்டி வன்குரங்கைக் கட்டினது போல.
மாற்றாந்தாய் மூத்தாள் பிள்ளைக்குக் கால் கழுவினது போல.
மாற்றான் வீட்டு மல்லிகைக்கும் மணம் உண்டு.

மாற்றானுக்கு இடம் கொடேல்.
மாற்றானுக்கு மார்பில் ஆணியாய். 18540

மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பொணாது.
மாற்றிலே விளைவது மரத்திலே விளையுமா?
(மாற்றிலே வளைவது.)
மாற்றைக் குறைத்தான் தட்டான், மாய் பாலம் கண்டான் செட்டி.
மாற்றைக் குறைத்தால் தட்டான், வாயிலே ஏய்த்தான் செட்டி.
மான் கண்ணிலும் அழகு; விரைவிலும் விரைவு. 18545

மான் கூட்டத்தில் புலி புகுந்தது போல.
மானசிக பூஜைக்கு அழுகல் வாழைப் பழம்.
மானத்தின் கீழிருந்து மழைக்குப் பயந்தால் முடியுமா?
(வானத்தின் கீழ்.)
மானத்தின மேலே கண்ணும் மாப்பிள்ளை மேலே சிந்தையும்.
(வானத்தின்.)
மானத்தை விட்டவனுக்கு மார் மட்டும் சோறு. 18550

மானத்தை விட்டால் மார்மட்டும் சோறு: வெட்கத்தை விட்டால் வேணு மட்டும் சோறு.
மானத்தை வில்லாய் வளைப்பான்; மணலைக் கயிறாய்த் திரிப்பான்.
(வானத்தை.)
மானத்தை விற்றால் கையளவு சோறு.
மானத்தோடு வாழ்பவனே மனிதன்.
மானம் அழிந்தபின் மரியாதை என்ன? 18555

மானம் அழிந்தபின் வாழாமை இனிதே.
(இனியவை நாற்பது.)
மானம் அழிந்தாலும் மதி கெட்டுப் போகுமா?
மானம் அழிந்து வாழ்வதிலும் மரணம் அடைவது உத்தமம்.
மானம் அழியில் உயிர் காவலா?
மானம் இழந்தபின் உயிர் வாழ்தல் ஏன்? 18560

மானம் தலைக்கு மேலே; வேட்கம் கட்கத்திலே.
(வானம்.)
மானம் பெரிது என்று மதித்தவர்க்குப் பிராணன் துரும்பு.
மானம் பெரிதோ, பிராணன் பெரிதோ?
(சீவன், உயிர்.)
மானம போக வேணும்; வயிறு நிரம்ப வேணும்.
மானம் போன பிறகு பிராணன் இருந்து பயன் என்ன? 18565

மான மழை நின்றாலும் மரமழை நில்லாது.
(வான மழை )
மாணார் கலவியில் மயங்கி இருந்தாலும் தானே தருவான் சிவன் தன் பாதம்.
மானியம் வாங்கிப் பிழைப்பதிலும் வாணிகம் செய்து பிழைப்பது மேல்.
மானுக்கு ஒரு புள்ளி ஏறி என்ன; குறைந்து என்ன?
மானுஷ்யம் இல்லாதவன் மனுஷப் பதர். 18570

மானைக் காட்டி மானைப் பிடிப்பார்.
(கட்டி, பிடிப்பது போல.)
மானைத் தேடி மதம் கொள்கிறதா?

## மி

மிகுதி ஆசை அதிக நஷ்டம்.
மிகுதி உள்ளவனுக்கும் வஞ்சனைக்காரனுக்கும் பகை; வேதக்காரனுக்கும் உலகத்துக்கும் பகை.
மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யும். 18575
(உணவு.)

மிகைபடச் சொல்லேல்.
மிச்சத்தைக் கொண்டு மேற்கே போகாதே; கெட்டுக் கிழக்கே போகாதே.
மிஞ்சி இல்லா விரலும் மஞ்சள் இல்லா முகமும் பாழ்.
மிஞ்சின கருமம் அஞ்சச் செய்யும்.
மிஞ்சின சுண்ணாம்பையும் மெலிந்த அரசனையும் விடக் கூடாது. 18580

மிஞ்சினது கொண்டு மேற்கே போனால் ஆகாது.
(மிச்சத்தை எடுத்துக் கொண்டு, போகாதே.)
மிஞ்சினால் மெளனி; கெஞ்சினால் கால்.
மிடா விழுங்கிச் சிற்றப்பனுக்கு வறட்டு ஆடு கருவாடு.
மிடி இதயம் கொள்; மீளாக் கதி தொடர்.
மிடிமையிலும் படிமை நன்று. 18585

மிடுக்கன் ஏறிய குதிரைக்கு மேடு ஏது? பள்ளம் ஏது?
மிடுக்கன் சரக்கு இருக்க விலை பெறும்.
(விலை போகும்.)
மித்திர நேசம் விபத்தில் தெரியும்.
மிதிக்க மிதிக்க லாபம உண்டு.
மிதித்தாரைக் கடிக்காத பாம்பு உண்டா? 18590

மிதித்தாரைக் கடிக்காது; விதித்தாரைக் கடிக்கும் கால சர்ப்பம்.
மிதித்தால் கடிக்கும் பாம்பு.
மிதி பாகல் விதையோடே.

மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
(மருண்டவன்.)
மிருகங்களில் ஆனை பெரிது; அதிலும் சிங்கம் வலிது. 18595

மிருகம் முறை பார்க்கிறதா, வேசி முறை பார்க்க?
மிருத்தியுவின் கடைவாயிலே அகப்பட்டாற் போலே.
மிளகாய்ப்பழம் தின்பானேன்? நாய் மாதிரி நாக்கைத் தொங்கப் போடுவானேன்?
மிளகு அத்தனை பிள்ளையாருக்குக் கடுகு அத்தனை நைவேத்தியம்.
மிளகு சிறுத்தாலும் வீரியம் போகாது. 18600
(விறுவிறுப்பு, காரம்.)

மிளகுப் பொடியோடே திருவாதிரை.
மின்மினிப் பூச்சிக்கு இருள் போகுமா?
(பூச்சி வெளிச்சத்துக்கு.)
மின்னல் இல்லாமல் இடி உண்டா?
மின்னல் வெட்டிலே முளை நோட்டம் பார்த்தாற்போல.
மின்னலிலே வெட்டு முளை நோட்டம் பார்த்தாற் போல். 18605

மின்னலைக் கண்டு விதை விதைத்தானாம்.
மின்னலைப் போல் பல்லை விளக்காதவனும் மினுக்கிக் கொள்வானும் பதர்.
மின்னாமல் இடி விழுமா?
(இடிக்குமா?)
மின்னாமல் முழங்காமல் இடி விழுந்தது போல.
மின்னினால் மழை பெய்யும். 18610
(பெய்யுமா?)

மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.
மின்னுவதெல்லாம் பொன் அல்ல; வெளுத்ததெல்லாம் பால் அல்ல.
மினுக்கு உள்ள அம்பு துன்பம் செய்யும்.
(அன்பு.)
மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு.

## மீ

மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது. 18615

மீசை அடிப்பதற்காகவா அப்பன் சாக வேண்டும்.
மீசை இல்லா முகமும் மேனி இல்லா அழகும் பாழ்.
மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை.
மீசையை முறுக்கி வளர்; முருங்கையை முறித்து வளர்.
மீதூண் விரும்பேல். 18620

மீந்த சுண்ணாம்பையும் மெலிந்த ராஜாவையும் கைவிடக் கூடாது.
மீன் இருக்கப் புளியங்காயைத் தின்னுமா?
மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழககுகிறதா?
மீன் குழம்போ? தேன் குழம்போ?
மீன் செத்தபோதே சினை செத்துப் போச்சுது. 18625

மீன் தண்ணீர் குடித்தாற்போலே.
மீன் தின்னாத கொக்கும் உண்டோ?
மீன் பிடிக்கிறவனுக்குத் தூண்டிலிலே கண்.
மீன் விற்ற காசு நாறுமா?
மீன் விற்ற காசு பார்ப்பானுக்கு ஆகாதா? 18630

மீன மேஷம் பார்க்கிறது.
மீனுக்கு நீச்சம் கற்றுக் கொடுக்க வேண்டுமா?
மீனுக்கு வாலைக் காட்டு; பாம்புக்குத் தலையைக் காட்டு.
மீனும் செத்தது; சினையும் செல் அரித்துப் போயிற்று.
மீனை மீன் விழுங்கினாற்போல். 18635

## மு

முக்காட்டின் கீழே கை காட்டுகிறது.
முக்காட்டுக்குள்ளே கை காட்டுவாள்.
முக்காட்டுக்குள் சமுதாடா.
முக்காட்டுக்குள்ளே மூடு மந்திரமா?
முக்காட்டுச் சிக்கு அறாது. 18640

முக்காடு இட்டது முதல் பிள்ளை.
முக்காணிக்கு அழுவது போல விட்டு விட்டுப் பெய்யும் மழை.
முக்காலும் சுமந்தாலும் முயல் கைத் தூக்குத்தாணி.
முக்கால் அளந்தால் கொக்காய்ப் பறக்கும்.
முக்கால் அறுக்குண்டவள் பொல்லாக் கனாக் கண்ட கதை. 18645

முக்கால் நத்தை பெருமைப்படும்; மூடர் எதானும்
பெருமைப் படார்.
முக்கால் பணத்துக் குதிரை மூன்று பணத்துக்குப் புல் தின்னும்.
முக்கால் பணத்துக்கு மருத்துவம் செய்யப் போய் மூன்று
பணத்து நெளி போன கதை.
முக்கால் பணத்துக் கோழி மூன்று பணத்துத் தவிடு தின்னும்.
முக்கால் முக்கால் மூன்று தடவை. 18650

முக்குடி ஒரு குடி குடியாதே; ஐம்பிடி ஒரு பிடி பிடியாதே.
(ஆசமனியத்தை ஒரு முறை செய்யக் கூடாது; பிராணாஹூதியை ஒரு தடவையாகச் செய்யக் கூடாது.)
முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகுமா?
(கங்கையில் முழுகி அன்னம் ஆகுமா?)
முக்கூட்டுச் சிக்கு அறாது.
முகக் கோணலும் கண்ணாடி பார்த்தால் தீருமா?
முகடு முட்ட வரும் கோபம் துரும்பு குத்த வேலை. 18655

முகத்தில் அடித்தாலும் வயிற்றில் அடிக்காதே.
முகத்தில் ஆழாக்கு அருள் இல்லை.
முகத்தில் இல்லாத புகழ் பிட்டத்தில் வந்ததா?

முகத்தில் ஈ ஆடவில்லை.
முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். 18660

முகத்தில் பந்தம் கட்டிக் கொண்டு நிற்கிறான்.
(திரிகிறான்.)
முகத்தில் மூத்தவள் வாசம்.
(மூத்தவள் மூதேவி.)
முகத்தில் விழித்த தோஷம் வயிற்றில் வந்து விட்டது.
முகத்தில் விழித்தால் மூன்று நாளைக்குச் சோறு அகப்படாது.
முகத்து இச்சைக்கு முத்தார் கிட்டே போனாளாம் 18665

முகத்துக்கு அஞ்சி மூத்தாரோடு அவிசாரி போனால் குலத்துக்கு எல்லாம் ஈனமாம்.
முகத்துக்கு அஞ்சி மூத்திரம் குடித்தால் குலத்துக்கு ஈனம்.
முகத்துக்கு முகம் கண்ணாடி.
முகத்துக்கு முகம் குரங்கு முகம்.
முகத்து வேர்வை நிலத்தில் விழப் பிரயாசைப் பட்டாற்போல. 18670

முகத்தைப் பார், சப்பாத்திப் பழம் பூசிய குரங்கு மாதிரி.
முகத்தைப் பார்த்தால் பால் வடிகிறது.
முகத்தைப் பார்த்துக் கையைப் பார்.
முகத்தைப் பார்த்துப் பேசு.
முக தரிசனம் முக்கால் மைதுனம். 18675

முக தாட்சண்யத்துக்கு முண்டைச்சி கர்ப்பிணி ஆனது போல.
முகப்பிலே முத்தையா செட்டியார் வாருங்கள் என்று சொல்லுமுன் மூன்றாங் கட்டில் உள்ள முத்தாத்தாளாச்சி மூன்று பணியாரத்துக்குப் போட்டாற்போல.
(செட்டி நாட்டு வழக்கு.)
முகம் ஆகாதிருந்தால் கண்ணாடி என்ன செய்யும்?
முகம் சந்திர பிம்பம்; அகம் பாம்பின் விஷம்.
முகாந்திரம் இல்லாமல் பணைக்கிறதா? 18680

முச்சந்தியில் நிற்கிறான்.
முட்ட நனைந்தவனுக்கு ஈரம் இல்லை; முழுதும் கெட்டவனுக்கு துக்கம் இல்லை.
முட்ட நனைந்தவனுக்கு ஈரும் இல்லை, பேனும் இல்லை; முக்காடு என்ன?

முட்ட நனைந்தவனுக்கு முக்காடு என்ன?
முட்ட நனைந்தார்க்குக் குளிர் இல்லை. 18685

முட்டம் கோடி முப்பத்திரண்டு அணைகள்.
முட்டரோடு ஆடிய நட்பு, கருங்காலிக் கட்டை ஊடாடிய கால்.
முட்டாக்குப் போட்டு மூலையில் உட்கார்த்தி வைத்த பிறகும்
மெச்சிக் கொள்வதற்கு எச்சில் இலை எடுத்தாளாம்.
முட்டாள் என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.
முட்டாள்களில் முட்டாள் கிழ முட்டாள். 18690

முட்டாள் தனத்துக்கு முதல் பாக்குக்காரன்.
முட்டாள் நாயக்கனும் முரட்டுத் துலுக்கனும் பட்டாளத்துக்குத்
தான் சரி.
முட்டாள் பயனுக்கு இரட்டைப் பிரியம்.
முட்டாள் பிடித்த முயலுக்கு மூன்று கால்.
முட்டாள் பையனுக்கு இரட்டைப் பெண்டாட்டி. 18695

முட்டாள் முண்டத்துக்கு இரட்டைப் பிரியம்.
முட்டாளுக்கு இரண்டு ஆள்.
(எட்டு.)
முட்டாளுக்கு என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.
முட்டாளுக்குக் கோபம் மூக்கின் மேலே.
முட்டாளுக்குத் தன் குணம் நூலினும் செம்மை. 18700

முட்டாளுக்குப் பட்டால் தெரியும்.
முட்டாளுக்கு முட்டாள் தண்டனிட்ட விண்ணப்பம்.
முட்டாளுக்கு முழங்காலில் புத்தி.
முட்டாளுக்கு மூன்று இடத்திலே மலம்.
முட்டாளுக்கு மோர் அதிகம். 18705

முட்டாளுக்கு மோருஞ் சாதம்
முட்டாளும் சட்டை செய்யான்.
முட்டி வசட்டின குட்டி முதார் குட்டி.
(முட்டி வட்டின கன்று முதற்கன்று.)
முட்டிக் கால் கழுதை பட்டவர்த்தனப் பரி ஆகுமா?
முட்டிக்குப் போனாலும் முகராசி வேண்டும்; பிச்சைக்குப்
போனாலும் பேர் ராசி வேண்டும்; அவிசாரி போனாலும்
அதிர்ஷ்டம் வேண்டும். 18710

முட்டிக்குப் போனாலும் மூன்று பேர் உதவாது.
(முட்டி-பிச்சை.)
முட்டி கொள்ளப் போனாலும் மூன்று பேர் கூடாது.
(முட்டிக் கொள்ள.)
முட்டிப் பார்ப்பான் முறையிட்டு மொட்டைப் பசுவின் பாய்ச்சலோடு விட்டுப் போனது.
(திருவாலவாயுடையான் திருவிளையாடற் புராணம், 33.30.)
முட்டிய பிறகு குனிவதா?
முட்டி விட்டுக் குரையும் புத்தி முட்டாள் புத்தி. 18715

முட்டிற்று என்றாள் மூத்தாள்.
முட்டின கோபம் முட்டக் கெடுக்கும்.
முட்டினால்தான் குனிவார்கள்.
முட்டினால் முற்றம் கதி.
முட்டு அற்ற பெண்ணுக்கு இரட்டைப் பரியமா? 18720
(நரிக்கு. பரியம்.)

முட்டுக்கு முட்டு அல்ல; முடக் கதவும் அல்ல; சந்நிதி வாசலுக்குச் சாத்தக் கதவும் அல்ல.
முட்டுப் பட்ட பிற்பாடு குனிகிறது.
முட்டுப்பட்டு ஐயம் வருமானால் குட்டுப் பட்டால் குறைவு என்ன?
முட்டும் முன் குனிய வேண்டும்.
முட்டை இட்ட கோழிக்குத் தெரியும் பொச்சரிப்பு. 18725

முட்டை இடுகிற கோழிக்கு எரிச்சலும் உண்டு.
முட்டை இடுகிற கோழிக்கு எரிவு தெரியும் அல்லது மற்றவருக்குத் தெரியாது.
முட்டை இடுகிற கோழிக்குப் பிட்டம் எரிபந்தம் உண்டு.
(எரிச்சலும்.)
முட்டை இடுகிற கோழிக்குப் பொச்சரிப்பு என்ன?
முட்டை இடுகிற கோழிக்கு வருத்தம் தெரியும். 18730
(வலி.)

முட்டை இடுவதன்முன் குஞ்சை எண்ணுவது எப்படி?
முட்டைக் கண்ணி பிள்ளை இரண்டு கண்ணும் தொள்ளை.
முட்டைக் குஞ்சைப் பிட்டு வளர்ப்பது.
முட்டை கொண்டு எறும்பு திட்டை ஏறினால் மழை பெய்யும்.
முட்டையிலே கூவி முளையிலே கருகுகிறது. 18735

முடக்கச் சரக்கு இருக்க விலை போம்.
(முடக்குச் சரக்கு.)

முடக்கடிக்காரனுக்குப் புறக்கடை நடம்.
(கொங்குநாட்டு வழக்கு.)
முடங்கப் பாய் இல்லாமல் போனாலும் சடங்குக்குக்
குறைச்சம் இல்லை.
முடப் பிள்ளை ஆனாலும் மூத்த பிள்ளை.
(முந்தின பிள்ளை.)
முடப் புல்லும் முக்கல நீரைத் தடுக்கும். 18740
(செறுக்கும்.)

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல.
முடவன் சண்டைக்குப் போனாற் போல.
முடவன் தண்ணீருக்குப் போனால் எட்டான் மெனக்கேடாம்.
(மூன்று பேர்கூடப் போகவேணும்.)
முடவனுக்குக் கொம்புத் தேன் எட்டுமா?
முடவனுக்குக் கோபம் விட்ட இடத்திலே. 18745

முடவனுக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்.
முடவனுக்கு விட்ட இடத்தில் கோபம் வரும்.
முடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை முனிதான் கொல்லும்.
முடவனை மூர்க்கன் கொன்றால் மூர்க்கனை வாசற்படி தட்டும்.
முடிக்காதவன் படிக்காதவன். 18750

முடிச்சு அவிழ்த்துக் கொடுத்ததும் அல்லாமல் இளிச்சவாய்ப்
பட்டமும் கிடைத்தது.
(முடிச்சு இழந்ததும் மன்றி.)
முடிச்சு அவிழ்க்கப் போனாலும் மூன்று பேர் கூடாது.
முடிச்சு முடிச்சாய் நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா?
(முடி முடியாய்.)
முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாய்ப்
போகிறதே.
முடி பொறுத்த தலைக்குச் சுழி சுத்தம் பார்க்கிறதா? 18755

முடி முடியாய் நட்டால் பிடி பிடியாய் விளையுமா?
(பொதி பொதியாய்.)
முடிய முடிய நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா?
(முடி முடியாய் நட்டால்.)
முடியும் வகை யோசியாமலே முயற்சியை மேற்கொள்ளாதே.
(முயற்சி செய்யாதே)
முடி வைத்த தலைக்கு மேலே சுழிக்குற்றம் பார்க்கிறது கொண்டு
குலம் பேசுவது போல் இருக்கிறது.
முடுக்கிலிருந்து குதிக்கிறதா? 18760

முடைப் புல் முக்குறுணித் தண்ணீர் செறுக்கும்.
முண்டக்கண்ணி பிள்ளை இரண்டு கண்ணும் நொள்ளை.
முண்டச்சி சம்பந்தக்காரன் முன்னுக்கு வருவானா?
முண்டச்சி பெரிய தனம் சுக்லாம்பரதரம்.
முண்டச்சி பெற்றது மூன்றும் அப்படியே 18765

முண்டச்சி வளர்த்த மகன் முண்டனுக்கு இரண்டு ஆள்.
(மூன்று ஆள்.)
முண்டைப் பையன் செங்காளி மூன்று வீட்டுக்குப் பங்காளி.
முனுக்கு என்றால் மூக்குக்கு மேலே கோபம்.
முணுமுணுத்த சாப்பாட்டைக் காட்டிலும் முரமுரத்த பட்டினி மேல்.
முத்தம் கொடுப்பதற்குள் முந்நூறு தடவை குணம் மாறும். 18770

முத்தால் நத்தை பெருமைப்படும்; மூடர் எத்தாலும் பெருமைப்படார்.
முத்திலும் சொத்தை உண்டு; பவளத்திலும் பழுது உண்டு.
முத்து அளக்கிறவளும் பெண் பிள்ளைதான்; மூசப் பயறு அளக்கிறவளும் பெண் பிள்ளைதான்.
(முளைப் பயிறு.)
முத்து அளந்த கையால் மூசப் பயறு அளக்க வந்தது.
(முழுப்பயறு அளக்கக் காலம் வந்தது)
முத்து அளந்த கையால் மோர் விற்கிறதா? 18775

முத்துக்கு முத்தாய் இருக்கிறது.
முத்து குலத்தால் பெருமைப்படும்; மூடர் குலத்தால் பெருமைப் படார்.
முத்துத் தொழில் கச்சைத் தொழில், மற்றத் தொழில் பிச்சைத் தொழில்.
(கீழைக்கரைப்பக்க வழக்கு.)
முத்தும் பவளமும் முறை முறையாய்க் கோத்தது போல.
முத்து முத்தாய் இருக்கிறது. 18780

முத்தைத் தெளித்தாலும் கல்யாணந்தான்; மோரைத் தெளிததாலும் கல்யாணந்தான்.
முதல் இல்லாத பிள்ளை வட்டிக்குச் சீராடினான்.
முதல் இல்லாதவன் உயிர் இல்லாதவன்.
முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை.
(பழமொழி நானூறு.)
முதல் உள்ளவனுக்கு லாபம். 18785

முதல் எடுக்கும்போதே தப்பட்டைக்காரன் செத்தான்.
முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா?
முதல் கோணல் முற்றும் கோணல்.
(கோணினால்... கோணும் முட்டக் கோணல்.)
முதல் பணம் எங்கடா என்றால் எள் கடா ஏரியில்
மேயுது என்ற கதை.
முதல் பிள்ளை மூத்திரத்துக்கு அழும்போது இரண்டாம்
பிள்ளை பாலுக்கு அழுகிறதாம். 18790

முதல் பிறந்த பிள்ளை உரல் குழியை நக்குகிறதாம்; திருப்பதிக்குப்
போனாளாம் திரும்ப வரம் கேட்க.
முதல் பிறந்த குழந்தை உரல் குழியை நக்குகிறதாம்;
மூன்றாவது பிள்ளை முந்தியை இழுக்கிறதாம்.
(தண்டைக்கு அழுததாம்.)
முதல் பிறந்த பிள்ளை உரல் பணையை நக்குகிறதாம்;
தேவடியாளுக்குப் பிறந்த பிள்ளை திரட்டுப் பாலுக்கு
அழுததாம்.
முதல் பிறந்த பிள்ளை முத்துப் பிள்ளை; பின்னே பிறந்த பிள்ளை
மாவுப்பிள்ளை.
முதல் மடைக்கு எருப் போடு; கடை மடைக்கு வரப்புப்
போடு. 18795

முதலியார் வீட்டு நாய்க்கு முத்துமாலையின் பெருமை தெரியுமா?
முதலியார் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு.
(டம்பம்.)
முதலில் எடுத்துச் செலவிடாதே.
முதலிலே கெட்டிக்காரன், முடிவிலே சோம்பேறி.
முதலிலேயே துர்ப்பலை; அதிலும் அவள் கர்ப்பிணி. 18800
(துர்ப்பலம்.)

முதலுக்கு மிஞ்சினால் மோசம்.
முதலுக்கு மோசமாய் இருக்கிறது; லாபத்துக்குச் சண்டை
போடுகிறதா?
முதலே துர்ப்பலை; அதிலும் கர்ப்பிணி.
முதலைக்கு இல்லை நீச்சும் நிலையும்.
முதலை தன் இடத்தில் மலை ஒத்த யானையையும் இழுத்துச்
செல்லும். 18805

முதலை நாயின் காலை விட்டுப் புஸ்க மரத்தின் வேரைப் பிடித்தது
போல.

முதலையும் மூர்க்கனும் கொண்டது விடார்.
முதலைவாய்ப் பிள்ளை மீண்டு வருமா?
முதலை வைத்துப் பெருக்காத வணிகரைப் போல.
முதுகில் அடித்தால் ஆறும்; வயிற்றில் அடித்தால் ஆறுமா? 18810

முதுகில் அடித்தால் பொறுக்கலாம்; வயிற்றில் அடித்தால் பொறுக்கலாமா?
முதுகில் அடித்தாலும் வயிற்றில் அடிக்காதே.
முதுகில் புண் இருந்தால்தானே குனியப் பயப்பட வேண்டும்? (கூன.)
முதுகில் புண் உண்டானால் செடியிலே நுழையப் பயம். (காட்டிலே.)
முதுகிலும் முன் இருந்தால் முற்றத்திலும் நின்று ஆடமாட்டேனா என்று ஆர்ப்பரிக்குமாம் தேரி மீன். 18815

முதுகைச் சொறியச் சொன்னால் சிற்றிடையைச் சொறிகிறது ஏனோ?
முதுமைக்குச் சோறும் முறத்துக்குச் சாணமும்.
முதுகைத் தேய் என்றால் முலைமீது கை இட்டானாம்.
முந்தானை இருக்கிறது; நாலு வீடு இருக்கிறது.
முந்தியைப் பிடித்துப் போட்டு விட்டுக் குருவியைப் பிடித்து வாங்குவான். 18820

முந்திரிக் கொட்டை போல் முன்னே நிற்கிறான்.
முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்.
முந்தின சோற்றைத் தட்டினால் பிந்தின சோறு மலமும் சோறும்.
முந்தின சோறும் முனையும் குலைந்தால் பிந்தின சோறு மலமும் சோறும்.
முந்தினவன் கை மந்திர வாள். 18825

முந்தினோர் பிந்தினோர் ஆவார்; பிந்தினோர் முந்தினோர் ஆவார்.
முந்நாழி கறக்கிற பசு ஆனாலும் முன் இறப்பைப் பிடுங்குகிற பசு ஆகாது.
முந்நூறு மங்கலத்து முனி போல இருக்கிறான். (வடஆர்க்காடு வழக்கு.)
முப்பணிதியும் இட்ட பெண்ணுக்குக் கொப்பு ஒன்றுதான் குறையா?
முப்பத்திரண்டு லக்ஷணங்களில் இரண்டுதான் குறைவு; தனக்காகவும் தெரியாது; சொன்னாலும் கேட்பது இல்லை. 18830

முப்பதில் மூர்க்கம்; நாற்பதில் நாகரிகம்.
முப்பதில் வாழாதவன் மூடன்; முன்னும் பின்னும் தெரியாதவன் குருடன்.
(வாழாதவன் முரடன்.)
முப்பது செருப்புத் தின்றவனுக்கு மூன்று செருப்புப் பணியாரம்.
முப்பது நாளும் போகம், பொற்பணமே வா.
முப்பது நாளே போ; பூவராகனே வா. 18835

முப்பது பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது.
முப்பதும்போய், மூன்றும் தள்ளினவன் போல் பேசுகிறான்.
முப்பது வருஷம் வாழ்ந்தவனும் இல்லை; முப்பது வருஷம் தாழ்ந்தவனும் இல்லை.
(கெட்டவனும் இல்லை.)
முப்பேன் பிடிப்பது மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
முப்பொருள் ஆதிமூலம் ஆனவன். 18840

முயல் எத்தூரம் போனாலும் கைத் தூக்கு.
முயல்குட்டி சிங்கத்தை அடித்த கதை.
முயல் கொம்பு.
முயல் கோடு; ஆகாயப் பூ.
முயல் பிடிக்கிற நாய் மூஞ்சியைப் பார்த்தால் தெரியாதா? 18845

முயல் விட்டுக் காக்கைப்பின் போனவாறு
(திருநாவுக்கரசு நாயானார் தேவாரம்.)
முயல் வேட்டைக்கும் பிள்ளையார் கோயில் ஆண்டிக்கும் ஒத்து வராது.
முயலுக்குக் கொம்பு இல்லை என்றாற்போல.
முயலுக்குக் கொம்பு கண்டவர் இல்லை என்றாற் போல.
முயலை எழுப்பிவிட்டு நாய் பதுங்கினதுபோல. 18850
(தூங்கியது போல. பதுங்கி விட்டது.)

முயலை எழுப்பிவிட்டு நாயைத் தேடுவதா?
முயலைக் கிளப்பிவிட்டு நாய் படுத்துக் கொண்டாற்போல.
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
முயற்சி திருவினை ஆக்கும்.
(குறள்.)
முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. 18855

முரட்டுத் தனத்துக்கு முதல்தாம்பூலம் கொடுக்க வேண்டும்.
முரட்டுத் தனத்துக்கு முதல் பாதம்.

முரட்டுத் துலுக்கனும் முட்டாள் நாயக்கனும் பட்டாளத்தைத் தவிர வேறு வேலை இல்லை.
(பட்டாளத்துக்கு Fit,)
முரட்டுப் பெண்டாட்டி, இருட்டு அறை, சுருட்டுப் பாய்.
முரட்டுப் பெண்ணும் சுருட்டுப் பாயும். 18860

முரடனுக்கு மூங்கில் தடி,
முருக்கம்பூச் சிவந்ததனால் முடிப்பார்களா?
முருக்குப் பருத்தென்ன? தூணாகப் போகிறதா?
முருகனுக்கு மிஞ்சின தெய்வமும் இல்லை; மிளக்குக்கு மிஞ்சின வைத்தியமும் இல்லை,
முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம். 18865

முருங்கைக்காய் என்றால் பத்தியம் முறியுமா?
முருங்கக் கீரை முட்ட வாயு; அகத்திக் கீரை அண்ட வாயு.
முருங்கைக் கீரை வெந்து கெட்டது; அகத்திக் கீரை வேகாமல் கெட்டது.
முருங்கைக்கு முந்நூறு தத்து.
முருங்கை பெருத்துத் தூண் ஆகுமா? 18870

முருங்கையை ஒடித்து வளர்க்க வேணும்; பெண்ணை அடித்து வளர்க்க வேணும்.
முலைக்குத்து வலி சவலைக் குழந்தை அறியுமா?
(தண்டலையார் சதகம்.)
முலை கொடுத்து வளர்த்தவள் மூதேவி; மூன்றானை போட்டவள் சீதேவி.
முலை சரிந்தால் வயிறு தாங்கும்.
(முலை விழுந்தால்.)
முழங்காலில் கட்டின தாலிபோல, 18875

முழங்கைப் புண்போல முனை குலைந்து நிற்கிறது.
முழங்கையில் இடித்த சுகம் போல இருக்கும் மூத்தாள் பெண் வாழ்வு.
முழங்கையில் இடித்த சுகம் போல மூத்தாள் வாழ்கிறாள் புக்ககத்திலே.
முழங்கையில் பட்ட சுகம் போல.
முழங்கையில் பட்ட சுகமும் மூத்தாள் பசங்களின் வாழ்க்கையும். 18880

முழத்துக்கு மேலே அறுக்காதே; முடியைப் போட மறக்காதே.
(தையலில்.)
முழம் வரால், சாண் தண்ணீரில்.
முழிக்கிறதைப் பார்; கிழக் குரங்கைப் போல.
(விழிக்கிறதை.)
முழுச்சட்டி பேர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டது போல.
முழுக்க முழுக்க நனைந்த பின் முக்காடு எதற்கு? 18885

முழுகிக் குளித்து முக்காதம் போனாலும் வக்கு சொக்கு ஆகுமா?
முழுகி முப்பது நாள் ஆச்சுது: இறங்கி உப்பு அள்ளக்கூட வில்லை என்கிறான்.
முழுச்சோம்பேறி முள் உள்ள வேலி.
முழுதும் கெட்டார்க்கு வெட்கம் ஏது?
முழுதும் நனைந்தவனுக்கு ஈரம் இல்லை. 18890

முழுப்பங்குக்காரனுக்கு முந்திரிப் பங்குக்காரன் மிண்டன்.
(முண்டன்.)
முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல.
(சோற்றோடு.)
முள் ஒடிந்து முப்பது நிமிஷம் ஆச்சு.
முள் தைத்த துன்பத்தை முன்தான் போக்க வேண்டும்.
முள் மரத்தை முளையிலே கிள்ள வேண்டும். 18895

முன்னாலே எடுப்பதைச் கோடரியால் எடுத்தானாம்.
முள்ளாலே எடுப்பதைக் கோடரியாலே இழுத்துக் கொள்ளாதே.
முள்ளாலே முள்ளை எடுக்க வேண்டும்; இரும்பாலே இரும்பை அறுக்க வேண்டும்.
முள்ளின் மேல் சீலையைப் போட்டால் மெள்ள மெள்ளத்தான் எடுக்க வேண்டும்.
(வாங்க வேண்டும்.)
முள்ளினால் முள் களையுமாறு. 18900
(பழமொழி நானூறு.)

முள்ளுக்குக் கூர்மையும் துளசிக்கு வாசனையும் இயற்கை.
முள்ளுக்கு முனை சீவி விடுவார்களா?
முள்ளு முனையிலே மூன்றுகுளம் வெட்டினேன்; இரண்டு குளம் பாழ்; ஒன்று தண்ணீரே இல்லை.
முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்; அதுவும் முள் தைத்த வாய்வழியே எடுக்க வேண்டும்.
முளைக்கையில் உண்டானதுதான் முற்ற வரும். 18905

முளைத்ததே மூன்று மயிர்; அதிலும் இரண்டு புழுவெட்டு.
முளைத்து மூன்று அமாவாசை ஆகவில்லை.
முளைத்து மூன்று இலை விடவில்லை.
முளைப்பாரைப் புதைப்பார் உண்டோ?
(இல்லை.)
முளையில் உண்டானதுதான் முற்றும். 18910

முளையில் கிள்ளாதது முற்றினால் கோடரி கொண்டு வெட்ட வேண்டும்.
முளையில் நகத்தால் கிள்ளிவிடுவதை முற்ற விட்டுக் கோடரி கொண்டு பிளக்க வேண்டும்.
முளையிலே அறுத்தவள்.
முளையிலே கிள்ளி எறிய வேண்டும்.
முற்பகல் கண்டான் பிறன் கேடு, தன் கேடு பிற்பகல் கண்டுவிடும். 18915
(பழமொழி நானூறு.)

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
முற்படச் செய்யும் பயிரே நன்று.
முற்பிறப்பில் செய்த வினை இப்பிறப்பில் மூண்டது.
முற்றக் கல்வி பேசாதே.
முற்றத்தில் வந்தவர் முப்பழி செய்தவர் ஆயினும் வா என்று அழைக்க வேண்டும். 18920

முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை.
(மனம் தெரியுமா? மலையாள வழக்கு.)
முற்றின மரத்தில்தான் வைரம் இருக்கும்.
முற்ற நனைந்தவனுக்கு ஈரம் இல்லை; முழுதும் கெட்டவனுக்குத் துக்கம் இல்லை.
முற்ற நனைந்தார்க்கு ஈரம் இல்லை; முக்காடு போட்டவளுக்கு வெட்கம் இல்லை.
முற்ற நனைந்தார்க்கு ஈரம் இல்லை; மூக்கறுபட்டவளுக்கு நாணம் இல்லை. 18925
(வெட்கம்.)

முற்றும் முடிவும் பார்த்து முயல்.
முறத்து அடி பட்டாலும் முகத்து அடி படல் ஆகாது.
முறித்து விடுவது எளிது; சேர்ப்பதுதான் கஷ்டம்.
முறிந்து ஓடும் விமானத்துக்குப் பறந்து ஓடி ஒட்டுப் போடுகிறவன்.

முறுக்கி வளர்க்காத மீசையும் அடித்து வளர்க்காத பையனும் அடங்கா. 18930

முறுக்கோடு சம்பந்தி மூன்றில் சாப்பிட்டானாம்.
முறுகின புரி அறும்.
முறைமைக்கு மூப்பு இளமை இல்லை.
(பழமொழி நானூறு.)
முறையோ என்கிறவன் கழுத்தில் லிங்கம் கட்டினால் மறுநிலை அறுத்துப் போட்டுவிடுவான்.
முன் அளந்த நாழியே பின் அளக்கும். 18935

முன் ஏர் போன வழி பின் ஏர்.
முன் ஒன்று ஓதிப் பின் ஒன்று ஆடேன்.
முன் ஒன்றும் பின் ஒன்றும் பேசுகிறதா?
முன் கந்து பின் கந்து பாய்கிறவன்.
முன்கை உடையார்க்குக் கொழுவே படைக்கலம். 18940

முன்கை நீண்டால் முழங்கை நீளும்.
முன் கோணல் முடியக் கோணல்.
முன் கோபக்காரனுக்கு மூக்கிலே கோபம்.
முன் கோபம் பின் இரக்கம்.
முன் நான் செய்த தவத்தால் மூன்று மயிர் தந்தோமே; இந்நாள் செய்த தவத்தாலே இருந்த மயிரும் இழந்தாயே! 18945
(மயிர் தந்தோம்.)

முன் நின்றவன் மூக்கை அறுத்துக் கொடுப்பான்.
முன் நேரம் கப்பல்காரன்; பின் நேரம் பிச்சைக்காரன்.
முன்பனை செய்தால் பின் பனை விளையும்.
முன் பணம் கொடுத்து முதல் இழந்த மாமியார் பின்னும் கொடுத்ததும் பெண்டாட்டி ஆனாள்.
முன்பின் செத்திருந்தால்தானே சுடுகாடு தெரியும்? 18950

முன்பின் பாராமல் சொல்கிறதா?
முன் விட்டுப் பின் நின்று கழுத்து அறுக்கலாமா?
முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன்.
முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உண்டோ?
(பெரிய புராணம்.)
முன்னால் இருந்த அதிகாரியைப் பின்னால் வருகிற அதிகாரி நல்லவனாகச் செய்கிறது. 18955

முன்னால் பார்த்தால் சேவகன் குதிரை; பின்னால் பார்த்தால்
செட்டியார் குதிரை.
முன்னால் போனவன் முட்டிக் கொண்டால் பின்னால்
போனவனுக்கு வெளிச்சம் போட்ட மாதிரி.
முன்னால் போனால் கடிக்கிறது; பின்னால் போனால்
உதைக்கிறது.
(எறிகிறது.)
முன்னுக்கு ஒன்று; பின்னுக்கு ஒன்று.
முன்னே ஆட்டைப் பிடி; பின்னே மாட்டை பிடி. 18960

முன்னே ஒரு குறுணி; பின்னே ஒரு முக்குறுணி.
முன்னே பார், பின்னே பார். உன்னைப் பார் என்னைப் பார்.
முன்னே பார்த்தால் முதலாளியின் குதிரை; பின்னே பார்த்தால்
அதிகாரியின் கழுதை.
முன்னே பிறந்த காதைப் பார்க்கிலும் பின்னே பிறந்த கொம்பு பலம்.
முன்னே பிறந்த காதிலும் பின்னே முளைத்த கொம்பு
வலிது. 18965
(முன்னே முளைத்த.)

முன்னே போகிறவன் இடறி விழுந்தால் பின்னே போகிறவனுக்கு
எச்சரிக்கை.
முன்னே போகிறவன் கீழே விழுந்தால் பின்னே போகிறவனுக்கு
அதிகாந்த வெளிச்சம்.
முன்னே போகிறவன் தீவட்டி பிடித்தால் பின்னே போகிறவனுக்கு
வெளிச்சம்.
முன்னே போனால் சிசுஹத்தி; பின்னே போனால் பிரமஹத்தி.
முன்னே போனால் முட்டும்; பின்னே போனால் உதைக்கும். 18970

முன்னே வந்த மரத்தைப் பார்க்கிலும் பின்னே வந்த கொம்பு பலம்.
முன்னைக்குப் போ, முகட்டைக் குழகுழப்பு.
முனியாதார் முன்னியது எய்தாமை இல்லை.
(பழமொழி நானூறு.)
முனிவரும் முன்னுவ பொன்னால் முடியும்.
(திருக்கோவையார்.)

## மூ

மூக்கறைக்கு முகுரம் காட்டினால் கோபம் வரும். 18975
(முகுரம்-கண்ணாடி.)

மூக்கறையன் கண்ணாடியைப் பார்த்தது போல.
மூக்கறையன் கதைபோல் பேசுகிறான்.
மூக்கறையனுக்குக் கண்ணாடிப் பகை.
மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவிடான்;
பின்னும் போகவிடான்.
மூக்கில் இடித்ததாம்; பல்லுப் போச்சாம். 18980

மூக்கில் இருக்கிற மூக்குத்தி போனாலும் போச்சு; மூலையில்
இருக்கிற குப்பை போச்சு.
மூக்கில் பருக்கை வரும்படி தின்றான்.
மூக்கிலிக்குக் கண்ணாடி காட்டினது போல.
மூக்கு அறுபட்ட கழுதை தூவானத்துக்கு அஞ்சாது.
மூக்கு அறுபட்ட மூளி காது அறுபட்ட காளியைப்
பழித்தாளாம். 18985
(மூளியை.)

மூக்கு அறுபட்டவன் போல்.
மூக்கு இருக்கிற மட்டும் சளி உண்டு.
(உள்ளவரையும் சளி போகாது.)
மூக்கு உள்ள மட்டும் ஜலதோஷம் இருக்கத்தான் இருக்கும்.
மூக்குக்கு மேல் கோபம்.
மூக்குக்கு மேல் போனால் மூவாள் என்ன, நாலாள் என்ன? 18990

மூக்குத்தூள் போடாத முண்டத்துக்கு முப்பது பணத்தில்
வெள்ளி டப்பி.
மூக்குப்பிழை போனாலும் எதிரிக்குச் சகுனத்தடை ஆகவேண்டும்.
மூக்குப் புண் ஆறி அல்லவோ தாசரி ஆகவேண்டும்?
மூக்கும் முழியும்.
மூக்கு மயிர் பிடுங்கி ஆள் பாரம் குறையுமா? 18995
(பிடுங்கினால்.)

மூக்கு மயிர் பிடுங்கிக் கயிறு திரிக்கலாமா?
மூக்கு மயிர் பிடுங்கினது போல வருத்தம் வரும்,
மூக்கை ஏன் பிடிப்பது? மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
மூக்கைக் கிள்ளிப் போக்குக் காட்டினது போல.
மூக்கைப் பிடித்தால் அண்ணாந்து பார்க்க இடம் இல்லை. 19000
(அண்ணாந்து பார்க்கத் தெரியாது.)

மூக்கைப் பிடித்தால் சீவன் போகிறது.
(போகிற வேளை.)
மூக்கைப் பிடித்தால் வாயை ஆ என்னத் தெரியாது.
மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே.
(பனிபோலே.)
மூங்கில் பாயும் முரட்டுப் பெண்டாட்டியும்.
மூச்சுப் பிடித்தால் வயிறு நிரம்புமா? 19005

மூஞ்சியில் மூன்றாம் பேங்து வைத்தாற் போல.
மூஞ்சியிலே அடித்தால்போல் பேசுகிறான்.
மூஞ்சியிலே கரியைத் தீற்றுகிறான்.
மூஞ்சியைக் காட்டுகிறான்.
மூஞ்சியைப் பார், முகத்தைப்பார். 19010

மூஞ்சையப்பன் முகத்தைப் பார்.
மூட்டை அளக்கிறான்.
மூட்டைக்காரச் சுவாமி.
மூட்டைக்காரனுக்கு முழங்காலிலே புத்தி.
மூட்டை தூக்கி முத்தையன். 19015

மூட்டைப்பூச்சி உதிரத்தைச் இரசிக்கிறதைப்போலக் குடிப்பதா?
மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தலாமா?
மூடர்கள் சேர்க்கையில் தப்பாமல் கெடுதி வரும்.
மூடர் கூட்டுறவு முழுதும் அபாயம்.
மூடர் முன்பு மூர்க்கம் பேசாதே. 19020

மூடருக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு.
மூடரோடு ஆடிய நட்பு. கடுவழியில் கட்டை ஊடாடிய கால்.
மூடன் உறவிலும் விவேகி பகை நலம்.
மூடன் சண்டை மூட்டுப் பிரிக்கும்; மோர்க்கடன் வீட்டைத் தேடும்.
மூடன் போல வாயாடுகிறதா? 19025

மூடனாய் இருக்கிற பிள்ளையினாலே எப்போதும் நஷ்டமே வரும்
மூடனுக்குக் கோபம் மூக்கின் மேல்,

மூடனுடைய பங்கு தரித்திரமும் இகழ்ச்சியும்.
மூடிக் கொண்டிருந்தால் கமுக்கம்; திறந்தால் வெட்ட வெளி.
மூடி மூடிப்போகிறவன் ஓடி ஓடி மாப்பிள்ளை பிடிப்பான். 19030
(மூடி முக்காட்டுக்குள்ளே போகிறவள், மாப்பிள்ளை கொள்வாள்.)

மூடிய முத்து உலகம் பெறும்.
(மூவுலகும் விலை பெறும்.)
மூடி வைத்த புண் ஆறாது.
மூடிவைத்தாலும் முணுமுணு என்னும்; தைத்து வைத்தாலும் டம் டம் என்னும்.
மூடின உடைமை மூன்று லோகம் பெறும்; மூடாத உடைமை முக்கால் காசும் பெறாது.
மூடு மந்திரம். 19035

மூடு முக்காட்டுக்குள்ளே போகிறவள்தான் ஓடி ஓடி மாப்பிள்ளை கொள்ளுகிறது.
மூண்ணாம் முறை பகர்த்தும்போழ் சமுத்ரம் மூத்ரமாகுன்னு.
(மூன்றாம் முறை எழுதும் போது சமுத்திரம் மூத்திரம் ஆகிவிடும். மலையாளப் பழமொழி.)
மூத்த குமரிக்கு முதுகிலே குழந்தை.
மூத்தது மோழை; இளையது காளை.
மூத்த பெண்ணோ, நாத்தனாரோ? 19040

மூத்தவள் போகும் போது அழகு; இளையவள் வரும்போது அழகு.
(மூத்தவளிடம் மூதேவி, இளையாவளிடம் லக்ஷ்மி.)
மூத்தவருக்குப் பிறகு இளையவருக்கு முறையா?
மூத்தாள் சருகு அரிக்க, இளையாள் அநுபவிக்கிறாள்.
மூத்தாள் பதிவிரதை என்றால் இளையாள் அவிசாரியா?
(யார்?)
மூத்தாள் பெண் வாழ்வும் முழங்கையில் பட்ட சுகமும். 19045

மூத்தாள் வாழ்வு முழங்கையில் இடித்த இடம் போல இருக்கும்.
மூத்தாளும் முட்டுக்கு உதவுவாள்.
மூத்தாளே வாடி, முட்டிக் கொண்டு சாவோம்; இளையாளே வாடி மலையாளம் போவோம்.
மூத்தாளை விட்டு இளையாளைப் பட்டம் கட்டின கதை.
மூத்திரக் குழியில் தீர்த்தம் ஆடுகிறதா? 19050

மூத்திரத்தை நம்பிக் கட்டுச்சாதத்தை அவிழ்த்தானாம்.
மூத்திரம் பெய்வதற்குள் முந்நூற்றெட்டுக் குணம்.
(முப்பத்தெட்டு.)

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக்காயும் முன் கசக்கும்;
பின் தித்திக்கும்.
(முது நெல்லிக்காயும். முன் கசக்கும்; பின் இனிக்கும்.)
மூத்தோர் வார்த்தையைத் தடுக்கிறதா? 19055
(தட்டுகிறதா?)

மூதேவிக்கு முகூர்த்தம் வைத்தால் முப்பது நாழிகையும் ராகு காலம்
மூதேவி. மூதேவி. முகம் கழுவா மூதேவி.
மூதேவி வாழும் இடத்தில் சீதேவி வாழ்வாளா?
மூப்பிலும் தருமம் செய்ய முயற்சி செய்.
மூப்பு ஏன் பிடிப்பது? மூதேவி வாசத்துக்கு அடையாளம். 19(60

மூப்புக்குச் சோறும் முறத்துக்குச் சாணியும்.
மூர்க்கம் உள்ள ராஜாவும் மூட மந்திரியும் அழிவார்கள்.
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்.
(உகப்பர்.)
மூர்க்கரோடு இணங்கினால் ஏற்க வேணும் அபகீர்த்தி.
மூர்க்கன் முகத்தில் மூதேவி குடி இருப்பாள். 19065

மூர்க்கனுக்கு முதல்.
மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.
மூர்க்கனும் முதலையும் சரி.
மூர்க்கனைச் சேர்ந்தவன் வாழான்; மூடனைச் சேர்ந்தவன்
படியான்.
மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது. 19070

மூலக் காற்றுப் புழு விழும்.
மூலத்துப் பெண் மாமியார் மூலையிலே.
(மூக்கிலே.)
மூலவருக்கே மொந்தைத் தண்ணீர் இல்லை என்றால் ஆலயம்
எல்லாம் அபிஷேகமாம்.
மூலிகை அறுத்தால் மூன்று வருஷம் ஆளலாம்.
(அறிந்தால்.)
மூலையில் இருப்பவரை முற்றத்தில் வைத்தது போல. 19075

மூலையில் திட்டுகிறவனை முற்றத்தில் இழுத்த கதை.
மூலையிலே சுந்தரம், ஓதுகிறானடி மந்திரம்.
மூலை வீட்டிலே முட்டை இடுகிறான்.

மூளைந்து கூடினால் மூளியும் பெண் ஆவாள்.
மூளிச் சட்டி ஆனாலும் கொழுக்கட்டை வேக வேண்டும். 19080
(வேகிறது ஒன்று.)

மூளி நாய்க்குப் பட்டது மிச்சம்
மூன்றாம் ஈற்று மாட்டுக்கு முதுகு எல்லாம் பால்.
மூன்றாம் கட்டு அவிழ்த்தால் தெரியும்.
மூன்றாம் பேஸ்து வைத்தவன் மூஞ்சி மாதிரி.
மூன்றாம் மாதத்தில் முறிகிழங்கு ஆகும்; நாலாவது மாதத்தில் நார்க் கிழங்கு ஆகும். 19085

மூன்றாம் மாதம் முறியல் கிழங்கு.
(பனை.)
மூன்றாம் வயசில் மூலையில இருக்கிற வார்த்தை எல்லாம் வரும்.
மூன்றாவது மாதத்தில் முறிகிழங்கு ஆகும்; நாலாவது மாதத்தில் நார்க்கிழங்கு ஆகும்.
(பனை.)
மூன்றாவது முதுகு எல்லாம் பால்.
மூன்று அடி அடித்து முள் உடைந்தது போல. 19090

மூன்று அடியும் அடித்துப் போர் மேலேயும் போட்டாச்சுது.
மூன்று ஐப்பது வாழ்வானா?
மூன்றுக்கு ஒன்று முதலுக்கு நாலும்.
(முதலுக்கு மூன்று.)
மூன்று காசுக் குதிரை. அறுகாசு வைக்கோல் தின்கிறதாம்.
மூன்றுகுசினிக்காரர்கூடிச் சூப்பைக் கெடுத்தாற் போல. 19095
(குசினிக்காரன்-சமையற்காரன்.)

மூன்று தலைமுறையும் முட்டாள்.
மூன்று பல்லும் போனவருக்கு முறுக்குக் கடையில் என்ன வேலை?
மூன்று பிடித்து எண்ணும் பேர் வழி.
(முணு.)
மூன்று பேர் சேர்ந்தால் மோசம்; நாலு பேர் சேர்ந்தால் நாசம்.
மூன்று பேர் வழிக்குத் துணை; இரண்டு பேர் பிணையல் மாடு; ஒருவன் போனால் பரதேசி. 19100

மூன்று பொருளையும் தேடு; முதிர் வயதில் ஊன்று கோல் ஆகும்.
மூன்று மாசத்துக்கு ஒரு மாரி பெய்தால் ஒருபோகம் விளையும்.
மூன்று மாசத்துக்கு முன்னே பல் போனவனுக்கு முறுக்குக் கடையில் என்ன வேலை?

மூன்றுமுடி கழுத்திலே; முப்பது இலை தெருவிலே.
மூன்று முடிச்சுக் கழுத்தில் விழட்டும்; முப்பது இலை குப்பையில் விழட்டும். 19105

மூன்று முழமும் ஒரு சுற்று; முப்பது முழமும் ஒரு சுற்று.
மூன்று லோகமும் பூசை கொண்ட முழுச்சாமியார்.
மூன்று வயசில் மூலையில் இருப்பது எல்லாம் வரும்.
மூன்று வீட்டுக்கு முக்காலி; நாலு வீட்டுக்கு நாற்காலி.
மூன்றே முக்கால் நாழிகைக்குள் முத்து மழை பெய்தது; வாரி எடுக்கு முன்னே மண் மாரி பெய்தது. 19110
(வாரி எடுக்கு முன்னே மண் மாரியாய்ப் போயிற்று.)

## மெ

மெச்சி எச்சில் இலை போட்டு மீந்ததை மடியில் கட்டுவார்களா?
மெச்சிக் கொள்ளுகிறதற்கு எச்சிலை எடுக்கிறது.
மெட்டி போடுவதில் என்ன இருக்கிறது? தட்டி நடப்பதில் இருக்கிறது.
மெத்த அத்து மிஞ்சின பேச்சுக்காரன்.
மெத்தப் படித்தவருக்குச் சோறு வெல்லம். 19115

மெத்தப் படித்தவன் சித்தம் சரியில்லை.
மெத்தப் படித்தவன் பைத்தியக்காரன்.
மெத்தப் பரிவாம் உள்ளே எரிவாம்.
மெத்தப் புடைவை மெத்தக் குளிர்.
மெத்தை நேர்த்தி, தலையணை பீற்றல். 19120

மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு.
மெதுவாய்ச் சாப்பிட்டால் அதிகம் கொள்ளும்.
மெய் ஆனால் வைத்துக் கொள்; பொய் ஆனால் விட்டு விடு.
மெய் இருந்து விழிக்குது; பொய் இருந்து பொரிக்குது.
மெய் என்று இருந்தேன், விழித்தேன் கனவாக. 19125

மெய் ஒழுக்கத்தார்களுக்கு மேன்மை இல்லை ஒரு காலும்,
மெய்க்கும் பொய்க்கும் விரற்கடை தூரம்,
மெய் கிடந்து மெலியுதாம்; பொய் கிடந்து பொலியுதாம்.
மெய் கொண்டு விழிக்கிறது; பொய் கொண்டு புரிகிறது.
மெய் சொல்லிக் கெட்டவனும் இல்லை; பொய் சொல்லி வாழ்ந்தவனும் இல்லை. 19130

மெம் சொல்லி வாழாதவன் பொய் சொல்லி வாழ்வானா;
மெய்ஞானம் உடையாருக்கு அஞ்ஞானம் இல்லை.
மெய்த் தொழில் என்றும் மெய் பயக்கும்.
(மேன்மை.)
மெய் தவிக்கும்? பொய் புலம்பும்.
மெய் நின்று விழிக்கிறது; பொய் நின்று கூத்தாடுகிறது. 19135
(பொரிகிறது.)

மெய்ம்மை சாற்ற வையம் ஏற்றும்.
மெய் மூன்றாம் பிறை; பொய் பூரண சந்திரன்.
மெய்யது நன்றி இடும்.
மெய்யனுக்கு ஐயம் இல்லை: பொய்யனுக்கு லாபம் இல்லை.
மெய்யான சத்தியன் வேதவாசகன். 19140

மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால் பொய் போலும்மே
பொய் போலும்மே.
மெய்யைப் பொய் அழிக்குமா?
மெல்லச் சாப்பிட்டால் கொள்ளை போமா?
மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியப் பாயும்.
(உருவச் செல்லும்.)
மெல்லவும் மாட்டாமல் சொல்லவும் மாட்டாமல்
விழிக்கிறான். 19145

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழிக்கிறான்.
மெல்லிசு நோனா எல்லிட்டுக் கூத்தியாள்.
மெல்லியலாள் தோள் சேர்.
மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிச் செல்லும்.
(கல்லிலும் குழியச்செல்லும்.)
மெலட்டூர் மினுக்கு; திருவாரூர் திப்பிசம். 19150

மெலிந்தவனுக்கு மெத்தப் பலன்; மேனி மினுக்கிட்டவனுக்கு
மெத்தக் கசம்.
(மெத்தச் சுகம்.)
மெனுக்கிலே அலைக்கழிவு.
மெழுகாய் உருகுகிறான்.
மெழுகாலே ஆகிலும் வெள்ளைத் தலை வேணும்.
மெழுகின வீட்டில் நாய் புகுந்தது போல. 19155

மெழுகுப் பிள்ளையார் போலத் தொளுவு தொளுவு என்று
இருக்கிறது.
மெள்ள இருந்துதான் தள்ளவேணும் பகையை.
மெள்ள மெள்ள வந்தாளாம்; கட்டில் மெத்தை போட்டாளாம்.
மெள்ள மெள்ள வந்தானாம்; மிளகு என்றானாம்;
சுக்கு என்றானாம்.
(மெள்ள மெள்ள வந்தான், மிளகு சுக்கு என்றான்.)
மெனக் கெட்ட பூதி திணைக்குத்தப் போனாளாம். 19160

## மே

மேகத்தில் பறக்கிற குதிரைக்கு மேடு ஏது? பள்ளம் ஏது?
மேட்டிமைக்காரருக்கு எதிர்த்து நிற்க வேண்டும்; மெத்தனக்காரருக்குக் கிருபை அளிக்க வேண்டும்.
மேட்டில் ஏறினால் முத்தாச்சி; பள்ளத்தில் இறங்கினால் அத்தாச்சி.
மேட்டிலே போனால் தங்கச்சியும் பள்ளத்திலே வந்தால் பெண்டாட்டியுமா?
மேட்டுக்காகப் பயமாம்; வீதி வழியில் திகிலாம். 19165

மேட்டு நிலத்தை உழுதவனும் கெட்டான்; மேட்டுப் பிள்ளையைப் பெற்றவனும் கேட்டான்.
மேட்டு நிலத்தை உழுதவனும் கெட்டான்; மேல் மினுக்கித் திரிந்தவனும் கெட்டான்.
மேட்டுப் பயிரை உழுதவனும் கெட்டான்; மேட்டுப் பயலைத் தொட்டவனும் கெட்டான்.
(மேட்டுப் பயிரை இட்டவனும்.)
மேட்டுப்பாளையத்துப் பருப்பு நீலகிரியில் வேகாது.
மேடும் சரி, பள்ளமும் சரியா? 19170

மேய்க்காமல் கெட்டது மாடு; பாய்ச்சாமல் கெட்டது பயிர்.
மேய்க்காலில் ஊட்டினால் பல்லாயில் பால் ஏது?
மேய்க்கும் மேய்ப்பானை வியக்கும் வாயன்.
மேய்கிற கழுதையைக் கூவுகிற கழுதை கெடுத்ததாம்.
(கூவுகிற மாடு.)
மேய்கிற கோழியின் மூக்கை உடைத்தாற்போல. 19175

மேய்கிற மாட்டின் கொம்பிலே புல்லைக் கட்ட வேணுமா?
மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்ததாம்.
மேய்கிற மாடு நக்குகிற மாட்டை இழுத்துக்கொண்டு போயிற்றாம்;
மேய்கிற நாளைக்குப் பால் பீச்சிக் குடித்தது லாபம்.
மேய்த்தால் கழுதை மேய்ப்பேன்; இல்லாவிட்டால் பரதேசம் போவேன். 19180

மேய்த்தால் மதனியை மேய்ப்பேன்; இல்லையென்றால் பரதேசம் போவேன்,
(மைத்துனியை.)
மேய்த்துத் தெளியாத மாடு தேய்த்துத் தெளியும்.
மேய்ப்பவன் போனால் ஆடு தொழுவத்தில் இருக்குமா?
(மேய்ப்பனார்.)
மேய்ப்பான் கண்ணிலும் உடையவன் பிடரி நலம்.
மேய்ப்புப் பாதி; தேய்ப்புப் பாதி. 19185

மேயப் போகிற மாட்டுக்குக் கொம்பிலே புல் கட்ட முடியுமா?
(புல் கட்டிக் கொண்டா போகிறது?)
மேயப் போகிற மாடு கொம்பிலே புல்லைக் கட்டிக் கொண்டு போகிறதா?
மேருவை அடைந்த காகமும் அமிருதம் உண்ணும்.
மேருவைச் சார்ந்த காகமும் பொன் நிறமாம்.
(அடைந்த.)
மேல் உதடு இல்லாதவன் வேய்ங்குழலுக்கு அச்சாரம் கேட்டது போல். 19190

மேல் காணும் இனிமையால் காலுக்கு நோய் காட்டில் கலுழ்ந்தான்.
மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும்.
மேல் மினுக்கியைக் கட்டினவனும் மேட்டுப் புன்செய்யை உழுதவனும் கெட்டான்.
மேலே பார்த்தால் சிங்காரம்; உள்ளே பார்த்தால் ஓக்காளம்.
மேலே பார்த்தால் மினுக்குத்தான்; உள்ளே பார்த்தால் தொளுக்குத்தான். 19195

மேலைக்கு இருப்பாரும் இல்லை; கூலிக்கு அறுப்பாரும் இல்லை.
(இறுப்பாரும்.)
மேலைக்கு உழுவார் கூழுக்கு அழுவார்.
(கூலிக்கு.)
மேலைக்குத் தாலி கட்டுகிறேன்; கழுத்தே சுகமாயிரு என்றால் போல.
(மேலைக்கு வாழ்க்கைப்படுகிறேன்.)
மேலோர் அறிவு கீழோர்க்குவருமா?
மேழிக்கு உடையவன் வேளாளனே 19200

மேழிச் செல்வம் கோழை படாது.
(படுமா?)
மேளகாரனுக்கு ஏற்ற மத்தளக் கட்டை.

மேளம் கொட்டும் மாமியாருக்குத் தாளம் போடும் மருமகள்.
மேற்குப் பார்த்த மாளிகையை விடத் தெற்குப் பார்த்த
குடிசை மேல்.
மேற்கே மழை பெய்கிறதென்றால் ஆற்றில்
இறங்கலாமா? 19205

மேற்கே மழை பெய்தால் கிழக்கே வெள்ளம் வரும்.
மேன் மக்கள் சொல் கேள்.
மேன்மையின் மேன்மையன் மேலாம் பதவியன்.
மேனா மினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்; மேட்டுலே
பயிர் இட்டவனும் கெட்டான்.
(மேண்.)
மேனா மினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்; கூட்டுப் 19210
பயிரை உழுதவனும் கெட்டான்.
மேனி எல்லாம் சுட்டாலும் விபசாரம் செய்கிறவள் விடாள்.
மேனி ஒறுப்பே ஞானி நினைப்பு.
(எலும்பே.)

## மை

மை இட்ட கண் கை விட்டு அழும்.
மை இட்ட கண்ணிலே மை இடு; மாமியார் பிட்டத்திலே கை இடு.
மை கரையாமல் அழுபவள் சமர்த்து. 19215

மை கரையாம முதுகு ஆட்டு.
மைத்துனன் உண்டானால் மலை ஏறிப் பிழைக்கலாம்.
(துணை இருந்தால்.)
மைத்துனனைவிட உறவு இல்லை; மயிரைவிடக் கறுப்பு இல்லை.
மை மை சுந்தரி, கதவை ஒஞ்சரி.
மையலை ஊட்டும் மாதரின் மகிமை. 19220

மைலங்கி, மைலங்கி, பூ எங்கே வைத்தாய்? வாடாதே வதங்காதே அடுப்பிலே வைத்தேன்.
மை விழியார் மனை அகல்.
மை விழியாள்தன்னைச் கைவிட்டு ஒழுகு.
மைனர் ஜாலி, மணிபர்ஸ் காலி.
(மணி பர்ஸ்-Money Paurse.)

## மொ

மொச்சைக் கொட்டை தின்றாலும் பொச்செரிப்பு; மோர் விட்டுச் சாப்பிட்டாலும் பொச்செரிப்பு. 19225

மொட்டு மொட்டு என்று விழித்திருந்தான்.
மொட்டை அடித்து விட்டார்.
மொட்டை இட்டால் கட்டை இடும்.
(குழந்தைக்கு.)
மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன்.
மொட்டைச்சிக்கு முழங்காலில் பிள்ளை. 19230

மொட்டைச்சி சொருக்கை நினைத்து அழுதது போல.
மொட்டைச்சி முண்டைக்குக் கல்யாணம் ஆகி அவள் திட்டுத் திடுக்கென்று தெருக்கோலம் போனாளாம்.
மொட்டைத் தலைக்கு ஒரு கொட்டுக் கூடை; மோழைத் தலைக்கு ஒரு நாற்றுக் கூடை.
(பொட்டுக் கூடை.)
மொட்டைத் தலைக்கு ஒரு பட்டுக் குல்லாய்.
மொட்டைத் தலைக்குச் சந்தனம் வந்தால் உள்ள மயிரைக் கொண்டுதான் சிலுப்ப வேண்டும். 19235

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டது போல.
(மொட்டந் தலைக்கும்.)
மொட்டைத் தலைச்சிக்குக் கூந்தல் அழகி என்று பெயர் வைத்தாற் போல.
மொட்டைத் தலையன் சன்னதம் வந்தால் உள்ள மயிரைக் கொண்டுதான் சிலுப்ப வேண்டும்.
மொட்டைத் தலையன் போருக்கு அஞ்சான்.
மொட்டைத் தலையன் முழு மோசக்காரன். 19240

மொட்டைத தலையில் தண்ணீர் விட்டாற் போல.
மொட்டைத் தலையில் பட்டம் கட்டி ஆள வந்தானோ?
(பட்டாணம் கட்டி.)

மொட்டைத் தலையில் பேய் வருமா?
மொட்டைத் தலையில் பேன் சேருமா?
(பேன் போல.)
மொட்டைத் தலையும் குடுமித் தலையுமாய்ப் பிணைக்கிறது. 19245

மொட்டைத்தாதன் ஊரிலே மொட்டையனைத் தேடியது போல.
மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தால் எடுப்பார் இல்லை, பிடிப்பார் இல்லை.
மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான்.
மொட்டைத்தாளம் குட்டையில் விழுந்தாற் போலே.
மொட்டை மரத்திலே முந்நூறு காக்காய்; தட்டிப் பார்த்தால் ஒன்றும் இல்லை. 19250

மொட்டைமாடு தலையைக் கழற்றிக் கொண்டது போல.
மொட்டை மாடும் சரி, கொம்பு மாடும் சரி.
மொண்டி மாடு வந்துதான் பட்டி அடைக்க வேண்டும்.
மொண்டு ஆளுகிற வீட்டில் கொண்டு ஆண்டா முடியும்?
(நிறையும்?)
மொண்டு தின்கிற வீட்டில் கொண்டு தின்று முடியுமா? 19255

மொட்டைச் சோற்றுக்கு மோளம் அடிக்கிறான்.
(மேளம்,)
மொந்தைத் தண்ணீரில் வீடு வெந்து போனால் மிடாத்தண்ணீருக்கு எப்படி?
மொரோ என்றவன் கழுத்தில் லிங்கத்தைக் கட்டினானாம்.
(முறையோ.)
மொழி தப்பினவன் வழி தப்பினவன்.
மொழி தவறாதவன் வழி தவறாதவன். 19260

மொழியது அற மொழி.
(மொழி வழி.)
மொழிவது மறுக்கின் அழிவது தருமம்.

# மோ

மோகத்துக்கு அவன் பார்த்து இட்டதே பிக்ஷை.
மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள்.
மோகனக்கல் ஆனாலும் பளு ஏறினால் உடையாதா? 19265

மோசம் செய்வோன் நாசம் அடைவான்.
மோசம் நாசம் கம்பளி வேஷம்.
மோசம் பாய் போட்டுத் தூங்குகிறது.
மோட்டை போனால் கோட்டை போகும்.
(மோட்டை எலிவளை.)
மோடு பேயும் முண்டைக்குப் புத்தி வரவில்லை. 19270

மோதிரப் பணத்துக்கு முத்தண்ணா.
மோந்த பூவைச் சூடார்; சூடிய பூவை மோவார்.
மோந்தாற் போல முகத்தைக் கடிக்கிறது.
மோப்பம் அறியா நாயும் ஏப்பம் இல்லா விருந்தும் பயன் இல்லை.
மோப்பம் பிடித்த நாயும் தூக்கம் கெட்ட நாயும் சும்மா இரா. 19275

மோர்க்கடன் முகட்டைத் தொடும்.
மோர் சுடுகிறது என்று ஊதிக் குடிக்கிறது போல.
மோர் மோரோடே; நீர் நீரோடே.
மோர் விற்ற காசு மூன்று நாள் வரும். 19280

மோருக்குப் போகிறவருக்கு முட்டி பிறகாலேயோ?
மோருக்குப் போய் மொந்தையை ஒளிப்பானேன்?
(வந்து ஒலிக்கிறதா?)
மோருக்கும் முலைப்பாலுக்கும் தோஷம் இல்லை.
மோரைத் தெளித்தாலும் கல்யாணந்தான்; மூத்திரத்தைத் தெளித்தாலும் கல்யாணந்தான்.
மோரோ என்பவன் கழுத்தில் லிங்கம் கட்டினது போல. 19285

மௌனம் என்பது ஞான வரம்பு.
மௌனம் ஞானம்.
மோக்ஷத்துக்கு அவன் பார்த்து இட்டதே பிக்ஷை.

## மௌ

மௌனம் உடையாருக்கு வாராது சண்டை.
மௌனம் கலக நாசம். 19290

மௌனம் கலகம் நாஸ்தி.
மௌனம் சம்மதத்துக்கு அடையாளம்.
மௌனம் சர்வார்த்த சாதகம்.
மௌனம் மலையைச் சாதிக்கும்.
மௌனி குடியைக் கெடுப்பான். 19295
(கெடுப்பாள்.)

## ய

யதா தேவதா ததா தாஸிய.
யதார்த்தமே உத்தமம்.
யதார்த்தவாதி வெகுஜன விரோதி.
யதாராஜா ததா ப்ரஜா.
யதாஸ்தானம் பிரதிஷ்டாபயாமி. 19300

யமன் ஒருவரைக் கொல்வான்; ஏற்றம் மூவரைக் கொல்லும்.
யமன் கடாவை ஏரில் பூட்டினது போல.
யமன் கையில் அகப்பட்ட உயிர் போல.
யமன் பிள்ளையைப் பேய் அடிக்குமா?
யமன் வாயில் அகப்பட்ட உயிர் திரும்பி வராது. 19305

யமனுக்கு ஏழு பிள்ளை கொடுக்க மாட்டார்கள்.
யமனைக் கண்ட உயிர் போல.

## யா

யாசகம் புருஷ லக்ஷணம்.
யாதும் ஊரே; யாவரும் கேளிர்.
(புறநானூறு.)
யார் குடி கெட்டாலும் நீருடி மிளகு சாறு. 19310

யாரால் கெட்டேன்? நோரால் கெட்டேன்.
(நோரு - வாய்.)
யாவையும் பாடிக் கோவை பாடு.
யானும் அறியேன்; அவளும் பொய் சொல்லாள்.

## யு

யுகத்திற்கு யுகம் வித்தியாசம் உண்டு.
யுகம் முடிய மழை பெய்தாலும் ஓட்டாங் கிளிஞ்சல்
கரையுமா? 19315
(பயிராகுமா?)

## யோ

யோக்கியர் வருகிறார்; செம்பை எடுத்து உள்ளே வை.
யோக்கியவான் பாக்கியம் பிள்ளையிலே தெரியும்.
யோக்கியனுக்குப் பயப்படாவிட்டாலும் போக்கிரிக்குப் பயப்பட வேண்டும்.
யோக்கியா, யோக்கியா, வீட்டைப் பார்த்துக் கொள் என்றால், என் கை திருட்டுக் கை. இழுத்துச் சாத்திக்கொள் என்பானாம்.
யோகக்காரன் பல்லக்கு ஏறுவான். 19320

யோசனை நல்லதுதான்; வண்டிதான் சாடை சப்பட்டை.

## ர

ரங்கமே ஸ்தலம், அம்பமே ஜலம்.
ரங்கனே தெய்வம், பொங்கலே பிரசாதம், அம்பமே தீர்த்தம்.
ரசவாதிக்கு ஏது பஞ்சம்?
ரத்த பாசம் விடாது. 19325

ரதிக்கு மன்மதன் வாய்த்தது போல.
ரவி அறியாததைக் கவி அறிவான்.
ரக்ஷை உள்ள இடத்தில் சிக்ஷை இருக்கும்.

# ரா

ராகு கொடுத்தாலும் கொடுப்பான்; கெடுத்தாலும் கெடுப்பான்.

ராகு தசையில் வாழ்ந்தவனும் இல்லை; ராஜா தசையில் கெட்டவனும் இல்லை. 19330

(ராஜா - குரு.)

ராகுவைப் போல் கொடுப்பவன் இல்லை; கேதுவைப் போல் கெடுப்பவன் இல்லை.

ராங்கி மிஞ்சி ரூம் தேடுகிறது; ஆக்கிப் போட ஆள் தேடுகிறது.

ராங்கி மொச்சைக் கொட்டை, இரா மூன்று நாளாய் ஊறின கொட்டை, பொழுது விடிந்து பிதுக்கிப் பார்த்தால் தோல் கூட வராத கொட்டை.

ராட்டினம் வருகிறது; வண்டியை விலக்கு.

ராத்திரி செத்தால் எண்ணெய்க்கு விதி இல்லை; பகலில் செத்தால் வாய்க்கரிசிக்கு வழி இல்லை. 19335

ராத்திரி படிக்கிறது ராமாயணம்; விடிந்து இடிக்கிறது பெருமாள் கோயில்.

ராத்திரி பிறந்தவர்களும் உதவாது; பகலில் பிறந்தவர்களும் உதவாது.

ராத்திரி முழுதும் ராமாயணம் கேட்டுச் சீதைக்கு ராமன் என்ன என்றது போல,

ராபணா என்றாளாம்

ராம பாணம் பட்டு உருவினாற் போல. 19340

ராம பாணமே பாணம்; அது எங்கே போச்சுதோ காணோம்.

ராமர் இருக்கிற இடம் அயோத்தி.

ராம ராஜ்யம்.

ராமரைப் போல ராஜா இருந்தால் அநுமானைப் போலச் சேவகன் இருப்பான்.

(இருக்க வேண்டும்.)

ராம லக்ஷ்மணரைப் போல இசைந்திருக்கிறது. 19345

ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?

ராமன் மங்கையோடு இணங்கியது அவம்.

ராமன் வாக்குக்கு இரண்டு உண்டோ?
ராமனைப் போல ராஜா இருந்தால் அநுமானைப் போலச் சேவகனும் இருப்பான்.
ராமஸ்வாமி சகாயம், வயிறு வளர்ப்பது உபாயம் 19350

ராமாமிர்தமே ஜீவனம் என்று பட்டினியாய் இருக்கலாமா?
ராமாயணம் ரங்கு; பாரதம் பொங்கு.
ராமாயணம் வண்ட புராணம்; பாரதம் பண்ட புராணம்.
ராமேசுவரத்துக்குப் போகும்போது பாம்பனாறு குறுக்கிட்டாற் போல.
(போக.)
ராமேசுவரத்துக்கும் காசிக்கும் போயும் பிடித்த சனீசுவரன் தொலையவில்லை. 19355

ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் பின்னோடே.
ராயர் இட்டது சட்டளை.
ராயர் ஏறின குதிரைக்கு மேடு ஏது? பள்ளம் ஏது?
ராயர் தர்பார்.
ராவண சந்நியாசி 19360

ராவணன் குடிக்கு மகோதரன் போலும்; சுயோதனன் குடிக்குச் சகுனி போலும்.
(சுயோதனன் துரியோதனன்.)
ராவுத்தர் தவிட்டுக்கு ஆலாய்ப் பறக்கிறாராம்; குதிரை கோதுமை ரொட்டிக்குப் பறக்கிறதாம்.
ராவுத்தருக்கு மேற்கே பிரயாணம்; குதிரைக்குக் கிழக்கே பிரயாணம்.
(ராவுத்தருக்குக் கிழக்கே பயணம்...மேற்கே.)
ராவுத்தனே சினந்திருக்கும் போது குதிரை கோதுமை ரொட்டிக்கு அழுததாம்.
ராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியையும் பறித்ததாம் குதிரை. 19365

ராஜகீரியைக் காவுகிறது போல.
ராஜ சமுகத்துக்கு எலுமிச்சம் பழம் போல.
(சிறப்பு.)
ராஜபத்தினி பதிவிரதை.
ராஜப் பயலோடே கூடித் தாதப் பயலும் கெட்டானாம்.
(ராஜாப் பயல்.)
ராஜ வரும்படியோ, நஞ்சை வரும்படியோ? 19370

ராஜா ஆனாலும் தன் தாய்க்கு மகனே.
ராஜா ஆனைமேல் வருகிறார் என்று வீட்டுக் கூரைமேல் ஏறினானாம்.
ராஜா இருக்கப் பட்டணம் அழியுமா?
ராஜா எவ்வழி, குடிகளும் அவ்வழி.
ராஜா ஏறிய குதிரைக்கு மேடு ஏது? பள்ளம் ஏது? 19375

ராஜா ஏறிய குதிரையைப் போல.
ராஜா கடன்படப் புழுக்கை காடித்தண்ணீர் குடித்தது போல.
ராஜா கேட்கக் கேட்க இன்னொன்று புறப்படுகிறது என்றானாம்.
ராஜா செங்கோல் தன் நாடு வரையில்.
ராஜா பெண்ணுக்கும் எனக்கும் பாதிக் கல்யாணம் ஆகிவிட்டது என்றானாம். 19380

ராஜா பெரியவனோ? போக்கிரி பெரியவனோ?
ராஜா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதான். (பெண்சாதி.)
ராஜா மெச்சினவள் ரம்பை.
ராஜா ராஷ்ட கிருதம் பாபம்.
ராஜா வந்தது ஆயிரம் குயனுக்குச் சமானம். 19385

ராஜாவின் பலம் இருந்தால் அஷ்டமத்துச் சனி என்ன செய்யும்? (ராஜா-குரு.)
ராஜா வீட்டுத் தோட்டத்தில் ரோஜாப்பூப் பூத்திருந்தால் பார்க்கலாமே தவிரப் பறிக்கலாமா?
ராஜா வீட்டு நாய் மாதிரி.
ராஜாவுக்குச் சாவு இல்லை.
ராஜாவுக்குச் செங்கோல்; சம்சாரிக்கு உழவு கோல். 19390
(சம்சாரி-உழவன்.)

ராஜாவும் பெண்ணும் கொடியும் கிட்ட இருக்கிறதைத் தழுவிக் கொள்ளும்.
ராஜாளியைக் கண்ட கொக்குப் போல.
ராஜீகம் தெய்விகம் எப்படியோ?
ராக்ஷசனுக்கும் ஒரு புரோகிதன் வேண்டும்.
ராக்ஷசனுக்கும் ஒரு புரோக்ஷஸன் உண்டு. 19395

## ரி

ரிஷி உடைமை இராத் தங்காதது போல.
ரிஷி கர்ப்பம் இராத் தங்காது.
ரிஷிப் பிண்டம் இராத் தங்காது.
ரிஷி மூலம் நதி மூலம்.

## ரு

ருசி கண்ட நாக்குச் சும்மா இராது. 19400

ருசி கண்ட பூனை அடுப்பங்கரை ஏறும்.
ருசி கண்ட பூனை உறி உறியாய்த் தாவுமாம்; வரிசை கண்ட மாப்பிள்ளை வந்து வந்து நிற்பானாம்.
(உறி உறியை.)
ருசி கண்ட பூனை உறியை எட்டி எட்டித்தாவுமாம்.
ருத்திராக்ஷப் பூனை
ருத்திராக்ஷப் பூனை உபதேசம் பண்ணினது போல. 19405

ருத்திராக்ஷப் பூனை ஒன்றும் தெரியாதது போல் இருக்கும்.

## ரூ

ரூபாய் அணாவில் இருக்கிறது உலகம்.

ரூபாய் என்றால் வயிறு நிறைந்து போகுமா?
(நிறையுமா?)

## ரெ

ரெங்கூனிலிருந்து வந்தவனைச் சிங்கப்பூரில் என் பேரனைப் பார்த்தாயா என்று கேட்டது போல.

ரெட்டி ஒச்சே முதல் எழுத்து. 19410

ரெட்டிபாளையத்திலிருந்து இரண்டு தடிக்கழுதைகள் வந்தன; அறுகம்புல்லை விட்டுக் கோரைப் புல்லைத் தின்றன.

ரெட்டியாரே, ரெட்டியாரே என்றால் கலப்பையைத் திட்டென்று போட்ட கதை.

ரெட்டியோ, மட்டியோ?

ரெயிலுக்கு ரூல் இல்லை; கழுதைக்குக் கடிவாளம் இல்லை.

## ல

லங்கணம் பரம ஔஷதம். 19415

லங்கிணி இலங்கைக்குக் காவல்.
லயம் கமலாலயந்தான்.
லவா லவா என்று அடித்துக் கொள்கிறான்.
(போல போல என்று.)
லஜ்ஜையை விட்டுக் கஜ்ஜையைக் கட்டு.
லக்ஷ்மி வரும்போது அழகு; மூதேவி போகும்போது அழகு. 19420

லக்ஷணம் அவலக்ஷணம் முகத்திலே.

## லா

லாட்டரி அடிக்கிறான்.
லாபம் காட்டுகிறவர்களைக் காட்டிலும் வனிதம் கசட்டுகிறவர்களுக்கே காரியம் கை கூடும்.

## லி

லிங்கத்திற்கு எண்ணெய் வழிய விட்டாற் போல.

## லோ

லோகாபி ராமம். 19425

லோகோ பின்ன ருசி.
லோபிக்கு இரு செலவு.
(இரட்டைச் செலவு.)
லோபிக்கு நானாவிதத்திலும் சேதம்.

## லௌ

லௌகிகம் வைதிகம் இரண்டும் வேண்டும். 19430

## வ

வக்கணைக் காரன் புளுகு வாசற்படி மட்டும்.
(வாயிற்படி மட்டும்.)
வக்கீலும் வைத்தியனும் வாசலில் நாய் கட்டி வைத்தாற் போல.
வக்குச் சிக்காய் மாட்டிக் கொள்கிறது.
வகுத்து அறியாமல் துணியாதே; படபடப்பாகச் செய்யாதே.
வகை அறிந்து செய்தால் வாதம் பலிக்கும். 19435

வகை தொகை இல்லாத பேச்சும் புகையிலை இல்லாத பாக்கும் வழவழா கொழ கொழா.
வகை மடிப்பிலே மாட்டிக் கொண்டது.
வங்கணக்காரன் புளுகு வாசற்படி மட்டும்.
வங்கத்துக்கு நிகர் வங்கம்; தங்கத்துக்கு நிகர் தங்கம்.
வங்கம் இறுகினால் மகாராஜன் ஆகலாம். 19440

வங்கம் கட்டினால் தங்கம்.
வங்கம் குத்தத் தங்கம் தேயுமா?
வங்கம் கெட்டால் பங்கம்.
வங்கம் தின்றால் தங்கம் ஆகும்.
வங்கரை கொங்கரையாய் மாட்டிக் கொள்கிறது. 19445

வங்காயக்காரனுக்கு வாய்க் கொழுப்புச் சீலையால் வழிகிறது.
வங்காளத்து நாய் சிங்காதனம் ஏற, வண்ணாரக் குடி நாய் வெள்ளாவி ஏறிற்றாம்.
வங்காளம் போனாலும் வாய்ச் சொல் ஒரு காசு; ஈழம் போனாலும் துடுப்பு ஒரு காசு.
வங்காளம் போனாலும் வாரியல் வாரியல்தான்.
(வாரியல்-துடைப்பம்.)
வங்காளம் போனாலும் விளக்குமாறு கால் பணம். 19450

வங்கிசம் வார்த்தைக்கு அஞ்சும்; புழுக்கை உதைக்கு அஞ்சும்.
(புழுக்கை உணவுக்கு அஞ்சும்.)
வங்கு நாயை வெறுத்தாற்போல் வெறுக்கவேண்டும்.
வங்கு பிடித்த நாய் வழியில் நின்றாற் போல.
வங்கை வைத்தால் தன் குடிக்கு அனர்த்தம்.
வச்சத்துக்கு மேலே வழி இல்லை; பிச்சைக்குப் போகச் சுரைக் குடுக்கை இல்லை. 19455

வச்ச நாபியிலே புழுத்த புழு.
வச்ச நாபியை உப்புப் பார்க்கலாமா?
வச்சிரம் அளந்த கையால் வைக்கோல் துரும்பு எடுக்கலாயிற்று.
வசனம் பண்ண உபாயம் காரணம்.
வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி என்றது போல. 19460

வஞ்சகம் இல்லாமல் வளர்ந்திருக்கிறான்.
வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்.
வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்.

வஞ்சகர் உறவை வழுவி விலகு.
வஞ்சகருக்கு என்ன நேசம் காட்டினாலும் நெஞ்சில் நேசம் கொள்ளார். 19465
(வாஞ்சை காட்டினாலும்.)

வஞ்சகருக்குப் பால் ஊட்டினாலும் நஞ்சாய் விடும்.
(பாலமுதும் நஞ்சு.)
வஞ்சனைக்கு முதற் பாதம்.
வஞ்சனை நெஞ்சை அடைக்கும்.
வஞ்சனை நெஞ்சைப் பிளக்கும்.
(வஞ்சகம்.)
வஞ்சனை வாழ்வைக் கெடுக்கும். 19470

வஞ்சித்து நெடுங்காலம் வாழ்தலினும் மரணம் அடைதலே நலம்.
வட்டம் சுற்றியும் வழிக்கு வரவேண்டும்.
வட்டம் சுற்றி வழியே வா.
வட்டி ஆசை முதலுக்குக் கேடு.
வட்டி ஆசை முதலைக் கெடுத்தது. 19475

வட்டி ஓட்டம் வாத ஓட்டத்திலும் அதிகம்.
(விழா ஓட்டத்திலும்.)
வட்டிக் காசு வாங்குகிற வடமலையானுக்குக் குட்டிக் கோவிந்தம்.
(வடமலையப்பனுக்கு.)
வட்டிக்கு ஆசைப்பட்டு முதலை இழந்தான்.
வட்டிக்குக் கொடுத்த பணம் வாய்க்கரிசிக்கு உதவாது.
வட்டிக்கு வட்டி எதிர் வட்டியா? 19480

வட்டி குட்டி போடும்.
வட்டி தூங்காது.
வட்டியும் முதலும் கண்டால் செட்டியார் சிரிக்காரா?
(சிரிப்பார் கொண்டால்.)
வட்டியை நம்பி முதலை இழப்பரோ?
வட்டிலுக்கு வழி வாய் வைத்த இடம். 19485

வட்டிலை வைத்து வறுக்கச் சொன்ன கதை.
வட்டி வாங்குகிற வடக்கு மலையானுக்குக் கோவிந்தம் போடடா கோவிந்தா.
வட்டிற் சோற்றைப் பங்கு இட்டாலும் வாழ்வைப் பங்கிட மாட்டார்கள்.
வட்டுக் கோட்டைக்குப் போக வழி எது என்றால், துட்டுக்கு

எட்டுக் கொட்டைப் பாக்கு என்பதா?
(யாழ்ப்பாண வழக்கு)
வட்டுவத்திலே சொட்டு விழுந்தால் பாக்கு வெட்டிக்கு வேறே; கரண்டகத்துக்கு வேறேயா? 18490

வட்டுவத்தின் மேலே சொட்டுப் போட்டால் வட்டுவத்துக்கு மாத்திரமா படும்?
வடகத்தியானையும் வயிற்று வலியையும் நம்பல் ஆகாது.
வடக்குப்பார்த்த மச்சு வீட்டைப் பார்க்கிலும் தெற்குப் பார்த்த தெருத் திண்ணை நல்லது.
(குச்சு வீடு. திண்ணை வீடு.)
வடக்கே கறுத்தால் மழை வரும்.
(பெய்யும்.)
வடக்கே சாய்ந்தால் வரப்பெல்லாம் நெல். 19495
(பிறை.)

வடக்கே சாய்ந்தால் வரபெல்லாம் நெல்; தெற்கே சாய்ந்தால் தெரு எல்லாம் வெட்டி.
(பஞ்சம். கார்த்திகைப் பிறை)
வடிக்கிறது நாழி, அகப்பை பதினாறு, நீயும் பிள்ளைத் தாய்ச்சி, நானும் வேலைக்காரன், பார்த்து வட்டித்துப் பழையது மீத்தடி.
வடி கட்டின முட்டாள்.
வடித்த கஞ்சி கொடுக்காத சிற்றப்பன் வாய்க்கால் கரைமட்டும் வழி வந்தானாம்.
வடித்த கஞ்சி வார்க்காத சிற்றப்பன் வழித்துக் கொண்டானாம் பணம் இட. 19500

வடித்தால் காணுமா? பொங்கினால் காணுமா?
வடித்து நிமிர்த்தி வாழைக்காய் உப்பேறி யார் வைத்திருக்கிறார்?
வடிவில் பெண், பட்டிக்காட்டு ஓணான்.
வடிவிலே மன்மதன் போல.
வடுகச்சி அம்மா வால் அம்மா. வாசலைப் பிடித்துக் கொண்டு தொங்கம்மா. 19505

வடுகச்சி காரியம் கடுகுச்சு. முடுகுச்சு.
(கடுகிச்சு முடுகிச்சு.)
வடுகத் துறட்டு மகாவில்லங்கம்.
வடுகத் துறடும் துலுக்க முரடும்.

வடுக வில்லங்கமாய் வந்து வாய்த்தது.
வடுகன் தமிழறியான்; வைக்கோலைக் கசு என்பான். 19510

வடுகனும் தமிழனும் கூட்டுப் பயிர் இட்ட கதை.
வடுகு கொழுத்தால் வறையோட்டுக்கும் ஆகாது.
வடுகு பொடுகாச்சு; வைக்கோற் போர் நெல் ஆச்சு.
வடையைத் தின்னச் சொன்னார்களா, துளையை எண்ணச் சொன்னார்களா?
வண்டப் பயலுக்கு ஏற்ற கண்டிப் பெண்சாதி. 19515
(கண்டப் பெண்சாதி.)

வண்டி அலங்காரமாம்; வலத்து மாடு சிங்காரமாம்.
வண்டிக்காரன், மாவுத்தன், ராவுத்தன், பனையேறி இவர்களுக்குப் பதவியில் ஏறியதும் அகங்காரம் வரும்.
வண்டிப் பாரம் பூமியிலே.
வண்டியில் ஓடம் ஏறும்; ஓடத்தில் வண்டி ஏறும்.
வண்டி வருகிறது; ராட்டினத்தை விலக்கு. 19520

வண்ணான் கெடுத்தது பாதி; வாதி கெடுத்தது பாதி.
(வண்ணான் பண்ணினது பாதி; வாதம் பண்ணினது பாதி.)
வண்ணான் கையில் சேலையைப் போட்டுக் கொக்கின் பின்னே போகிறதா?
(புடைவையைப் போட்டு.)
வண்ணான் சித்து வழியிலே.
வண்ணான் சொல் கேட்டு வீண்பழிக்கு ஆள் ஆனானே!
வண்ணான் துறைக் கல்லிலே வந்த பேர் எல்லாம் துவைக்கலாம். 19525

வண்ணான் தோய்க்கத் தண்ணீர் பாய்ச்சினால் கல்யாணத்துக்குக் காய் பறிக்கலாம்.
(அவரைக்காய்.)
வண்ணான் பர்மாக்காரியிடம் கொசுவலைக்குக் கூலி கேட்ட மாதிரி.
(=அதிகமாகக் கேட்பான்.)
வண்ணான் பிள்ளை செத்தால் அம்பட்டனுக்கு மயிர் போயிற்று.
வண்ணான் பெண்ணுக்கு அம்பட்டன் துடுப்புக் கொடுத்தது போல.
(துரும்பு.)
வண்ணான் பொதி ஏத்துகிற வேளை. 19530

வண்ணான் வீட்டுக்குப் போகப் போகப் போகிறது.
வண்ணான் வீட்டு நாய் வீட்டுக்கும் உதவாது; துறைக்கும் உதவாது.
வண்ணான் வெள்ளாவித் துணியிலே நாய் ஏறின மாதிரி.
(பேண்ட மாதிரி.)
வண்ணானிடம் துணி போட்டுக் கொக்குக்குப் பின்னே திரிந்தது போல்.
(அலைந்தது போல்.)
வண்ணானுக்கு உழைத்த கழுதையும் வாணியனுக்கு உழைத்த காளையும் சரி. 19535

வண்ணானுக்கு நோய் வந்தால் கல்லோடே.
வண்ணானுக்குப் போனான்; வண்ணாத்திக்கு வந்தான்.
வண்ணானுக்கும் நிர்வாணிக்கும் உறவு ஏன்?
(என்ன?)
வண்ணானுக்கு வண்ணாத்தி மேல் ஆசை; வண்ணாத்திக்குக் கழுதை மேல் ஆசை.
வண்ணானுக்கு வந்ததும் இல்லை; செம்மானுக்குப் போனதும் இல்லை. 19540

வண்ணானோடு போய் மோழி சுமந்தாளாம்.
(யாழ்ப்பாண வழக்கு.)
வணங்கா முடியால் கேடு வரும்.
வணங்கின காலில் முள் தைக்காது.
வணங்கின புல் பிழைக்கும்.
(வாழும்.)
வணங்கின முள் தைக்காது. 19545

வணங்கின முள் தைக்குமா? வணங்காத புல்லுத் தைக்குமா?
வணங்கின வில் தீங்கை விளைக்கும்.
வணங்கின வில் தைக்கும்; வணங்காத வில் தைக்காது.
வணிகர்க்கு அழகு வாணிகம் செய்தல்.
வத்திரம் உடையான் அவைக் கஞ்சான்; வாகனம் உடையான் நடைக்கு அஞ்சான். 19550

வத்தி வைக்கிறான்.
வதுவை செய்து வாழ்.
வந்த அளவிலே சிறுக்கி பந்து அடித்தாள்; வரவரச் சிறுக்கிச் சோர்ந்து போனாள்.
வந்த காசுக்கு வட்டம் இல்லை.

வந்த காரியத்தைக் கவனிக்காமல் பந்தற்காலைக் கட்டிக் கொண்டு நின்றானாம். 19555

வந்த காலோடு பந்தற்காலைக் கட்டிக் கொண்டு நிற்கிறாய்.
வந்த கூத்து ஆடித்தானே தீரவேண்டும்?
வந்த சண்டையை விடுவதும் இல்லை; வலியச் சண்டைக்குப் போவதும் இல்லை.
வந்தட்டிக் காக்காய் வரப்பிலே; ஊர்க் காக்காய் கரையிலே.
வந்ததடா சண்டை பிராமணா, இறக்கடா மூட்டையை. 19560

வந்தது எல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்.
வந்தது கப்பல்; மலர்ந்தது தொப்பை.
வந்தது சண்டை, இறக்கடி கூடையை.
(எட்டினது கூடையை.)
வந்தது பேய், வளர்ந்தது பேய், கொண்டு வந்தது கொள்ளி வாய்ப் பிசாசு.
(மருகன், மகன், மாப்பிள்ளை.)
வந்தது போய் விடும்; இருக்கிறது போகாது. 19565

வந்ததும் அப்படியே, சிவன் தந்ததும் அப்படியே, எனக்கு முன் என் அதிர்ஷ்டம் போய் நிற்கிறது.
வந்ததும் பிசாசு, போனதும் பிசாசு, கொண்டு வந்ததும் கொள்ளிவாய்ப் பிசாசு.
வந்ததே சிறுக்கி பந்து அடித்தாள்; வரவரச் சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்.
(வந்ததே பெண்.)
வந்ததை வரப்படுத்தடா, வலக்காட்டு ராமா!
வந்ததை வரப்பற்ற வேண்டும். 19570
(வரப்பற்று.)

வந்தபின் காப்பவனைவிட வருமுன் காப்போன் புத்திசாலி.
வந்த பேரை வாழ வைக்கும் வைகுண்ட மாநகர் இதுவே
(ஆண்டான் கவிராயர் கூற்று.)
வந்த மாடு கட்டுவதும் இல்லை; கெட்ட மாடு தேடுவதும் இல்லை.
வந்தவர் எல்லாம் சந்தையிற் குடியா?
வந்தவள் கறுப்பு ஆனால் வமிசமே கறுப்பு. 19575

வந்தளவிலே சிறுக்கி பந்தடித்தாள்; வரவர மாமி கழுதை போல் ஆனாள்.

வந்தவனுக்குச் சோறு; வராதவனுக்கு உலை வைக்கிறது.
வந்த விதி வந்தால் வாய் திறக்க வழி இல்லை.
வந்த வினை எல்லாம் வரட்டும்.
வந்த வினை போகாது; வராத வினை வாராது. 19580

வந்தவுடன் மாமியார் பந்து அடித்தாள்; வர வர மாமியார் கழுதைபோல் ஆனாள்.
வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தைத் தள்ளினது.
(இருந்த தண்ணீரைக் கொண்டு போயிற்று.)
வந்த வேலையை விட்டு விட்டுப் பந்தற்காலைப் பிடித்தானாம்.
வந்தார் இறங்குமிடம் வழி வந்தார் தங்கும் இடம்.
வந்தாரை வாழ வைக்கும்; மண்ணில் பிறந்தாரைத் தூங்க வைக்கும். 19585

வந்தால் விரவில்லை; வராவிட்டால் செலவில்லை.
வந்தாலும் சரி, போனாலும் சரி.
வந்தாற் போல் மாமியார் பந்தடித்தாள்; வர வர மாமியார் கழுதை போல் ஆனாள்; ஊர் கிட்டே வரும்போது ஊளை யிட்டுக் கொண்டே வந்தாள்.
வந்தாற் போலச் சிறுக்கி பந்து அடித்தாள்; வரவரச் சிறுக்கி நொந்து போனாள்.
வந்தாற் போல மாமி பந்து அடித்தாள்; வரவர மாமி கழுதை மேய்கிறாள். 19590

வந்து போகிற புருஷனும் வைத்து உடுத்துகிற புடைவையும் வகையாக அகப்பட்டன.
வம்சத்து வாடிக்கைக்கு ஒரு குருவைப் பொங்கல் இட்டாலும் போகாது.
வம்ச பரம்பரையாய் வந்தீரே சிற்றப்பா, உங்கள் உத்தரீ யத்தைத் தாரும்; உடுத்துக் கொண்டு தண்டன் இடுகிறேன்.
வம்சம் வார்த்தைக்கு அஞ்சும்; புழுக்கை உதைக்கு அஞ்சும்.
(உலக்கைக்கு.)
வம்பனுக்கு வழி எங்கே? போகிறவன் தலை மேலே. 19595

வம்பான வார்த்தை மனசுக்கு அருவருப்பு.
வம்பி இருந்த மனை பாழ்; தும்பி இருந்த தூண் பாழ்; அறந் தாங்கித் தம்பியிருந்த தரை பாழ்.
வம்பி மகள் மழலை வார்த்தை கேட்டு, ஆடவரைத் தம்பி என்று அழைக்கத் தலைப்பட்டாள்.

வம்பிலே வருகிறது; குண்டாறு பெருகிறது.
வம்புக்குச் சப்பணி வைத்தாளாம். 19600

வம்புச் சண்டைக்குப் போவதும் இல்லை; வந்த சண்டையை விடுவதும் இல்லை.
வம்புத் துரைத்தனத்தாரைக் கும்பிடத் தகுமோ?
வம்பும் தும்பும் விளைக்கிறது.
(வந்து விளைகின்றன.)
வயசுககு ஏற்ற விவரம்.
வயசுக்குத் தகுந்த புத்தி; வல்லமைக்குத் தகுந்த சலுகை. 19605

வயசுக்கு மூத்தவனைக் கட்டி மாரடிப்பது போல.
வயசுக்கோ நரைத்தது, மயிருக்கோ நரைத்தது.
வயசு சென்றால் மதியும் தளர்ந்து போகுமா?
(மதியும் போகுமா?)
வயசுப் பிள்ளை சாயல் கண்ணுக்குள்ளே குத்தும்.
(யாழ்ப்பாண வழக்கு.)
வயசுப் பெண்ணுககுத்தான் வயசு காலம்; கிழத்துக்கு எல்லாம் என்ன கேடு காலம்? 19610

வயசோ வல்லக்காடோ?
(வல்லக்கேடோ-வல்லக்காடு சுடுகாடு.)
வயல் முயற்சியில் தானியம் உண்டாம்.
வயல் விளைந்து உண்ண வேணும்; வரப்பு விளைந்து உண்ணலாமா?
வயிற்றில் அடிக்காமல் முதுகில் அடி.
வயிற்றில் அடித்தால் எல்லாம் போகும். 19615

வயிற்றில் இருக்கிற பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையைக் கொன்றாற் போலே.
வயிற்றில் குழந்தை, கழுத்தில் தாலி.
வயிற்றில் பிறந்த பிள்ளையும் கொல்லையில் காய்த்த கறியும் சமயத்துக்கு உதவும்.
வயிற்றில் வாழையைப் புதைக்கிறான்.
(நிறைய சாப்பாடு போடுகிறான் என்பது கருத்து.)
வயிற்றிலும் குத்திக்கொண்டு விலாவிலும் குத்திக்கொண்டது போல. 19620

வயிற்றிலே பசி; வாயிலே சிரிப்பு.
வயிற்றில் பல்.
(+ உடையார் வஞ்சகர்கள்.)

வயிற்றிலே பாலை வார்த்தாற்போல.
வயிற்றிலே பிறந்தால் என்ன, விலாவிலே பிறந்தால் என்ன?
வயிற்றில் புளியைக் கரைக்கிறது. 19625

வயிற்றிலே வாழையை வைப்பான்.
வயிற்று அகமுடையான், கயிற்று அகமுடையான்.
வயிற்று எரிச்சல்.
வயிற்று எரிச்சல் பெண்சாதிக்கு மாலைக்கண் அகமுடையான்.
வயிற்று எரிச்சலைச் சொல்கிறேன்; வாடி புழைக்கடைக்கு
என்றாளாம். 19630

வயிற்றுக்குச் சோறும் இடுப்புக்குத் துணியும்.
(+ இல்லை வயிற்றுக்குத் தண்ணீரும்.)
வயிற்றுக் குடல் வாயில் வரக் குட்டுகிறதா?
வயிற்றுக் குடலைக் காட்டினாலும் வாழைநார் என்கிறான்.
வயிற்றுச் சோற்றுக்காக வைத்தீசுவரன் கோயில் மட்டும்
நடப்பான்.
வயிற்றுப் பாம்புக்குக் கடுகும் வளைப் பாம்புக்கு வெந்நீரும்
இடு. 19635

வயிற்றுப் பிள்ளை நழுவும்படி பேசுகிறான்.
வயிற்றுப் பிள்ளையை நம்பிக் கைப்பிள்ளையைக்
கைவிட்டது போல.
(கைபிள்ளையை ஆற்றில் நழுவி விட்டது போல, பறி கொடுத்தது
போல, இழந்தது போல.)
வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையைப்
பறி கொடுத்தாற் போல.
(மாடு மேய்க்கிற பிள்ளையைக் காலை வாரி விட்டது போல
கொன்றாளாம்.)
வயிற்றுவலிக்காரிக்கு மாலைக்கண்ணன் அகமுடையான்.
வயிற்று வலிக்கு இடம் கொடுத்தாலும் வைஷ்ணவனுக்கு
இடம் கொடுக்கல் ஆகாது. 19640

வயிற்றுவலியை விலை கொடுத்து வாங்குவார்களா ?
வயிற்றை அறுத்தாலும் வாகாய் அறுக்க வேண்டும்.
வயிற்றை அறுத்தாளாம்; வைத்தாளாம் பந்தலில்; இதுதான்
உங்கள் சீர் என்றாளாம்.
(என்னடி அம்மா என்றால் பெண்ணுக்கு சீர் என்றாளாம்.)
வயிற்றைக் கட்டினவளுக்கு அகமுடையான்; வாயைக்
கட்டினவருக்குப் பிள்ளை.

வயிற்றைக் கிழித்துப் பார்த்தால் வாரடையும் கிடையாத
நிரக்ஷர குக்ஷி. 19645

வயிற்றைக் கீறிக் காண்பித்தாலும் கண்கட்டு வித்தை என்றான்.
(என்பார்கள்.)
வயிற்றைப் பிடித்து நிழலில் இருந்தால் மலடிக்கு மசக்கை.
வயிற்றைப் பீறிக் காட்டினாலும் மகேந்திர ஜாலம்
என்பார்.
வயிற்றைப் புரட்டுகிறது வரகரிசிச் சோறு; வாய் நீர்
கொளுத்துகிறது கம்பங்கூழ்; பொறுக்கப் போக வில்லை
புளியம்பூ ரசம்; என் பொன்னான பிறந்தகம் போய்வருகிறேன்.
வயிற்றைக்கட்டுக் கழிந்தாலும் வீட்டை விட்டுக்
கழியவில்லை. 19650

வயிறா? வண்ணாந்தாழியா?
வயிறு ஆரப் போஜனமும் அரை ஆரப் புடைவையும் இல்லை.
(வேண்டும்.)
வயிறு எரிகிறவனிடம் வரம் கேட்கிறது போல.
வயிறு எரிய வழக்கு ஓரம் சொல்கிறதா?
வயிறு என்னைப் பார்க்கிறது. 19655

வயிறு கூழுக்கு அழுகிறதாம்; கொண்டை பூவுக்கு அழுகிறதாம்.
வயிறு நிறைந்தால் வாழ்வு விடியும்.
வயிறு நிரம்பினாலும் கண் நிரம்பாது.
வயிறு நிறைந்தால பானை மூடான்.
(நிரம்பினால்.)
வயிறு பசித்தால் வைத்த இடத்தைப் பார். 19660

வயிறு வண்ணான் சால் போல.
வரகு அடித்த கம்பை வரகின்மேல் வைத்துத்தான் கட்டுவர்.
(விறகு அடித்த... விறகின் மேல்.)
வரகு கொல்லை உழப்போன கலப்பையா?
வரங்கள் பெற்றது குரங்கைக் கொல்லவா?
வரச்சே தூண்டில் கயிற்றின் வழியா வந்தது; போகச்சே
இரும்புச் சங்கிலியை அறுத்துக் கொண்டு போயிற்று. 19665

வரதன் சேவையும் வேகவதி மணலும்.
( : வேகவதி மணலில் சுடுகாடு இருக்கிறது.)
வரப்பு உயர்ந்தால் நெல் உயரும்; நெல் உயர்ந்தால் சொல்
உயரும்.

வரப்பு உயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்.
வரப்பு உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோல் உயரும்; கோல் உயரக் கோ உயரும்.
வரப்பு ஏறித் தாண்ட மாட்டான்; அவன் பேர் தாண்டவராயன். 19670

வரப் புருஷன் காட்டிலே கடுகு மிடாச் சோறு.
(கொங்கு நாட்டு வழக்கு.)
வரப்பே தலையணை வைக்கோலே பஞ்சு மெத்தை.
வரப்போகிற அரண்மனையை எண்ணிக் குடியிருக்கும் குடிசையை விடலாமா?
வரப்போகிற கண்ணாலத்துக்கு நாள் எண்ணியிருக்குமாப் போல.
வரப்போ தலையணை வாய்க்காலே பஞ்சு மெத்தை. 19675

வரமோ கழுத்தை அறுக்கும்?
வரவரக் கண்டு அறி மனமே.
வரவரத் தெரியும் மெய்யும் பொய்யும்.
வரவர மாமியார் கழுதை போல் ஆனாள்.
வரவர மாமியார் கழுதை போல் ஆனாள்; ஊர்கிட்டே வந்து ஊளை இட்டாள். 19680
(ஊளை இட்டுக் கொண்டு வந்தாள்.)

வரவிலே தீயா? செலவிலே தீயா?
வரவிற் பெரிய செலவு ஆனால் அவரிற் பெரிய திருடன் ஆர்?
வரவுக்குத் தக்கபடி செலவை வரையறு.
(வரத்துக்குச் செலவு செய்.)
வரவுக்குத் தகுந்த செலவு; மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சள்.
(மஞ்சள்.)
வரவு கொஞ்சம்; வலிப்பு மெத்த. 19685

வராத நோய் வந்தால் குடியாத மருந்தைக் குடி.
வராதவரை வருந்தி அழை.
வரால் மீன் பாய்ந்தது போல.
வரிசை பெற்ற மாப்பிள்ளை வந்து வந்து நிற்பானாம்.
வரிசையும் இல்லை; அரிசியும் இல்லை. 19690

வரி போடேல்; கேட்டைத் தேடேல்.
வரிப்புலியைப் பார்த்து நரி சூடிட்டுக் கொண்டாற் போல.
வரி விழுந்த புலியைப் பார்த்து நரியும் நரியும் கொள்ளிக் கட்டை எடுத்துச் சுட்டுக் கொண்டனவாம்.

வருகிற போது எல்லாம் வலிய வரும்; வந்தபின் போகிறது
போது எல்லாம் போம்.
வருகிறவன் எப்போதும் வருவான் 19695

வருகிற விதி வந்தால் வளைந்தாடும் பானை.
வருத்தம் அறியாத மன்னனைச் சேவிக்கிறேன்.
வருத்தம் இல்லாமல் லாபம் இல்லை.
வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று.
(பழமொழி நானூறு.)
வருந்தி அழைத்தால் வராதது இல்லை. 19700

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா.
வருந்தி வருந்திப் பார்த்தாலும் வருகிற போதுதான் வரும்.
வருந்தினால் திருந்தும்.
வருந்தினால் வராதது ஒன்றும் இல்லை.
வரும் காரியம் சொல்லும் கௌளி வலியக் கழுநீர்ப் பானையில்
விழுந்தாற் போல. 19705
(வரும் காலம்.)

வரும் சொல் வாயிலே.
வரும் போதே காதில் வாருகோல் குச்சி போட்டு வந்தான்.
வரும் விதி எங்கு இருந்தாலும் வரும்.
வரும் விதி தலையைக் காக்காது.
வரும் விதி வந்தால் படுவது பட வேண்டும். 19710
(படும் விதி.)

வரும் விதி வந்தால் வளைந்தாடும் பானையும்.
வரும் வினை வழியில் நிற்காது.
(வரும் விதி வழியில் தங்காது.)
வருமுன் காப்பான் சொன்ன புத்தியை வந்தபின் காப்பான்
தள்ளினது போல.
வருவது சொன்னேன்! படுவது படு.
(வருவதை.)
வருவது தெய்வத்தால்; கெடுவது கர்வத்தால். 19715

வருவது வந்தது என்றால் படுவது படவேண்டும்.
வருவது வந்தே தீரும்.
வருவது வழியிலே தங்காது.
(நிற்காது.)

வருவான் குருடன்; விழுவான் கிணற்றிலே.
வருஷம் நூறு ஆனாலும் ஆனைகறுவும். 19720

வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி.
(மகளே.)
வல்லடி வாரிக்கொண்டு போக.
வல்லவன் ஆட்டின பம்பரம் மணலிலும் ஆடும்.
(எறிந்த பம்பரம் மண்ணிலும் ஆடும்.)
வல்லவன் ஆடின பம்பரம் போல.
வல்லவன் போனது வழி. 19725

வல்லவன் போனதே வாய்க்கல்.
(தாயுமானார்.)
வல்லவனுக்கு எல்லாம் உண்டு.
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பான்.
(உண்டு)
வல்லவனையும் வழுக்கும் பாறை. 19730

வல்லார் இளைத்தால் வந்து இளைப்பாறும் என்று சொல்லாது இரார்கள் சுத்தவீரர்கள்.
(சொல்லாதவர்களா சுத்த வீரர்களா?)
வல்லான் கொல்லை வாழைப் பழம் ஆகும்.
வல்லாள கண்டியை வா என்றால் வருவாள்; போ என்றால் போவாளா?
வல்லாளன் சொன்னதே வழக்கு.
வல்லான் வகுத்ததே வாய்க்கால். 19735
(தாயுமானவர்.)

வல்லான் வகுத்த வாய்க்கால் வடக்கே பாயும்; தெற்கேயும் பாயும்.
வல்விலைக் கூறையும் மெல்விலைக் காளையும் ஆகா.
வலக்காலை முன் வைத்து வாழ வந்த நாள் முதலாய்.
வலது கை செய்வது இடது கை அறியாது செய்.
வலிமைக்கு வழக்கு இல்லை. 19740

வலிய உறவாடி வாசலிலே வந்தாலும் பொய் உறவாடிப் போய் வா என்று சொல்கிறான்.
வலியச் சண்டைக்குப் போகாதே; வந்த சண்டையை விடாதே.
வலுத்தால் கரும்பு, இளைத்தால் இரும்பு.

வலுவில் வந்தவள் கிழவி.
வலைக்கு முன்னே கல் எறிந்த கதை. 19745

வலைச்சி ஓலைப் பாயில் மூத்திரம் பெய்தாற் போல.
வலையன் பிடித்த மீனுக்கு நுளையன் இட்டதே பேர்.
வலையில் பட்ட மானைப் போல.
(வலையில் சிக்கிய.)
வவ்விடக் கவ்வாயிற்று.
வவ்வுதல் செவ்வியைக் கெடுக்கும். 19750

வழக்கில் விழுந்தவனுக்கும் வழுக்கி விழுந்தவனுக்கும் கை கொடுக்கக் கூடாது.
வழக்குத் தீர்க்கிறதில் மரியாதை ராமன்தான்.
வழலை முடித்தவன் வாதம் முடித்தவன்.
வழவழத்த உறவைக் காட்டிலும் வைரம் பற்றிய பகை நன்று.
வழி ஆச்சுது; காரியம் வெளி ஆச்சுது. 19755

வழியில் போகிற குதிரைக்கு வைக்கோல் புரி கடிவாளம்.
(கண்ட குதிரைக்கு.)
வழியில் போகிற சனியனை விலைக்கு வாங்கினாற் போல.
(வாரத்துக்கு.)
வழியில் போகிறவனை அண்ணே என்றால் உன்னோடு பிறந்தேனா மலமுண்டை என்பானாம்.
வழியில் போகும் நாய்க்கு வாயைப்பார்.
வழியும் இல்லை; வாய்க்காலும் இல்லை. 19760

வழியே ஏகுக; வழியே மீளுக.
வழியேபோய் வழியே வந்தால் அதிகாரி செங்கோல் என்ன செய்யும்?
(செங்கோல் மயிர் மாத்திரம்.)
வழியே வாழ்வு; வழியே சாவு.
வழியோடு போகிறவனுக்கு வீடு கட்டுவது எளிது.
வழி வழியாய்ப் போகும்போது விதி என்ன செய்யும்? 19765

வழி வழியாய்ப் போனாலும் விதி விதியாய் வருகிறது.
வழி வாய்க்கால் இல்லாமல் பேசுகிறாய்.
வழுக்கற் சேற்றிலே நட்ட கம்பம்.
வழுக்கி விழாத குதிரை வளமான குதிரை.
வழுக்கைத் தலையனுக்குச் சீப்பு எதற்கு? 19770

வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல்.
(கையில்.)
வளர்த்த நாய் முகத்தில் கடித்தாற் போல்.
வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பது போல.
வளர்த்த பிள்ளை சோறு போடா விட்டாலும் வைத்த பிள்ளை சோறு போடும்.
(வைத்தபிள்ளை-தென்னம்பிள்ளை)
வளர்த்து வாழ்க்கைப் படுகிறது. 19775
(வளர்த்தி)

வளர்த்து விட்ட மரத்தைத் தறித்து விட்டாற் போல்.
வளர்ந்த உயரத்தை வாசற்படியிலே காட்டுகிறதா?
வளர்ப்பு வக்கனை அறியாது.
வளரும் காய் பிஞ்சிலே தெரியும்; விளையும் பயிர் முளையிலே தெரியும்.
வளரும் குழந்தை மழுப்போலே. 19780

வளவன் ஆயினும் அளவறிந்து உண்.
(அளவறிந்து அழித்து உண்.)
வளைந்துப் போனாலும் வழியிலே போக வேண்டும்.
வளைந்த மூங்கில் அரசன் முடிமேல்; வளையாத மூங்கில் கழைக் கூத்தாடி காலின் கீழ்.
வற்றலாய்க் காய்ந்த வடகம் போல் வற்றி.
வற்றி இருக்கிற ஏரியைக் கண்டால் வளைய வளைய நீந்துவேன் என்ற கதை. 18785

வற்றிய ஓலை கலகலக்கும்.
வற்றிற்றாம் கள்; வறண்டாளாம் சாணாத்தி; ஊறிற்றாம் கள்; உதித்தாளாம் சாணாத்தி.
வறட்டுக் கத்துக் கத்துகிறான்.
வறட்டுத் தவளை கத்துகிற மாதிரி.
வறட்டுத் தவளையைப் போல் வாள் வாள் என்கிறது. 18790

வறட்டு மாடு ஆனாலும் ஒரு பீர் பால் கொடுக்காதா?
(ஒரு சேர்.)
வறட்டு ஜம்பத்துக்கு வாய் என்ன?
வறப் போக்கி முண்டலாமா, நாலு மாவு போட்டுக் கிண்டலாமா?
வறியார் இருமையும் அறியார்.
வறியார்க்கு அழகு வறுமையிற் செம்மை. 19795

வறுத்த நெல் முளைக்குமா?
வறுத்த பயறு முளைக்குமா?
வறுத்த பயறு முளைத்ததை வையத்தில் கண்டீரோ?
வறுமை உள்ளார்க்குப் பொறுமை உண்டு.
வறுமைக்கு மூதேவியும் செல்வத்துக்குச் சீதேவியும். 19800

வறுமை கண்டவர் வையகத்தில் அநேகர்.
வறுமை வந்தால் பத்தும் பறந்து போம்.
வறை ஓட்டை நக்கினால் வாய் எல்லாம் கரி.
வன்சொல் வணக்கத்திலும் இன்சொல் வணங்காமை நலம்.
வனத்துக்கு வால்மீகி; பேருக்கு வியாசர். 19805

வனத்துப் புலியை மான்குட்டி அடித்தாற்போல.
வனவேடர் மான்கும்பைக் கலைத்து விட்டது போல.
வனாந்தரத்து நுழை நரிகள் இடையர்களின் தீர்க்க விரோதிகள்.
வஜ்ர சும்பன்.
வஜ்ரம் அளந்த கையால் வைக்கோல் துரும்பு
எடுக்கலாயிற்று. 19810

வஸ்திராபரணம் விசேஷமோ, அன்னம் விசேஷமோ?

## வா

வாக்கிலே கெட்ட கழுதையைப் போக்கிலே விட்டுத்திருப்ப வேண்டும்.
(விட்டுத்தான் விட்டு அடி. விட்டுப் பிடி.)
வாக்கிலே சனி.
வாக்கிலே புதன்.
வாக்குக்கு எட்டினது மனசுக்கு எட்ட வில்லை. 19815

வாக்குக் கொடுப்பது மெதுவாகவும், செய்வது விரைவாகவும் இருக்க வேண்டும்.
வாக்குச் சாக்காய் மாட்டிக் கொள்கிறது.
வாக்கும் மனசும் ஒத்து வார்த்தை சொல்ல வேண்டும்.
வாக்கு வயணம் தெரியாமல் பேசுகிறான்.
வாகனம் உள்ளவன் வழி நடைக்கு அஞ்சான்; பால் உள்ளவன் பந்திக்கு அஞ்சான். 19820

வாகை இளம்பிஞ்சு கண்டவர்கள் இல்லை; வாகான தென்னம்பிள்ளை கண்டவர்களும் இல்லை.
வாங்கி இருந்து துளை என்றார், அப்பம் தின்பார்.
வாங்கிக் கொடுத்த புருஷன் வெளியில் போய்விட்டு வருவதற்குள் நடுக்கிழித்து மூட்டாவிட்டால் நான் என்ன பெண் பிள்ளை என்றாளாம்.
வாங்கித் தின்றவன் வடக்கே போனான்; சீட்டு என்ன செய்யும்?
வாங்கித் தின்னுமாம் வயிறு; விண்ணாரம் பேசுமாம் உதடு. 19825

வாங்கின கடன் கொடாத வல்லாள கண்டன்.
வாங்கின கடனைக் கொடுக்கிறது இல்லை; கொடுத்த கடனைக் கேட்கிறது இல்லை.
(கொடுத்தறியான், கேட்டறியான்.)
வாங்கினபேருக்கு வாய் ஏது? வீங்கின பேருக்கு வெட்கம் ஏது?
வாங்கினதைப் போலக் கொடுக்கவேண்டும்; கொடுத்ததைப் போல வாங்கவேண்டும்.
வாங்கின மோரிலே வெண்ணெய் எடுப்பான். 19830
(தயிரிலே.)

வாங்குகிறது பிச்சை; ஏறுகிறது தந்தப் பல்லக்கு.
வாங்குகிறதைப் போல் இருக்க வேண்டும், கொடுக்கிறதும்.
வாங்குகிறபோது ஒரு பிள்ளை பெற்றது போல; கொடுக்கிற போது ஒரு பிள்ளை செத்தது போல.
வாசம் அறிந்தது வேட்டை நாய்; சுவாசம் முறிந்தது காட்டு மான்.
வாசல்படி இட்டு விடிகிறதோ, மகாதேவர் இட்டு விடிகிறதோ? 19835

வாசல்படி தலையில் பட்ட பிறகா குனிகிறது?
வாசலில் கட்டித் தாழ்வாரத்தில் அறுத்தது போல.
வாசலைக் காக்கிறான்.
வாசனை அற்ற புஷ்பம் வனத்தில் இருந்து என்ன பயன்?
வாசி விட்டால் யோகம் போச்சு. 19840

வாடிய பூவைச் சூடினாலும் சூடிய பூவைச் சூடக்கூடாது.
வாடி வலித்துத் திரங்கிக் கிடந்திடினும் புலித்தலையை நாய் மோத்தல் இல்.
வாணலிக்குத் தப்பி அடுப்பில் குதித்தது போல.
வாணிகம் செய்யின் காணியும்குறி.
(வாணியம்)
வாணியக் கட்டை வைரக் கட்டை; தேயத் தேயத் துடைப்பக் கட்டை. 19845
(வாணியன் கட்டை.)

வாணியர்கள் ஆடும் செக்கை வளைய வரும் எருதுகள் போல.
வாணியன் ஆசை கோணியும் கொள்ளாது.
வாணியன் கையில் மண்ணும் குயவன் கையில் எண்ணெயும் கொடுத்தது போல.
வாணியனுக்கு ஒரு காலம்; சேணியனுக்கு ஒரு காலம்.
வாணியனுக்குக் கொடாதவன் வைத்தியனுக்குக் கொடுப்பான். 19850

வாணியனோடும் வழக்கு; சேணியனோடும் வழக்கு.
வாத்திமச் செட்டு.
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்.
வாத்தியார் சம்சாரம் மூத்தாள் பதிவிரதை.
வாத்தியார் சொன்னது தர்ப்பயாமி. 19855

வாத்தியார் பிள்ளை மண்டு; வைத்தியன் பிள்ளை நோயாளி
(மகன் வாத்தியார் பிள்ளை மண்டம். முட்டாள்.)

வாத்தியார் பெண்சாதி, மூத்தவள் பத்தினி.
வாத்தியார் பெண்டாட்டிக்கு வாடல் வெற்றிலைதான்.
வாத்தியார் பெண் பெரியவள் ஆனால் எனக்கு ஆச்சா? என் தம்பிக்கு ஆச்சா?
வாத்தியார் மெச்சின சிஷ்யன் இல்லை. 19860

வாத்தியார் மெச்சின பிள்ளையும் இல்லை; மாமியார் மெச்சிய மருமகளும் இல்லை.
வாத்தியாருக்கு என்ன வரும்? வரப் போகப் பேச்சு வரும்; காத்திருப்பதே கடன்.
வாத்தியாருக்கு நாய் இல்லை; வைத்தியனுக்குச் சொர்க்கம் இல்லை.
வாத்தியாருக்குப் பணம் வருகிறது; பள்ளிப் பிள்ளைக்குக் குசு வருகிறது.
வாத்தியாருக்குப் பணம் வருகிறது; பிள்ளைக்கு அடி வருகிறது. 19865

வாத்தியாரே, பிள்ளைக்கு என்ன வரும்? மாதம் எனக்கு இரண்டு பணம் வரும்.
வாத்தியாரே, வாத்தியாரே, என் பெண் திரண்டால் என்றால், எனக்கு என்ன ஆச்சு? என் பிள்ளைக்கு என்ன ஆச்சு என்றாராம்.
வாத்தியாரைக் குறைக் கேழ் வரகும் விதைக்க வரச் சொன்னது போல.
(அரைக்கவர.)
வாத்தியாரை மெச்சின பிள்ளை இல்லை.
(+மாமியாரை மெச்சின மருமகளும் இல்லை.)
வாத்தியும் கூத்தியும் ஆறு மாசம். 19870

வாதத்து இயல்பு எடேல்.
(இடேல்.)
வாதததுக்கு மருந்து உண்டு; பிடிவாதத்துக்கு மருந்து இல்லை.
வாத துர்ப்பலமே ஒழியச் சமய துர்ப்பலம் இல்லை.
வாதம் ஊதி அறி; 'ேவதம் ஓதி அறி.
வாதம் கெட்டால் வைத்தியம். 19875

வாதம் கெடுந்தது பாதி; வண்ணான் கெடுத்தது பாதி.
வாதம் முற்றி வைத்தியன் ஆனாற் போல.
(வாதம் முற்றினால் வைத்தியன்.)

வாதம் ரஸ வாதம்.
வாதராயண சம்பந்தம்.
வாதி கண்ணுக்கு மட்டம் எட்டு மாற்று. 19880

வாதிகள் கூட்டம் வங்கத்தைக் கண்டால் ஓட்டம்.
('வங்கம் கலந்தால் ரஸ வாதம் கெடும்.)
வாதி கெட்டால் வைத்தியன்.
(முற்றினால்.)
வாதி மகன் வைத்தியன் ஆவான்.
வாதுக்கு ஆடின கூத்தாடி வயசு சென்றால் கழுதை.
வாதுக்கு ஆடின தேவடியாள் வயசு சென்றால் கழுதை
மேய்ப்பாள். 19885
(கழுதை ஆவாள். ஆடின தொப்பை... ஆவான்)

வாதுக்குக் கம்பு இடிக்கக் குதிர்க்கம்பு சேதம்,
வாது பாடி வண்ணம் பாடு.
வாது முற்கூறேல்,
வாந்தி எடுத்ததைத் திரும்பிச் சாப்பிடலாமா?
வாப்பா, வாப்பா, தொப்பியைப் பிடி, கிணற்றில் விழ. 19890

வாப்பாவும் மாமரமும் ஓடையும் வந்தால் மாலுமி சாஸ்திரம் சொல்லுகிறான்.
வாய் அறியாது தின்றால் வயிறு அறியாது கழியும்.
வாய் இருந்தால் எங்கள் அம்மா வாழச் சொன்னாள்; இல்லா விட்டால் வந்து விடச் சொன்னாள்.
வாய் இருந்தால் மகளே, வாழலாம்.
(வாழ்ந்து வருவாய்.)
வாய் இருந்தால் வங்காளத்துக்கும் போகலாம். 19895

வாய் இரும்பு; கை இரும்பு.
வாய் இல்லாதவன் கழுவிலே இருப்பான்.
வாய் இல்லா விட்டால் நாய் கூடச் சட்டை செய்யாது.
(சீண்டாது.)
வாய் இல்லா விட்டால் நாய் கொண்டு போய்விடும்.
வாய் இல்லா விட்டால் பிறந்த வீட்டிலேயே நாய் தூக்கிக் கொண்டு போயிருக்கும். 19900

வாய் இல்லா விட்டால் பொட்டை நாய் கொண்டு போய்விடும்.
வாய் உண்டானால் பிள்ளை பிழைக்கும்.
(உள்ள பிள்ளை.)

வாய் உபசாரத்திலே வழி விடுகிறது.
வாய் உள்ள பெட்டிக்குத் தாழ் இல்லை.
வாய் உள்ளவனுக்குக் கலிகாலம். 19905

வாய் உள்ளார் பேசவும் வலதுள்ளார் கொழிக்கவும் ஆச்சுதே!
வாய்க்கு அடங்காத பிடி பிடிக்காதே.
வாய்க்கு அரிசி போட்டேன்.
வாய்க்கு இலையும் கெட்டவன் கல்யாணம் பண்ணினாலும் பால பாரதிக்கு அஞ்சுபணம்.
(பவானிப் பகுதி வழக்கு. வாக்கியம் கெட்டவன்.)
வாய்க்கு உண்டா வாதம்? 19910

வாய்க்கு எளியவன் பிள்ளையார் கோயில் ஆண்டி.
வாய்க்கு என்ன வலிப்பா?
வாய்க்குக் கை உபசாரமா?
வாய்க் குணம் கெட்ட நாயைப் போக்கில் விட்டுத் திருப்ப வேணும்.
(கழுதையை-)
வாய்க்குத் தக்க பிடி. 19915
(தக்கின.)

வாய்க்கு நல்லது, வயிற்றுக்கு மாற்றான்.
வாய்க்குப் பயந்ததோ, மழை நாள் மலத்துக்குப் பயந்ததோ?
வாய்க்குப் பிள்ளையும் மற்றதற்கு மாற்றானும்.
(வயிற்றுக்கு மாற்றான்.)
வாய்க் கொழுப்புச் சீலையிலே வடிந்தாற் போல.
(வந்தது.)
வாய் கட்டினவனுக்குப் பிள்ளை, வயிறு கட்டினவனுக்கு அகமுடையான். 19920

வாய் கரும்பு, கை இரும்பு.
வாய் காய்ந்த புலி ஆள்மேல் விழுந்தது போல.
வாய் கைக்கு உபசார வார்த்தை சொல்லுவானேன்.
(முகமன்.)
வாய் கொள்ளுவதைத்தானே கொத்த முடியும்?
வாய் சர்க்கரை; கை கருணைக் கிழங்கு. 19925
(வாய் கருப்பட்டி.)

வாய் சர்க்கரை; கை கொக்கரை.
(கொக்கரை - கருணைக்கிழங்கு. மலையாளம்.)
வாய் சாளப் பட்டி வக்கணையாய்ப் பேசுவான்.

வாய் சொல்லும்; பிடரி கும்பிடும்.
வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அவிந்தது.
(போனது போல.)
வாய்த்தால் கிழவியும் பாடுவாள். 19930

வாய்த்தான் பிழைத்தான் சமாசாரம்.
(பிழைப்பு.)
வாய் தாராளம், கை கருணைக்கிழங்கு.
வாய்தான் இருக்கிறது, வாய்க்கரிசிக்கு வழி இல்லை.
வாய் திறக்கப் பொய் திறக்கும்.
வாய் நல்லது ஆனால், ஊர் நல்லது. 19935

வாய் நலமோ, ஊர் நலமோ?
வாய்ப் பந்தல் நிழல் தருமா?
வாய்ப் பந்தல் போட யாரால் கூடாது?
(முடியாது.)
வாய்ப் பந்தல் போடுகிறான்.
வாய்ப் பதற்றம் வரிசை கெடுக்கும். 19940

வாய்ப் பேச்சுப் பேசுகிறவன் வளம் இழந்து போவான்.
வாய்ப் பேச்சு வாயில் இருக்கக் கை வைக்க ஆரம்பிக்கிறாய்.
வாய்ப் பேச்சைக் கொண்டு செய்கிறதா? வயிற்றெரிச்சல் கொள்கிறதா?
வாய்ப் பேச்சைப் பிடுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிறது.
(பேச்சைக் கொட்டி.)
வாய் பார்த்தவன் வாழ்வு இழந்தான்; அம்பலம் பார்த்தவன் பெண்டு இழந்தான். 19945
(பார்த்தவன் இழந்தான்.)

வாய் பார்த்தவன் வீட்டில் நாய் காக்கும்.
வாய் பார்த்த வீடு நாய் காக்கும்; வைகாசி மாதம் வறுத்துக் குத்தும்.
வாய் பார்த்த வீடு நாய் கொண்டு போயிற்று.
வாய் பார்த்த வீடு நாய் பார்க்கும்;
(+ வைகாசி மாதத்தில் வறுத்துக் குத்த வேணும் நாய் காக்கும்.)
வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ? 19950

வாய் பொய் சொல்ல, மடி பிச்சை கேட்கும்.
(யாழ்ப்பாண வழக்கு.)
வாய் மதத்தால் வழக்கு இழந்தான்.
(வாழ்க்கை இழந்தான்.)

வாய் முத்து உதிர்ந்து போகுமா?
வாய் மூடாப் பட்டினி; கண்மூடாத் தூக்கம்.
வாய் மூடித் தலையை வெட்டுகிறதா? 19955

வாய் வாழ்த்தாவிடினும் வயிறு வாழ்த்தும்.
வாய் வாழைப்பழம் கேட்குது; கை கருணைக் கிழங்கு கேட்குது.
வாய் வாழைப்பழம்; கை கருணைக் கிழங்கு.
வாயசம் வலம் ஆனால் ஆயுசு விருத்தி ஆகும்.
(வாயசம் - காவகை.)
வாயாடிதான் வல்லவன். 19960

வாயாடி மாப்பிள்ளையாக இருப்பதைக் காட்டிலும் வரகூர்க் கூழைக் கடாவாக இருக்கலாம்.
வாயாடி வார்த்தை மட்டு இல்லாதவை.
வாயாரச் சொன்னால் தாயாரை விற்றுக் கொடு.
வாயாரே, வாயாரே, எங்கே போனாய்? கையாரிடத்திலே கடன் வாங்கப் போனேன்.
வாயால் இல்லை என்பதைக் கையால் இல்லை என்றான். 19965

வாயால் ஊதி வண்டாய்ப் பறக்கிறது.
வாயால் கெட்டாள் திரௌபதி.
வாயால் கேட்டால் வாழைப் பிஞ்சும் கொடான், தண்டித்துக் கேட்டால் தானோடே கொடுப்பான்.
வாயால் சொன்னால் தாயாரை விற்றுக் கொடுக்க வேண்டும்.
வாயால் தின்று வாயால் கக்கும் வௌவாலைப் போல. 19970

வாயால் பந்தல் இடுகிறது போல,
வாயாலே வாழ்வு; வாயாலே கேடு.
வாயில் அடிக்கலாம்; வயிற்றில் அடிக்கப்படாது.
வாயில் இருக்கிறது வழி.
(உண்டு.)
வாயில் இருக்கிறது வார்த்தை 19975
(+ வாயை ஏன் ஆட்டுகிறாய்.)

வாயில் ஈப் புகுந்தது தெரியாமல் கேட்கிறான்.
வாயில் உறவு; மனத்தில் பகை.
வாயில் கொழுக்கட்டையா?
வாயில் போகிறதைக் கக்கிக் கொடுக்கிறது.
வாயில் மண் அடிக்கலாமா? 19980

வாயில் மண் போடுவான்.
வாயில் மண் விழுந்தது.
வாயில் மணப்பால்; மண்மறை இல்லை.
வாயில் வந்தது வாசுதேவா!
வாயில் வந்ததை வறுத்துக் கொறிக்கிறது. 19985

வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது.
வாயினால் இல்லை என்பதைக் கையினால் இல்லை என்பது நலம்.
வாயும் கையும் சண்டை இடும்.
வாயும் புல்லும் போல அலைகிறான்.
வாயும் புல்லுமாய் அலைகிறது. 19990

வாயும் மொக்கும்; கையும் மொக்கும்.
வாயு வேகம், மனோ வேகம்.
(கதி.)
வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்க்கிறான்.
வாயைக் காத்தால் தாயைக் காக்கலாம்.
வாயைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுக்கும், 19995
(கையைக் கொடுக்கும்.)

வாயைத் திறக்காதே; கையால் செய்து காட்டு.
வாயைத் திறந்தால் நாடு எங்கும் அசையும்.
வாயைப் பார்க்கச் சேவை செய்கிறவனைப் போல.
வாயைப் பார்த்து ஆளை ஏய்த்தேன்.
வாயைப் பெருக்கி வயிற்றெரிச்சல் கொட்டாதே. 20000

வாயைப் பெருக்கினான் வாயாடி மாமியார்.
(வாயசாலி.)
வாயை மூடித் தலையை வெட்டுகிறது.
வார்த்தை இருந்து போம்; வழி தூர்ந்து போம்.
வார்த்தைக்குத் தரித்திரமா?
(தரித்திரம் இல்லை.)
வார்த்தைக்கு வார்த்தை சிங்காரம். 20005

வார்த்தைக்கு விலை உண்டானால் மௌனத்துக்கு அதிக விலை.
வார்த்தை காற்று.
வார்த்தை படித்த நாய் வேட்டைக்கு உதவாது.
வார்த்தை வார்த்தையை இழுக்கும்; வடுமாங்காய் சோற்றை இழுக்கும்.
(வார்த்தையை அழைக்கும்.)
வாராத இடத்தில் வார்கட்டையைச் சார்த்து. 20010

வாராத வாழ்வு வந்தாலும் வடக்கில் தலை வைக்காதே.
வாரிக் கொடுக்கும் வள்ளல் கை.
வாரியல் கட்டைக்குப் பட்டுக் குஞ்சமா?
(வாரியல் கொண்டைக்கு.)
வாரியல் கட்டை வைரக் கட்டை; தேயத் தேயத் துடைப்பக் கட்டை.
வாரைக் கடித்துத் தோலைக் கடித்துத்தானே வேட்டை நாய் ஆகவேண்டும்? 20015

வால் இல்லாத குரங்குக்கு வாய் எல்லாம் பல்.
வால் இல்லாத குரங்கு போல.
வால் இல்லாத நாய்க்கு மனத்திலே சந்தோஷம்.
வால் இழந்த நரி போல.
வால் ஒன்றுதான் இல்லை. 20020

வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம் ஆனால் கால் நடையாய்ப் போனவர்கள் கனக தண்டி ஏறுவரே.
வால் பிராணன் தலைக்கு வந்தது.
வால் போச்சு, கத்தி வந்தது, டம்டம்டம்.
வால் போனாலும் போகிறது; எனக்குத் தோல் வேண்டும்.
வால் வைப்பதற்குள் பொழுது விடிந்து விட்டது. 20025

வால ஜோசியனும் விருத்த வைத்தியனும் நன்று.
வாலிபத்தில் இல்லாத மங்கையை வயசு வந்தபின் என்ன செய்கிறது?
(வாலிபத்தில் கிடைக்காத.)
வாலிபத்தில தேடாத தேவடியாள் வயசு வந்த பின் தேடப் போகிறாளா?
வாலிபத்தில் முதிர்ந்த புத்தி, குறுகின வயசுக்கு அடையாளம்.
வாலில் கலத்தைக் கட்டினால் மாடு வேளைக்குக் குறுணி கறக்கும். 20030

வாலை ஆட்டாதே.
வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்.
வாவல் மீனைச் சாப்பிட்டு ஆவலைப் போக்கு
வாழ்க்கை கொடுத்தவன் கையில வாழ்நாள் அடைக்கலம்
வாழ்க்கைப் படுகிறதை நம்பி அவிசாரி ஆகிறதும் கெட்டது. 20035

வாழ்க்கை படுகிற பெண்ணுக்குச் சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நிற்குமா?

வாழ்கிறதும் கெடுகிறதும் வாயாலேதான்.
வாழ்கிறதும் தாழ்கிறதும் வண்டி உருளை போல.
வாழ்கிற பெண்ணைத் தாயார் கெடுத்தாள்.
(கெடுத்தது போல.)
வாழ்கிறபோது இல்லாத வாழைப்பூச் சேலை தாலி அறுத்துத் தறி போட்டு வந்ததாம். 20040

வாழ்கிறவளுக்குச் சக்களத்தி வந்து முளைத்தாள்.
வாழ்கிறவளை வைய வேண்டாம்; தாழ்கிறவளைத் திட்ட வேண்டாம்.
(தாழ்ந்தவளை.)
வாழ்கிறவன் வாழ்கிறான் என்று மதுரை எல்லாம் பேராம்.
வாழ்கிறவனுக்கு வைரம்.
வாழ்கிறவனை வாழ்த்த வேண்டாம்; தாழ்கிறவனைத் திட்ட வேண்டாம். 20045

வாழ்கிற வீட்டில் மரநாயைக் கட்டினதுபோல.
வாழ்கிற வீட்டில் வனக்குரங்கை வைத்தது போல.
வாழ்கிற வீட்டுக்கு ஒரு பெண்ணும் வைக்கோல் போருக்கு ஒரு கன்றும் இருந்தால் போதும்.
(இரண்டு பெண்ணும் எருமைக்கன்றும்.)
வாழ்கிற வீட்டுக்கு வாழையை வைத்துப் பார்.
வாழ்கிறான் வாழ்கிறான் என்று மதுரை எல்லாம் பேராம்; ஆற்றில் இறங்கினால் ஐம்பத்தெட்டுத் தொல்லையாம். 20050

வாழ்ந்த மகள் வந்தால் வர்ணத் தடுக்கு எடு; கெட்ட மகள் வந்தால் கிழிந்த தடுக்கு எடு.
வாழ்ந்தவர் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகாது; கெட்டவர் வாழ்ந்தால் கிளைப்புறு தாமரை.
வாழ்ந்தவன் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகான்.
வாழ்ந்தவன் கெட்டு வறியவனானால் தாழ்ந்தவனும் ஏசுவான்.
வாழ்ந்தவன் தாழ்ந்தால் வறையோட்டுக்கும் ஆகான். 20055

வாழ்ந்தவனை வாழ்த்த வேண்டாம்; தாழ்ந்தவனைத் திட்ட வேண்டாம்.
(வாழ்கிறவனை.)
வாழ்ந்தாளாம் சுடபி, வறுத்தாளாம் ஓடு வைத்து; ஓடு உடைந்தது என்று உட்கார்ந்தாளாம் சேஷி.
(உட்கார்ந்து அழுதாளாம்.)

வாழ்ந்தாளாம் சேஷி; வறுத்தாளாம் வறண்ட ஒட்டை.
வாழ்ந்து கெட்டவன் வடக்கே போ; கெட்டு நொந்தவன்
கிழக்கே போ.
வாழ்நாள் உடையான் வலுப்பட்டுச் சாகான் 20060
வாழ்நாளுக்கு ஏற்ற வயிற்றெரிச்சல்.
வாழ்நாளைக் கொடுத்து வாண தீர்த்தம் ஆடு.
வாழ்வதும் கெடுவதும் வாயால்தான்.
வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே.
வாழ்வாள் பிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும். 20065
(யாழ்ப்பாண வழக்கு.)
வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே.
வாழ்வு ஒரு காலம்; தாழ்வு ஒரு காலம்.
வாழ்வும் கேடும் வாயாலே.
வாழ்வும் சில காலம்; தாழ்வும் சில காலம்.
வாழ்வும் தாழ்வும் ஒரு வழி நில்லா. 20070
வாழ்வு வந்து வலக்காலைச் சுற்றுகிறது; வாங்கடா
பித்தளை பாடகத்தை.
(வாங்கடி வலக்கைப் படத்தை.)
வாழ்வு வரும்போது மதி ஓடி வரும்.
வாழ்க்கை கொடுத்தவன் கையில் வாழ்நாள் அடைக்கலாம்.
வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளப்படாது.
வாழத் தெரியாது வாழச் சொன்னால் வாயாலும் கையாலும்
வாழச் சொன்னாள். 20075
வாழப் போகிற பெண் சீப்பை எடுத்து ஒளித்த கதை.
வாழ மாட்டாத பெண்டாட்டிக்குக் கைபட்டாலும் குற்றம்;
கால் பட்டாலும் குற்றம்.
வாழ வந்த குரங்கு வையகம் புகழைத் தேடிக் கொண்டதாம்.
வாழ வந்தவனுக்கு வழியிலே என்ன சோலி?
வாழ வரம் வாங்கி வந்த பிறகு முடியவில்லை என்றால்
யார் விடுவார்? 20080
வாழாக் குமரி மூளா நெருப்பு.
(யாழ்ப்பாண வழக்கு.)
வாழாத நாய் வாழ்ந்த நாயைக் குறை சொல்லும்.

வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி? பொட்டு ஏண்டி?
மஞ்சள் குளி ஏண்டி?
வாழாத பெண்ணைத் தாயார் கெடுத்தாள்.
வாழாத பெண்ணைத் தாழ்வாய் உரைக்காதே. 20085

வாழாப் பெண் தாயோடே.
வாழும் குமரிக்கு வலப்புறத்தில் மச்சம்; மணையாளும்
மன்னனுக்கு இடப்புறத்தில் மச்சம்.
வாழும் பிள்ளையை விளையாட்டில் தெரியும்.
(மண் விளையாட்டு)
வாழும் வீட்டுக்கு ஒரு பெண்; வைக்கோற் படப்புக்கு ஒரு கன்று.
வாழும் வீட்டுக்கு வெறிநாய் கட்டியது போல. 20090

வாழும் வீட்டுக்கு வேட்டை நாய் வேண்டாம்.
வாழையடி வாழையாய்.
(+ வாழைக்கு ஒரு குலை.)
வாழை ஆடியும் புளி ஆடியும் வாழைக்குச் சேதம்
வாழை ஆடினாலும் மூங்கில் ஆடினாலும் வாழைக்குத்தான்
நஷ்டம்.
வாழை இல்லை, தையல் இலை. கை இல்லை. 20095

வாழை இளசும், வழுதலை மூற்றலும் நன்று.
வாழைக்காய்ச் சறியும் வளர்த்த பிள்ளையும்.
வாழைக்காய்க் கூட்டும் வாத்தியார் பெண்ணும் நிஷித்தம்.
வாழைக்காய் மடங்கினது போல.
வாழைக்கு இரண்டு குலைகள் கண்டதில்லை. 20100

வாழைக்கு ஓர் இலை.
வாழைக்குக் கீழ்க் கன்று வந்து முளைப்பது போல்.
வாழைக்குக் கீழ்க் கன்று வாங்கிப் பயிர் வைக்க வேண்டும்.
வாழைக்குக் கொத்து; வழுதலைக்குத் தண்ணீர்.
வாழைக்குத் தான் ஈத்த காய் கூற்றம். 20105

வாழைக்கு வெட்டும் வழுதுணங்காய்க்குத் தண்ணீரும்.
வாழை நட்டால் தாழ நடு.
வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினாற்போல்.
வாழைப் பழத்தில் வழ வழ என்று ஊசி ஏறுவது போல.

வாழைப்பழத்துக்கு விங்கித் தோலைப் போட்டான் புல்லாப் பூச்சியே. 20110
(புல் மேலே போட்டால் ஆகாதே.)

வாழைப்பழம் அறியாதவனுக்குத் தோலைப் பிதுக்கிக் காட்டுகிறதா?
வாழைப்பழம் கொண்டு போனவன் வாசலில் இருந்தான்; வாயைக் கொண்டு போனவன் ஒரு வீட்டில் இருந்தான்.
வாழைப்பழம் கொண்டு வந்தவன் வாசற்படியிலே; வாய் கொண்டு வந்தவன் நடு வீட்டுக்குள்ளே.
வாழைப்பழம் சாதத்தோடு எல்லோரும் சாப்பிட்டுப் போகக் கீரைச் சோற்றுக்குக் கதிகெட்டு நின்றவன்.
வாழைப்பழம் தின்னாத குரங்கு உண்டா? 20115
(பிடிக்காத குரங்கு இல்லை.)

வாழைப்பழம் தின்னுகிறது வருத்தமாய் இருக்குமா?
வாழைப்பழம் வேண்டாக் குரங்கு உண்டா?
வாழையில் இருக்கிறது வைப்பு.
வாழை வடக்கு ஈனும்; வான் கமுகு தெற்கு ஈனும்.
(+ மேற்கு வாழ்வு வரும் காலத்திலே.)
வாழை வாட்டமும் வரகு வாட்டமும் தெரியா. 20120

வாழை வாழ வடக்கு, வைத்தவன் வாழக் கிழக்கு, வாழை சாக மேற்கு, வைத்தவன் சாகத் தெற்கு.
வாழை வாட்டமும் வெங்காய வாட்டமும் தெரியா.
வாழை வாழ வடக்கு, வைத்தவன் வாழக் கிழக்கு; நாடு வாழ மேற்கே; நாசமாய்ப் போகத் தெற்கே.
வாள் ஏறுபடத் தேனேறு மாய்ந்தாற் போல். 20125
வாள் பிடித்தவன் கையில் வாழ்நாள்.

வாளம் இல்லாது நீளாது.
வாளாடி மாப்பிள்ளையாய் இருப்பதைக் காட்டிலும் வரகூர்க் கூழைக் கடாவாக இருக்கலாம்.
(வரகூரில் நன்கு வளர்ப்பார்கள்.)
வாளுக்கு ஆயிரம்; தோளுக்கு ஆயிரம்.
வாளுக்கு ஆயிரம், தோளுக்கு ஆயிரம் சம்பாதித்தாலும் மட்டாய்ச் செலவிடு.
வான் குருவியின் கூடும் வன் கறையான் புற்றும் தேன் சிலந்தி இறாட்டும் செய்யத் தெரிவரிது. 20130

வான் குருவியின் வயிற்றெரிச்சல் வழி வழி விடாது.
வான் குருவி வாழ்வு பெற்றால் வையகம் செழிக்கும்.
வான் செய்த நன்றிக்கு வையகம் என் செய்யும்?
(உதவிக்கு.)
வான் செய்யும் கொடுமைக்கு வையகம் என் செய்யும்?
வான அம்புலி வா என்றால் வருமா? 20135

வானக் கறுப்போ, ஆனைக் கறுப்போ?
வானத்தில் உள்ள அம்புலியை வா என்றால் வருமா?
வானத்தின் கீழ் இருந்து இடிக்கு ஒளிக்கிறதா?
வானத்தின் கீழ் இருந்து மழைக்கு அஞ்சினால் தீருமா?
வானத்துப் புறாவை நம்பி கைப் புறாவை இழந்தது போல. 20140

வானத்தை வில்லாய் வளைப்பான்; மணலைக் கயிறாய்த் திரிப்பான்.
வானம் இழந்து தலைமேல் விழுந்தது போல்.
வானம் இருக்க மழை போமா?
வானம் ஈன்றது; பூமி தாங்கிற்று.
வானம் கருக்கப் பிசானம் கருக்கும். 20145

வானம் சுரக்கத் தானம் சுரக்கும்.
(சிறக்கும்.)
வானம் சுருங்கின் குணம் சுருங்கும்
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்.
வானம் பார்க்கப் போயும் இடம் இடைஞ்சலா?
(இடு முடுக்கா?)
வானம் பொத்தல் என்று சிற்றெறும்புத் தோலால் அடைந்தான். 20150

வானம் பொழிய வேண்டும்; பூமி தழைக்க வேண்டும்.
வானம் வழங்க தானம் வழங்கும்.
வானமும் பூமியும் கொள்ளாதான் மரத்திலும் கல்லிலும் இருப்பானா?

## வி

விக்க விக்கச் சோறு போட்டுக் கக் கக் கக்க வேலை வாங்க வேணும்.
விக்குகிற வாய்க்கு விளாங்காய்; விழுகின்ற இடத்துக்கு
அரிவாள் மணை. 20155

விகட கவியா?
விச்சுளி வலமானால் நிச்சயம் வாழ்வு உண்டாம்.
(தரும்.)
விசாகத்தில் மழை; பயிர்களில் புழு.
விசாரம் முற்றினால் வியாதி.
விசிறிக் காதும் வேள்விப் பணமும் விரைவில் வரும். 20160

விசிறிக்குக் காற்றும் வேள்விக்குப் பணமும் எங்கிருந்தாலும் வரும்.
விசும்பில் துளி வீழின் அல்லது பசும்புல் தலை காண்பது அரிது.
(குறள். இல்லாமல்)
விசும்பு முட்டான கோலும் துரும்பு முட்டத் தீரும்.
விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்; தாட்டோட்டக்
காரனுக்குத் தயிரும் சோறும்.
(வெந்நீரும் சோறும்.)
விசுவாசக் கொக்கு நடமாடிச் செத்ததாம். 20165

விசுவாசப் பூனை கருவாட்டைத் தூக்கிக் கொண்டு போகிறதாம்.
(தூக்கிற்று)
விசுவாசம் இருந்தால் வேசியும் பிழைப்பாள்; நிசம் இருந்தால்
நீசனும் தழைப்பான்.
விசுவாசம் கெட்ட நாயே!
விட்ட இடம் பட்டணம்; விழுந்த இடம் சுடுகாடு.
விட்ட குறை, தொட்டகுறை. 20170
(+ விடுமா?)

விட்டத்தில் இருக்கிற பூனை இங்கிட்டுத் தாவுகிறதோ,
அங்கிட்டுத் தாவுகிறதோ?
விட்டத்துக்கு எட்டாம் நாள் அட்டமி.
(விட்டம் - அவிட்டம்.)

விட்டதடி உன் ஆசை விளாம் பழத்து ஓட்டோடே.
(விட்டாதடா ஆசை.)
விட்டதே நம் உறவு, வெண்கலத்தில் ஓசை போல.
விட்ட பாம்பும் பட்டுப் போகும். 20175
(வெயில்.)

விட்டில் பூச்சியைப் போல் பறந்து திரிகிறான்.
விட்டில் பூச்சி விளக்கில் விழுவதுபோல.
விட்டு அடித்தால் என்ன? கட்டி அடித்தால் என்ன?
விட்டு அடிக்கிறதிலும் தொட்டு அலை.
விட்டு அறுத்தாலும் ஆகாது என்று ஒட்ட அறுத்திடுவேன். 20180

விட்டுக் கெட்டது காது; விடாமல் கெட்டது கண்.
(எண்ணெய். தட்டிக் கெட்டது வயிறு; தட்டாமல் கெட்டது தலை.)
விட்டுச் சொன்னால் நட்டுக் குலையும்.
(+ விரித்து உடுத்தினால் அழுக்குப்படும்; படியும்.)
விட்டு விட்டாலும் ஒட்டிக் கொண்டு வருகிறான்.
விட்டு விட்டுப் பெய்கிற மழையிலும் விடாமல் பெய்கிற தூவானம் நல்லது.
விட்டு வைத்த கடனும் பெற்று வைத்த பிள்ளையும் எங்கும் போகா. 20185

விடக்கே ஆயினும் வடக்கு ஆகாது.
விடாச் சுரத்துக்கு விஷ்ணுக் கரந்தை.
விடாத மழை பெய்தாலும் படாத பாடு பட வேண்டும்.
விடாத மழையால் இல்லி ஒழுக்கு அடைபடும்.
விடா முண்டனும் கொடாக் கண்டனும். 20190
(கண்டனும்... முண்டனும்.)

விடாய் தீரக் கங்கா ஸ்நானம் பண்ணிப் பாவம் போகுமாப் போலே.
விடிக்கப் போன இடத்தில் விளாம் பழம் கிடைத்தது போல.
விடிகிற மட்டும் இறைத்தவனும் சாலை உடைத்தவனும் சரியா?
விடிந்ததும் பெண்ணுக்கு முக்காடோ?
விடிந்தால் தெரியும் மாப்பிள்ளை குருடும், பெண் குருடும். 20195

விடிந்தால் தெரியும் வெளிச்சம்.
விடியக் கல்யாணம்; பிடி தாம்பூலம்.
விடிய விடிய இறைக்க, விடிந்த பிறகு உடைக்க.
விடிய விடியக் கதை கேட்டுச் சீதைக்கு ராமன் சிற்றப்பன் என்றானாம்.

விடிய விடியக் கதை கேட்டு ராமனுக்குச் சீதை என்ன வேண்டும் என்றானாம். 20200

விடிய விடியத் துரத்தியும் ஆண் கழுதையாகத்தான் முடிந்தது.
விடிய விடியத் தேய்த்தாலும் கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா?
விடிய விடியப் பாடுபட்டும் விளக்குக்கு எண்ணெய் இல்லை.
விடிய விடிய மழை பெய்தாலும் ஓட்டாஞ்சில்லு முளைக்காது.
(ஓட்டாங் கிளிஞ்சல். கொட்டாங்கச்சி.)
விடிய விடிய ராமாயணம் கேட்டுச் சீதைக்கு ராமன் என்ன ஆகவேணும் என்றானாம் 20205
(சீதைக்கு ராமன் சிற்றப்பா என்றானாம்.)

விடியற் காலத்தில் கல்யாணம்; பிடியடா பயலே பாக்கு வெற்றிலை.
விடியற்காலைத் தூக்கம் வெல்லம் போல.
விடியாமல் உலை வைத்து வடியாமல் விடுவேனோ?
விடியா மூஞ்சி வேலைக்குப் போனால் வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காது.
விடியும் மட்டும் இறைத்தவனும் விடிந்த பின்பு சாலை உடைத்தவனும் சரி. 20210

விடியும் மட்டும் குரைத்தாலும் வீட்டு நாய் வேட்டை நாய் ஆக முடியுமா?
விடியும் மட்டும் மழை பெய்தாலும் ஓட்டாங் கிளிஞ்சில் கரையுமா?
விடியும் மட்டும் மழை பெய்தாலும் ஓட்டாஞ்சில்லுக் கரையுமா?
(ஓட்டாங் கிளிஞ்சல்.)
விடு விடு சங்கிலி, வேப்பஞ் சங்கிலி, விட்டால் குடி கெட்டுப் போம்.
விடை தனிக்கு அஞ்சாது. 20215

விண் ஏறு தப்பினாலும் கண் ஏறு தப்பாது.
(பொய்த்தாலும்...பொய்க்காது.)
விண் காட்டப் போனவன் கண் காட்ட வந்தானாம்.
விண்டு அழுத பிள்ளையைக் கொண்டு அணைப்பார் இல்லை.
விண்ணாணம் எங்கே? பின்னாரம் எங்கே?
விண்ணு மாலைக்குக் கல்யாணம்; விழுந்து கொட்டடா சாம்பவா. 20220

விண்தொடு கொடுமுடி மேருவும் விறலி தென்திசைக் கிரியும்.
விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.
விண் வலிதோ, மண் வலிதோ?

வின் விடும் குடிக்கு வின் விடும்; என் பாவி குடிக்கு வின் விடுமா?

வித்தாரக் கள்ளி விறகு ஒடிக்கப் போனாளாம்; கற்றாழை முள் கொத்தோடே தைத்ததாம். 20225

(கத்தாரி முள்.)

வித்தாரக்காரன் செத்தால் பிழைக்கான்.

வித்தியா சாலை விநோத சாலை.

வித்து இருக்கும் இடத்தில் வேர் இருக்க வேண்டும்.

வித்து இல்லாத சம்பிரதாயம், மேலும் இல்லை; கீழும் இல்லை.

வித்து இல்லாமல் மரம் இல்லை; மரம் இல்லாமல் வித்தும் இல்லை. 20230

வித்து இல்லாமல் முளை உண்டாகுமா?

வித்து இன்றிச் 'சம்பிரதம் இல்.

(பழமொழி நானூறு.)

வித்துக்கு விட்ட சுரைக்காய்போல.

வித்துப் பலம் 'பத்துப் பலம்.

வித்துவான் அருமையை விறகு தலையன் அறிவானா? 20235

வித்துவான் அருமையை வித்துவான் அறிய வேண்டுமே, அல்லாமல் விறகு விற்கிறவனா அறியப் போகிறான்?

வித்துவான் கத்துவான்.

வித்துவான்களுக்கு எது பெரிது?

வித்துவான் தனவான். 20240

வித்துவானுக்கு ஏது பரதேசம்?

(வேற்று நாடு ஏது?)

வித்துவானும் மதயானையும் சரி.

வித்துவானை அடித்தவனும் இல்லை; பெற்ற தாயுடன் போனவனும் இல்லை.

வித்தை அடிக்கிற கோழிக்கு விலாவில் இருக்கிறதாம் பித்து.

(அழிக்கிற)

வித்தை அடித்தான் தட்டான்; பொன்னிறம் ஆச்சுது கொக்கு. 20245

வித்தை அடித்தே செத்த பாம்பு ஆடுது.

வித்தை அடி மாமி, கொத்துதடி கோழி.

வித்தை அடி மாமி, விற்கிறதடி பணியாரம்.

வித்தை அழிக்கிற கோழிக்கு விலாவில் இருக்கிறதாம் பத்து.
வித்தை அற்றவன் அழகு, வாசனை இல்லாத முருக்கம்பூப் போல. 20250

வித்தை இல்லாத மாந்தர் விலங்கினும் கடையர்.
வித்தை உள்ளவன் தூங்கமாட்டான்; விசாரம் உள்ளவனும் தூங்க மாட்டான்.
வித்தை உள்ளவன் பெரியவன்.
வித்தைக் கள்ளி மாமியார் விறகொடிக்கப் போனாளாம்; கற்றாழை முள் கொத்தோடே தைத்ததாம்.
வித்தைக் கள்ளி, விளையாட்டுக் கள்ளி, பாகற்காய் விற்ற பழங்கள்ளி. 20255

வித்தைக்காரப் பெண்பிள்ளை செத்த பாம்பை ஆட்டுகிறாள்.
வித்தைக்காரன் தவறி விழுந்தால் அதுவும் ஒரு விளையாட்டு.
வித்தைக்காரன் நாய்க்குக் கற்ற வித்தை எல்லாம் தெரியும்.
வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம்.
வித்தைக் குதிரைக்குப் புல்லா? 20260

வித்தை பதினெட்டும் விழல்.
வித்தையில் எளிது சூனியம்; பண்டத்திலே எளிது நீற்றுப் பெட்டி.
வித்தையில் வித்தை வகார வித்தை.
(வகர்ம.)
வித்தை விரும்பு.
விதி அற்ற நாய்க்கு வில்லி விரமாம் தாய் வீடு. 20265

விதி அற்ற மாடு கதி கெட்ட புல்லைத் தின்னும்.
விதி அற்றவன் வேட்டகத்துக்குப் போவான்.
விதி உடையவன் கண்ணுக்கு விளக்காய்த் தெரிந்தது.
(விளக்குப் போல் இருப்பாள்.)
விதி உள்ள அகமுடையானுக்கு ரதியாக இருப்பாளாம்.
விதி எப்படியோ, மதி அப்படி. 20270

விதி கெட்டவன் விறகுக்குப் போனால் விறகு கிடைத்தாலும், கட்டக் கொடி கிடைக்காது.
(யாழ்ப்பாண வழக்கு.)
விதித்த விதியை விட வேறு நடக்குமா?
(கிடக்க வேறு விதி.)
விதிப்பயனை வெல்ல முடியுமா?

விதிப்பழத்தை விலை கொடுத்து வாங்குவது போல.
விதி பார்த்து வகுத்த விபத்தை விஷ்ணுவாலும் தடுக்க முடியாது. 20275

விதி போகிற வழியே மதி போகும்.
விதி முடிந்தவனை விரியன் கடிக்கும்.
(முடிந்தால்.)
விதியின் பயனே பயன்.
விதியின் வழியே மதி செல்லும்.
விதியை மதியால் தடுக்கலாமா? 20280
(தடுக்கலாம்.)

விதியை மதியால் வெல்லலாம்.
விதியை வெல்லுவார் உண்டோ?
விதிவசம் போல் ஆகும்.
விதி வலிது.
விதி வழி மதி செல்லும். 20285

விதி வழி வந்த நிதி சதி செய்து விடும்.
விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?
(போடக்...,காய்க்குமா?)
விதைக்கு ஏற்ற விளைச்சல்.
விதைக்கு விட்ட காய் போல.
விதைக் கூடை எடுக்கையில் பட்டி மாடு தொடர்ந்த கதை. 20290

விதைக் கோட்டையில் எலியை வைத்துக் கட்டலாமா?
விதைத்ததும் குறுணி; கண்டதும் குறுணி.
விதைத்தால் வரகை விதை; சேவித்தால் வடுகனைச் சேவி.
விதைப்பதன் முன் வேலி அடை.
விதை முதல் அகப்பட்டாலும் வேளாண்மையை விடாதே. 20295

விதை முந்தியா, மரம் முந்தியா?
விதையின் தன்மைதானே விளைச்சலில் வரும்?
விதையை அடித்தானாம்; விலை விலை. போய்ப் பட்டதாம்.
விதையைக் குற்றித் தின்னு.
விதையை விழுங்கிய கோழி போல். 20300

விந்து விட்டாயோ, நொந்து கெட்டாயோ?
(வெந்து.)

விநயம் இல்லாத வித்தை பயன் இல்லை.
விநாச காலே விபரீத புத்தி.
விபசாரம் செய்வாரைச் சுட்டாலும் விடமாட்டார்.
விபசாரி என்று விமானம் ஏறினாலும் திருடி என்று தெரு வழிப் போக முடியுமா? 20305

வியாச்சியம் சேற்றில் நட்ட கம்பம்.
வியாதிக்குப் பத்தியம்: வேதாந்தத்துக்கு வைராக்கியம்.
வியாதிக்கு மருந்து உண்டு; விதிக்கு மருந்து உண்டா?
வியாதியிலும் மருந்து கொடியது.
வியாழன் கூடினால் விவாகம் கூடும். 20310
(வியாதியாயினும்.)

வியாழன் தெற்கே சூலம்.
விரகன் கோசம் கட்டை தட்டிப் போம்.
விரதத்திலும் பெரிதோ ஒரு சந்தி?
விரதம் கெட்டாலும் சுகம் தக்க வேண்டும்; சுகம் கெட்டாலும் விரதம் தக்க வேண்டும்.
விரல் உதவி விருந்தினர் உதவார். 20315

விரல் உரல் ஆனால் உரல் உத்தரம் ஆகாதா?
(உரல் என்ன ஆகும்?)
விரல் கண்ணிலே குத்தினது என்று வெட்டி விடுவார்களா?
விரல் சுற்றின்மேல் அம்மி விழுந்ததுபோல்.
(உரல் விழுந்தது போல்.)
விரல் நக்கி மோர் குடிப்பது போல.
விரல் நுழைய இடம் உண்டானால் தலையைப் புக விடலாம். 20320

விரல் நுழைய இடம் கொடுத்தால் உரலை நுழைக்கிறான்.
(உலக்கையை, தலையை.)
விரல் போகாத இடத்தில் உரல் போகுமா?
விரலுக்குத் தகுந்த வீக்கம்.
(வீக்கந்தான் வீங்கலாம்.)
விரலுக்குமேல் நீண்டால் வெட்டி விடவேண்டும் என்கிறாயே!
விரலூண்டு இடம் கொடுத்தால் வீடு எல்லாம் கைக் கொள்கிறதா? 20325

விரலைக் காட்டி உரலை விழுங்குவான்.
விரித்த ஜமக்காளம், விடியும் மட்டும் கச்சேரி.

விரித்து உடுத்தினால் அழுக்குப் படும்.
விரிந்த உலகில் தெரிந்தவர் சிலர்.
விரியன் புரளுகிறது போல. 20330

விருத்தாசலம் போனால் திரட் பாவம் போகும்.
விருத்தா நாரீ பதிவ்ரதா.
விருதுக்காகவா வேட்டை ஆடுகிறது?
விருதுகூறி வந்து செடியிலே நுழைகிறது போல.
விருதுபட்டிக்குப் போன சனியனை வீட்டுக்கும் வந்து விட்டுப்
போ என்றானாம். 20335

விருதுபட்டிச் சனியனை விலைக்கு வாங்கினது போல.
விருந்து இட்டுப் பகையை விளைக்கிறது.
(இட்டா - பகைமையை.)
விருந்து இல்லாச் சோறு மருந்தோடு ஒக்கும்.
விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
விருந்துக்காகவா வேட்டை ஆடுவது? 20340

விருந்துக்கு அழைத்து விஷத்தைக் கொடுத்தது போல.
விருத்துக்கு நான்; பரியப் பணம் அண்ணனைக் கேள்.
விருந்தும் மருந்தும் மூன்று நாள்.
(வேளை, பொழுது.)
விருந்தைப் பண்ணிற் பொருந்தப் பண்ணு.
விருப்பத்தினால் ஆகாதது விம்பினால் ஆகுமா? 20345

விரும்பினால் வேம்பும் கரும்பு ஆகும்.
விருஷ்டியில் விதை மேல்,
விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?
(விதை.)
விரைக்கு விட்ட காய் போல.
(விதைக்கு.)
விரைக் கோட்டையில் எலியை வைத்துக் கட்டினது போல 20350
(விதைக் கோட்டையில் பெருச்சாளி புகுந்தாற் போல.)

விரை முந்தியோ மரம் முந்தியோ?
(விதை.)
விரைவில் கருமம் சிதையும் இடராய் விடும்.
(பழமொழி நானூறு.)
வில் அடியால் சாகாதது, கல் அடியால் சாகுமா?
வில் அம்பை விடச் சொல் அம்பு கொடியது.
வில் அம்போ, சொல் அம்போ? 20355

வில் இல்லாதவன் அம்பு தேடுவானேன்?
வில்லங்கத்தை விலைக்கு வாங்கினாற் போல.
வில்லுக்குச் சேரன்; சொல்லுக்குக் கீரன்.
வில்லுக்கு விஜயன்; சொல்லுக்கு அரிச்சந்திரன்.
வில்லுக்கு விஜயன்; சொல்லுக்குக் கீரன். 20360

வில்லுக்கு விஜயன்; பரிக்கு நகுலன்.
வில்லுக் குனியாது எய்தால் விலகாது எதிரிபடை.
(எதிர்த்த பகை.)
வில்லும் விளாங்காயுமாக இருக்கிறது.
வில்வப் பழம் தின்பார் பித்தம் போக; பனம்பழம் தின்பார் பசி போக.
வில்வம் பித்தம் தீர்க்கும்; பனை பசி தீர்க்கும். 20365

வில் வளைந்தால் மோசம் தரும்.
வில் வளைவதும் பெரியோர்கள் பணிவதும் நல்லதற்கு அடையாளம் அல்ல.
விலக்கக் கூடாத துன்பத்துக்கு விசனப்படாதே.
விலங்கும் பறவையும் விதித்த கோடு கடவா.
(தவறா.)
விலங்கு வேண்டாம்; குட்டையில் மாட்டு என்றது போல. 20370

விலங்கு வேண்டாம்; தொழுவில் இருக்கிறேன்.
விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக் கொண்டது போல.
விலா இறச் சிரிப்பார்கள்.
விலாங்கு மீன் வழுக்கி ஓடுவது போல.
விலைக்குக் கொண்டு விருதுக்கு வேட்டை ஆடுகிறது. 20375

விலைமகட்கு அழகு மேனி மினுக்குதல்.
விலை மோரில் வெண்ணெய் எடுத்துத் தலைமகனுக்குக் கல்யாணம் பண்ணுவான்.
(தலைமகனுக்கு )
விலைமோரில் வெண்ணெய் எடுப்பது.
(வெண்ணெய் எடுத்தானாம்.)
விவேகத்தின் மேன்மை அவிவேகத்தை ஒழித்தல்.
விழக்குழி பாய்ச்சுகிறது. 20380

விழலுக்கு இறைத்த நீர் போல.
விழலுக்கு முத்துலை போட்டு இறைத்தேன்.
விழிக்கு விழி பாய்ச்சுகிறது.

விழித்த முகம் நல்ல முகம்.
விழித்தவன் கன்று நாகு கன்று; தூங்கினவன் கன்று கடாக்கன்று. 20385

விழித்து இருக்க விழியைத் தோண்டினாற் போல.
விழியில் குத்தின விரலை அறுப்பார் உண்டோ?
விழுகிற சுவரில் கை வைத்தாற் போல.
விழுகிற பிள்ளைக்கு அரிவாள்மனையை அண்டல் கொடுத்தாற் போல.
(அண்டை கொடுப்பதா.)
விழுங்கின இரகசியம் வயிற்றில் இராது. 20390

விழுந்த இடம் சுடுகாடு.
விழுந்த இடம் பொழுது; விட்ட இடம் விடுதி.
விழுந்தது பாம்பு; கடித்தது மாங்கொட்டை.
விழுந்த பிள்ளையை எடுக்க நேரம் இல்லை.
(சவிட்ட.)
விழுந்தவன் எழுந்திருந்தால் வெட்கத்துக்கு அஞ்சிச் சிரிப்பான். 20395

விழுந்தவன் சிரித்தான் வெட்கத்துக்கு அஞ்சி.
விழுந்தாரைச் சிரியாத வெந்துக்களும் இல்லை.
(பந்துக்களும். யாழ்ப்பாண வழக்கு.)
விழுந்தால் சிரிப்பார்; வேடிக்கை பார்ப்பார்.
விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை என்கிறான்.
விழுந்து உடுத்தால் அழுக்குத் தெரியும். 20400

விழுந்தும் கரணம் போட்டேன் என்ற கதை.
விழுந்து விழுந்து சம்பாதிக்கிறான்.
விழுந்து விழுந்து புரண்டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும்.
விள்ளாதது குறையாது; இல்லாதது வராது.
விளக்கில் கொளுத்தின பந்தம் போல. 20405

விளக்கில் விழும் விட்டிற் பூச்சி போல.
(விளக்கில் மொய்த்த விட்டிற் பறவை போல.)
விளக்கு இருக்க நெருப்புக்கு அலைவானேன்?
விளக்கு இருக்க மின்மினித் தீக் காய்ந்தவாறே.
(தேவாரம்.)
விளக்கு இல்லாத வீட்டில் பேய் குடி இருக்கும்.
(குடி புகும்.)
விளக்கு ஏற்றிக் கூடையால் மறைக்கிறது. 20410

விளக்கு ஏற்றிக் கெட்டவரும் வெற்றிலை கொடுத்துக் கெட்ட
வரும் இல்லை.
விளக்கு முளிக்கு ஆசைப்பட்ட விட்டில் போல.
விளக்குக்கு முன் மின்மினி போல.
விளக்குமாற்றால் அடித்துக் குதிரையோடு தீவட்டி
கொடுத்தாற் போல.
(குதிரைமேல் ஏற்றி.)
விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சலம் கட்டினாற் போல. 20415
(விளக்குமாற்றுக் கட்டைக்கு.)

விளக்கு வைத்துத்தான் பார்க்க வேண்டும்.
விளக்கெண்ணெய்க்குக் கேடே தவிரப் பிள்ளை பிழைப்பது
இல்லை.
(கேடே ஒழியும்.)
விளக்கெண்ணெய் குடித்தவன் மூஞ்சி போல.
விளக்கெண்ணெய் வார்த்துப் பிட்டம் கழுவின கதை.
விளக்கெண்ணெயாம் தலைக்கு எண்ணெய். 20420

விளக்கெண்ணெயிற் போட்ட கழற்காய் போல.
(கழற் சிக்காய்.)
விளக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு ஆற்று மணலில்
புரண்டாலும் ஒட்டுகிறதுதான் ஒட்டும்.
(வீதியில் புரண்டாலும்.)
விளக்கைக் கண்ட விட்டிற் பூச்சிகள் போல.
விளக்கைக் கையில் பிடித்துக் கொண்டு கிணற்றில்
விழுவாரைப் போல.
விளக்கைக் கொளுத்திக் கீழே வைப்பார் உண்டோ? 20425

விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் இறங்குகிறதா?
(விழுகிறதா?)
விளக்கை வெளியே வைத்தாற்போல.
விளக்கை வைத்துக் கொண்டு நெருப்புக்கு அலைகிறது போல.
(அலைவானேன்?)
விளங்கா முடி விறகுக்குப் போனால் விறகு அகப்பட்டாலும்
கொடி அகப்படாது.
(விளங்கா மடையன்.)
விளங்காய்க்குத் திரட்சி உண்டு பண்ணுகிறதா? 20430

விளங்காய் தின்று விக்கின கதை.
(விளாங்காய்.)

விளைகிற போதே சோணலாய் விளைந்தால் விறகு விராட்டி
என்னத்துக்கு?
(விறகுக் கட்டை.)
விளைந்த கதிர் வணங்கும்.
விளைந்த காட்டுக்குப் பறந்த குருவியாக இருக்கிறான்.
(குடியாக.)
விளைந்ததும் விளையாததும் வைக்கோலைப் பார்த்தால்
தெரியும். 20435

விளைந்த நெல் கால்மாட்டில் விழுந்தாற் போல.
விளைச்சே சோறாய் விளைந்தால் விறகு விராட்டி எதற்கு?
விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது.
விளையாட்டுச் சண்டை வினைச் சண்டை ஆகும்.
(வினையில் முடியும்.)
விளையாட்டுப் பண்டம் வீடு வந்து சேராது. 20440

விளையாட்டுப் பிள்ளைக்கு மண்மேல் ஆசை.
விளையாட்டுப் பிள்ளைக்கு விதரணை தெரியாது.
விளையாட்டுப் பிள்ளைகள் விட்ட வெள்ளாமையைப் போல்.
விளையாட்டுப் பிள்ளை விஷத்துக்கு அஞ்சாது.
விளையாட்டுப் பூசல் வினைப் பூசல். 20445

விளையாட்டே வினை ஆகும்.
விளையும் பயிர் முளையிலே தெரியும்.
விளைவது அரிசி ஆனாலும் மேல் உமி போனால் விளையாது.
விளைவது ஆகிலும் அளவு அறிந்து அழி.
விற்ற குண்டைக்குப் புல் போடுவானேன்? 20450
(குண்டை - எருது.)

விற்ற பசுவுக்குப் பச்சைப் புல் போடுவார் உண்டோ?
விற்ற மாட்டுக்கு விலை இல்லை.
விறகுகட்டுக்காரனுக்குத் தலைவலி வந்தால் விறகிலே
ஓரடி அடித்தால் போய்விடும்.
விறகுகட்டுக்காரனுக்கு நரை வலமானால் ஒரு பணம் விற்கிறது
ஒன்றே கால் பணம் விற்கும்.
விறகுகட்டுக்காரனுக்குப் பிளவை புறப்பட்டால் விறகுக் கட்டையால்
ஓர் அடி. 20455
(நோய் வந்தால்.)

விறகு கோணலானால் நெருப்புப் பற்றாதா?
விறகுதலையனுக்குக் கால் பிளவை வந்தால் விறகு கட்டையால்
ஓங்கி ஓர் அடி அடிப்பான்.

விறகுதலையனுக்கு நோய் வந்தால் விறகுக் கட்டோடே போய் விடும்.
வினைக் காலம் வரும் காலம் மனைவழியும் தெரியாது.
வினை கெட்ட அம்பட்டன் பூனையைச் சிரைத்தானாம். 20460

வினை கெட்ட பூதி தினை குத்தப் போனாளாம்.
(யாழ்ப்பாண வழக்கு.)
வினைதீர்த்தான் கோயில் விளக்கு அழகு.
வினைதீர்த்தான் கோயிலுக்குப் போயும் வினை தீரவில்லையா?
வினைப் பயனை விலக்க முடியுமா?
வினைப் பயனை வென்றாலும் விதிப்பயனை வெல்லல் ஆகாது. 20465

வினையை விலை கொடுத்து வாங்கினானாம்.
வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்.
வினை வெந்து போகிறது.
விஷ்ணு பெரியவர் என்பது ஸ்ரீரங்கத்தில் பார்க்க வேண்டும்.
விஷ்ணுவே சமஸ்தம் என்பார் சிலர்; சிவனே பெரியவன் என்பார் சிலர். 20470

விஷ்ணுவைப் பெரியவன் என்பார் சீரங்கத்தில்; சிவனைப் பெரியவன் என்பார் அருணாசலத்தில்.
விஷ கடி வேளை.
விஷத்தின்மேல் விஷம், விஷம் போக்கும்.
(விஷத்துக்கு விஷம்.)
விஷத்துக்கு மாற்று விஷம்.
விஷத்தைக் குடிக்கப் பால் ஆகுமா? 20475

விஷத்தைக் குடித்தவன் மிளகு நீர் குடிக்க வேண்டும்.
விஷப் பரீட்சை பண்ணலாமா?
விஷம் என்றால் தலைக்கு ஏறுமா? தீ என்றால் வாய் சுடுமா?
விஷம் குடித்தாலும் சர்க்கார் விசுவாசிகள்.
விஷம் தின்றால் கொல்லும். 20480

விஷம், தீர வைத்தியன் வேண்டும்; பாவம் தீரத் தெய்வம் வேண்டும்.
விஷம் போல் ஏறுகிறது.
விஸ்தாரம் இருந்தால்தானே நீட்டிப் படுக்கலாம்?

# வீ

வீக்கம் கண்டால் தூக்கமாம்.
வீக்கமோ, தூக்கமோ? 20485

வீங்கலுக்கு விஷமம் அதிகம்.
வீங்கலுக்கு வீரியம் அதிகம்.
வீச்சு என்றாலும் விடுவேனோ, வீரபுத்திர அம்பலகாரா?
வீசம் இறுத்த குடி நாசம்.
(கொண்ட.)
வீசி நடந்தால் வீசம் எடை. 20490

வீசி நடந்தால் வெள்ளி வீசம் குறையும்.
வீட்டில் அடங்காதவன் ஊரில் அடங்குவான்.
வீட்டில் அழகு வேம்பு அடி ஆகும்.
வீட்டில் இருக்கிற சாமியைப் போகச் சொல்லி விட்டுக் காட்டில் இருக்கிற சாமியை வரவழைத்தாளாம்.
வீட்டில் இருக்கிறது வெறும் சோகை; விருந்தாளி வந்தது காமாலைச் சோகை. 20495

வீட்டில் இருக்கிற பூனையை அடித்தால் மேட்டில் இருக்கிற எலியைப் பிடிக்கும்.
(மோட்டில்.)
வீட்டில் இருந்தால் காட்டிலும் உண்டு.
வீட்டில் வினை இருக்கிறது; வினைதீர்த்தான் கோயிலுக்குப் போனால் தீருமா?
வீட்டின் செழிப்புக் காட்டில் தெரியும்.
வீட்டு அடிக்கு வேம்பு அடி மேல். 20500

வீட்டு அழகு வாசற்காலைப் பார்த்தால் தெரியும்.
வீட்டு இளக்காரம் வண்ணான் அறிவான்.
வீட்டு எலியை அடித்தால் மோட்டு எலி பறக்கும்.
வீட்டுக் கருமம் நாட்டுக்கு உரையேல்.
வீட்டுக் கழுதை ஊராருக்குச் சுமக்குது. 20505

வீட்டுக்காரி என்பது பெண்சாதிக்குப் பெயர்.
வீட்டுக்காரிக்கும் போட்டிக்காரி.
வீட்டுக் காரியம் பாராதவன் நாட்டுக் காரியம் பார்ப்பானா?
வீட்டுக்கு அடங்காத பிள்ளையை ஊரார் அடக்கி விடுவார்கள்.
(அடங்காததை ஊர் அடக்கும்.)
வீட்டுக்கு அலங்காரம் பெரிய குடி. 20510

வீட்டுக்கு அலங்காரம் மனையாள்.
வீட்டுக்கு அலங்காரம் விளக்கு.
வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை.
வீட்டுக்கு இருந்தால் வெண்கலப் பெண்டாட்டி; வீட்டுக்கு இல்லாமற் போனால் தூங்கல் பெண்டாட்டி.
(வெறும்பயல் பெண்டாட்டி.)
வீட்டுக்கு உள்ளே வேட்டை நாயை உசுப்புவானேன்? 20515

வீட்டுக்கு ஏற்றின விளக்கு விருந்துக்கும் ஆகும்.
வீட்டுக்கு ஒரு மொதலை; கேட்டுக் சொன்னடி மாரியாத்தை.
(மாரியாத்தா. பாரதம் படிக்கிறவருக்கு.)
வீட்டுக்கு ஒரு வாசற்படி; பூட்டுக்கு ஒரு திறவு கோல்.
வீட்டுக்குக் கேடும் சோற்றுக்கு நாசமும்.
வீட்டுக்குச் சோறு இல்லை; சிவன் அறிவான்; நாட்டுக்குச் செல்லப் பிள்ளை நான் அல்லவா? 20520

வீட்டுக்குப் புகழ்ச்சியோ, நாட்டுக்குப் புகழ்ச்சியோ?
வீட்டுக்குப் புலி; காட்டுக்குப் புலி.
வீட்டுக்கு முன்னே காட்டைக் கட்டி, மாட்டுக்குப் பின்னால் வைக்கோல் போட்டது போல்.
(பட்டத்துக்கு முன்னே.)
வீட்டுக்குருவியைக் காட்டுக் காட்டுக் குருவியைப் பிடி.
வீட்டுக்கு வாய்த்தது எருமை; மேட்டுக்கு வாய்த்தது போர். 20525

வீட்டுக்கு விளக்கே வேண்டாம்.
வீட்டுக்கு வீடு எதிர் வீடு ஆகாது.
வீட்டுக்கு வீடு மண் அடுப்பே தவிரப் பொன் அடுப்பு இல்லை.
வீட்டுக்கு வீடு வாசற்படி ஒன்றுதான்.
வீட்டுக்கு வீரன்; காட்டுக்குக் கள்ளன். 20530

வீட்டுக்குள் கஞ்சித் தண்ணீரைக் குடித்துவிட்டு மீசையில் வெண்ணெயைத் தடவிக் கொண்டு புறப்படுகிறது.

வீட்டுக்குள் விடிந்தால்தான் வெளியிலும் விடியும்.
(யாழ்ப்பாண வழக்கு.)
வீட்டுக் கொடியை வெட்டினால் வீட்டுப் பெண் வேட்டகத்தில் தங்காது.
வீட்டுச் செல்வம் மாடு; தோட்டச் செல்வம் முருங்கை.
வீட்டுச் சோற்றைத் தின்று ஊருக்கு உதவினான். 20535

வீட்டுச் சோற்றைத் தின்று வீண் சண்டைக்குப் போவானேன்?
வீட்டுச் சோற்றைப் போட்டு வீண் பேச்சுக் கேட்பானேன்?
வீட்டுச் சோறும் வேண்டாம்; அடுப்பாண்டியும் வேண்டாம்.
(நாஞ்சில் நாட்டு வழக்கு. வீட்டுச் சாறும்.)
வீட்டுத் தெய்வத்தை விளக்குமாற்றால் அடித்துக் காட்டுத் தெய்வத்தைக் கை எடுத்துக் கும்பிட்டாளாம்.
வீட்டு நாய்ப் பாசம் ஒரு நாய்க்கு ஏது? 20540
(வேறு நாய்க்கு.)

வீட்டுப் பாம்பு காட்டுக்குப் போனால் அது காட்டுப் பாம்பு ஆகும்.
வீட்டுப் பிள்ளையும் வெளிப் பிள்ளையும் வித்தியாசம் அறியா.
வீட்டுப் புலி, வெளிப் பூனை.
வீட்டுப் பெண்சாதி வேம்பு; நாட்டுப் பெண்சாதி கரும்பு.
வீட்டு மூதேவியும் காட்டு மூதேவியும் கூடி உலாவுகின்றன. 20545

வீட்டு வேலை வெளி வேலை பார்த்துக் காட்டு வேலைக்குக் கட்டோடு போகலாம்.
வீட்டை எல்லாம் வெல்லத்துக்கு மாற்றினானாம்
வீட்டை ஏன் இடித்தாய்? மூட்டைப் பூச்சிக்குப் பயந்து.
வீட்டைக் கட்டி ஓட்டைப் போடு.
வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடி வைத்தது போல. 20550

வீட்டைக் கட்டிப் பார்; கல்யாணத்தைச் செய்து பார்.
வீட்டைக் கட்டு; அல்லது காட்டை அழி.
வீட்டைக் கட்டுமுன் கிணற்றைத் தோண்ட வேண்டும்.
வீட்டைக் காக்கும் நாயும் நாட்டைக் காக்கும் சேவகனும் ஒன்றாகி விடுவார்களா?
வீட்டைக் காத்த நாயும் காட்டைக் காத்த நாயும் வீண் போகா. 20555

வீட்டைக் காத்து அருள்; பாட்டைப் பார்த்து அருள்.
வீட்டைக் கொளுத்தி வேடிக்கை பார்க்கிறதா?

வீட்டைப் பிடுங்கி விறகாய் எரித்தாலும்; வீணாதி வீணனுக்கு என்ன செய்வேன்?
வீட்டையும் கொள்ளை கொடுத்துப் பங்குக்கும் நிற்கிறது.
வீட்டையும் மெழுகி வைத்து வெறும் குழம்பையும் ஆக்கி வைத்துக் கல்லடிச் சோற்றுக்குக் காத்திருப்பார் சீரங்கத்தார். 20560

வீடு அசையாமல் தின்னும்; ஆனை அசைந்து தின்னும்.
வீடு அவரைப் பந்தல் போல் இருக்கிறது.
வீடு எரியக் கிணறு எடுக்க.
வீடு எல்லாம் குருடு; வாசல் எல்லாம் கிணறு.
(முற்றத்தில் எல்லாம் கிணறு.)
வீடு கட்டுகிறது அரிது; வீடு அழிக்கிறது எளிது. 20565

வீடு கட்டும் முன்னம் கிணறு வெட்ட வேண்டும்.
வீடு தருவோன் மேலும் தருவான்.
வீடு தோறும் வாசற்படி உண்டு.
வீடு நிறைந்த விளக்குமாறு.
வீடு பலக்கக் கட்டினால் புயலுக்கு ஈடு கொடுக்கும். 20570

வீடு பற்றிக்கொண்டு எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்.
வீடு பற்றி வேகும்போது கிணறு எடுப்பதா?
வீடு பற்றினதற்குக் கிணறு வெட்ட நாள் பார்த்த கதை.
வீடு போ போ என்கிறது; காடு வா வா என்கிறது.
வீடும் விளக்குமாய் இருந்தால் நாடும் நடப்பும் வேண்டாம்? 20575

வீடுவரை மனைவி; காடுவரை பிள்ளை.
வீடு விட்டு வெளிப்பட்ட நாய் விடுதி நாய்.
வீடு விழுந்தது விறகுக்கு ஆச்சு.
வீடு விளக்கும் விளக்குமாறு.
வீடு வீடாய் அலைகிறான். 20580

வீடு வீடாய் ஏறி இறங்குகிறான்.
வீடு வீடாய்ப் பதம் பார்க்கிறான்.
வீடு வெறும் வீடாய் இருந்தாலும் மணியம் ஏழு ஊர்.
வீடு வெறும் வீடு; மேல் வீடு அதிகாரம்.
வீடு வெறும் வீடு; வேலூர் அதிகாரம். 20585

வீண் ஆன வீணனுக்கு வாழ்நாளை மாய்ப்பானேன்.
(வீணாதி வீணனுக்கு.)
வீண் இழவாம், வெங்காயத் தோலாம்; பிடுங்கப் பிடுங்கப் பேரிழவாம்.
(வெங்காயத் தாளாம்.)
வீண் இழவுக்கு மார் அடிக்கிறதா?
வீண் இழவுக்கு வீட்டைக் கட்டிப் பார இழவுக்குப் பந்தல் போடு.
வீண் கட்டை என்றாலும் ஆண் கட்டை அல்லவோ? 20590
(யாழ்ப்பாண வழக்கு.)

வீண் பழி ஏன் ஏற்றுக் கொள்கிறாய்?
வீண் விபரீதத்தால் பேதையர் வீண் செலவு செய்ய உடன் படுவார்கள்.
வீணருக்குச் செய்தது எல்லாம் வீண் ஆம்.
வீணருக்கும் கீர்த்திக்கும் மெத்தவும் தூரம்.
வீணன் கருமம் இழந்தான். 20595

வீணாய் உடைந்த சட்டி வேணதுண்டு என் தலையில்; இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லை.
வீணாய் வீணாய் என்பதை ராமா ராமா என்றேன்.
வீணாலே ஏன் உழைக்கிறாய்?
வீணாரவாரம் இழவி திரண்டதும் பாட்டுக்கு வழி இல்லாமல் பிணங்கி அழுததும்.
வீணான சொல்லுக்கு வாயால் கெட்டேன். 20600

வீணுக்கு உழைக்கிறவன் வீணன்.
வீணுக்குத் தாலி கட்டி வேணுமென்று அறுத்தேனா?
(வீம்புக்கு அறுப்பதா?)
வீணை கோணினாலும் நாதம் கோணுமா?
(குறையுமா?)
வீதிச் சண்டையை விலைக்கு வாங்குவது போல.
வீதியும் பெண்ணும் விலை போச்சுது கை தப்பினால். 20605

வீம்புக்காரனுக்கு மேல் தெரியுமா?
வீம்புக்குப் புளியங்காய் தின்றாற் போல.
வீம்புக் குப்பையில் வீண் செடி.
வீம்புக்கு வேட்டை ஆடாதே.
வீம்புக்கு வேஷம் கொள்ளாதே. 20610

வீம்பு பேசுகிறவன் அழிவான்; வீரியம் பேசுகிறவன் விழுவான்.
வீமனுக்கு வேலை கொடுத்தது போல.
வீர சூரன் ஆனாலும் முன்படை வேண்டும்.
வீரம் இல்லாத பேடியைப் போருக்கு அழைத்ததுபோல
வீரம் எல்லாம் வெளிச்சம் ஆயிற்று. 20615

வீரம் கெட்டவன் சேரன் ஆவானா?
வீரம் பேசிக்கொண்டு எழுந்த சேவகன் வெட்டுக்களம் கண்டு முதுகு இடலாமா?
வீராணத்து ஏரி விழுந்து விழுந்து விளைந்தாலும் பெருமாக் கூர் ரண்டுக்குப் பொரிமாவுக்குக் காணாது.
வீரியத்தை விடக் காரியம் பெரிது.
வீரியம் இல்லையேல் காரியம் இல்லை. 20620

வீரியம் பெரிதோ, காரியம் பெரிதோ?
(பிரதானமா?)

## வெ

வெக்கைக்கு வேலி மறைப்பு.
வெகு ஜன வாக்யம் கர்த்தவ்யம்.
வெகு ஜன வாக்கியம் பொய் போகாது.
வெங்கண்ணை வாங்கு, உன் கண்ணைக் கொடுத்து. 20625

வெங்காயத்துக்கு எத்தனை வாசனை கூட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
(காட்டினாலும்)
வெங்காயத்துக்குத் தோல் உரித்தாற் போல.
வெங்காயம் இட்ட கறிக்குச் சந்தேகம் இல்லை.
வெங்காயம் உரிக்க உரிக்கத் தோலாய் இருப்பது போல.
வெங்காயம் விற்பவனைச் சங்கீதம் பாடச் சொன்னாற் போல. 20630

வெச்செனவுக்கு அன்றி வெண்ணெய் உருகுமா?
(வெச்ச அனலுக்கு அன்றி.)
வெட்கக்கேடும் சக்கிலியின் கூத்தும் போல.
வெட்கத்தால் ஒல்காதவன் குலஸ்திரீக்குப் போதாது.
வெட்கத்துக்கு அஞ்சினவன் கடனுக்கு அஞ்சுவான்.
வெட்கத்துக்கு அஞ்சினவன் சச்சரவு செய்வானா? 20635

வெட்கத்தை அக்குளிலே அடக்கிக்கொண்டு பேசுகிறான்.
வெட்கத்தை விற்றுக் கட்கத்திலே கொண்டு போகிறான்.
(அக்குளிலே கொண்டான்.)
வெட்கத்தை விட்டு வெளியிலே செல்லலாமா?
வட்கப்படுகிற வேசியும் வெட்கம் கெட்டசம்சாரியும் உதவுவார்கள்.
கம் அற்ற பெண்பிள்ளை வீண். 20640

இல்லையா, கோழி வளர்த்துப் புழுங்கலைத் தின்ன?
டையான் கடன் வாங்கக் கை நீட்டான்.
வேசியும் கெட்ட குலப் பெண்ணும் விளங்கார்.
லே.

வெட்கம் கெட்ட சுக்காங் கீரை, இரா அடுப்பிலே வெந்த கீரை. 20645

வெட்கம் கெட்ட நாய்க்கு விறாப்பு ஜாஸ்தியாம்.
வெட்கம் கெட்ட நாய்க்கு வெண் பொங்கலாம்.
வெட்கம் கெட்ட மூளிக்கு முக்காடு எதற்கு?
வெட்கம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.
வெட்கம் கெட்டவனுக்கு மேனி எல்லாம் அழுக்குத்தான். 20650

வெட்கம் கெட்டால் கெடுகிறது; என் தொப்பை நிரம்பினால் போதும்.
வெட்கம் கெட்டாலும் கெடட்டும், தொப்பையில் இட்டால் போதும்.
(தொப்பை இட்டால்.)
வெட்கம் கெட்டு வெளிப்பட்ட முண்டைக்கு முக்காடு ஏதுக்கு?
வெட்கம் சிக்கு விட்டு வெளிப்பட்ட மூளிக்கு முக்காடு ஒரு கேடா?
வெட்கம் வாழைக்காய்க் கறி ஆகுமா 20655
(வாழைக்காய் அறியுமா?)

வெட்டப் பலம் இல்லை; வெட்டிக்குப் போக மனம் இல்லை.
(விட்டுப் போக.)
வெட்டரி வாளுக்குக் குளிரா, காய்ச்சலா?
வெட்ட வருகிற மாட்டுக்கு வேதம் ஓதினால் ஒக்குமா?
(போதுமா?)
வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது.
வெட்ட வெளிச்சம் பட்டப்பகலாய்ப் போயிற்று. 20660

வெட்ட வெளியில் வையாளி விடுகிறதா?
வெட்ட வெளி வானத்தில் விட்டெறிந்த சந்திரன் போல்.
வெட்டி எல்லாம் தண்ணீர்; மண்வெட்டி எல்லாம் புல் நாற்று.
வெட்டிக் களை எடுத்தால் கட்டு முக்கலம் காணும்.
வெட்டிக்கு இறைத்து விழலுக்குத் தண்ணீர் கட்டினது போல. 20665

வெட்டிக்குப் பிறந்த பிள்ளை வேலியிலே.
(வெளியிலே.)
வெட்டிக்குப் போனாலும் விருந்துக்குப் போகாதே.
வெட்டிக் கெட்டது தென்னை; வெட்டாமல் கெட்டது பனை.
வெட்டிக் கெட்டது வேம்பு; வெட்டாமல் கெட்டது பூவரசு.
வெட்டிக்குப் பெற்று வேலியில் எறிந்து விட்டார்கள். 20670
(எறிந்தார்களா?)

வெட்டிக் கொண்டு வரச் சொன்னால் கட்டிக் கொண்டு வருவான்.
வெட்டிக் கொண்டு வா என்றால் குத்திக் கொண்டு வருவான்.
வெட்டிப் போட்டுக் கட்டிக் கொண்டு அழுகிறது.
வெட்டியானும் பிணமும் கட்டிப் புரளட்டும்.
(கட்டிக்கொண்டழட்டும்.)
வெட்டியானும் பிணமும் பட்டதைப் படுகிறது. 20675

வெட்டி வா என்றால் வேருடன் பிடுங்கி வருகிறான்.
வெட்டி விதை, கட்டி விதை.
வெட்டி வெட்டிப் பார்த்தாலும் முட்டைக்கரிக் காசுதான் அகப்படும்.
வெட்டி வேரில் விசிறியும் விளாமிச்சை வேரில் தட்டியும் பண்.
வெட்டின இடத்தில் ஜலம் ஊறும்; வீடு கட்டின இடத்தில்
தடை ஏறும். 20680

வெட்டின குளத்திலும் தண்ணீர் குடியாது; கட்டின வேலியும்
தாண்ட மாட்டாது.
வெட்டினவனுக்கு ஒரு கேணி; வீணாதி வீணனுக்குப் பல கேணி.
வெட்டு ஒன்று, துண்டு இரண்டு.
(கண்டம் இரண்டு.)
வெட்டுகிற கத்தியை வீசியா காட்ட வேணும்?
வெட்டுப் பட்டால் தட்டு விளையாது. 20685
(தட்டு-சோளத்தட்டு.)

வெட்டென உரையேல்; துட்டர்கள் அறைவர்.
வெட்டெனப் பேசேல்.
வெட வெட என்று தண்ணீர் குளிக்காதவளா உடன் கட்டை
ஏறப்போகிறாள்?
வெடி ஓசை கேட்ட நாய் போல.
வெடித்து உழக்கரிசி அடித்தது கிழக்கடா; வயிறாரத் தின்று
வழிமாண்டு போச்சு; பிள்ளை கையில் பிடிமானம் இல்லாமல்
கிண்ணியோடு சோறு புளித்துக் கிடக்கிறது. 20690

வெடிபடச் சிரிப்பவர் வெள்ளறிவுடையோர்.
வெண்கலக் கடையில் ஆனை புகுந்தாற் போல.
வெண்கலக் குகையில் வைத்து வியாழன் முப்பதும் ஊதினால்
மற்ற நாள் வெள்ளி ஆமே.
வெண்கலத்துச் சூடும் வேட்டகத்து வார்த்தையும் ஆறா.
வெண்கலம் ஒலிக்கும்; பொற்கலம் ஒலிக்காது. 20695

வெண்கலம் சஞ்சலம்.
வெண்கலம் நடமாடக் குயவன் குடி போகிறான்.
வெண்கலம் என்றால் ஓட்டை ஓட்டை என்கிறான்.
வெண்டலைக் கருடன் சென்று இடமானால் எவர் கையிற் பொருளும் தன் கையிற் சேரும்.
(வந்து இடமானால்.)
வெண்ணீறு வினை அறுக்கும். 20700

வெண்ணெய் இருக்க நெய்க்கு அழுவானேன்?
வெண்ணெய் உருகுமுன் பெண்ணை பெருகும்.
வெண்ணெய்க் கட்டியும் சீனியும் ஊட்டலாம்; விக்கிக் கொள் வதற்கு என் செய்யலாம்.
வெண்ணெய்க் கட்டியும் முப்பாலும் போடுவார்; விக்கிக் கொள் வதற்கு என் செய்வார்?
வெண்ணெய்க்குப் பல் முளைத்தாற் போல். 20705

வெண்ணெய் திரளும் போது தாழி உடைந்த மாதிரி.
(திரண்டு வரும் போது.)
வெண்ணெய் தின்றது ஒருவன்; விரல் சூப்பினது ஒருவன்.
(ஒருத்தி...ஒருத்தி)
வெண்ணெய்போல உழுதால் குன்று போல விளையும்.
வெண்ணெய் வெட்டி சிப்பாய்.
வெண்ணெய் வைத்துக் கொக்குப் பிடிப்பதா? 2071(

வெண்ணெயும் சீனியும் விரசி ஊட்டலாம்; விக்கிக் கொள் வதற்கு என்ன செய்யலாம்?
வெண்ணெய் தின்று சாம்பலைப் பூசிக் கொள்வது போல்.
வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா?
வெண்தலைக் கருடன் வந்து இடமானால் எவர் கைப்பொருளும் தன் கைப்பொருள் ஆகும்.
வெதும்பின பயிருக்கு மேகம் பெய்தாற் போல. 20715
(மழை பெய்தாற் போல.)

வெது வெது என்று தண்ணீர் குடிக்காதவனா உடன்கட்டை ஏறப் போகிறான்?
வெந்த சோற்றைத் தின்று வாய்க்கு வந்தது எல்லாம் பிதற்று கிறான்.
வெந்த சோற்றைத் தின்று விதி வந்தால் சாகிறது.
வெந்தது போதும்; முந்தியிலே கட்டு.
வெந்ததைத் தின்று வந்ததை உளறுகிறது. 20720

வெந்ததைப் போடு, முன்றானையிலே.
வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல.
(சொருகினது போல.)
வெந்த புண் வினை செய்யாது.
வெந்த முகத்தைக் காட்டாதே; வந்த விருந்தை ஓட்டாதே.
வெந்த மூஞ்சியை விளக்கில் காட்டினாளாம்; வந்த விருந்தெல்லாம் ஓடிப் போச்சாம். 20725

வெந்தயம் இட்ட கறிக்குச் சந்தேகம் இல்லை.
வெந்தயம் போடாத கறியும் கறி அல்ல; சந்தடி இல்லாத ஊரும் ஊர் அல்ல,
(சந்தை இல்லாத. ஆசாரி இல்லாத.)
வெந்தழல் மெழுகு போல,
வெந்தால் தெரியும் வெங்காய மணம்.
வெந்நீர் ஆனாலும் நெருப்பை அவிக்கும். 20730

வெந்நீர் இறைத்தால் வீடு வேகுமா?
வெந்நீர் என்றால் வாய் வெந்து விடுமா?
வெந்நீரில் குளிக்க அஞ்சுபவரா தீயிற்பாயப் புகுவார்?
வெந்நீரில் விழுந்த கோழி தானே எழுந்து போமா?
வெந்நீரில் வீடு வேகுமா? 20735

வெம்பா பெய்தால் சம்பா விளையும்.
வெய்யில் விதைப்பும் சரி; வைப்பாட்டி பிள்ளையும் சரி.
வெய்யிலில் அகப்பட்ட புழுவைப் போல.
வெய்யிலில் நடந்தால் நிழலின் அருமை தெரியும்.
வெய்யிலில் போட்டாலும் காய மாட்டான்; தண்ணீரில் போட்டாலும் நனைய மாட்டான். 20740
(உலர மாட்டான்.)

வெய்யிலில் விடுகிறதும் இல்லை; மழையில் விடுகிறதும் இல்லை.
வெய்யிலின் முன்னே மின்மினி பிரகாசிகுமா?
வெய்யோன் வெயில் முன் எரி தீபம் போல்.
வெல்லத்தால் பிள்ளையார் வைத்தால் நை வேத்தியத்துக்குக் கிள்ளி வைக்கலாமா?
வெல்லத்தைக் காட்டிப் பிள்ளையை அழைக்கிறதா? 20745

வெல்லப் படை இல்லை; தின்னப் படை உண்டு.
வெல்லப் பானையை எறும்பு மொய்த்தது போல.

வெல்லப் பிள்ளையாருக்கு வெல்லமே நைவேத்தியம்.
வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அதற்கே நைவேத்தியம் செய்கிறது.
வெல்லப் பேச்சுச் சொல்லுக்கு அசையாது. 20750

வெல்லப் போனான் ஒரு செல்லப் பிள்ளை; மெல்லப் போகிறான் ஓர் அமுங்குத் தலைவன்.
வெல்லம் உள்ள வாயைச் சளுப்பென்று நக்குகிறான்.
வெல்லம் என்கிற வாய் தித்திக்குமா?
வெல்லம் சர்க்கரை சொல்லப்பா, ஏட்டில் எழுதி நக்கப்பா.
வெல்லம் தின்கிறவன் ஒருவன்; விரலைச் சூப்புகிறவன் வேறு ஒருவன். 20755

வெல்லம் பெருத்தது வேலூர்.
வெல்லமும் போச்சு; வெல்லம் கட்டிய துணியும் போச்சு.
வெல்ல வார்த்தையால் சொல்லுகிறதா?
வெல்லாது உங்கள் படை; செல்லாது பாண்டியன் முன்.
வெள்ளத்து இடைப்பட்ட நரியினம் போல். 20760

வெள்ளத்தில் போனாலும் ஓடக்காரனுக்குக் காசு கொடேன் என்ற கதை.
வெள்ளத்தோடு போனாலும் ஓடக்காரனுக்கு அரைக்காசு கொடுக்க மாட்டான்.
வெள்ளம் கண்ட வானம் பெய்யும்.
வெள்ளம் பள்ளத்தை நாடும்; விதி புத்தியை நாடும்.
வெள்ளம் பாயும் கடலில் வாய்க்காலும் பாயும். 20765

வெள்ளம் வருகிறதற்கு முன்னே அணை போட வேண்டும்.
வெள்ளம் வரும்முன்னே அணை கோலிக் கொள்ள வேண்டும்.
வெள்ளம் வந்தபின் அணை போடலாமா?
வெள்ளமே போனாலும் பள்ளம் பார்த்துப் பயிர் இடு.
வெள்ளரிக் காய்க்கு விதை ருசி; கத்திரிக் காய்க்குக் காம்பு ருசி. 20770

வெள்ளரிக்காய்க் கூடை வெங்கூடை; பாகற்காய்க் கூடை பணக் கூடை.
வெள்ளரிக்காய் விற்ற பட்டணம்.
வெள்ளரித் தோட்டத்தில் புகுந்த குரங்கு போல.

வெள்ளரிப் பழத்துக்கு அளிஞக் கட்டினாற் போல்.
வெள்ளரிப் பழத்துக்குப் பூண் பிடித்தது போல. 20775

வெள்ளரிப் பழம் விரிந்து விடுகிறது போல விரிந்து விடாதீர்.
வெள்ளான் குட்டி வெடித்த குட்டி; சாணான் குட்டி சளைத்த குட்டி.
வெள்ளாட்டிக்குச் சன்னதம் வந்தால் விழுந்து விழுந்து கும்பிட வேண்டும்.
(விழுந்து விழுந்துதான்.)
வெள்ளாட்டி பெற்ற பிள்ளை விடியற் காலம் செத்துப் போயிற்று.
வெள்ளாட்டி பெற்று வேலியில் எறிந்தது. 20780

வெள்ளாட்டியும் பெண்டாட்டியும் சரியா?
வெள்ளாடு குழை தின்றது போல.
வெள்ளாடு தன்னோடே; செம்மறியாடு இனத்தோடே.
வெள்ளாடு நஞ்சிலும் நாலு வாய் கடிக்கும்.
வெள்ளாடு நனைகிறது என்று வேங்கைப் புலி விழுந்து விழுந்து அழுகிறதாம். 20785

வெள்ளாடு புகுந்த தோட்டமும் வெள்ளாளன் புகுந்த காரியமும் வெட்ட வெளி.
வெள்ளாளக் குடிக்கு ஒரு கள்ளாளர் குடி.
(வெள்ளாளர் குட்டிக்கு.)
வெள்ளாளர் செய்யாத வேளாண்மை ஒரு வேளாண்மை அல்ல.
வெள்ளாளன் கால் வைத்த இடமும் வெள்ளாடு கால் வைத்த இடமும் உருப்படா.
(திருநெல்வேலி வழக்கு.)
வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழ வழ, கொழ கொழ. 20790

வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் விழல் விழலே.
வெள்ளாளனை கெடுக்கா விட்டாலும் வெள்ளோலை கெடுக்கும்.
வெள்ளாளன் மரபே மரபு; கள்ளர் திருட்டே திருட்டு.
வெள்ளாளனை மினுக்கிப் பணணிக் கெட்டான்; வேசி தனுக்குப் பண்ணிக் கெட்டான்.
வெள்ளி இருக்க வியாழன் குளித்தாளாம். 20795

வெள்ளி எண்ணெய் கொள்ளிக்கு ஆகாது.
வெள்ளி எதிரில் போனாலும் போகலாம்; வெள்ளாளன் எதிரில் போகக் கூடாது.

வெள்ளிக்கிழமை கொள்ளிக்கு ஆகாது.
வெள்ளிக்குப் பல் முளைத்தால் போல.
வெள்ளிக்குப் போட்டதும் கொள்ளிக்குப் போட்டதும் சரி. 20800

வெள்ளி ஞாயிறு மேற்கே சூலம்.
வெள்ளிடை மலைபோல.
வெள்ளி போட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையா?
வெள்ளி மலையும் வேகவதி ஆறும்.
(வெள்ளிமலை-ஹஸ்திகிரியாகிய காஞ்சி.)
வெள்ளி மோதிரம ஓசை தரும்; பொன் மோதிரம் ஓசை தராது. 20805
(ஓசை பெறும்.)

வெள்ளியில் விதை முடி; சனியில் கதிர் முடி.
வெள்ளி வட்டிலும் வேண்டும்; விளிம்பிலே பொன்னும் வேண்டும்.
வெள்ளி வீசினால் வீசம் குறையும்.
வெள்ளுரான் புறமடை அடைத்தது போல.
வெள்ளெருக்குக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும் கள்ளக் கருமேகம் காணாமற் போம். 20810

வெள்வெலும்பை நாய் கடித்தது போல.
வெள்ளை இட்டால் வினை போகும்.
வெள்ளை உடுத்து வீசி நடந்தாலும் வெள்ளாட்டி வெள்ளாட்டியே
வெள்ளை எல்லாம் பால்; வெளுத்தது எல்லாம் மோர்.
வெள்ளைக்காரன் காலத்திலே தலைத் தலைக்குப் பண்ணாட்டு. 20815

வெள்ளைக்காரனுக்கு ஆட்டுத் தோல் இடம் கொடுத்தார்கள், அது அறுத்து ஊர் முழுதும் அடித்து இது எனது என்றான்.
வெள்ளைக்கு அழுக்கும் வேணடாத பேருக்கு வார்த்தையும் எப்படியும் வரும.
(வெள்ளைத் துணிக்கு அழுக்கும்.)
வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.
(வெள்ளைக்குக் கள்ளம் இல்லை.)
வெள்ளை கொடுகக வினை தீரும். 20820

வெள்ளை கொடுத்தால் வினை தீரும்; பச்சை கொடுத்தால் பாவம் தீரும்.
வெள்ளைப் பாவாடை விரித்தாற் போல.

வெள்ளைப் பூண்டு எத்தனை வாசனை காட்டினாலும் துர்க் கந்தத்தையே வீசும்.
வெள்ளையப்பன் இருந்தால் எல்லாம் செய்யலாம்.
(வெள்ளையப்பன்-பணம்.)
வெள்ளையாய்ச் சொல்லிவிட்டான். 20825

வெள்ளையும் சள்ளையுமாய் வந்தான்; வீட்டுக்குச் சோற்றுக்கு இல்லை.
(சொள்ளையுமாய் வீட்டிலே சோறு இலலை.)
வெள்ளையும் சொள்ளையும்.
வெள்ளை வண்ணாத்திப் பூச்சி மிச்சமானால் வெள்ளம் ஜாஸ்தி.
வெள்ளை வேட்டி வீராசாமிக்கு வேலூரிலே பெண்ணாம்.
வெளிச்சம் இருள் ஆனால் இருள் என்ன ஆகும்?
வெளிச்சம் புகாத வீட்டில் வைத்தியன் புகுவான். 20830

வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி.
வெளிமழை விட்டாலும் செடிமழை விடாது.
வெளியில் ஒழுங்கு; உல்ளே ஒக்காளம்.
வெளியில் சொன்னால் வெட்கக் கேடு.
வெளியில் சொன்னால் வெட்கம்; சொல்லாவிட்டால் துக்கம். 20835

வெளியில் தளுக்கு; உள்ளே அழுக்கு.
வெளியில் பார்த்தால் டம்பம்; உள்ளே பார்த்தால் ஒக்காளம்.
வெளுத்தது எல்லாம் பால் ஆகுமா? கறுத்தது எல்லாம் தண்ணீர் ஆகுமா?
வெருத்த நாரை வலமானால் விற்பதற்கு இரட்டை விலை.
(இரட்டி.)
வெளுத்து விட்டாலும் சரி; சும்மா விட்டாலும் சரி; 20840

வெளுப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்.
வெளு வெளு என்று வெளுத்து விட்டான்.
வெற்றி பெற்றவன் சுத்த வீரன்.
வெற்றியும் தோல்வியும் வீரனுக்குச் சமம்.
வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசிக்கு மஞ்சளும் போல. 20845

வெற்றிலைக் கொடி விசாகக் கார்த்திகையில் விசிறிப் போட்டாலும் செழிக்கும்.

வெற்றிலை தந்த விஜய லக்ஷ்மி,
வெற்றிலைப் பொதிக்காரனும் அழுகிறான்;உப்புப் பொதிக்காரனும் அழுகிறான்.
வெற்றிலை போடுவாள் பெண் பிள்ளை; அவளை வெற்றிலைக் கொடிக்காலுக்கு விடமாட்டான் ஆண்பிள்ளை.
வெற்றிலை போல் இருக்கும், மிகுந்த மரம் ஆகிவிடும்; புத்தி உள்ள பூமரத்துக்குப் பூ இரண்டு வக்கணையாம். 20850

வெற்றிலை விலையைக் குத்திரத்திலே எழுதாதே.
வெற்றிக்காரன் குடியை விடான்; வீண் புத்திக்காரன் பாவத்துக்கு அஞ்சான்.
வெறிக்கு இட்டு அழியேல்.
வெறி கொண்ட ஆனை மதர்த்துத் திரிகிறது போல.
(மிதந்து.)
வெறி கொண்ட மனசுக்குக் குழி தோண்டும் குணம் தோன்றும். 20855

வெறி நாய் அழகு சொறிநாய்க்கு வருமா?
வெறி நாய்க்கு வெல்லக் கட்டி.
வெறி நாய் கடித்தால் உடனே மரணம்,
வெறி நாய் போல.
வெறி நாய் வேட்டி கட்டித் திருநாள் பார்க்கப் போகிறது. 20860

வெறிப் பிள்ளை கிழித்தது கோவணத்துக்கு ஆகும்.
வெறி பிடித்த நாய்க்கு வெந்நீர் ஸ்நானமாம்.
வெறி பிடித்த நாய்மாதிரி கண்ணும் மண்ணும் தெரியவில்லை.
வெறி பிடித்த நாய் வேங்கைக்குச் சமம்.
வெறி பிடித்த நாய் வேடிக்கை ஆகாது. 20865

வெறியன் கிழித்தது கோவணத்துக்கு ஆயிற்று.
வெறுகு இட்டு அழியேல்.
வெறும் கஞ்சியைக் குடித்துவிட்டு மீசையிலே நெய்யைத் தடவிக் கொள்கிறது.
(கொள்கிறதா?)
வெறும் கழுத்துக்கு அரைப்பணத்துத் தாலி சிலாக்கியம்.
(மேல.)
வெறும் கழுதைக்கு வீறாப்பு அதிகம். 20870

வெறும் காதுக்கு ஓலைக்காது மேல்.
வெறும் குண்டி அம்மணம்; போட்டுக்கொள் சம்மணம்.

வெறும் கைத் தட்டான் இரும்பு ஊதிச் செத்தான்.
வெறும் கை முழம் போடுமா?
வெறும் சட்டி தாளிக்கிறாள். 20875

வெறும் சலுக்கன் விறாப்புக்காரன், வீட்டிலே சோற்றுக்கு இல்லை.
வெறும் சிறுக்கி அகமுடையான் வீம்புக்குத் தாண்டி விழுந்தானாம்.
வெறும் சிறுக்கியாம், போலியாம், வெள்ளியினாலே பீலியாம்.
வெறும் தரையில் கிடந்த பாட்டிக்குக் குறுங்கட்டில் கிடைத்ததாம்.
வெறும் நாய் சந்தைக்குப் போய் வெள்ளிக் கோல் அடியும் பட்டதாம். 20880

வெறும் பானையில் பழையதும் வேப்பங்காய்த் துவையலும்.
வெறும் பானையில் புகுந்த ஈயைப் போல.
(எலியைப் போல.)
வெறும் பிலுக்கு வண்ணான் மாற்று.
வெறும் புயலுக்கு ஏற்ற விறாப்பு.
வெறும் புளி தின்றால் பல் கூசும். 20885

வெறும் வாய்க்கு இலை கெட்டவன்.
(சீவக சிந்தாமணி. 1280)
வெறும் வாய்க்கு இலை கெட்ட மாப்பிள்ளை வருகிறான்; கடன் வாங்கித் திருவிளக்கு ஏற்று.
வெறும் வாய்க்கு இலை கெட்டவன் வருகிறான்; கடன் வாங்கியாவது விளக்கு ஏற்றி வை.
வெறும் வாய்க்கு இலை கெட்டவன் விறகுக்குப் போனால் விறகு கிடைத்தால் கொடி கிடைக்காது; கொடி கிடைத்தால் விறகு கிடைக்காது.
வெறும் வாயை மென்றவனுக்கு வெள்ளை அவல் கிடைத்தது போல. 20890
(மென்றவளுக்கு.)

வெறும் வாயை மெல்லுகிற அம்மையாருக்கு நாழி அவல் அகப்பட்டது போல.
வெறும் வாயை மெல்லுகிற கிழவிக்கு ஒரு பிடி அவல் கிடைத்தது போல்.
(ஒரு வாய் அவல்.)
வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் கிடைத்தால் விடுவாளா?
(மெல்லுகிறவன்... விடுவானா?)

# வே

வேகத்தில் நாலு விதம் உண்டு.
(வேதத்தில்.)
வேக நேரம் இருந்தாலும் சாகநேரம் இல்லை. 20895
(போது.)

வேகப் பொறுத்தது ஆறப் பொறுக்கக் கூடாதா?
(பொறுக்க வில்லையா?)
வேகாத கல்லை எடுத்து நோகாமல் இடித்துக் கொள்.
வேகாத சோற்றுக்கு விருந்தாளி இரண்டு பேர்.
வேகாத சோற்றுக்கு வேண்டாத விருந்தாளி.
வேகாத வீட்டில் வேகும் கட்டை காமம். 20900

வெகிற வயிற்றுக்கு வெள்ளி என்ன செவ்வாய் என்ன?
(வேகிற உடலுக்கு.)
வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்.
(ஆதாயம்.)
வேகிற வீட்டுக்குக் கணக்குப் பார்ப்பார் உண்டா?
வேகிற வீட்டுக்கு வெட்டுகிற கிணறு.
வேகிற வீட்டை அவிக்காமல் இருப்பார் உண்டோ? 20905

வேங்கைப் புலியை வெள்ளாடுகள் சூழ்ந்தாற் போல்.
வேசி அவல் ருசியை அறியாள்; வெள்ளாட்டி எள் ருசியை அறியாள்.
வேசி ஆடினால் காசு; வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு.
வேசி உறவு காசிலே.
(காசிலும் பணத்திலுந்தான்.)
வேசி உறவும் வியாபாரி நேசமும் மாசி நிலவும் மதியாதார் முற்றமும். 20910

வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும் காசு பணத்தளவே காணலாம்.
வேசிக்கு ஆசை பணத்து மேலே.
வேசிக்கு ஆணை இல்லை; வெள்ளாட்டிக்குச் சந்தோஷம் இல்லை.

வேசிக்குக் காசுமேல் ஆசை; விளையாட்டுப் பிள்ளைக்கு மணிமேல் ஆசை.
வேசிக்கு விழி நீர் அரிதோ? 20915

வேசி காசு பறிப்பாள்.
வேசி மேல் ஆசைப் படுகிறது, வெள்ளெலும்பை நாய் கவ்வினது போல.
வேசியரும் நாயும் விதி நூல் வைத்தியரும் பூசாரும் ஒருவருக்கு ஒருவர் பொருந்தும்.
வேசியரும் நாயும் விதி நூல் வைத்தியரும் பாசம் அற்று நிற்பது காண்பர்.
(கண் பார்.)
வேசியைப் பெண்டாக வைத்துக் கொண்டால் வேறே வினை தேவை இல்லை? 20920
(பெண்டுக்கு.)

வேசியைப் பெண்டாக வைத்துக் கொண்டால் விளக்குத்தான் பிடிக்க வேண்டும்.
வேசைக் காய்ச்சல்.
வேசையர் ஆசை விடிந்தால் தெரியும்.
வேட்டகத்தில் உண்போன் கக்கித் தின்னும் நாயோடு ஒட்டான்.
வேட்டகத்துப் பருப்பு விளைய வேண்டும் என்று வேண்டிக் கொள்வது போல. 20925

வேட்டகத்து வார்த்தையும் வெள்ளிப் பாத்திரமும் ஆனா.
வேட்டால் மதனியை வேட்பேன்; இல்லாவிட்டால் பரதேசம் போவேன் என்றானாம்.
வேட்டியை வண்ணானுக்குப் போட்டாயா? வாணியனுக்குப் போட்டாயா?
வேட்டை ஆடிச் சிங்கம் தின்னும்.
வேட்டைக்காரனுக்கும் ஆட்டக்காரனுக்கும் பகை; வேசிக்கும் தாசிக்கும் பகை. 20930
(வேடக்காரனுக்கும் ஆடல்காரனுக்கும்.)

வேட்டைக்கு ஆகாத நாய் வீரம் பேசியதைப் போல.
வேட்டைக்குச் சென்ற நாய் வீட்டுக்கு வந்தது போல.
வேட்டை கண்ட நாயும் சாட்டை கண்ட மாடும் சும்மா இருக்குமா?
வேட்டை நாய்க்கு விருந்து அளிப்பது போல்.
வேட்டை நாய்ப் பாய்ச்சல் மாதிரி. 20935

வேட்டை நாய் போல் விழுகிறான்.
வேட்டை நாய் வழக்கு அறியுமா?
வேட்டை நாயை ஏவி விட்டது போல.
வேட்டை நாயைக் கண்ட சொறி நாய் வாலை மடக்கினது போல.
வேட்டை பெரிது என்று பேய் நாயைக் கட்டி
இழுக்கிறதா? 20940

வேட்டையில் பிரியமான வேட்டை சிக்காரி வேட்டை.
வேடக்காரா, வேடம் விடடா: ஓடக்காரா, ஓடம் விடடா.
வேடத்தில் நாலு விதம் உண்டு.
வேடத்தினால் என்ன, வெண்ணீற்றினால் என்ன?
வேடம் அழிந்து போம். 20945

வேடம் கூடம் கொள்ளாது.
வேடம் மூன்று வகை.
வேடமோ தவ வேடம்; மனத்திலோ அவ வேடம்.
வேடர் இல்லா ஊரில் யாவும் குடி இருக்கும்.
வேடர்களில் மலை வேடர் விசேஷம். 20950

வேடர் கையில் அகப்பட்ட தேன் கூண்டு போல.
வேடருக்கு அருமையான வேட்டை முயல் வேட்டை.
வேடன் பிள்ளைக்கு இறைச்சி அரிதா?
வேடன் வலையில் அகப்பட்ட மான்போல்.
வேடனுக்குத் தேன் பஞ்சமா? மூடனுக்கு அடி பஞ்சமா? 20955

வேடிக்கைக்குப் பிள்ளை பெற்றேன்; வேண்டும் என்றால் பேர் இடு.
வேடிக்கைக்கு விலை இல்லை; கதைக்குக் கால் இல்லை.
வேடிக்கைக்கு விலை உண்டா?
வேண்ட வேண்டத் தாண்டவம் ஆடுகிறான்.
வேண்டாத நாளிலே வேப்பங்காய் ஆனேன். 20960

வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம்; கால் பட்டால்
குற்றம்.
வேண்டாத பேருக்கு ஈந்து என்ன? வேலையில் ஆற்றுத்தண்ணீர்
விழுந்து என்ன?
வேண்டாதவனுக்கு வலப் பக்கத்தில் ஊறுகாய்.
வேண்டாதவனுக்கு வெறும் வெற்றிலை.
(வேண்டாதவன் கையில்.)
வேண்டாதாரை நினைத்தாய் வேப்பங்காய். 20965

வேண்டா வெறுப்பாய் ஏண்டா கொடுப்பாய்?
வேண்டா வெறுப்பும் திருவாதிரையும்.
வேண்டியவன் காதலைப்பார்; வேண்டாதவன் தூதைப்பார்.
(காதல்-கூளப்ப நாயக்கன் காதல் தூது-விறலிவிடுதூது.)
வேண்டி வினை செயேல்.
வேண்டி வேண்டிக் கொடுத்தால் வேண்டாம் என்பதா? 20970

வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் வேண்டாம் என்றாற் போல.
வேண்டினால் வேலியிலும் காய்க்கும்; வேண்டாவிட்டால்
வேரிலும் காய்க்காது.
வேண்டும் அயிரை விட்டு வரால் வாங்குபவர்.
(பழமொழி நானூறு.)
வேண்டும் ஆனால் அவரை வேரிலும் காய்க்கும்.
வேண்டும் என்றால் எதுதான் செய்யக்கூடாது? 20975

வேண்டும் என்றால் வீடு; வேண்டாம் என்றால் காடு.
வேண்டும் என்றால் வெண்ணெய்போல நாற்கலாம்.
(வெண்ணெய்க் கட்டி போல.)
வேண்டும் என்றால் வேரிலும் காய்க்கும்; வேண்டாவிட்டால்
கொம்பிலும் காய்க்காது.
(செடியிலும் காய்க்காது.)
வேண்டும் என்று நாற்றால் வெண்ணெய் போல் நாற்கலாம்.
வேணும் கட்டைக்கு வேணும்; வெண்கலக் கட்டைக்கு
வேணும். 20980

வேதத்தில் நாலு விதம் உண்டு.
வேதத்துக்கு உலகம் பகை; உலகத்துக்கு ஞானம் பகை.
வேதத்துக்கும் விக்கிரக பக்திக்கும் பகை.
வேதத்தை அறியாத கிழவன் வீண்.
வேதம் ஆய்ந்து ஓதல் போதகர் முறைமை. 20985

வேதம் ஏன், நியாயம் ஏன், வித்தாரக் கள்ளருக்கு?
வேதம் ஓத்த மித்திரன்.
வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர் மழை.
வேதம் கெட்டவரை வேதம் செட்டவர் என்பானேன்?
வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது. 20990
(செய்யாது.)

வேதாரணியத்தில் பாம்பு கடிக்கிறதும் இல்லை; வேதாரணியத்தில்
பாம்பு குறைகிறதும் இல்லை.

வேதாரணியத்தில் விளக்கு அழகு.
வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டது.
வேதியர்க்கு அழகு வேதம் ஓதுதல்.
வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும். 20995

வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை.
(வேறு துணை இல்லை.)
வேந்தனும் பாம்பும் நெருப்பும் சரி.
வேப்பங்கனிக்குக் காகம் காத்திருக்கும்.
வேப்பங்காய்க் குழம்பும் விழி இலைத் துவையலும் அகமுடையாள் சமைத்தால் அமிர்தம் அமிர்தம் என்பானாம்.
வேப்பந் தோப்பும் நாய் மந்தையும் காண்பது அரிது. 21000

வேப்பம் பழம் சிவந்தாலும் விரும்புமா கிளி?
(கனிந்தாலும்.)
வேப்பிலைக் கட்டியும் விழுதலைக் குழம்பும் அகமுடையாள் சமைத்தால் அமிர்தம்.
(வேப்பிலைக் கறியும்.)
வேப்பூர்த் திருடனை நம்பினாலும் கருப்பூர்ப் பார்ப்பானை நம்பக் கூடாது.
(வேப்பூர் விழுப்புரத்துக்கு அருகில் உள்ள ஊர்.)
வேப்பெண்ணெய் விருந்து எண்ணெய் அல்ல; மருந்து எண்ணெய்.
வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா? 21005

வேப்பெண்ணெயும் ஆபத்துக்கு உதவும்.
வேம்பில் தேனை விட்டால் கசப்பு நீங்குமா?
வேம்பின் புழு வேம்பு அன்றி உண்ணாது.
வேம்புக்குப் பல் அழகு பெறும்; வேலுக்குப் பல் இறுகும்.
வேம்பு கரும்பு ஆச்சே; வெற்றிலையும் நஞ்சு ஆச்சே. 21010
(விஷம்.)

வேம்பு செய்வதை வேறு எவரும் செய்யார்.
வேம்பு தின்பவனுக்கு வேம்பு ருசி; கரும்பு தின்பவனுக்குக் கரும்பு ருசி.
வேம்பும் சரி; பாம்பும் சரி.
வேம்பும் சரி; வேந்தனும் சரி.
வேம்பும் தித்திக்குது, வேளையோடே பொல்லாப்பு. 21015

வேம்பு வாடுகிற வெயில்.
வேம்பு வெட்டிக் கெட்டது; பூவரசு வெட்டாமல் கெட்டது.

வேம்பைத் தின்றார்க்கு வேம்பே மரணம்.
வேம்பை விரும்பக் கரும்பு ஆகும்.
வேர் அற்ற மரம் போல் சாய்ந்தான். 21020

வேர் இல்லாக் கொற்றான் போலே.
வேர் ஓடி விரைத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது.
(விலத்தி. யாழ்ப்பாண வழக்கு.)
வேர்க்க விளையாடினால் வியாதி நீங்கும்.
வேர் நின்றால் மரம் நிற்கும்; வியாபாரம் நின்றால் செட்டி நிற்பான்.
வேர் மூலிகை, மரம் மூலிகை, காய் மூலிகை. 21025

வேரில் விட்டால் கிளையில் தளிர்க்கும்.
வேரைக் கல்லி வெந்நீரை ஊற்றுகிறது.
(விடலாமா?)
வேரைக் களைந்த மரம் பிழைக்குமா
வேல் உண்டு; வினை இல்லை; மயில் உண்டு, பயம் இல்லை.
வேல் தொளைத்த புண்ணிலே கொள்ளிக் கட்டையைச் சொருகினது போல். 21030

வேல் வைத்துப் பயிர் ஆக்குவோர் இல்லை.
வேலங்காட்டிலே போய் விளாங்காய் தேடினாற் போல.
(இருளர்.)
வேலம் பட்டை மேகத்தை நீக்கும்; ஆலம் பட்டை பித்தத்தை அடிக்கும்.
வேலமரத்துக்கு நிழல் இல்லை; வெள்ளாளனுக்கு உறவு இல்லை.
வேல மரத்து முள்ளும் ஆல மரத்துக் கிளியும் ஆனேன். 21035

வேலனுக்கு ஆனை சாட்சி.
வேலி ஒன்றுக்கு ஈரிணை மாடும் இரண்டு ஆளும் வேண்டும்.
வேலி ஒன்றுக்குப் பன்னிரண்டு சலம் விரைப்பாடு.
வேலிக்கு ஓணான் சாட்சி.
வேலிக்கு ஓணான் சாட்சி; வெந்ததுக்குச் சொக்கன் சாட்சி. 21040

வேலிக்கு ஓணான்சாட்சி; வேலனுக்கு ஆனை சாட்சி.
வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினை ஆயிற்று.
வேலிக்கு முள் இடக் காலில்தைத்தது.
(முள் போட.)
வேலிசாடும் பசுவுக்கு என்றைக்கும் கோல் கொண்டுதான் மரணம்.
(நாஞ்சில் நாட்டு வழக்கு.)
வேலி நிழல் ஆமோ? வேற்றுப் பேர் தாய் ஆமோ? 21045

வேலி நிழலும் நிழல் அல்ல; ஆண் உறவும் உதவு அல்ல.
வேலிப் புறத்தில் கண்ணும் மாமியார் தலையில் கையும்.
வேலியிலே சீலையைப் போட்டால் மெள்ளத்தான் எடுக்க வேணும்.
வேலியே மேய்ந்தால் விளைவது எப்படி?
(விளையுமாறு எப்படி.)
வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி? 21050

வேலியே வயலை அழித்தால் விளைகிறது எங்கே?
வேலிலும் நாலு பலன் உண்டு.
வேலி வைத்துக் காப்பாற்றாத கன்றும் ஆலை வைத்து ஆடாத வாணியனும் சரி அல்ல.
(வீண்.)
வேலுக்குப் பல் உறுதி; வேம்புக்குப் பல் ஒளி.
வேலும் வாளும் அடலுக்கு உறுதி. 21055

வேலை அதிகம், சம்பளம் கொஞ்சம்.
வேலை அற்ற அம்பட்டன் பூனையைப் பிடித்துச் சிரைத்தானாம்.
வேலை அற்ற அம்பட்டன் பெண்டாட்டி தலையைச் சிரைத்தானாம்
வேலை அற்ற அம்பட்டன் மகளைப் பிடித்துச் சிரைத்தானாம்.
வேலை அற்ற கோழி வெறுமனே முட்டை இட்டதாம். 21060

வேலை அற்ற தட்டான் ஊது குழலை உடைத்தானாம்.
வேலை அற்ற நாய்க்கு வேறு வேலை என்ன?
வேலை அற்ற மாமியார் கழுதையைப் போட்டுச் சிரைத்தாளாம்.
வேலை அற்ற மாமியார் மருமகளைப் போட்டுத் தாலாட்டினாள்.
வேலை அற்றவன் ஓலையை ஏற்று; பிரித்து கொட்டுண்டால் திருப்பி ஏற்று. 21065
(யாழ்ப்பாண வழக்கு.)

வேலை அற்றவன் வேளாளத் தெருவுக்குப் போ; அலுவல் அற்றவன் அக்கிரகாரத்துக்குப் போ.
வேலை இல்லா ஊருக்கு ராஜா ஏன்? பாம்பு இல்லா ஊருக்குக் கீரிப் பிள்ளை ஏன்?
வேலை இல்லாத் தலை வீண் எண்ணக் கலை.
வேலை இல்லாத அம்பட்டன் ஆட்டைச் சிரைத்தானாம்.
வேலை இல்லாதவன் சீலைப் பேன் குத்தினாற் போல். 21070

வேலை இல்லாதவன் வேளாளத் தெருவுக்குப் போனாற் போல.
வேலை இல்லாதவனுக்குச் சாப்பாடு எதற்கு? எச்சில் சோற்றுக் காரனுக்கு டம்பம் எதற்கு?

வேலை ஏன், பிள்ளை ஏன், வேலை இல்லாருக்குச் சாப்பாடு ஏன்?
வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு.
(வேலைக் குழப்பிக்கு.)
வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு; வெட்கம் கெட்ட நாரிக்கு அகமுடையான்மேல் சாக்கு. 21075

வேலைக் கள்ளிக்கு வேளைக்குக் காற்படி; வீண் கட்டைக்கு வேளைக்கு அரைப்படி.
வேலைக்காரன் வந்தால் கூழைக் காய்ச்சி ஊற்று.
வேலைக்காரி என்று வேண்டிய பேர் கேட்டார்கள்; குடித்தனக்காரி என்று கொடுக்க மாட்டோம் என்றார்கள்.
வேலைக்காரி என்று வேலூரில் கேட்டார்களாம்.
வேலைக்காரியாய் வந்தவள் வீட்டுக்காரி ஆனால் அது அவள் அதிர்ஷ்டம். 21080

வேலைக்கு அடுத்த கூலி; வேசிக்கு அடுத்த கூலி.
வேலைக்கு இளைத்தவளுக்குப் பிள்ளை மீது சாக்கு.
வேலைக்கு ஏற்ற கூலி.
வேலைக்குத் தக்க கூலி, விருப்பத்துக்குத் தக்க கூர்மை.
வேலைக்குத் தக்க கூலி; வேசிக்கு வேண்டியது காசு. 21085

வேலைக்குத் தகுந்த வேஷம்.
வேலைக் குழப்பிக்குப் பிள்ளை மேல் ஆசை; விளையாட்டுப் பெண்ணுக்கு மண்மேல் ஆசை.
வேலைக் குழப்பிக்குப் பிள்ளைமேல் சாக்கு.
வேலைக்கோ சம்பளம், ஆளுக்கோ சம்பளம்?
வேலை செய்தால் கூலி; வேஷம் போட்டால் காசு. 21090

வேலை செல்லாத பிள்ளையைக் கையில் வை.; வேலை செய்கிற பிள்ளையைக் காலில் வை.
வேலை பார்த்துப் பெண்ணைக் கொள்.
வேலை முகத்தில் நெருப்பும், சோற்று முகத்தில் சிரிப்பும்.
வேலை முத்தோ, பிள்ளை முத்தோ?
வேலை மெனக்கெட்ட அம்பட்டன் பூனைக் குட்டியைச் சிரைத்தானாம். 21095

வேலையில் நல்ல அடி அடிக்கிறான்.
வேலையைப் பார்த்துக் கூலியைக் கொடு.

வேலையைப் பார்த்துப் பெண்ணை எடு; சாலையைப் பார்த்து ஊருக்கு நட.
வேலையோ இன்னதென்று தெரியவில்லை; காரியம் இடுப்பு ஒடிகிறது; செலவுக்குப் பணம் இல்லை; செவலைக் காளையை விற்றுச் செலவுக்குப் பணம் அனுப்பு என்றானாம்.
வேழத்துக்குச் சிறிதும் பெரிதாய்த் தோன்றும். 21100

வேழத்தை ஒத்த வினை வந்தால் தீர்வது எப்படி? (எப்போது?)
வேழம் முழுங்கினாற்போல.
வேளாண்மை எல்லாம் வல்லாண்மையாலே.
வேளாளர் செய்யாத வேளாண்மை வேளாண்மை அல்ல.
வேளாளன் கல்யாணம் விடிந்தால் தீர்ந்தது. 21105

வேளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் விழல் விழலே.
வேளாளன் மரபே மரபு; கள்ளர் திருட்டே திருட்டு.
வேளாளன் வைத்துக் கெட்டான்; துலுக்கன் உடுத்துக் கெட்டான்.
வேளாளனைப் பாடிய வாயால் வேந்தனைப் பாடுவது இல்லை.
வேளை அறிந்து பேசு; நாளை அறிந்து பயணம் பண்ணு. 21110
(நட.)

வேளைக்காரன் படுத்துகிற பாட்டுக்கு மேளகாரன் என்ன செய்வான்?
(செய்ததற்கு.)
வேளைக்கு அரைக்காசு ஆயிரம் பொன் ஆம்.
வேளைக்கு அரைப்படி வெங்காய ரசம் இருந்தால் சும்மா இருந்து சொகுசாகச் சாப்பிடுவான்.
வேளைக்கு அரைப் பணம் ஆயிரம் பவுன்; வேளை தப்பினால் நாயுடைட மயிர்.
வேளைக்கு உதவாத பிள்ளை தாழங்காய்க்குச் சரி. 21115

வேளைக்கு ஓர் உறவு; ஆளுக்கு ஒரு மரபு.
வேளைககுத் தக்க புத்தி.
வேளைககுத் தகுந்த வேஷம்.
வேளையும் நாழிகையும் வந்தால் வேண்டாம் என்றாலும் நிற்காது.
வேளையும் பொழுதும் வாய்க்க வேணும். 21120

வேளையும் விதியும் வந்தால் வேலியால் வரும் மாப்பிள்ளை.
(யாழ்ப்பாண வழக்கு.)

வேளையோ அவவேளை; வீட்டிலோ அன்னம் இல்லை.
(அவல வேளை.)
வேற்றூர் அரிசி விறகு கறி உண்டானால் சாற்றூருக்கு இல்லை சரி.
வேற்றூர் அரிசியும் விறகும் உண்டானால் சாத்தூருக்கு ஒப்பு இல்வல.
வேறு வினை தேவை இல்லை; வினை தீர்த்தான் கோவிலுக்குப் போகவேண்டியதில்லை. 21125

வேனலுக்குக் கன மழை வரும்; வேந்தனுக்குக் கன ஜனம் சேரும்.
(வேனிலுக்கு.)
வேனில் காலத்துக்கு விசிறி; ஆனை காலத்துக்கு ஆச்சாவும் தேக்கும் வை.
வேஷத்தினால் என்ன, வெண்ணீற்றினால் என்ன?

## வை

வை என்ற எழுத்தே சொல்லும் செயலும் ஆகும்.
வை என்ற எழுத்தே பெயரும் வினையும் ஆகும். 21130

வைக்கத்துப்பட்டி, அரிப்பாட்டுக்குட்டி, அம்பலப் புழைக் காக்காய்.
(பட்டி-நாய், குட்டி-குழந்தை, இவை மிகுதியான இடங்கள்.)
வைக்கத் தெரியாமல் வைக்கோல் போரில் வைத்தானாம்.
(தெரியாதவன்.)
வைக்கத் தெரியாமல் வைத்துவிட்டு வந்தவரை எல்லாம் கேட்கலாமா?
வைக்கவும் தெரியாது; வைத்துப் படைக்கவும் தெரியாது.
வைக்கிறவன் வைத்தால் நடுப்பந்தியில் இருந்தால் என்ன, கடைப் பந்தியில் இருந்தால் என்ன? 21135

வைக்கோல் எடுத்த காசுக்கு வழக்காடி நிற்கையில் பரவச்சேரி மணியம் வாங்கித்தரச் சொன்னாளாம்.
வைக்கோல் எடுத்த வழியாய் இருக்கிறது.
வைக்கோல் கட்டுக்காரனாவது ஒதுங்கவேணும்; வழியே போகிறவனாவது ஒதுங்கவேணும்.
வைக்கோல் கட்டுக்காரனை ஒப்புக்குக் கட்டி அழுதாற் போல்.
வைக்கோல் கால் கொண்டு மாய்ந்து மாய்ந்து அடித்தானாம். 21140

வைக்கோல் கூரையிலும் விழல்கூரை வெகுநாள் இருக்கும்.
வைக்கோல் கூளமும் ஒரு வேளைக்கு உதவும்.
வைக்கோல் தின்கிற குதிரைக்கு வேகம் அதிகமா?
வைக்கோல் தின்கிற மாட்டுக்குப் பால் கொஞ்சம்; மதுரம் அதிகம்.
(இனிப்பு அதிகம்.)
வைக்கோல் தின்னும் குதிரை வீட்டுக் கூரையையும் பிடுங்கும். 21145

வைக்கோல் பஞ்சமா? வறட்டுப் பசு பஞ்சமா?
வைக்கோல் பட்டடையில் கட்டின நாய்.

வைக்கோல் படப்பின்மேல் நாய் படுத்தமாதிரி.
வைக்கோல் படப்புப் போல மெலிந்து போனாயே!
வைக்கோல் படப்பை நாய் காத்தாற் போல். 21150

வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவதுபோல.
வைக்கோல் போரில் நின்று மேயும் காளைக்குப் பிடுங்கிப் போட்டால் கட்டுமா?
வைக்கோலில் விளைந்ததை வைக்கோலில் கட்ட வேண்டும்.
வைகறையில் எழுந்து வயலுக்குப் போ.
வைகறைத் துயில் எழு. 21155

வைகாசி எள்ளு வாயிலே.
வைகாசி எள்ளை வரப்பிலே கொட்டு.
வைகாசி மழை பெய்தால் புளியம்பூப் பொய்க்காது.
வைகாசி மழை வாழை பெருகும்.
வைகாசி மாதத்தில் வரகு விதைத்தால் கையாடல் கலம் காணும். 21160

வைகாசி மாதம் ஆற்றில் தண்ணீர்.
வைகாசி மாதம் மதி குறைந்த நாலாம் நாள் பெய்யுமே யாகில் பெருமழையாம்; பெய்யாக்கால் மாரி மறுத்து மறி கடலும் நீர் வற்றி ஏரிக்குள் எள் விதை.
வைகாசி மாதம் வறுத்துக் குத்த வேணும்.
வைகாசி மாதம் வாய்திறந்த கோடை.
(கொங்கு நாட்டு வழக்கு.)
வைகாசி மாதம் வாய் மடையில் ஏர் பூட்டப் பொய்யாமல் பூக்கும் புளி. 21165
(பொய்யாது.)

வைகாசி மாதம் வாழை பெருகும்.
வைகுண்டத்துக்குப் போகிறவனுக்கு வழிகாட்டிக் கொடுக்க வேணுமா?
வைகுண்டம் என்பது திருமா நகரம்.
(திருமால் நகரம்.)
வைகுண்டம் என்பது ஸ்ரீரங்கம்.
வைகை ஆற்றுத் தண்ணீர் வேகம் அதிகம், 21170
(வைகைக்கு வேகம் அதிகம்;)

வைகை ஆற்று வெள்ளத்தில் பாலம் நிலைக்கிறது இல்லை.
வைகை ஆறு தாமிரபர்ணிக்கு மத்திமம்.

வைகைக் கரைக்கு வார்த்தையும் அங்கைக் கரைக்குக் கீர்த்தியும்.
வைசியர்களில் பூவைசியர் சிரேஷ்டம்.
(சிறந்தவர்.)
வைசியரும் சூத்திரரும் இருந்தல்லவோ பிராமணரும் க்ஷத்திரியர்களும் வருவார்கள்? 21175

வைகூரில் வந்தவர்கள் அம்மா என்று கூப்பிட வேண்டும்.
வைத்த உடைமையைக் கேட்க வயிறு எரிகிறது.
வைத்த கண் வாங்காத அழகு.
வைத்த கால் எடுக்கிறதற்குள் மாற்றுக் கால் செல் அரித்துப் போகிறதே!
வைத்தது உண்டானால் கெட்டதும் உண்டாகும். 21180

வைத்தது எல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்.
வைத்தது எல்லாம் மரம் ஆகுமா?
வைத்ததுக்குமேல் வழி இல்லை; பிச்சைக்குப் போகச் சுரைக் குடுக்கை இல்லை.
(சுரைக் குடுவை.)
வைத்தது கண்டது சொல்லாதே.
வைத்தது வரிசை; சிரைத்தது மொட்டை. 21185
(வைத்தது சட்டம்.)

வைத்த பணம் குறையக் கூடாது; மக்கள் தொப்பை வாடக் கூடாது.
வைத்த பாரம் சுமப்பான்.
வைத்த பிழைப்புக்கு வைப்பாட்டி இரண்டு பேர்.
வைத்த பிள்ளையைப் பாதுகாத்தால் பெற்ற பிள்ளைக்கு உதவும்.
(வைத்த பிள்ளை-தென்னம் பிள்ளை.)
வைத்த மரத்தில் இலை அறுக்காதே. 21190

வைத்த வரிசைக்குப் பிச்சம்மாவாசை.
வைத்தால் எடுக்க வேண்டும்; வழி அறிந்தவன் போக வேண்டும்.
(அறியாதவன்.)
வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டை.
வைத்தால் பிள்ளையார்; விட்டு எறிந்தால் சாணி.
(வழித்து எறிந்தால், வழித்து எடுத்தால்.)
வைத்திய சாஸ்திரம் சாஸ்திரங்களில் விசேஷம். 21195

வைத்தியத்தில் ரண வைத்தியமும் வயசில் யௌவனமும் நல்லவை
(வயசில் இளமையும் தன்மை தரும்.)

வைத்தியம் கொஞ்சமாவது தெரியாத பேர் இல்லை.
வைத்தியம் செய்தவன் எல்லாம் வைத்தியன்.
வைத்தியம் பெரிதோ, மருந்து பெரிதோ?
வைத்தியம், ஜோசியம், சங்கீதம், மந்திரம் தெரியாதவர்கள் இல்லை. 21200

வைத்தியமோ, பைத்தியமோ?
வைத்தியன் உயிர் இருக்கும் வரையில் விட மாட்டான்; வைதிகன் உயிர் போன பிறகும் விடமாட்டான்.
வைத்தியன் காய்கறிக்குப் போனது போல.
வைத்தியன் கையைப் பார்த்து வாக்கு இட்டது போல.
வைத்தியன் கைவிட்டது போல. 21205

வைத்தியன் கொடுத்தால் மருந்து; இல்லாவிட்டால் மண்.
வைத்தியன் சொன்னது எல்லாம் மருந்து.
வைத்தியன் தகப்பனைப் போல.
வைத்தியன் தலைமாட்டில் இருந்து அழுதது போல.
வைத்தியன் பாராத நோய் தீருமா? 21210

வைத்தியன் பிள்ளைக்கு நோய் தீராது; வாத்தியார் பிள்ளைக்குப் படிப்பு வராது.
வைத்தியன் பிள்ளை சாகாதோ? வாத்தியார் பெண் அறுக்காதோ?
வைத்தியன் பிள்ளை நோயாளி; வாத்தியார் பிள்ளை கோமாளி.
வைத்தியன் பிள்ளை நோயினால் சாகாது; மருந்தினால் சாகும்.
வைத்தியன் பிள்ளையும் வாத்தியார் பிள்ளையும் முட்டாள். 21215

வைத்தியன் பிள்ளை வைத்தியன்.
வைத்தியன் பெண்டாட்டி சாகிறது இல்லையா? வாத்தியார் பெண் அறுக்கிறது இல்லையா?
(வைத்தியன் பெண்.)
வைத்தியன் பெரிதோ? மருந்து பெரிதோ.?
வைத்தியன் பேச்சு நாவில் ஒரு பங்கு.
வைத்தியன் மருந்திலும் கை மருந்தே நலம். 21220

வைத்தியன் வீட்டில் சாவும் ஜோசியன் வீட்டில் அறுக்கிறதும் இல்லையா?
வைத்தியன் வீட்டு நாய் வாதநோய் அறியாதாம்.
வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதம்.

வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு.
வைத்தியனுக்குச் சொர்க்கம் இல்லை; வாத்தியாருக்கு
நரகம் இல்லை. 21225

வைத்தியனுக்குத் தன் ஔஷதம் பலிக்காதாம்.
(மருந்து.)
வைத்தியனுக்கும் அஞ்ச வேண்டும்; வம்பனுக்கும் அஞ்ச வேண்டும்.
வைத்தியனுக்கு மோட்சம் இல்லை; வாத்திக்கு மோட்ச
வழி உண்டு.
வைத்தியனுக்கு வந்தது அவன் தலையோடே.
வைத்தியனும் கைவிட்டால் ஆண்டவனே கதி. 21230

வைத்தியனைப் பெரியவன் என்பார் சிலர்; வாத்தியே பெரியவன்
என்பார் சிலர்.
வைத்திருந்த சொத்துக்கு வட்டி வளருமா?
வைத்தீசுவரன் கோவிலுக்குப் போயும் வயிற்று வலி தீரவில்லை.
வைத்துப் பார்க்கிறது விற்றுப் பார்.
வைத்து வாழ்ந்தவனும் இல்லை; கொடுத்துக் கெட்டவனும்
இல்லை. 21235

வைத்து வைத்தவன் போல எடுத்துக் கொண்டான்.
வைதவனுக்குத்தானே வாய் நோவும்?
வைதாரையும் வாழ்க என வாழ்த்து.
வைதாரையும் வாழவைக்கும்; வாழ்ந்தாரைத் தாழவைக்கும்.
வைதால் வட்டி போச்சு; அடித்தால் அசல் போச்சு 21240

வைதிகம் என்றால் தெய்வ சமயம்.
வைதிகம், லௌகிகம் இரண்டும் வேண்டும்.
வைதிகம் வாழ்ந்து அறி.
(ஆய்ந்து.)
வைப்பாரை வைக்கிற வரிசை தெரியவில்லை; விளக்குமாறு
சாத்துகிற முறை தெரியவில்லை.
வைப்பு வரப்புப் பார்க்க வேண்டும். 21245

வைப்பு வாக்குப் பார்த்துப் பேச வேண்டும்.
வையகக் கூத்தே வயிற்றில் அடக்கம்.
வையகத்தார் மழைக்கு என்ன செய்ய முடியும்?
வையகத்தில் எல்லோரும் ஒரு போக்கு அல்ல.
வையகத்தில் பொய் சொல்லாதவன் இல்லை. 21250

வையகத்தில் உடம்பு இல்லாத பேர்க்கு உப்பு வேண்டாம்.
வையகத்தில் உடம்பு இல்லாவிட்டாலும் உடை வேண்டும்; பணம் இல்லாவிட்டாலும் கனம் வேண்டும்.
வையகத்தில் உப்புக்கு ஏமாறின பேர் உடம்புக்கும் ஏமாறுவார்கள்.
(உடலுக்கும்.)
வையகத்தில் உப்பும் வேண்டும்; உடலும் வேண்டும்.
வையகத்தில் உயர்ந்தோர் சிலர்; தாழ்ந்தோர் பலர். 21255

வையகத்தில் உயர்ந்தோர்க்கு இரை தாழ்ந்தோர்.
வையகத்தில் சைவனுக்குச் சைவம் மேல்.
(சைவனே.)
வையகத்தில் தந்தையிலும் தாய் விசேஷம்.
(சிறந்தவள்.)
வையகத்தில் தெவிட்டாத பொருள் அன்னமும் தண்ணீரும்.
வையகத்தில் நல்லோர் ஒருவரைக் கண்டதில்லை. 21260

வையகத்தில் நல்விளையால் ஆகாது தீவினையால் ஆகுமா?
வையகத்தில் நெல் அரிசி வேண்டாதாரும் புல் அரிசி சிக்காதாரும் உண்டு.
வையகத்தில் நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்குப் பாயும்.
வையகத்தில் மேலான பேர்க்குத் தாழ்மையான மனசு இருக்க வேண்டும்.
வையகத்துக்குத் துணை வரதன் கடல் இணை. 21265

வையகம் உற்றவன் மெய்யகம் உற்றவன்.
வையகம் ஒழியும்; வான் ஒழியும்; வல்லவர் வசனம் ஒழியாது.
வையகம் செழிக்க மெய்யகம் வேண்டும்.
வையத்து மனிதன் நாலு வகை.
வையத்துள் நீதி செய்யத் தக்கது. 21270

வையம் ஏற்றின் ஐயம் இல்லை.
(ஏற்பின்.)
வையம் ஒத்தால் ஐயம் இல்லை.
வையம் ஒழியும், வான் ஒழியும், வல்லவர் வசனம் ஒழியாது.
வையம் கெட்டால் ஐயம் இல்லை.
வையம் பகைக்கின் ஐயம் உண்டு. 21275

வையம் புகழ்ந்தால் ஐயம் இல்லை.
வையம் பெரிது; அதில் வருத்தமும் பெரிது.

வையம் பெரிது ஆனாலும் வளம் உள்ள இடம் கொஞ்சம்,
வைய வைய வைரக்கல்; திட்டத் திட்டத் திண்டுக்கல்.
வையார் ஊசியைக் குறச் சேரியில் விற்றாற் போல. 21280

வைரத்தில் ஊசி பாயுமா?
வைரத்தை வைரம் அறுக்கும்; அரத்தை அரம் கொல்லும்.
வைரத்தை வைரம் கொண்டே அறுக்க வேண்டும்.
வைரம் கொண்டவன் வைரப் பொடி தின்று சாகிறான்.
வைரம் மனசில் வையாதே, 21285

வைராக்கிய சதகம் சதகங்களில் விசேஷம்.
வைராக்கியத்துக்கு அம்பட்டன் கத்தியை விழுங்குகிறா?
வைராக்கியம் பகை முதலிய துர்க்குணங்களில் விசேஷம்.
வைராகி துறவிகளில் விசேஷம்.
வைரியைக் கண்ட கொக்குக் கூட்டத்தைப் போல. 21290

வைவார்க்கு இன்பம் இல்லை; பொறுத்தார்க்குத் துன்பம் இல்லை.
வைஷ்ணவனுக்கு வயிற்றிலே பல்.

## வௌவா

வௌவால் அடிக்குப் பயப்படலாமா?
வௌவால் அடித்த பழமும் அணில் கடித்த பழமும் தள்ளுபடி ஆகுமா?
வௌவால் அடித்துத் தின்னும்; அணில் கடித்துத் தின்னும். 21295

வௌவால் அடைகிற வீட்டில் குடியிருப்பது எப்படி?
வௌவால் கட்சி.
வௌவால் கூட்டம் கூட்டமாக இருக்கும்.
வௌவால் தலை நரித்தலை போல.
வௌவால் தின்னாத பழம் இல்லை. 21300

வௌவால் போலத் தொங்குகிறான்.
வௌவால் வீட்டிலே வௌவால் போன கதை.
வௌவால் வீட்டுக்குப் போனால் தலை கீழாகத் தொங்க வேண்டும்.
வௌவால் வீட்டுக்கு வௌவால் போனால் நீயும் தொங்கு; நானும் தொங்கு.
(வந்தால்.)
வௌவாலாய்த் தொங்கினாலும் நடக்காத காரியம் நடக்காது. 21305

வௌவாலார் தின்ற கனி வாயாலே வாயாலே.
(யாழ்ப்பாண வழக்கு.)
வௌவாலுக்கு இரவில் கண் தெரியும்.
வௌவாலுக்கு எது தூரம்?
வௌவாலுக்கு ஒரு கனிக்கு நூறு கனி நஷ்டம்.
வௌவாலுக்கு நீளவும் தெரியும்; குறுகவும் தெரியும். 21310

வௌவாலுக்கு மரமே கதி; அதன் குஞ்சுக்கும் அதுவே கதி.
வௌவாலுக்கு யார் தாம்பூலம் வைத்தார்கள்?

வௌவாலைக் கொன்றாலும் பிடியை விடாது.
வௌவாலைத் தின்றாலும் அணிலைத் தின்னல் ஆகாது.
வௌவாலைப் பட்சி என்கிறதா, மிருகம் என்கிறதா? 21315

வௌவாலைப் போலத் தொங்குகிறான்.
வௌவாலோ சிறிது; அதன் அடியோ வலிது.
வௌவாலோடு அணில் பிள்ளை சேருமா?
வௌவி அணில் தொத்துகிறது போல.
வௌவிச் சேர்த்த பேர்க்குப் பொருள் உண்டு. 21320

வௌவிய கருமம் எண்ணித் துணி.
வௌவில் குடியிருக்கலாமா?
வௌவி வௌவிச் சேர்த்தாலும் மற்றவர்க்கு வைத்து
ஒழிவான்.
வௌவின பேர்க்கு முடிவது சுருக்கு.

# ஜ

ஜகத்தைக் கெடுத்தும் சுகத்தை வாங்கு. 21325

ஜபம் சாயாது.
ஜம்பம் சாயாது.
ஜயம் உள்ள மட்டும் பயம் இல்லை.
ஜலப் பிராயம்.
ஜலம் அருணாசலந்தான். 21330

ஜலம் கண்ட இடத்தில் கவிழை.
ஜலம் நுழையாத இடத்தில் எண்ணெயும் எண்ணெய்
நுழையாத இடத்தில் புகையும் நுழையும்.
ஜலம் விருத்தாசலம்.
ஜலமண்டலி கடித்தால் பரமண்டலந்தான்.
ஜன்மக் குருடனுக்குக் கண் கிடைத்தது போல. 21335

ஜன்மக் குணத்தைச் செருப்பால் அடித்தாலும் போகாது.
ஜன்ம குரு ராமர் வனவாசத்திலே.
ஜன்மத்தால் ஜாதியோ, கன்மத்தால் ஜாதியோ?
ஜன்மத்தில் பிறந்தது செருப்பால் அடித்தாலும் போகாது.
ஜன்மம் முந்தியா, கன்மம் முந்தியா? 21340

ஜனத்தோடு ஜனம் சேரும்; சந்தனத்தோடு கற்பூரம் சேரும்.
ஜனபலம் இருந்தால் மனபலம் இரும்.

## ஜா

ஜாடிக்கு ஏற்ற மூடி.

ஜாதி ஜாதியைக் கொள்ளும்; சதகுப்பை நாற்றத்தைக் கொடுக்கும்.

## ஜெ

ஜெ வித்தை காட்டுகிறேன்; பராக்கு இல்லாமல் பார். 21335

## ஜே

ஜேஷ்டப் பிராதா பிதுர் சம:

## ஜை

ஜைஜனன் கைச் சீலைப் பேன் போல,

## ஜோ

ஜோஸியம் சொல்லப் பாலியம் போதும்.
ஜோட்டால் அடித்து வெகுமானம் கொடுப்பது.
ஜோடி பிரிந்த அன்றில் போல. 21350

## ஸ்

ஸ்திரீ புத்தி பிரளயாந்த :
ஸ்மசான வைராக்கியம்,
ஸ்வான வைராக்கியம்.

## ஸ

ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்ரதானம்.
ஸர்வேந்த்ரியாணாம் நயனம் பிரதானம். 21355

# பிற்சேர்க்கை

அக்கடா என்று இருக்கிறான்.
அக்கடா என்று கிடப்பேன்.
அக்குசு இருந்தால் செய்வான்,
அக்குணிச் சிறுக்கிக்கு முக்கலக் கந்தை.
(கோழி).
அகடித கடனா சாமர்த்தியம். 5

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அச்செல்லாம் ஒன்றாய் அதிலே இரண்டு வகை வைச்சதென்ன சோணகிரி வள்ளலே.
அசகாய சூரன்.
அசலுக்கே மோசம் என்றால் வட்டி ஏது?
அஞ்சில் அம்பதில் ஒன்றறியாதவன். 10
(கம்பராமாயணம்).

அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணும் கறியாக்கும்.
அடாவடிக்காரன்.
அடித்து அடித்து அக்காரம் ஊட்டினது போல்.
அண்டப் புளுகு ஆகாசப் புளுகு.
அண்ணனுக்கு எட்டாது; தம்பிக்கு எட்டும். 15
(அண்ணன்-மேலுதடு. தம்பி-கீழுதடு. கீழுதடுதான் மேலுதட்டைத் தொடும். அண்ணன் என்று சொன்னால் உதடுகள் சேரா. தம்பி என்றால் சேரும்).

அண்ணாமலைத் தீபம்.
அண்ணாமலையில் மொட்டைப் பரதேசியைக் கண்டாயா என்றாற் போல்.
அணிலும் மணலிற் புரண்டு ஒட்டிய மணலை அணையிற் போட்டது போல.
அணோரணீயாம் மஹதோர் மஹீயாம்.
அத்தை மடி மெத்தை. 20

அத்தோடு ஒன்று; பத்தோடு பதினொன்று.
அதிர அடிக்கிறான்.
அந்தச் சரக்கு இங்கே விலை போகாது.
அநாசாரம் அந்தணனுக்கு ஆகாது.
அநுமான் வால் போல் நீளுகிறது. 25

அப்பனுக்கும் பெப்பே, உனக்கும் பெப்பே.
அப்பனைப்போல் பிள்ளை, அபத்தமாகப் பேசாதே.
அம்பட்டன் பொழுது போகாமல் தன் மனைவியின் தலையைச் சிரைத்தானாம்.
அம்மானை ஆடுகிறான்.
அமர்க்களத்தில் ஒப்பாரி உண்டா? 30

அமிஞ்சி வெட்டிக்கு ஆள் இடுகிறது.
அயல் வீட்டுப் பிராம்மணா, பாம்பைப் பிடி, அல்லித்தண்டைப் போல் குளிர்ந்திருக்கும்.
அர்ஜுனன் மனைவிமாரையும் ஆகாசத்து நட்சத்திரங்களையும் எண்ண முடியாது.
அரங்கின்றி வட்டாடி அற்றே. 35

அரசன் மெச்சினவள் ஊர்வசி.
அரண்மனைச் சேவகத்துக்குப் பஞ்சம் இல்லை.
அரவம் ஆட்டேல்.
அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்.
அருள் அற்றார் எல்லாம் அற்றார். 40

அரைக்காசுக்குப் போன வெட்கம் ஆயிரம் கொடுத்தாலும் வராது.
அரை குலையத் தலை குலைய.
அரைத்த மஞ்சள் தாவ தறிந்தேன்.
அரைத்த மாவையே அரைத்தல்.
(பிஷ்டபேஷண்ய நியாயம்.)
அல்லும் பகலும் அனவரதமும். 45

அலை அடங்கின கடலைப் போல்.
அவ்வினைக்கு இவ்வினை ஆகும்.
அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும் ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்.
(தாயுமானவர்.)
ஆக்கத் தெரியும்; படைக்கத் தெரியாது.
ஆகூழ் இருப்பதெல்லாம் ஆகும். 50

ஆங்காரம் அடங்கினால் பரமானந்த பதவி கிடைக்கும்.
ஆங்காரமதை அடக்கி ஐம்புலனைச் சுட்டெரித்துத்
தூங்காமல் தூங்கும் சுகம்.
ஆசா பாசம் அந்தம் வரையில் விடாது.
ஆசானே தெய்வம்.
ஆசி கூற ஆன்றோர் வேண்டும். 55

ஆசை அதிகமானால் மோசம் போவான்.
ஆடிப் பதினெட்டாம் பெருக்கு.
ஆடிப் பாடி அமர்ந்தான்காண் அம்மானை.
ஆடு குழை தின்றது போல.
ஆண்டவன்மேல் பாரத்தைப் போடு. 60

ஆணவம், சன்மம், மாயை என்பவை மூன்று மலங்கள்.
ஆத்தாடி, இந்தக்கொண்டை ஆரைக் குடி கெடுக்க?
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி.
(திருவாசகம்.)
ஆமை நினைத்துக் குஞ்சு பொரிக்கும்.
ஆமை வேகத்தில் நடக்கிறான். 65

ஆயிரம் நாப் படைத்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாது.
ஆரே அழகுக்கு அழகு செய்வார்?
ஆளுக்கு ஏற்ற மதிப்பு.
ஆற்றங்கரை மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்.
ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடிய ஆதர் போல். 70

ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதி கெடும்.
ஆனை அடி அப்பளம்.
ஆனை ஆனை அழகர் ஆனை.
ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான மதுரை நகர்.
இங்குஸதி அங்குஸ்தி. 75

இச்சா பத்தியம்
இசகு பிசகாக இருக்கிறது.
இடி இடிக்க, மழை பெய்ய.
இம்மியளவும் கொடான்,
இமயம் போல் உயர்ந்து நிற்கிறான். 80

இயற்கைக் குணத்தைச் செருப்பால் அடித்தாலும் போகாது.
இரட்டை மண்டையன்.

இரத்தல் இழிவு தரும்.
இரவல் புடைவையில் தூரமானாற்போல.
இரவி அறியாததைக் கவி அறியான். 85

இரவியின் முன் மின்மினி போல.
இரவில் கேட்ட இராமாயணம் ஓர் ஆளி பாரம்.
இரவு முழுவதும் இராமாயணம் கேட்டுச் சீதைக்கு இராமன் சிற்றப்பன் என்றானாம்.
இருட்டறையில் மலடு கறந் தெய்த்த வாறே. 90

இல்லாதவன் சொல் செல்லாது.
இல்லாதவனை இல்லாளும் நாடாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்.
இளைத்தவனைக் கண்டால் எருதும் மச்சான் முறை கொண்டாடும்.
இன்பம் உண்டேல் துன்பம் உண்டு.
இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடம் இல்லை. 95
(தாயுமானவர்.)

ஈரோடு பேன் வாங்கி.
உண்மையே வெல்லும்.
உப்புக்கும் புளிக்கும் பாடுவாள் ஔவை.
உருகுவது பக்திக்கு அடையாளம்.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். 100

உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளம்.
எல்லை மீறிப் பேசுகிறான்; ஒட்டி ஒட்டி உறவாடுகிறான்.
ஓடு புனற் கரையாம் இளமை; உறங்கி விழித்தாலொக்கும் இப்பிறவி.
கண்டு ஒன்று சொல்லேல். 105

கண்ணே கண்ணு, ஒண்ணே ஒண்ணு.
கரும்பிருக்க இரும்பு கடித் தெய்த்த வாறே.
கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்.
கழுதை குங்குமம் தான்சுமந் தெய்த்தால் கைப்பர் பாழ்புக.
கற்றது ஒழுகு. 110

கற்றபடி நில்,
கற்றவர் காய்வது காமனையே.
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி போல்.

கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன்.
காக்கை விழுந்து விழுந்து கரையும். 115

காணக் கண் கோடி வேண்டும்.
காயைத் தின்றால் பழம் இல்லை.
கார்த்திகைத் தீபம் பார்த்த பிறகே சாப்பிடவேண்டும்.
காரியம் ஆனாலும் வீரியம் பேசேல்.
காலை எழுந்தவுடன் படிப்பு. 120
(பாரதியார்.)

கிளியை வளர்த்துப் பூனை தின்னக் கொடுத்தது போல.
குக்கல் வாலைக் கோலைக் கொண்டு நிமிர்த்த முடியுமா?
குக்கல் விக்கிச் செத்தது.
குரங்குப் புண்ணாகப் பண்ணுகிறான்.
குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு. 125

கூட்டத்தில் போன பாம்பு சாகாது.
கூவல் ஆமை குரை கடல் ஆமையைக் கூவலோடு ஒக்குமோ கடல் என்றது போல.
கூழுக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் என்றன் உளம்.
(ஔவையார் வாக்கு.)
கொடுத்து வைத்தது வரும்; பேராசைப் படாதே.
கொண்டை பூவுக்கு அழுகிறது; கும்பி கூழுக்கு அழுகிறது. 130

கொத்தைக்கு ஓங்கில் வழிகாட்டியது போல.
சந்திராதித்தர் உள்ள வரைக்கும்.
சமுத்திரம் கொதித்தால் விளாவ நீர் எங்கே?
சீந்திற் சர்க்கரையையும் சுக்குத் துண்டையும் தேனோடு கலந்து மோந்து பார்த்தால் தலைவலி போய்விடும்.
சீனிச் சர்க்கரை சிற்றப்பா, ஏட்டில் எழுதி நக்கப்பா. 135

சுக்லாம் பரதரம் குட்டி ஆயிற்று.
சும்மா இரு, சொல் அற.
சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
செக்கு மாட்டை வண்டியில் கட்டி ஓட்டினால் அது சுற்றிச் சுற்றி வரும்.
செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நோகலாமா? 140

சொன்ன சொல்லைக் காப்பாற்றுகிறவன் பெரியவன்.
தந்தையார் போயினார், தாயாரும் போயினார், தாமும் போவார்,

தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்கிறான்.
தன் உயில் வெல்லம்.
தாய் ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும். 145

தாய் மனம் பித்து, பிள்ளை மனம் கல்.
தாவிப் படரக் கொழுகொம்பு இலாத தனிக்கொடி போல்
துவிக்கிறாள்.
திக்குத் தெரியாத காட்டில் தேடித் தேடி அலுத்தேன்.
தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீது.
தீயார் சொல் கேட்பதுவும் தீது. 150

தீயாரைக் காண்பதுவும் தீது.
தீயாரோடு இணங்கி இருப்பதுவும் தீது.
துன்பம் உண்டேல் இன்பம் உண்டு.
தைப்பூசம் பறைப் பூசம்.
தோனாத சுரையோ தொழும்பர் செவி? 155

தோற்றம் உண்டேல் மரணம் உண்டு.
நடு ஊரிலே பழுத்த மரம் போல.
நந்தா விளக்கனைய நாயகன்.
நம்புவதே வழி.
நமது குடுமி அவன் கையில் சிக்கியது. 160

நரி வாரல் கவ்வச் சென்று நற்றசை இழந்தது போல.
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று.
நல்லார் சொற் கேட்பதுவும் நன்று.
நல்லாரைக் காண்பதுவும் நன்று.
நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று. 165

நாய் ஏறி விழுகிலென்? நடாத்திலென்?
நாய்க்கு நாக்கில் வேர்க்கும்; கழுதைக்கு மூக்கில் வேர்க்கும்.
நாயாய்ப் பிறக்கினும் நல வேட்டை ஆடி நலம் புரியும்.
நாள் செய்வது நல்லோர் செய்யார்.
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறமாகும். 170

நீரைச் சுருக்கி நெய்யை உருக்கி மோரைப் பெருக்கி உண்.
நெற்றியில் ஒற்றைக் கண் படைத்தவன்.
பகற்கனவு காண்கிறான்.
புலவின் கனி ஈ துன்னுமதுபோல்.
பழிக்குப் பழி கொடடா. 175

பழைய மரமசிவம்.
பிழுக்கை வாரியும் பால் கொள்வர்.
பிறவியால் வருவன கேடு உள.
புதையல் எடுத்த தனம்போல,
புல்நுனைப் பனி வெங்கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை. 180

பூமிதேவி சாட்சி.
பெற்றாளே பெற்றான் பிறர் நகைக்கப் பெற்றாளே.
பேயோடேனும் பிரிவு இன்னாது.
பொசியாதோ கீழ்க்கொம்பு நிறை குளம்?
பொற்குன்றம் சேர்ந்த தொல்காக்கையும் பொன்னிறம். 185

மணக் கோலமதே பிணக்கோலமதாம் பிறவி.
மணம் என மகிழ்வர் முன்னே; பிணம் எனச் சுடுவர் பேர்த்தே.
மத்தூர் தயிர் போல் மறுகும் சிந்தை.
மத்துறு தயிரே போல மறுகும் உள்ளம்.
மதியால் விதியை வெல்ல முடியுமா? 190

மன்றத்துப் புன்னை போல மரடு படு துயரம்.
மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்.
மார்கழி மாதம் திருவாதிரை வரும்.
மாலை முழுதும் விளையாட்டு. 195
(பாரதியார்.)

மானம் அழிந்து மதி கெட்டுப் போனவளே.
முகத்தைச் சுற்றி மூக்கைப் பிடிக்கிறான்.
முகம் பாகம் பண்டமும் பாகம்.
முயல் வலை யானை படும் என மொழிந்தவர் வழி.
முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே. 200

மோத்தையைக் கண்ட காக்கை போலப் பலவினை மொய்க்கும்.
யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்?
வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே.
வாயால் கெட்டது தவளை.
வாழ்வது மாயம்; இது மண்ணாவது திண்ணம். 205

விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவறே.
வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்ட அப்புல் பனி கெடுமாறு.

# அரும் சொற்பொருள் அகராதி

அஃகம்—தானியம்.
அக்காரம்—கற்கண்டு.
அக்குசு—சிரத்தை.
அக்குத் தொக்கு—சம்பந்தம்.
அக்குளை—கட்கம்.

அகம்—வீடு.
அங்கிடு தொடுப்பி—கோள் கூறுபவன்.
அசடு—பொறுக்கு.
அசல்—முதல்.
அச்சை—அருவருப்பு.

அடல்—போரிடுதல்.
அடுக்களை—சமயலறை.
அடைப்பக்காரன்—நாவிதன்.
அண்ணாவி—உபாத்தியாயர்.
அத்தி—யானை.

அத்து—வரம்பு.
அந்தகன்—யமன்.
அந்தம்—அழகு.
அப்பணை—ஆணை.
அம்முதல்—மறைதல்.

அமணன்—ஜைனன்.
அமர்—போர்.
அமுதுபடி—அரிசி.
அரங்கி—கூத்தாடுபவள்.
அரவு—ராகுகாலம்.

அரை—இடுப்பு.
அல்—இராத்திரி.

அபத்தன்—முட்டாள்.
அவம்—பயன் இல்லாத செயல்.
அழற்சி——எரிதல்.

அழுவணம்—மருதோன்றி.
அளகேசன்—குபேரன்.
அஸ்மின் கிராமே—எங்கள் ஊரில்.
ஆக்கை—உடம்பு.
ஆகடியக்காரன்—அக்கிரமச் செயல் செய்கிறவன்.

ஆசந்திரார்க்கம்—சந்திர சூரியர்கள் உள்ள வரையில்.
ஆசார வாசல்—அரண்மனை வாசல்.
ஆண்டி—சிவனடியான்.
ஆண்டை—எஜமானன்.
ஆணம்—குழம்பு.

ஆதாயம்—லாபம்.
ஆதித்த வாரம்—ஞாயிற்றுக் கிழமை.
ஆதி வாரம்—ஞாயிற்றுக் கிழமை.
ஆமலகம்—நெல்லிக்கனி.
ஆயத் தொழில்—சுங்கச் சாவடி வேலை.

ஆயம்—வரி.
ஆயர்—இடையர்.
ஆயோதனம்—போர்.
ஆரியம்—கேழ்வரகு.
ஆலசியம்—தாமதம்.

ஆழி—கடல்.
ஆளன்—கணவன்.
ஆஜ்யம்—நெய்.
இங்கு—பெருங்காயம்.
இசலுதல்—பிணங்குதல்.

இட்டவன்—உணவு படைத்தவன்.
இடம்—இடப்பக்கம்.
இடுதல்—உணவைப் படைத்தல்.
இடை—இடைக்காடர், இடையன், இடைவெளி.
இணல்—நிழல்.

இணை—சமானம்.
இந்திரை—திருமகள்.
இரண்டடி—திருக்குறள்.
இரிசி—பேடி.
இல்லி—ஓட்டை.

இழை—நூல்.
இளையவள்—திருமகள்
இறாட்டு—தேன்கூடு.
இஷாரா—சமிக்ஞை.
ஈடன்—பலம் உள்ளவன்.

ஈடு—சமானம்.
ஈரம்—அன்பு.
உகிர்—நகம்.
உண்ணி—பையன்.
உதகம்—தண்ணீர்.

உதரம்—வயிறு.
உம்மாச்சி—உமாமகேசுவரன், கடவுள்.
உரம்—ஏரு, பலம்.
உருமம்—ஜாமம்.
உலுத்தன்—உலோபி.

உள்ளி—வெள்ளைப் பூண்டு.
உனை—சேறு.
ஊசி மூஞ்சி—தூக்கணாங்குருவி.
ஊதை—வாடைக் காற்று.
ஊன்—உடம்பு.

எக்கு—இடுப்பு.
எச்சன்—பூசாரி.
எட்டேகால் லட்சணம்—அவலட்சணம்.
எத்துதல்—ஏமாற்றுதல்.
எய்த்தல்—களைத்துப் போதல்.

எழுத்து—தலையெழுத்து.
ஏ—எந்த.
ஏகாலி—வண்ணான்.

ஏட்டன்—மூத்தவன்
ஏணை—தூளி.

ஏரி—திமில்.
ஏற்பது—பிச்சை எடுப்பது.
ஏனாதி—சேனாதிபதி.
ஒக்கல் — இடுப்பு
ஒங்கில்— ஒரு வேகை மீன்

ஒச்சன் — பூசாரி.
ஒரி —தனிமனிதன், நரி.
கச்சவடம் — வியாபாரம்.
கச்சான் — ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வீசும் வறண்ட காற்று.

கசம் — குளம்.
கஞ்சன் — உலோபி.
கஞ்சி — காஞ்சீபுரம்.
கட்டாடி — வண்ணான்.
கட்டை — உடம்பு.

கடுப்பு—வயிற்றுக் கடுப்பு.
கடை — வள்ளுவர்.
கண்ணி—வலை.
கணிகா—தாசி.
கப்பரை—பிச்சைப் பாத்திரம்.

கமர்—பிளப்பு.
கமலை—திருவாரூர்.
கமுக்கட்டு—அக்கம்
கமுக்கம்—இரகசியம்.
கயிற்றுப் பிள்ளை—மனைவி.

கல்லுதல்—தோண்டுதல்.
கலம்—உண்ணும் பாத்திரம், கப்பல், பாத்திரம், வாழை இலை.
கவுள்—கன்னம்.
கள்ளி—கள்ளி மேடு.
கறவை—பால் கறக்கும் பசுமாடு.

கன்னி—புரட்டாசி மாதம்.
காங்கிரங்காய்—எட்டிக்காய்.
காடி—வண்டி.
காடுகாள்—துர்க்கை.
கர்ணன்—கணக்குப் பிள்ளை.

கரணம்—திருமணம்.
கரணை—கரும்புத் தடி.
கருப்பு—பஞ்சம்.
கருமான்—கொல்லன்.
மறை—இரகசியம்.

மஹலூர்த்—காலட்சேபம்.
மார்ஜாலம்—பூனை.
மாவடை—விலங்குகள் வாழும் காடு.
மாற்றான்—பகைவன்.
மாறுதல்—விற்றல்.

மிடிமை—வறுமை.
மித்திரன்—நண்பன்.
மிருத்தியு—யமன்.
மீகாமன்—மாலுமி.
மீன்—நட்சத்திரம்.

முக்காரம்—முழக்கம்.
முகடி—மூதேவி.
முகடு—வீட்டின் உச்சி.
முகனை—மோனை.
முகாந்திரம்—காரணம்.

முகுரம்—கண்ணாடி.
முட்டி—பிச்சை.
முட்டு—கஷ்டம், தீட்டு.
முந்தி—முன்றானை.
முப்பூ—மூன்று போகம்.

முன்னுதல்—எண்ணுதல்.
முனிதல்—கோபித்தல்.

மூக்குத் தூள்—பொடி.
மூத்தவள்—மூதேவி.
மூழாக்கு—மூன்று ஆழாக்கு.

மென்னி—கழுத்து.
மேழி—கலப்பை.
மையல்—மயக்கம்.
மொகனை—மோசனை.
மொட்டைகள்—விதவைகள்.

யதா—எப்படி.
புள்ளு—பறவை.
பூசை—பூனை.
பூணல்—அந்தணன், பூணூல்.
பூண்டி—திருப்பூண்டி.

பூரியோர்—இழிந்தவர்.
பூவை-பெண்.
பேடிக்கும்—அஞ்சும்.
பைங்கூழ்—பச்சைப் பயிர்.
பைய—மெல்ல.
பைரி—இராஜாளி.

பொல்—தடி.
பொறி—இந்திரியம்.
பொன்றுதல்—இறத்தல்.
போந்து—பனமரம்.
போதன்—பிரமதேவன்.

மங்கலம்—மண்கலம்.
மங்கை—திருக்கண்ணமங்கை.
மட்டு—அளவு.
மடையன்—அறிவில்லாதவன், சமையற்காரன்.
மண்டூகம்—தவளை.

மற்கடம்—குரங்கு.
மரபு—பரம்பரை.

மரம்—ஓடம்.
மரவடை—மரங்கள் அடர்ந்த காடு.
மருபூமி—பாலைவனம்.

மருவார்—பகைவர்.
மறம்—பாவம்.
காணம்—கொள்ளு, கொள்ளுத் துவையல்.
காத்ரம்—உடம்பு.
காதம்—பத்து மைல் தூரம்.

காதல்—கூளப்ப நாயக்கன் காதல்,
காயம்—உடம்பு, பெருங்காயம்.
காரி—எலி.
காரிகை—யாப்பருங்கலக் காரிகை.
கால்—கால்வாய்.

காவுதல்—சுமத்தல்,
காழி—சீகாழி.
காளை—காளையார் கோயிலில் உள்ள பெருமான்.
கிடை—ஆட்டு மந்தை.
கிலி—அச்சம்.

கீரன்—நக்கிரன்.
குக்க—நாய்
குக்கல்—நாய்.
குசினிக்காரன்—சமையற்காரன்.
குட்டி—குழந்தை.

குட்டு—இரகசியம்.
குண்டுணி—கோள் கூறுகிறவன்.
குண்டை—எருது.
குணக்கு—வளைவு
கும்பி—வயிறு.

கும்பு—கூட்டம்.
குழிசி—பானை
குழை—தழை.
குறடு கட்டை, அன்னம்.

குறுங்கை—திருக்குறுங்குடி.
குறு முனி—அகத்திய முனிவன்.
குறைத்தல்—வெட்டுதல்.

குக்ஷி—வயிறு.
கூகை—ஆந்தை.
கூதல்—குளிர்.
கூறை—ஆடை.
கூவி—சிறிய குடம்.

கூனி—பங்குனி மாதம்.
கெச்சை—சலங்கை.
கெண்டை—கெண்டைக்கால்.
கேதம்—துக்கம்
கேப்பை—கேழ்வரகு.

கேளி—உறவினர்.
கேனம்—கேனோபனிஷத்.
கை மூலம்—கட்கம்.
கொக்கரை—கருணைக் கிழங்கு.
கொட்டை—உருத்திராட்சம் கட்டிக் கொண்ட சைவர்கள்.

கொடிறு—கன்னம், இடுக்கி.
கொழுநன்—கணவன்.
கோ—அரசன்.
கோட்டி—பைத்தியம்.
கோடி—கோடிக்கரை.

கோடு—கச்சேரி, தந்தம்.
கோதி பில்ல—குரங்குக் குட்டி.
கோபாலம்—பிச்சை.
கோபுர வஸ்து—குரங்கு.
கோன்—கிரகம் .

கோன்—அரசன்.
கெளளி—பல்லி.

சகதி—சேறு.
சங்காத்தம்—தொடர்ச்சி.
சணப்பன்—சமணன்.

சம்சாரி—பயிரிடுபவன்.
சம்மட்டி—சவுக்கு.
சர்த்தித்தல்—வாந்தி எடுத்தல்.
சரடு—நூல்,
சன்னதம்—ஆவேசம்.

சிக்கென—விரைவாக.
சிதடன்—குருடன்.
சினை—முட்டை.
சிரட்டை—கொட்டாங்கச்சி.
சிலேட்டுமம்—கோழை.

சுக்கான்செட்டி—உலோபி.
சுந்தரன்—சௌந்தரிய நாயகர்.
சும்பன்—மூடன்.
சுயோதனன்—துரியோதனன்.
சுவானம்—நாய்
சூடுதல்—சூடு போடுதல்.

சூரி—கத்தி.
சூல்—கருப்பம், சீமந்தக் கல்யாணம்.
செட்டு—வியாபாரம்.
செம்மான்—சக்கிலி,
செய்—வயல்.

செல்—கறையான்.
செவிடு—கன்னம்
சேகு—வைரம்.
சேடன்—நெசவு வேலை செய்பவன்.
சேணியன்—நெசவு வேலை செய்பவன்,

சொம்மு—சொத்து.
சோதி—சுவாதி நட்சத்திரம்.

சோம வாரம்—திங்கட்கிழமை.
சோமன்—சோமேசுவரர், வேஷ்டி.
சோமாரி—சோம்பேறி,

சோலி—வேலை.
சோளி—பை.
சோனகன்—முஸ்லீம்.
தட்டு—சோளத்தட்டு.
தடிமன்—ஜலதோஷம்.

தடியங்காய்—பூசணிக்காய்,
தண்டம்—நமஸ்காரம்.
தண்டு—படை.
ததா—அப்படி.
ததியோதனம்—தயிர்ச்சோறு.
தம்பிரான்—கடவுள்,

தரிசு—விளையாத நிலம்.
தவிசு—ஆசனம்.
தனிசு—கடன்.
தமுவணி—சேனை.
தாதன்—திருமால் அடியான்.

தாபரம்—கொழு கொம்பு.
தாய்ச்சீலை—கௌபீனம்.
தாரதம்யம்—வேற்றுமை.
தாரம்—மனைவி.
தாழி—பானை.

திண்டி—உணவு.
திறப்பு—சாவி.
தீம்பர்—பொல்லாதவர்.
துங்கா—துங்கபத்திரை ஆறு.
துவி—இரண்டு.

துறடு—அங்குசம்.
துஷ்ட சதுஷ்டயம்—துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன் என்னும் நால்வர்.

தூது—விறலி விடு தூது.
தெங்கு—தென்னமரம். தேங்காய்.
தெட்டுதல்—ஏமாற்றுதல்.

தெருளுதல்—தெளிவை அடைதல்.
தெற்று மாற்று—ஏமாற்றுதல்.
தேட்டை—சேமித்த செல்வம்.
தேளேறு—தேள் கொட்டியது.
தொடுவுண்ணுதல்—தோண்டி உண்ணுதல்.

தொண்டர்—வேலைக்காரர்.
தொப்பை—வயிறு.
தொழுவம்—கொட்டகை.
தோழம்—தொழுவம்
நக்கவாரம்—நிர்வாண தேசம்.
நகரி—ஆழ்வார் திருநகரி.

நட்சத்திரம்—குரங்கு.
நம்பியான்—பூசாரி.
நரகல்—மலம்.
நருள்—மலம்.
நாகு—கறக்கும் மாடு.

நாயன்—கடவுள்.
நாராசம்—இரும்புக்கோல்.
நாரி—பெண்.
நாலடி—நாலடியார்.
நாவாய்—கப்பல்.

நாழி—படி.
நான்—அகங்காரம்.
நாஸ்தி—இல்லை.
நீச்சத் தண்ணீர்—சாத்தீர்த்தம்.
நீர்ச்சீலை—கௌபீனம்.

நீலம் பிடிக்கிற வார்த்தை—பொய்.
நீறு—சாம்பல்.
நுணல்—தவளை.
நுளம்பு—கொசு.
நுளையன்—வலையன்.

நூல்—பூணூல் கல்யாணம்.
நெறி—நல்ல வழி.
நொய்ய—வருந்த.
நோரு—வாய்.
பகர்த்துதல்—பிரதி செய்தல்.
பங்கனி—நொண்டி.

பங்காரு—தங்கம்.
பட்டி—நாய்.
படி—பூமி.
பணி—ஆபரணம்.
பணிச்சவன்—பிணத்தைத் தூக்கினவன்.

பத்தங்கி—சாமவேதி.
பப்பு—பருப்பு.
பயிக்கம்—பிச்சை.
பரதவர்—வலையர்.
பரி—குதிரை.
பரிகாரி—வைத்தியர்

பரியந்தம்—வரையிலும்.
பருவதம்—மலை.
பளு—பாரம்.
பாகை—தலைப்பாகை.
பாதேயம்—கட்டுச் சோறு.

பாந்துதல்—பதுங்குதல்.
பாப்பாசு—ஜோடு.
பாரத்வாஜம்—கரிக்குருவி.
பாரி—மனைவி.
பாவை—திருவெம்பாவை.

பானு—சூரியன்.
பிண்டம்—உடம்பு.
பித்திகா—சுவர்.
பிரசித்தா—புகழ் பெற்றவள்.
பிள்ளை—தென்னம்பிள்ளை.

புடையன்—பாம்பு.
புரவி—குதிரை.

புரி—கயிறு.
புலம்—வயல்.
புள்—பறவை.

லக்ஷ—கணக்கு.
ரவி—சூரியன்.
ராஜா—குரு.
ராஷ்டிரம்—நாடு
ருணம்—கடன்.
லங்கணம்—பட்டினி.

லயம்—தாளம்.
லஜ்ஜை—வெட்கம்.
வட்டம்—தையல்.
வட்டாடல்—சூதாடல்.
வடுகு—தெலுங்கு.

வதுவை—திருமணம்.
வலித்தல்—இழுத்தல்.
வழுதலை —கத்திரிக்காய்
வளவன்—சோழமன்னன்.

வாயசம்—காக்கை.
வார்க் சட்டை—துடைப்பம்.
வாரியல்—துடைப்பம்.
வாரியல் கட்டை—துடைப்பம்.

வாளம்—நேர்வாளம்.
விட்டம்—அவிட்ட நட்சத்திரம்.
விநயம்—பணிவு.
வியாக்கிரம்—புலி.
விருஷ்டி—மழை.

விஜயன்—அருச்சுனன்.
விழி—திருவிழி மிழவை

வெள்ளம்—நீர்.
வெள்ளாட்டி—வைப்பாட்டி.
வெள்ளை—பருத்தி.

வெள்ளையப்பன்—பணம்.
வெள்ளையாய்—வெளிப்படையாய்.
வேதை—வேதாரண்யம்.
வேய்ங்குழல்—புல்லாங்குழல்.
வைக்கோல் படப்பு—வைக்கோல் போர்.

வைகறை—விடியற்காலம்.
ஜேஷ்டப் பிராதா—மூத்த சகோதரன்.
ஹேரண்டம்—கொட்டைச் செடி.



## கி.வா.ஜ.

இவர் 11.4.1906—ம் ஆண்டு பிறந்தார். தந்தை வாசுதேவ ஐயர். தாயார் பார்வதி அம்மாள். இவர் பள்ளியில் படிக்கும்போதே 'விவேக சிந்தாமணி' பாடல்களை மனப்பாடம் செய்து, அதற்கு அர்த்தம் சொல்லுவார். அந்தப் பருவத்திலேயே இவர் மேலும் சில தமிழ்ப் புத்தகங்களை வாங்கி மனப்பாடம் செய்து விட்டு, தானும் அதேபோல பாடல்களை எழுதி விடுவாராம். இந்த ஆற்றலால் ரெயிலில் போய்வரும் போது கூட ரெயில் ஓட்டத்தின் குதியோசைக்கு ஏற்ப ஏதாவது பாடிக் கொண்டே இருப்பாராம். இவரது கன்னி முயற்சியில் உருவானது. 'போற்றிப் பந்து' என்னும் பதிகம். வடுவூர் துரைசாமி ஐயங்கார் நடத்தி வந்த 'ஒற்றுமை' பத்திரிகையில் அது வெளியானது. 1927—ல் இவர் மகாவித்துவான் உ.வே. சுவாமிநாத ஐயரிடம் மாணாக்கராகச் சேர்ந்தார். 1933—ல் இவர் 'வித்துவான்' பட்டம் பெற்றார். 1949—ல் காஞ்சி மஹா சுவாமிகள் இவருக்கு 'திருமுருகாற்றுப்படை அரசு' என்ற பட்டத்தையும், 1951—ல் 'வாகீச கலாநிதி' என்ற பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தார். 1982—ம் ஆண்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் நினைவுப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. இலக்கியம் சமயம் ஆகிய இரு துறைகளிலும் உரையாற்றுவதில் வல்லவர். நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களை எழுதிய இவர் 4.11.1988—ம் ஆண்டு தம் வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.